# நஞ்சு முறிவு நூல்


பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி
முதல்வர்

டாக்டர். பொன். குருசிரோன்மணி, பி.ஏ., டி.ஸி.ஐ.எம்.
அவர்களால்


இரண்டாம் பதிப்பாகத் திருத்தி அமைக்கப்பட்டது

(Revised and Re-printed)

766/216/


தமிழ்நாடு அரசு எழுதுபொருள், அச்சுத் துறை இயக்குநர் அவர்களால்
அச்சிடப்பட்டது.

# நஞ்சு முறிவு நூல்

இரண்டாம் பதிப்பு

பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி
முதல்வர்
**டாக்டர். பொன். குருசிரோன்மணி,** பி.ஏ., ஜி.ஸி.ஐ.எம்.,
அவர்களால்

இரண்டாம் பதிப்பாகத் திருத்தி அமைக்கப்பட்டு

**(Revised and Re-printed)**

தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ பாடப் புத்தகக் குழுவின்
ஒப்புதல் பெற்று
தமிழக அரசு பதிப்புத் துறை இயக்குநர் அவர்களால்
அச்சிடப்பட்டது.

©
தமிழ் நாடு அரசு
1973

இரண்டாம் பதிப்பு.

தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ பாடப் புத்தகக் குழுவின்
அங்கீகாரம் பெற்றது.

## முன்னுரை.

நஞ்சு முறிவு நூல் என்பது நஞ்சுப் பொருட்களைச் சட்ட விரோத நோக்கோடு உபயோகிப்பதை ஆராய்வதும், அதனால் உண்டாகும் குறிகுணங்களையும் அதன் முறிவுகளையும் விளக்கும் நூல் என்று கொள்ளப்படும். எந்தப் பொருளாக இருந்தாலும் உட்கொண்டதனலோ அல்லது அப்பொருள் உடலோடு எம்முறையில் சம்பந்தப்பட்டாலும் அதன் மூலமாக, பாதிக்கப் பட்டு அகால மரணம் விளைவிக்கக்கூடிய அப்பொருள் நஞ்சாகக் கருதப்பட்டு இந்நூலில் இடம்பெறும். இந்நூலின் முக்கிய நோக்கம் தாது, தாவர, சங்கம நஞ்சுப் பொருட்களைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்தித் தற்கொலை, பிறரைக் கொல்லுதல் என்பன போன்றவற்றால் ஏற்படக்கூடிய அகால மரணத்தையும், அதை ஏற்படுத்திய சமூக விரோதியைச் சட்டத்திற்கு உட்படுத்தி நியாயம் வழங்க உதவுவதும் இந்நூலின் சிறப்பு நோக்கம். தற்கொலை நோக்கத்தோடு உட்புகட்டப்பட்ட அரளியும், பிறரைக் கொல்ல உபயோகப்படுத்தப்படும் வெள்ளைப் பாடாணமும், நச்சு நிலையை உருவாக்குகின்றன. இதை அறிந்து குழந்தைகளுக்காக "பாலவாகடம்" அமைத்து முதுமையைத் தடுக்க சித்த வைத்தியத்தில் "கற்பம்" கண்ட நம் சித்தர்கள் நச்சுத் தன்மையைப் போக்க நஞ்சு நூல் கண்டது வியப்பன்று.

சீவகசிந்தாமணி போன்ற பழமையான இலக்கியங்களில் கூட நஞ்சின் குறிகுணங்களையும், அவற்றைப் பகைவர்களைக் கொல்லப் பயன்படுத்தும் விஞ்ஞான அடிப்படையில் அமைத்த கலைகளையும் கூறியிருக்கிறார்கள் என்றால் தமிழர் ஆயிரக்கணக்கான ஆண்டு கட்கு முன்பே நஞ்சு நூற்கலையில் விற்பன்னர்களாய்த் திகழ்ந்தனர் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இன்றும் இந்நூலிற் கண்ட பல மருத்துவ முறைகள் மக்கள் மன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கலையில் கண்டுள்ள மருத்துவ முறைகளை நோயாளிகளைக் கொண்டு பரிசோதித்து (Clinical Reseerach) பயனுடையதாக ஆக்க வேண்டிய பொறுப்பு இன்றைய சித்த மருத்துவத் தலைமுறையைச் சார்ந்திருக்கிறது. அத்தகைய ஆய்விற்கு இப்புத்தகம் ஊக்கமளிக்கும் என நம்புகிறேன்.

இந்நூலில் நஞ்சு வகைகளையும், அவற்றைச் சட்ட விரோதமாக உட்கொண்டதனல் உண்டாகக்கூடிய கேடுகளையும் தெளிவாகவும் விரிவாகவும் சித்த மருத்துவப் பட்டம் பெற பயில்கின்றவர் களுக்குப் பயன்படுத்துகின்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது

என்பதே எனது நம்பிக்கை. சித்த வைத்திய முறையில் அனுபவ மிகுந்த மருத்துவர்களால் கண்டறியப்பட்ட உண்மைகளை, சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்பட்டவர்கள் மீது மேற்கொள்ளப் படுகிற சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்குச் சித்த மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர்களால் நஞ்சுத் தன்மையை ஆய்வு செய்யவும் நீதி மன்றங்களில் தனிப்பட்ட சித்த வைத்திய முறையில் எடுத்துரைத்துச் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்தவும் அதன்மூலம் பொதுமக்களுக்கு நன்மை செய்யவும் அரசாங்கம் பரிசிலனை செய்து ஆவன செய்ய இந்நூல் மிகப் பயன்படும் என்பது எனது கருத்து. இந்நூலை மறுபதிப்பாக (Revising and Re-editing) வெளியிடுகிற பேறு கிட்டியமைக்கு மகிழ்ச்சியோடு பெருமிதப் படுகிறேன்.

இந்தப் பதிப்பின் பிழை திருத்தப் பணியினைச் செவ்வனே செய்த சித்தா பாடப்புத்தகக் குழுவைச் சேர்ந்த வித்துவான் திரு. ஆ. முத்தையா அவர்களைப் பாராட்டுவதோடு, பொலிவுடன் வெளியிட உற்சாகமளித்திடும் தமிழக அரசுக்கும், இந்திய மருத்துவத் துறை இயக்குநருக்கும், பதிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கும் எனது இதய நிறைவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொன். குருசிரோன்மணி,**

முதல்வர்,

அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி.

பாளையங்கோட்டை,

**அக்டோபர் 23, 1971.**

## அணிந்துரை

சித்த மருத்துவக் கல்விப் பயிற்சிக்குப் பெரிதும் பயன்படுகிற "நஞ்சு முறிவு நூல்" என்னும் இந்நூலை திரு. பொன். குருசிரோன்மணி பி.ஏ., ஜி.ஸி.ஐ.எம்., அவர்கள் இரண்டாம் பதிப்பாகப் பதிப்பிக்கிறார்கள். இந்நூலின் முதற்பதிப்பு, சென்னை அரசினர் இந்திய மருத்துவப் பள்ளியில் முன்னாள் சித்த வகுப்புத் தலைமை ஆசிரியராய் இருந்த மருத்துவ சிரோன்மணி, "வைத்திய ரத்னம்" பண்டிட் திரு. க. ச. முருகேச முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது.

இவ்விரண்டாம் பதிப்பில், நஞ்சின் பொதுவான விளக்கத்தையும் வரலாற்றையும் விளக்கிவிட்டு, பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் சிறந்த பல எடுத்துக்காட்டுகளை ஆசிரியர் விவரித்திருப்பது சிறப்பாக அமைந்திருக்கிறது.

நஞ்சு நூலின் முதற்பதிப்பில் மூவகை நஞ்சின் பிரிவுகளையும் அவைகளின் தொகுப்பிலுள்ள சரக்குகளின் பெயர்களையும் குறிப்பிட்டு அதனைத் தாமே உட்கொண்டாலும், தமக்குத் தெரியாமல் பிறரால் நயவஞ்சகத்தோடு கொடுக்கப்பட்டு உடலினுள் செலுத்தப்பட்டாலும் ஏற்படும் நஞ்சுக் குறிகுணங்களையும் அதற்குரிய முறிவுகளையுமே கூறப்பட்டு வந்துள்ளது.

இரண்டாம் பதிப்பில் நஞ்சு வகைப்பிரிவுகளை முறைப்படுத்தித் தொகுத்து இரண்டு பகுதிகளாகப் பிரித்து எழுதப்பெற்றுள்ளது. அவற்றில் நஞ்சின் பொதுத்தத்துவங்களை முதற்பகுதியிலும் அவ்வாறு முதற்பகுதியில் கூறப்பட்டவைகளை மனதிலிருத்தி தனிப்பட்ட ஒவ்வொரு தாது, தாவர, சங்கமப் பொருட்களிலும் உள்ள நஞ்சுகள் பற்றி இரண்டாம் பகுதியிலும் விளக்கமாகக் கூறி நஞ்சுப் பொருட்களின் வெளித் தோற்றம், இரசாயன குணம், நஞ்சின் தன்மைகள், பரிகாரம் ஆகியவற்றையும் ஆசிரியர் நன்றாக விவரித்து இருக்கிறார். இக்கால மாணவர்களுக்கு நன்றாகப் புலனாகும்படி இவ்விவரங்களை ஆசிரியர் தொகுத்து எழுதி இருப்பதை மருத்துவ உலகம் முழு மனதோடு வரவேற்று ஏற்குமென்பதில் ஐயமில்லை.

"நாடு" என்பது எவ்வாறு அமையப் பெற்றிருத்தல் வேண்டும்? என்று விளக்கும்போது,

"பிணியின்மை செல்வம் விளை(வு)இன்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து"

—என்று வள்ளுவர் கூறுகின்றார். நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், இன்பவாழ்வு, நல்ல காலம் ஆகிய ஐந்து அணிகளும் சிறந்த ஒரு நாட்டிற்கு அழகு தரும் என்பது இதன் பொருள்.

இந்த ஐந்து அணிகலன்களிலும் நோயில்லாமல் வாழ்கின்ற வாழ்க்கைக்கே வள்ளுவர் முதலிடம் கொடுத்திருப்பதை நாம் காண்கின்றோம். எனவே அந்த அமைதியான ஒரு நிலைமை நாட்டில் ஏற்பட வேண்டுமானால், நாட்டு மக்கள் அனைவரும் நோய் வருவதற்குரிய காரணங்களை அறிந்தவர்களாகவும், ஒரு வேளை நோய் வந்துவிட்டால் அதனைத் தீர்ப்பதற்குரிய மருந்து முறைகளைத் தெரிந்தவர்களாகவும் இருக்கவேண்டும். அல்லது அந்த நாட்டில் போதுமான பயிற்சி பெற்ற நல் மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இவ்விரு வகைகளிலும், பயன்படும் பொருட்டுத் தாமாகப் படித்துத் தெரிந்துகொள்ளவும், தகுந்தபடி மருத்துவப் பயிற்சி பெற்று அறிந்து கொள்ளவும் உறுதுணையாக இருக்கும் வண்ணம், ஆசிரியர் இந்த "நஞ்சு நூலை" எழுதியிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும்.

இவ்வாறே இவர் பாடப் புத்தகம் எழுத எடுத்துக்கொண்ட மற்ற நூல்களையும் சிறந்த முறையில் புதுப்பித்து எழுதுவாரென நம்புகிறேன். பயனுள்ள மருத்துவ நூல்கள் எழுதும் இவருடைய இந்தப் பணிக்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவார் என்பதில் ஐயமில்லை.

அவருடைய இந்தச் சீரிய பணி சிறப்புற்று ஓங்குவதாக! என்று என்னுடைய உளம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க தமிழ் மொழி! வளர்க தமிழ் மருத்துவம்!

இப்படிக்கு,
**டாக்டர். க. சு. உத்தமராயன்,**
முதல்வர்,
அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரி.
தலைவர்,
சித்த மருத்துவ பாடப் புத்தகக் குழு.

பாளையங்கோட்டை,

## முதற்பதிப்பின் முன்னுரை.

உலகில்வாழ் மக்கள் யாவரும் எக்காலத்தும் நன்னிலை எய்தி இன்னலுறுதிருக்கவே அன்பே யோருருவமாய் அவ்வப்பொழுது தோன்றிய சித்தாதி மருத்துவ அறிஞர்கள், மக்கட்குப் பேருதவி யாய்த் தோன்றிய பல பொருள்களிலும் உடனிகழ்ச்சியாகவே யிருக்கும் நற்குண தீக்குணங்களை எராளமாக வெடுத்துரைத்துள்ளார்களெனினும், அவைகளை மக்களிற் சிலர் அறியாமலும், சிலர் தெரிந்திருந்தும் உயிர்வாழ்க்கையை வெறுத்து தற்கொலை புரிந்து கொள்ளவும், மற்றுஞ் சிலர் தம் பகைஞரைக் கொல்ல விரும்பியும், கொல்ல விரும்பாது துன்புறுத்தும் பொருட்டும், சில மூடப் பெண்கள் தம் கருப்பையிற்றங்கிய சூலைக் கெடுக்கும் பொருட்டும், ஆடவரிற் சிலர் மகளிரையும் மகளிரிற் சிலர் ஆடவர்களையும், வேலையாட்களிற் சிலர் தம் முதல்வர்களையும் தத்தம் கைவசப் பட்டொழுகுமாறும், சில பொருள்களைத் தனித்தேனும், மற்றப் பொருள்களோடு சேர்த்தேனும், உணவாதிப் பொருள்களோடு கலந்தேனும் உட்கொண்டும், ஊட்டியும், அகக்கருவி புறவுறுப்புகளில் புக்கியும் வருகிறார்கள்.

இச்செயல்களா லுண்டாகுந் தீமைக ளிவ்வளவெனக் கணியாது நிகழ்த்தியபின், அவர்கள் படும்பாடு இத்தகைத்தாமெனக் கூறவே ஏலா! அம்மட்டோ? இல்லை! இல்லை! அவர்களனுபவிக்கும் கொடிய துன்பத்தைப் பார்த்துப் பொறுத்தற்கியலாத உறவினர்களும், இரக்கமுள்ள மற்றவர்களும். இன்னது செய்ய அவர்கள் நன்மையடைவார்களென்று உணராது திகைத்து, முகம் வாடி, மனமுளைந்து இங்குமங்குமலைந்து, மருத்துவனைத் தேடிவாடுவதும், மருத்துவன் சென்று பரிகாரஞ் செய்யுமுன் உயிர் நீங்குவதையும், பரிகாரத்திற்குப்பின் பலனடையினும் பல நாள்வரை துன்புறுதலையும் நாம் நம்வாழ்க்கையிற் காண்கிறோம். இக்கொடிய துன்பத்திற்கு இலக்காயுள்ள பொருள்களில் முக்கியமானவற்றின் தீக்குணங்களையும் அவற்றால் விளையுங் கெடுதிகளையும், அக்கெடுதிகளைக் களையும் வழிகளையும் திரட்டிய இந்நூலுக்கு "நஞ்சு நூல்" எனப் பெயரிட்டு, சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கலாசாலை மாணவர்கட்கும், ஏனைய மருத்துவர்கட்கும், ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் பயன்படுமாறு சென்னை அரசாங்கப் பேருதவி பெற்று அச்சி யற்ற நேர்ந்தது.

இந்நூலைத் தொகுப்பதற்கு ஆதாரமாகிய நூல்களின் பெயர்களும் அவைகளைக் குறிக்கும் சுருக்கெழுத்துக்களுமடங்கிய அட்டவணையொன்று இம் முன்னுரையின் பின்பக்கத்திற் சேர்த்திருக்கிறோம்.

(ஒப்பம்) க. ச. முருகேச முதலியார்.

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தாது வகுப்பு .. .. .. .. | 19 |
| 2. | பயிர் (தாவர) வகுப்பு .. .. .. | 41 |
| 3. | உயிர் (சீவ) வகுப்பு .. .. .. | 68 |
| | முதற் குறிப்பு அகர வரிசை.. .. .. | 169 |

# நஞ்சு முறிவு நூல்

இது, நஞ்சு முறிவு நூல் எனப் பிரிக்கப்பட்டு நஞ்சு—பொருள்களின் விட குணத்தை விளக்குவதுடன் அதை விலக்கும் விதிகளையுங் கூறுகின்ற, நூல்—என்னும் பொருளைத் தரும்.

"நஞ்சு" என்னுஞ் சொல் வேற்றுமையில் வலித்தல் விகாரம் பெற்று "நச்சு" என ஆகும். இதனை "நச்சரவம்", "நச்சுக் காற்று", "நச்சுப்பல்", "நச்செண்ணெய்" என்னுந் தொடர் மொழிகளாலறிக.

நச்சுப் பொருளென்பதென்ன.

உலக சிருட்டிப் பொருளாகிய நிலையியற்பொருட்களிலும் இயங்கியற் பொருட்களிலும் நச்சுப்பொருளென வொன்றுண்டோ வென்றாராயுங்கால், அங்ஙனமோர் பொருளிருப்பதாகக் கருத இடமில்லை. ஆயினும் ஒவ்வொரு பொருட்கண்ணும் நன்மையுந் தீமையுமுடனிகழ்ச்சியாகவே யிருக்கக் காண்கிறோம். ஆகையால், அதிலுள்ள தீமையை நீக்க, நன்மையே எஞ்சி நிற்கும். உதாரணமாக (1) கடுக்காய், (2) சுக்கு, (3) சேங்கொட்டையைப் போன்ற சில பொருள்களின் தீக்குண நற்குணத்தைக் கவனிப்போமாகில்

(1) கடுக்காய்க்கு அகணி நஞ்சு

(2) சுக்கிற்குப் புறணி நஞ்சு

(3) சுகநீங்கும் சீடியெண்ணெய் சொல்லுமுடல் விம்மும் என்பதிலிருந்து நாம் அறியக்கிடப்பது, தீக்குணம் நீங்காதிருக்கும் வரை, ஒவ்வொரு பதார்த்தமும் உடல் நன்மைக்குப் பொருந்தா தெனவே விளங்குகின்றது. நிற்க, இப்பொருட்கள் மேற்கூறிய நச்சுக்குணம் நீங்கித் தூய்மை பெறின்—

(1) கடுக்காய்.

கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென் றாலும்
கடுக்காய்அத் தாய்க்கதிகங் காண்நீ—கடுக்காய்நோய்
ஓட்டி உடல்தேற்றும் உற்றஅன்னையோ சுவைகள்.
ஊட்டியுடல் தேற்றும் உவந்து.

(அ.ப.சி.)

### (2) சுக்கு.

வாதப் பிணிவறி றாற்த செவிவாய்
    வலிதலை வலிகுலை வலியிரு விழிநீர்
சீதத் தொடுவரு பேதிப் பல்ரோ
    சிகமலி முகமக முகஇடி கபமார்
சீதச் சுரம்விரி பேதச் சுரநோய்
    தெறிபடும் எனமொழிகுவர்புவி தனிலே
ஈதுக் குதவுமி தீதுக் குதவா
    தெனும்விதி யிலைநவ சுறுகுண முனவே.

(தே.கு.)

### (3) சேங்கொட்டை நெய்.

தாதுவும் பூருணமுமாந் தத்துரு பறங்கிப்புண்
கோதுபுரி யிருமைக் குட்டினங்கள்—காதுங்
கரிமுகி யூறற் கரப்பான் திமிர்போம்
எரிமுகி நெய்யாலென் றறி.

(அ.ப.சி.)

சேரா வழகு வடிவினுக்குச்
    சேரு மதிக பசியுண்டாம்
சேங்கன் றென்ன வரமுண்டாஞ்
    சேகண் டியைப்போல் தொனியுண்டாம்
சேட னெனவே யின்பமெல்லாஞ்
    சேர்ந்தே அணைய மென்மேலும்
சேயின் முகம்போற் களையுண்டாம்
    சேற்கே தனன்போ லெழிலுறுமே

(தே.க.)

இவைகளாலுண்டாகும் நன்மை மிகப்பெரிதென அநுபவத்தில் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வாறாகவே, ஒவ்வொரு பொருளையும் கவனித்தல் இன்றியமையாததாகும். நிற்க, விடத்திற்குவிடம் மருந்தாம் என்பதை, மரணத்தைத் தருவதாக மிரட்டுகின்ற சில பிணிகளில், கொடிய விடமாகக் கருதப்படுகின்ற பாம்பின் விடத்தைக் கொடுத்துப் பயன் பெறுவதையுங் காண்கிறோம். ஆகையால் எப்பொருளையுமுட்கொள்ளுமுன்னரே, அப்பொருட்கள் உடல் நன்மைக் கேற்ற விதிப்படிப் பக்குவ பாகத்தைப் பெற்றிருக்கின்றனவா அல்லது அபக்குவ (நச்சுப்) பாகத்தை யடைந்திருக்கின்றனவா என்பதைக் கவனிக்கவேண்டும். அவ்வாறு

கவனிக்காமல் நச்சுத் தன்மையுள்ளவற்றை வழங்குங்கால், அவற்றுள் சிலவற்றின் பெயரை ஒருவன் கேட்டலிலும் மற்றவற்றைத் தீண்டலிலும், பார்த்தலிலும், சுவைத்தலிலும், உண்பதிலும், முகர்வதிலும், மனதிற்கொரு வெறுப்பும், உடற்கொரு தீமையும் விளைகிறது.

இவ்வாறாக நேரிடும் குற்றங்களைக் களையக் கருதக்கூடியவைகளுள் முக்கியமானவை :

(1) பொருட்பார்வை (திரவிய திருஷ்டி) அஃதாவது எப்பொருளைக் கொள்ள விருப்பமோ, அப்பொருள் உண்மைப் பொருளா அல்லது போலிப் பொருளா ?

அப்பொருள் பயனளிக்கும் பருவத்தையறிந்து அக்காலத்திற்றானே சேகரித்ததா ? அல்லவா ?

(2) பொருட்டூய்மை—விதிப்படித் தூய்மை செய்யப்பட்டனவா ? அல்லவா ?

(3) தூய்மை செய்யப்பெற்ற பலபொருட்களை ஒன்று சேர்த்துப் பக்குவஞ் செய்தபின், அது புனிதமுற்றதா அல்லது தாழ்வடைந்ததா ?

(4) தூய்மையடைந்திருப்பினும் ஒருவன் கொள்ளத்தக்க அளவுப்படி கணிக்கப்பட்ட அளவுதானா ? அல்லவா ?

("அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விடம்" என்பதை இங்கு நோக்குக.)

(5) கணிக்கப்பட்ட அளவறிந்தே உட்கொள்ளினும், உட்கொண்ட பொருட்குப் பகைப்பொருளை அறிந்து விலக்கினோமா ? அஃதாவது பத்தியத்தாழ்வை விளைவித்தோமா ?

(6) விடமாயினும், அது அமுதத்தன்மையைப் பயக்குந் தருவாயில் கொள்ளாமல் விடுத்து அதன் நற்குணத்தை இழந்தோமா ?

மற்றுமிவைபோன்ற விதிவிலக்குகளைக் கவனித்து உடலுக்குப் பொருந்திய பொருட்களை உட்கொள்ள நஞ்சுத்தன்மை இரா.

இவ்விதிகளைச் சிறிதும் கவனியாது தீங்கை விளைவிக்கும் பொருட்டே அடியிற்கண்ட தீயவழியில் அறிவிலிகள் சில பொருட்களை வழங்குதலுமுண்டு.

(1) துணிவுடன் தற்கொலை செய்துகொள்ளவேனும், அல்லது பிறரைக் கொல்லவேனும் வழங்குதல்.

(2) சில மூடப்பெண்கள் சூலைக்கெடுக்கும் பொருட்டு அகக் கருவியிலும் புறவுறுப்புகளிலும் சில பொருட்களைச் செலுத்துதல்.

(3) ஆடவர்க்கு மகளிரும், மகளிர்க்கு ஆடவரும் தத்தம்வழி நிற்குமாறு இடுமருந்தை இடுதல்.

(4) நஞ்சையொழிக்க நஞ்சுப்பொருள் வேண்டாவிடத்து அப்பொருளை வழங்குதல் ஆகியவைகளாம்.

நன்மை, தீமை இவ்விரண்டுமுடனிகழ்ச்சியாகவே வுள்ள பொருட்கள், மூவிதப் பிரிவையடையும். அவை (1) தாது, (2) தாவர (மூலிகை), (3) சங்கமப் (சீவப்) பொருட்களாம். இவைகளாலுண்டாகும் நஞ்சுத்தன்மை எக்காரணத்தினாலேனும் உடலைப் பற்றிப் பிணிக்குங்காலத்தில் அவைகளாலுடலுக்குண்டாகும் பிணிகளை முற்றும் பரிகரித்து உடல் நன்மைக்குரிய மருத்துவத்தை எடுத்துக்கூறுவது சிறந்ததாகும்.

## நஞ்சுநூலைத் தொகுப்பதற்கு ஆதாரமாகிய நூல்களின் குறிப்பு

அட்டவணை.

| | |
|---|---|
| தேரையர் யமக வெண்பாவுரை | தே.ய.வெ.உ |
| தேரையர் குணபாடம் | தே.கு. |
| தேரையர் கரிசல் 300 | தே.க. 300 |
| தேரையர் தைல வர்க்கச் சுருக்கம் | தே.தை.வ.சு. |
| தேரையர் சேகரப்பா | தே.சே. |
| அகத்தியர் விடப்பிரதி விடத்திரட்டு | வி.பி.தி. |
| அகத்தியர் வயித்திய காவியம் 1,500 | அ.வயி.கா. 1,500 |
| போகர் 3,000 | போ. 3,000 |
| கருவூர் தேவர்—தண்டகம் | க.தே.த. |
| தேரையர் கரிசல் | தே.க. |
| அகத்தியர் பதார்த்த குண சிந்தாமணி | அ.ப.சி. |
| அகத்தியர் 21,000 | அ 21,000 |
| விடசங்கார ஆரூடம் | வி.ஆ. |
| நாகாரூடம் | நா.ஆ. |
| சித்தராரூடம் | சி.ஆ. |
| சர்ப்பாரூடம் | ச.ஆ. |
| கருடாரூடம் | க.ஆ. |
| புலிப்பாணி 500 | புலி. 500 |
| வாகடசந்திரோதயம் | வா.ச. |
| ஆயுள்வாசிட்டம் | ஆ.வா. |
| திருவள்ளுவர் திருக்குறள் | குறள். |

# நஞ்சு முறிவு நூல்

## முதற் பாகம்

### 1. நஞ்சு இயல் வரலாறு.

((பண்டைக்காலத்திலிருந்தே, சிற்சில தாது, தாவர, சங்கமப் பொருட்கள் நச்சுத் தன்மை உடையனவென்பதை மக்கள் அறிந்திருந்தனர். பழங்கால மனிதர்கள் இந்த அறிவின் உதவி கொண்டு நச்சுத் தன்மை உள்ள பொருட்களை உட்கொள்ளாமல் இருந்தது மட்டுமல்லாமல், எதிரிகளைக் கொல்லுவதற்கும், வேட்டையாடும்போது விலங்குகளைச் சாகடிப்பதற்கும் நஞ்சினை உபயோகித்து வந்தார்கள். மிகப்பழைய நாகரீகங்களான இந்திய நாகரீகம், எகிப்திய நாகரீகம், பாபிலோனியா நாகரீகம், கிரேக்க நாகரீகம் போன்ற பல்வேறு நாகரீகங்களை விவரித்துக் கூறும் சான்றுகளில் நச்சுப்பொருட்களைப் பற்றி விரிவாகக் கூறப் பட்டிருக்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே அரசர்களை, அவர்களின் பகைவர்கள் நஞ்சு கொடுத்துக் கொல்லும் பழக்கமிருந்திருப்பதாகச் சான்றுகள் இருக்கின்றன. அகத்தியர், போகர் போன்ற பல சித்தர்கள் எழுதிய நூற்களிலும், வேறு பல புறச்சான்றுகளிலும், கையெழுத்துப் பிரதிகளிலும், நஞ்சுகளை எப்படியெல்லாம் சாதுரியமாக உபயோகித்தனர் என்பது விவரிக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கும் மருந்துகளின் வாயிலாகவும், உண்ணும் உணவு, பானங்கள் முதலியவற்றின் வாயிலாகவும், தேனுடன் சேர்த்தும், குளிக்கும் தண்ணீரில் கலந்தும், தேய்த்துக் கொள்ளும் வாசனைத் தைலங்களில் கலந்தும், கண்களில் போடும் கண் மைகளின் மூலமாகவும், நுகரும் மூக்குத் தூள் மூலமாகவும், உடுத்தும் ஆடைகளில் தூவியும், படுக்கையில் நச்சுப் பொருட்களைப் பரப்பியும் மற்றும் நகைகள், மலர் மாலைகள் முதலிய வகைகளின் மூலமாகவும் நஞ்சைக் கலந்து விடுவதுண்டு. எதிரிகளைக் கொல்வதற்குக் குடிக்கும் தண்ணீரிலும், கிணற்றிலும் கூட நஞ்சுப் பொருட்களைக் கலந்துவிடுவது உண்டு.))

இதிகாச காலத்தை எடுத்துக்கொண்டால் நேரடிப்போரில் தோல்வியுற்ற துரியோதனன், பீமனைக் கொல்ல முயன்ற செய்கையைப் பாரதக் கதையிலிருந்து அறிகிறோம். வரலாற்றுக் காலத்தில் மத்திய இந்தியாவில் அசோகப் பேரரசரின் பாட்டனாகிய சந்திரகுப்த அரசன், கிரீக் அரசராகிய அலெக்ஸாண்டரின் சமகாலத்தவர். அவருடைய காலத்தில் " நஞ்சுயுவதி " என்ற பெண் ஒருத்திக்குத் தக்க அளவில் நச்சுப்

பொருட்களைச் சாப்பிடக் கொடுத்து பகைவர்களை அவள் ஆலிங்கனம் செய்யும்படியமைத்து, நச்சுத் தன்மையை அந்தப் பகைவர்களுக்குப் பரவச் செய்து கொல்வதற்கு ஏற்பாடுகள் நடந்ததாகக் குறிப்பொன்றிருக்கிறது. சங்க காலத்தைச் சேர்ந்த சமண நூலாகிய சீவகசிந்தாமணியில், நச்சுப் பொருட்களைப் பல முறைகளில் உபயோகித்துப் பகைவர்களைக் கொல்லும் முறையையும், அவற்றை முன்னதாகவே அறிந்து தடுக்கும் வழியையும் பற்றிக் கீழே கண்டவாறு விரிவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது.

வண்ணப்பூ மாலை சாந்தம்
வாலணி கலன்க ளாடை
கண்முகத் துறுத்தித் தூய்மை
கண்டலால் கொள்ள வேண்டா ;
அண்ணலம் புள்ளோ டல்லா
ஆயிரம் பேடைச் சேவல்
உண்ணுநீ ரமிழ்தம் காக்க
யூகமோ டாய்க ! என்றான்.

—சீவக சிந்தாமணி
(விமலையார் இலம்பகம்)

பூமாலை மற்றும் ஆடை அணிகலன்களை அன்னப்பறவையின் கண்களிலும், சந்தனத்தைச் சேவலின் முகத்திலும், உறுத்தும் போது அவற்றில் நஞ்சுக் கலப்பு இருக்குமாயின், அன்னப் பறவையின் கண்களில் குருதி வடியும். சேவலின் முகம் கடுக்கும். இதைப்போன்றே உண்ணும் நீரிலும், அமிழ்தத்திலும் ஏதேனும் நஞ்சு கலந்திருப்பின் கருங்குரங்கு அதை உண்ணாது.

இப்பாடலிலிருந்து அணிகின்ற பூமாலை மற்றும் ஆடை அணிகலன்கள், பூசுகின்ற சந்தனம், குடிக்கின்ற நீர், அமிழ்தம் இவ்வாறு பல்வேறு வழிகளிலும் நஞ்சு பரப்பப்படுவதையும், அதிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்வது என்பதையும் நாம் அறிகிறோம்.

புராணக்காலத்தில், நஞ்சின் சக்தியை மக்கள் போர்க் களத்திலும் பயன்படுத்தி வந்தார்கள் என்பதற்குப் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் சான்றாக விளங்குகின்றன.

எடுத்துக்காட்டாக, கம்பரின் காவியமான இராமாயணத்தின் யுத்த காண்டத்தில், இந்திரசித் ஏவிய "பிரம்மாத்திரம்' என்னும் அம்பிலுள்ள நஞ்சின் காரணமாக இராமனும் அவனுடைய படை வீரர்களும் போர்க்களத்தில் மயங்கி வீழ்ந்து கிடந்தனர் என்ற செய்தியை

"அந்தணன் படையால் வந்த தென்பதும் ஆற்றல் சான்ற
இந்திர சித்தே செய்தான் என்பதும்"
(--கம்ப—யுத்த—மருத்துமலைப்படலம்)

என்று வருகின்ற அடிகளாலும், பிரம்மாத்திரத்தினுல் போரில் தாக்கப்பட்ட இராமபிரானும் வானர வீரர்களும் இறந்தவர்கள் போலப் பெரிதும் மயங்கிக் கிடந்ததை விபிடணன் வந்து கண்டான், அவ்வாறு கண்டவுடன் தானும் விடத்தையுண்டவன் போல் மயக்கம் கொண்டு உணர்விழந்தான் என்ற செய்தியை

"நோக்கினுன் கண்டான் பண்(டு) இவ் வுலகங்கள் படைக்க
[நொற்ருன்
வாக்கினுன் மாண்டா ரென்ன, வாரை வீரர் மற்றும்
தாக்கினு ரெல்லாம் பட்ட தன்மையை விடத்தைத் தானே
தேக்கினு னென்ன நின்று தியங்கினு உணர்வு தீர்ந்தான்"

என்ற பாடலாலும், அவ்வாறு மயங்கிக் கிடந்தவர்களைக் கண்டு, தம் மனம் உளைந்து உளைந்து பெருமூச்சு விட்டான். அங்கே மயங்கிக் கிடப்பவர்களின் ஆவி (உயிர்) இருக்கிறதோ! இல்லையோ! என்று கருதுமாறு மீண்டும் மனம் ஓய்ந்து விட்டான்! என்ற செய்தியை

"உளைந்து உளைந்து உயிர்த்தான் ஆவி
உண்டு; இலை என்ன ஓய்ந்தான்"
—(கம்ப—யுத்த—மருத்துவமலைப்படலம்)

என்ற பாடலிலிருந்தும் கண்டு நஞ்சு—போர்க்களத்தில் எவ்வாறு பயன்பட்டது? என்பதை அறியலாம்.

இவ்வாறு மயங்கிக் கிடந்தவர்களின் மயக்கத்தைத் தீர்ப்பதற்குரிய மருந்துகள் சஞ்சீவி மலை என்ற மூலிகைகள் நிறைந்த மருத்துவ மலையில் இருந்ததாகவும் கம்பராமாயணம் காட்டு கின்றது.

" மாண்டாரை உய்விக்கும் மருந்தொன்று,
மெய்வேறு வதிர் களாகக்
கீண்டாலும் பொருந்துவிப்ப தொருமருந்தும்
படைக்கலங்கள் கிளர்ப்ப தொன்றும்
மீண்டேயும் தம் உருவம் அருளுவதோர்
மெய்மருந்தும் உள ! "

(கம்ப—யுத்த—மருத்துவமலைப்படலம்,

—என்ற பகுதியால், இதை யொத்த இலக்கியச் சான்றின் வாயிலாக முற்காலத்தில் நஞ்சைக் கையாளும் வகையை வரலாற்று உண்மையாகக் காண்கிறோம்.

மருத்துவ மலை என்ற சஞ்சீவி மலையில் மாண்டவர்களை உய்விக்கும் மருந்து ஒன்றும், உடம்பு வெவ்வேறு பிளவுகளாகப் பிளந்திட்டாலும் பொருந்தச் செய்யும் மருந்து ஒன்றும், படைக்கலங்கள் உடலிலே தைத்திருந்தால் அவற்றை வெளிப்படுத்தும் மருந்து ஒன்றும், போரிலே வெட்டுப்பட்டு உருவம் மாறிவிட்டாலும் மீண்டும் தம் உருவத்தை அடையச் செய்யும் மருந்து ஒன்றும் இருந்ததாகவும் அறிகிறோம். மாண்டாரை உய்விக்கும் மருந்து—சஞ்சீவி கரணி என்றும், பிளவுபட்ட உடம்பை ஒட்டச்செய்யும் மருந்து—சந்தான சுரணி என்றும், மீண்டும் தம் உருவை அருள்வது—சாவர்ண்ய் சுரணி என்றும் வடமொழியில் பெயர் பெறும்.

போரிலே காயம்பட்டவர்களுக்கு மருந்தாகப் பயன்படும் மரங்களின் பாகங்கள், மூலிகைகள், மற்றும் உலகிலுள்ள எல்லா வகையான மருந்துகள் யாவற்றையும் தங்கியிருப்பதோடு அவை களையெல்லாம் இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்று தரத்தோடு பிரித்து வைத்துள்ளார்கள்

தற்காலத்திலும் சில குடும்பங்களில் சமையல் செய்து முடித்ததும் முதலில் காகங்களுக்கு உணவைப் போட்டுவிட்டு, அதன் பின்னரே உண்ணும் பழக்கம் பரம்பரையாக இருக்கின்றது. அப்படிச் செய்வதால் நஞ்சுத் தன்மை நாம் உண்ணப்போகும் உணவில் இருக்கிறதா ? இல்லையா ? என்பது விளங்கும். முகலாயர் காலத்தில் நஞ்சு கொடுத்துக் குற்றவாளிகளைக் கொல்வது கொடுமையான தண்டனையாகக் கருதிக் தண்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அத்துடன் ஒருவரோடொருவருக்குள்ள பகையைப் போக்குவதற்கும் அரசியல் பகைவர்களை அழிப்பதற்கும் நச்சுப் பொருட்களைப் பயன்படுத்தினர்கள் என்று

தெரிகிறது. ஆகவே புராதன கால முதல் இந்தியர்கள், நச்சுப் பொருட்களின் தன்மையையும் உபயோகத்தையும் நன்கு அறிந்திருந்தார்களென்று புலனாகிறது. மற்ற நாட்டினரை விட இந்தியர் இது சம்பந்தமாக அதிகமாகவே தெரிந்திருந்தார்கள் என்றும் விளங்குகிறது. நச்சுப் பொருட்களைப் பற்றி அதிகமாக அறிந்திருந்தது மட்டுமல்லாமல், அவற்றைச் சாதாரணமாக உபயோகிக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தால் இது சம்பந்தமாகப் பழங்கால இந்தியர்கள் அதிக நிபுணத்துவமும் பெற்றிருந்தார்கள். இந்தியாவில் எளிதாக நச்சுப் பொருட்கள் கிடைக்கும் வாய்ப்பு அமைந்திருப்பதும் அவர்களின் இந்தத்தேர்ச்சிக்கு மற்றொரு காரணமுமாகும். இது சம்பந்தமாகத் தடுப்புச்சட்டங்களிலும் குறைகள் இருக்கின்றன. இருக்கின்ற சட்டங்களை அமுல் நடத்துவதும் கடினமாக இருக்கிறது. மிகக்கொடிய நச்சுத் தன்மையுள்ள பச்சிலைச் செடிகள் காடுகளிற் பல இடங்களில் தானாகவே வளர்ந்திருப்பதும் இந்நிலைக்கு மற்றொரு காரணமாகும். இந்தச் சூழ்நிலையில் மேற்கத்திய நாடுகளைவிட இந்தியாவில் நஞ்சுப் பொருட்களைக் கையாளுவது அதிக அளவில் காணப்படுகிறது. அத்துடன் மேற்கத்திய நாடுகளில் இது சம்பந்தமாகக் கட்டுப்பாடுத் திட்டங்களும் அதிகமாக இருக்கிறது.

நச்சுப்பொருட்களைப் பாகுபாடு செய்தல்.—வெள்ளைப் பாடாணத்திற்கு அடுத்தபடியாக அதிகமாக உபயோகிக்கும் நஞ்சுப் பொருட்கள், வீரமும் பூரமுமாகும். இவை இரச சம்பந்தமான பஞ்ச சூதங்களில் மிகவும் முக்கியமானவைகளாகும். இவற்றை உண்ணும் உணவோடு கலந்து கொடுப்பதைக் காணலாம். இவை இரண்டின் நச்சுத் தன்மை குறைந்த வேகத்திலிருப்பதால் வெள்ளைப் பாடாணத்தையும் இத்துடன் உணவில் சேர்ப்பது உண்டு. அச்சகங்களில் ஈய எழுத்துக்களைச் சரியாக அடுக்கி பணிபுரிகிறவர்களிடம் ஈயத்தால் ஏற்படும் நஞ்சுத் தன்மை அவ்வளவாக உடனடியாக நஞ்சு நிலையைக் கொடுப்பதில்லை. சிறு சிறு தூள்களாக நொறுக்கப்பட்ட கண்ணாடியைச் சாப்பிடுவது அபாயகரமான நஞ்சுத் தன்மையை உண்டாக்கக் கூடியதென்று கருதப்படுகிறது. ஆனால் கண்ணாடித் துண்டுகள் நஞ்சுத் தன்மையைக் கொடுப்பதில் விரைவாகச் செயல்படுவதில்லை.

தாவர வகை நஞ்சுப் பொருட்களில் கஞ்சாவுக்கும் ஊமத்தைக்கும் அடுத்தபடியாகத் தற்கொலை செய்வதற்கும், மற்றவர்களைக் கொலை செய்வதற்கும், உபயோகிக்கும் நஞ்சுப் பொருட்கள் கீழே குறிப்பிடப்பட்டவைகளாகும்.

அவையாவன.—நாபி, அரளி, எட்டி, எருக்கு ஆகியவைகளும் இவ்வகையைச் சேர்ந்த மற்றப் பொருட்களும் உண்டு.

ஆகவே, நஞ்சுப் பொருள் என்றால் என்ன? என்று திட்ட வட்டமாக வரையறுத்துச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால் (1) குறைந்த அளவாக இருக்கும்போது நஞ்சுத் தன்மையைக் கொடுக்காத சில பொருட்கள் கூட பெரும் அளவில் ஒன்று சேர்ந்துவிட்டால் நஞ்சுத் தன்மையை உண்டு பண்ணு கின்றன. ( எடுத்துக்காட்டாக சாதாரண உப்பு வேண்டிய அளவோடு உணவிற்குப் பயன்படும்போது ஒன்றும் தீங்கு செய்வதில்லை. ஆனால் அதிக அளவில் உட்கொள்ளப்பட்டு உடம்பில் கலக்கும்போது நஞ்சுத் தன்மை ஏற்பட்டு பல்வேறு கோளாறுகளை உடலில் உண்டுபண்ணுகிறது. (2) நோயின் காரணமாக உண்டாகும் சில நச்சுத் தன்மைகள் உடம்பில் பரவுவதால் மரணம் ஒன்றும் உண்டாவதில்லை. அதேபோல் நச்சுத் தன்மை உள்ள புண் உண்டாக்கும் திராவகம் போன்றவைகளில் சில, வெளிப்பக்கமாகக் குறிப்பிட்ட இடத்தில் பட்டுவிட்டாலும் உடலிற் கலந்து அபாயம் ஏற்படுவதில்லை.

ஆகவே, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருள் உடம்பில் சார்ந்த காரணத்தினால் அல்லது தனிப்பட்ட இடத்தில் பட்டதன் காரணத்தால் உடம்பின் சுகநிலை பாதிக்கப்படுமானால் அல்லது உயிரைப் போக்குமானால் அந்தப் பொருள் நஞ்சுப்பொருள் என்று குறிப்பிடவேண்டும். அத்துடன் சட்ட விரோத நோக் குடனும் உபயோகிக்கப்படவேண்டும்.)

நச்சுப்பொருட்களை இறக்குமதி செய்வதையும், கைவசம் வைத்திருப்பதையும், விற்பனை செய்வதையும் கட்டுப்பாடு செய் வதற்காக இந்திய மத்திய அரசு 1919-ம் ஆண்டு நஞ்சுச் சட்டம் என்ற ஓர் சட்டம் இயற்றியது. இதன் மூலம், ஆங்காங்கேயுள்ள மாநில அரசுகள் ஆங்காங்கேயுள்ள நிலைமைக்குத் தக்கவாறு, நஞ்சுப் பொருட்களைக் கட்டுப்பாடு, செய்வதற்குரிய சட்ட திட்டங் களை அவ்வப்போது விதித்துக் கொள்ளலாமென்று வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

இதையடுத்து, 1930-ம் ஆண்டு அபாயகாமான மருந்துகளைக் கட்டுப்பாடு செய்வதற்காக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. மயக் கத்தைக் கொடுக்கும் பொருட்களான கஞ்சா முதலியவற்றைக் கட்டுப்பாடு செய்வதே இச்சட்டத்தின் நோக்கமாக அமைந்தது. ஆனால் இது நஞ்சுப் பொருட்களைக் கட்டுப்பாடு செய்வதற்குரிய நோக்கத்துடன் அமையவில்லை.

சில குறிப்பிட்ட நஞ்சுப் பொருட்களைத்தான், சர்வ சாதாரண மாகத் தற்கொலை செய்வதற்கும், மற்றவர்களைக் கொல்வதற்கும் மக்கள் பயன்படுத்தி வந்ததாகத் தெரிகிறது. அவ்வாறுள்ள நஞ்சுப் பொருட்களில் வெள்ளைப்பாடாணமும் கஞ்சாவும் தவிர மற்றைய தாது, தாவர நஞ்சுப்பொருட்களையும் கையாண்டதாகத் தெரிகிறது.

தனிப்பட்ட இடங்களில் புண்களையும், அழற்சியையும் உண்டாக்கக்கூடிய திராவகம் போன்றவை, உள்ளுக்குள் சாப்பிடும் போதும் கடும் வாந்தியையும், பெரும் கழிச்சலையும் உண்டாக்கும் என்று பிரிக்கவேண்டும். இவற்றில் சில நச்சுப்பொருட்கள் திசுக்களில் புண்களை உண்டாக்கி அவற்றை அழித்தும் விடுகின்றன. எடுத்துக்காட்டாக, பொடி செய்த கண்ணாடித் தூள் போன்றவைகளை உட்கொள்ளும்போது அவை வேறு பட்ட பொருட்களாகத் தனித்து இருந்து வேலை செய்து உறுப்புக்களைப் புண்படுத்துகின்றன.

இந்நிலையில் நஞ்சுப் பொருட்களைப் பாகுபாடு செய்து, சட்டதிட்டத்திற்குள் கொண்டு வருவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. மேற்கொண்டு அவற்றின் செய்கைகளை வைத்துப் பாகுபாடு செய்வதைக் கீழே கவனிப்போம்.

மயக்கமுண்டாக்கும் நஞ்சுப்பொருட்கள் மூன்று விதங்களில் தங்கள் செய்கைகளை செயல்படுத்துகின்றன. இவற்றில் சிலவகை நச்சுப் பொருட்கள் நரம்பு மண்டலத்திலும் மூளையிலும் வேலை செய்து மயக்கத்தை உண்டாக்குகின்றன. வேறு சில வகை நச்சுப் பொருட்கள் கசேருகோடியில் வேலைசெய்து இக்குணத்தைக் கொடுக்கின்றன. ஐயதளத்தில் வேலை செய்து உண்டாகும் நஞ்சுப் பொருட்கள் அழற்தளம், வலித்தளம், தொந்தித்த நிலையில் வேலை செய்யும் நஞ்சுப்பொருட்கள் என்று முக்குற்ற முறையில் பாகுபாடு செய்யவேண்டும்.

1. மூளையில் வேலை செய்து மயக்கமுண்டாகக்கூடிய நச்சுப் பொருட்கள் மனக்குழப்பத்தையும் மயக்கத்தையும் உண்டு பண்ணிக் கடைசியில் சாவைக் கொடுக்கக்கூடியவை. இவை ஐய தளத்திலும் வேலை செய்வனவாகும்.

2. கசேரு கோடியில் வேலை செய்து மயக்கம் உண்டாக்கக் கூடிய நச்சுப்பொருட்கள் பக்கவாதத்தையும், அதி தீவிர வலிப்பு நோயையும், குறிப்பிட்ட இடங்களில் சுரணையற்றுப் போகச் செய்வது போன்ற குணங்களையும் கொடுக்கும். புப்புசந்

தளர்ச்சியை உண்டுபண்ணி, மூச்சு ஓட்டத்தை நிறுத்திக் கொள்வதற்கு இவ்வகை நச்சுப் பொருட்களை உபயோகிப்பதுண்டு. இவை வளி (வாத) தளத்தில் வேலை செய்யும் பொருட்களாகும்.

3. இன்னும் சில மயக்கமுண்டாக்கும் நச்சுப் பொருட்கள், மூளை, கசேருகொடி ஆகிய இரண்டு தளங்களிலும் வேலை செய்து முன் குறித்த இரண்டுவிதக் குறிகுணங்களுடனும் கலந்து காணப் படும். இவை மேற் குறித்த மூன்று தளங்களிலும் வேலை செய்வன வாகும்.

4. நான்காவது வகையில் மயக்கமுண்டாகும் வேறு சில நச்சுப்பொருட்கள் தமரகத்தில் வேலை செய்து, மூர்ச்சையை உண்டுபண்ணிச் சாவைக் கொடுக்கும். பல்வேறு நச்சுப்பொருட் களும் இவ்வாறாக வேலை செய்து மேற்குறித்த பலவகை நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுக்குமென்று சொண்டு, இவ்வாறான நான்கு தொகுப்புகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

—

நச்சுப்பொருட்களின் செய்கைகளைக் கவனிக்கும்போது, அவை வாயின் மூலமாக உடம்பில் சேர்ந்து, நச்சுத்தன்மையை உண்டு பண்ணலாம். அல்லது தோலின் மூலமாகவும், குருதியின் மூல மாகவும் உடம்பில் சார்ந்து பலவகையான நஞ்சுக் குறிகுணங் களைக் கொடுக்கலாம். இன்னும் சிலவற்றை எருவாய் மூலம் செலுத்தி நஞ்சுத் தன்மையை உண்டாக்கலாம். வேறுசில நஞ்சுப்பொருட்கள் நாளங்களில் செலுத்தப்படுவதாலும், கசேரு கொடியில் மயக்கமுண்டாக்கித் திராவகமாகச் செலுத்தப் படுவதாலும் பலவிதமான நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுக்கும்.

நஞ்சுப் பொருட்களை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அதாவது குறிப்பிட்ட இடத்தில் வேலை செய்பவை என்றும், உடம்பில் பொதுவாக வேலை செய்து பலவித நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுப்பவை என்றும் இரண்டு வகைகளாகக் கணக்கிடலாம்.

குறிப்பிட்ட இடத்தில் நேரடியாக நச்சுத்தன்மையை உண் டாக்குவது காரத்திராவகங்கள் ஆகும். வெள்ளைப்பாடாணம் வயிறு, சிறுகுடல் முதலிய இடங்களில் புண்களை உண்டாக்குவதும் சில பச்சை வெட்டு மருந்துகள் குறிப்பிட்ட இடங்களில் புண்களை உண்டாக்குவதும் இப்பிரிவைச் சேர்ந்தவையாகும்.

உடம்பில் ஏற்படும் பொதுக்குறிகுணங்கள், மேலே குறித்தது போல் ஏற்படுகிறது. குறிப்பிட்ட செய்கைகளைக் கொடுப்பவை என்றும், பொதுவான செய்கைகளைக் கொடுப்பவை என்றும், இரண்டு விதமாக நஞ்சுப்பொருட்கள் பிரிக்கப்படும். கடுமையான விடக்காயத்தால் ஏற்படும் குறிகுணங்களையும், செய்கைகளையும், பொதுச் செய்கைகளை உடம்பில் உண்டுபண்ணும் நஞ்சுப் பொருட்கள் கூடக் கொடுக்கும். எடுத்துக்காட்டாக, புண் உண்டாக்கும் திராவகங்கள் அவை பட்ட இடத்தில் ஆழமாகப் புண்ணை உண்டு பண்ணுவதுடன் மனோ அதிர்ச்சியையும் உண்டு பண்ணும்.

மேலும் நஞ்சுச் செய்கைகளைக்கொண்டு கவனிக்கும்போது எட்டி போன்ற நஞ்சுப் பொருட்கள் தனுர்வாத நோயையும், புகையிலையை ஒத்த நஞ்சுப் பொருட்கள் மூர்ச்சை, மயக்கம் போன்ற செய்கைகளையும் கொடுக்குமெனக்கொள்ள வேண்டும்.

வெள்ளைப்பாடாணம் போன்ற நஞ்சுப் பொருட்கள் வாய் மூலம் உட்செலுத்தப்படாமல் நேராகக் குருதியில் கலக்கும் போது வயிற்றில் புண்ணையும், தாபிதத்தையும் கொடுக்கக்கூடிய செய்கையுடையதாக இருக்கும். பிருக்கதாபித நோய்களையும் நஞ்சுப்பொருட்கள் கொடுக்கின்றன. நாட்கடந்து ஏற்படும் குறிப்பிட்ட செய்கைகள், எழு உடற்கட்டுகளிலும் உடனடியாகக் கலந்து விடக்கூடிய நஞ்சுப் பொருட்களின் செய்கையால் ஏற்படுகிறது. நச்சுப்பொருள், இலகுவாகக் கரையும் தன்மையுள்ளதாக இருந்தால், உடம்பில் வெகு சீக்கிரம் கலந்து, நஞ்சு குறிகுணங்களைக் கொடுத்துவிடும். சில நஞ்சுப்பொருட்கள், சுமார் பத்து விநாடிகளுக்கும் குறைந்த கால அளவில் உடம்பில் பரவி நஞ்சுச் செய்கைகளைக் கொடுக்கக்கூடும் எனவும் கண்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கொண்டு கவனித்து பலவகை நஞ்சுப் பொருட்களைப் பலவிதத் தலைப்பின் கீழ்ப் பாகுபாடு செய்யும் போதும், அவற்றைக் கட்டுப்பாடு செய்வதற்குரிய சட்ட திட்டங்கள் அமைக்கும்போதும் பலவித சிக்கல்கள் இருப்பது தெரிகின்றது.

## 3. நச்சுப்பொருட்களின் செய்கைகளை மாற்றக்கூடிய காரணங்கள்.

(1) அளவு, (2) வடிவம், (3) வயது, (4) செலுத்தும் வழி (5) உடம்பின் நிலைமை ஆகியவைகளாகும்.

(1) அளவு.—சில நஞ்சுப் பொருட்களை அதிக அளவாக உட்கொள்ளும்போது நஞ்சுக் குறிகுணங்கள் மாறுபட்டுக் காணும் அதே நஞ்சுப் பொருட்களைக் குறைந்த அளவில் கொடுக்கும்போது குறிகுணங்கள் வேறுவிதத்தில் இருக்கும். எடுத்துக்காட்டாக வெள்ளைப் பாடாணம் குறைந்த அளவில் சாப்பிடும்போது குமட்டல், வாந்தி முதலிய குறிகுணங்களைக் கொடுக்கும். ஆனால் அதிக அளவில் கொடுக்கும்போது சாவைக் கொடுத்துவிடும்.

(2) வடிவம்.—நஞ்சுப் பொருள், வாயு, வடிவத்தில் இருக்கும் போது விரைவாக வேலை செய்யும். அவை கட்டியாக இருக்கும் போது, அவை எந்த அளவுக்குக் கரையும தனமை பெற்றிருக் போது, அவை எந்த அளவுக்குக் கரையும் தன்மை பெற்றிருக் அதி விரைவில் கரைந்தால், அதி விரைவில் உடம்பில் நச்சுத் தன்மையை உண்டாக்கும்.

(3) வயது.—முதியோர்களைவிடக் குழந்தைகளிடம் நஞ்சுப் பொருட்கள் எளிதாகவும், விரைவாகவும் வேலை செய்யும். உதாரணமாக அபினியின் நஞ்சுச் செய்கை குழந்தைகளிடம் அதிக வேகத்தில் காணப்படும்.

(4) செலுத்தும் வழி.—நச்சுப்பொருட்கள், உடம்பில் செலுத்தும் வழியைப் பொறுத்தும், உடம்பில் கலந்து நஞ்சுத் தன்மையை உண்டுபண்ணும் செய்கையுடையதாய் அமைந் திருக்கிறது. (அ) நாளங்களில் செலுத்தப்பட்டு குருதியில் கலந்துவிட்டால் விரைவாக நச்சுத்தன்மை உண்டாகிறது.

(ஆ) புண்ணில் பட்ட நச்சுத்தன்மை நாளங்களில் செலுத்தப்பட்டதைவிடக் குறைந்த வேகத்தில் பரவும்.

(இ) அதற்கடுத்த குறைந்த வேகம் சளி-சவ்வு வழியாகச் செலுத்துவதாகும்.

(ஈ) புப்புச சுவாசக் குழல் மூலம் செலுத்துவதால் வேகம் இன்னும் குறையும்.

(உ) வயிற்றின் மூலம் செலுத்துவதால் இன்னும் அதை விடக் குறையும்.

(ஊ) எருவாய் மூலம் செலுத்துவதால் மேலும் குறைந்த வேகத்தில் பரவும்.

(எ) காரசார வகையாய் தோலின் மூலம் செலுத்துதல் கடைசியில் குறிப்பிட்டுள்ளது எல்லாவற்றையும்விட விரைவாக நஞ்சுத் தன்மை உடம்பில் பரவும் வாய்ப்பைக் கொடுக்காது.

(5) **உடம்பின் நிலைமை.**—(அ) சில பழக்க வழக்கத்தின் காரணமாக, நஞ்சுத் தன்மை உடம்பில் பரவி அவற்றின் செய்கையில் மாறுதல் காட்டும். புகையிலை, கஞ்சா, சாராயம் போன்ற போதைப்பொருட்களை உபயோகிக்கப் பழகியவர்களிடம் அவை அவ்வளவு சீக்கிரத்தில் நஞ்சுத்தன்மை உண்டு பண்ணுவதில்லை.

(ஆ) சிலருக்குச் சில பொருட்கள் ஒத்துக் கொள்ளாததால் பல நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுக்கும். அவற்றுள் பாதரசம் ஒன்று. அவை ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதத்தில் வேலை செய்யும்.

(இ) நோய்வாய்ப்பட்டிருக்கும்போதும் நஞ்சுப் பொருட்களின் செய்கை மாறுபடுகிறது. ஒரு நோயின் குறிகுணம் சில நஞ்சுப்பொருட்களின் செய்கையை ஒத்திருந்தால் அந்த நஞ்சுப் பொருளால் உடம்புநிலை அதிக அளவில் மோசமடையும். ஆனால் நோயின் குறிகுணங்களும், கொடுக்கும் மருந்தின் குறிகுணங்களும் மாறுபட்டு இருந்தால் உடல்நிலை அவ்வளவு விரைவாக மோசமடைவதில்லை. முதலில் குறித்த வகைக்கு எடுத்துக்காட்டாக, தீவிரபிருக்க நோயில் அபினியின் நஞ்சுச் செய்கையையும் இரண்டாவதாகக்குறித்த வகைக்கு எடுத்துக்காட்டாக, தனுர் வாதத்தில் தூக்கமுண்டாக்கும் மருந்துகளின் செய்கையையும் காணலாம்.

(ஈ) தூக்கமும், குடிபோதையும் நஞ்சுத் தன்மை உடம்பில் பரவுவதையும் செய்கையின் விரைவையும் மிகவும் குறைக்கும்.

(உ) சில நஞ்சுப்பொருட்கள் கொஞ்ச அளவில் அவ்வளவு குறிப்பிட்ட நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுக்காவிட்டாலும் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பில் அதிக அளவில் செலுத்தப்பட்டுச் சேர்ந்து பல நஞ்சுக் குறிகுணங்களைக் கொடுக்கும். எடுத்துக்காட்டாக எட்டி, சயம், பாதரசம் முதலியன. இந்த நஞ்சுப் பொருட்களைச் சித்தமுறையில் கற்பமாக நாளாவட்டத்தில் சிறிது சிறிதாகச் சாப்பிட்டு உடம்பைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பயன்படுத்தும் முறை விதிவிலக்காகும்.

## 4. சட்டவிரோதமாக நஞ்சு உட்கொண்ட நிலையைக் கணிக்கும் மூன்று முக்கிய வழிகள்.

ஒருவர் நஞ்சுப் பொருளைச் சாப்பிட்டிருக்கிறார் என்பதை ஆராய்ந்து கண்டு கொள்வது மருத்துவம் செய்வதற்கு மிகவும் முக்கியமான காரியமாகும். அத்துடன் நஞ்சைக் கொடுத்துக் குற்றம் செய்தவரைக்கண்டு கொள்வதற்கும் பயன்படும் பொருளை அதிக அளவில் ஒரே தடவையில் சாப்பிட்டதால் ஏற்பட்டிருக்கலாம். அல்லது கொஞ்ச அளவில் பல தடவைகளில் விட்டு விட்டுக் கொடுத்ததனால் ஏற்பட்டிருக்கலாம்; அல்லது தற்காலிகமாக கொஞ்ச அளவில் தொடர்ந்து உடம்பில் உறிஞ்சப்பட்டு நஞ்சு நிலை ஏற்பட்டிருக்கலாம். முதலில் குறித்த அதி தீவிரநிலைதான். மருத்துவச் சட்ட விரோத நோக்குடன் கவனிப்பதற்கு வேண்டிய முக்கியத்துவத்தைக் கொண்டதாகவும் நீதி விசாரணைக்கு உட்பட்டதாகவும் அமையும். இரண்டாவது, குறித்த நாட்பட்டு ஏற்படும் நிலை, மருத்துவம் செய்யும் திட்டத்திற்கும் நோய் அணுகாவிதி சுகாதாரத் திட்டத்திற்கும் உள்ளடங்கியதாகக் கொள்ளலாம். அந்தத் துறையில் நிபுணத்துவம் அடைந்தவர்களுக்கும் அடங்கியது.

புண்படுத்தும் காரசாரத் திராவகங்களினால் ஏற்படும் குறிகுணங்களைத் தவிர, நஞ்சுப் பொருட்களால் ஏற்படும் மற்ற எந்தக் குறிகுணங்களும் ஒன்றோ அல்லது பலவோ வேறு நோய்களாலும் ஏற்படுகின்றன. ஆகவே நஞ்சுப் பொருளின் காரணமாகத்தான் ஏற்பட்டது என்று கவனிப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆயினும் குறிப்பிட்ட தொடர்ச்சியான குறிகுணங்கள், குறித்த நஞ்சுப் பொருளைச் சாப்பிட்டதாகச் சொல்லும் வாக்கு மூலம் ஆகியவற்றைக் கொண்டும், நஞ்சுநிலையைக் கணிக்க வாய்ப்பிருக்கிறது. அத்துடன் சாப்பிட்ட உணவையும், வாந்தியினால் வெளி வந்த பொருட்கள், சிறுநீர் முதலியவற்றையும் இரசாயன ஆராய்ச்சி செய்வதன் மூலம், நஞ்சுப்பொருளைச் சாப்பிட்டதால் தான் ஏற்பட்ட குறிகுணங்கள் என்று உறுதியிட்டுக் கணிக்கும் வாய்ப்பிருக்கிறது. ஆகவே நஞ்சைச் சாப்பிட்டதால் ஏற்பட்டுள்ள நஞ்சுத் தன்மையின் காரணமாக நஞ்சு நிலையைக் கவனிப்பதற்கு மூன்று முக்கிய முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

(1) கேள்வித் தேர்தலின்போது நோயாளி அல்லது உடனிருப்பவர் சொல்லும் வரலாறு.

(2) ஏற்பட்டிருக்கும் குறிகுணம்.

(3) தக்க இரசாயன பரிசோதனையில் கிடைத்த உண்மைகள்.

மேற்குறித்த மூன்று கணிப்புகளில் ஏதேனும் ஒன்றின் உதவி கொண்டு மட்டும், ஒரு முடிவுக்கு வந்து கணிப்பது உண்மைக்குப் புறம்பானதாக ஆகிவிடும் என்பது கீழ்குறித்த விளக்கத்தினால் தெரியவரும்.

1. **வரலாறு.**—பரிசோதனையின்போது நஞ்சு சாப்பிட்டவர் சொல்லும் வரலாறு தனிப்பட்ட கவனத்திற்குள்ளாகிறது. ஒருவர் சுகநிலையில் இருக்கும்போது திடீரென்று பலவித பயங்கரமான குறிகுணங்களைக் காட்டுகிறார் என்றால் அவர் ஏதாவது இவ்வித உணவு அல்லது பானம், அல்லது உள்மருந்து சாப்பிட்டதன் காரணமாக இவ்வித அபாயக் குறிகுணங்கள் தோன்றுவதாக இருக்கலாம். அக்குறிகுணங்கள் திடீரென்று ஏற்பட்டு குறிகுணங்களில் தீவிரம் கூடிக்கொண்டே சென்று அவை ஒரு தொகுப்பு நச்சுப் பொருட்களினால் ஏற்படும் குறிகுணத்தை, அல்லது தனிப்பட்ட நச்சுப் பொருளால் உண்டாகும் குறிகுணங்களை ஒத்திருக்கலாம். இது சம்பந்தமாக நோயாளி சொல்லும் வரலாறு நச்சுப்பொருட்களைச் சாப்பிட்டிருக்கலாமென்ற ஐயத்தைத் தூண்டக் கூடியதாக இருக்கும். உணவு உண்ட பின்பு குறிகுணங்கள் ஏற்பட்டதென்று சொன்னார்களானால் அவருடன் சேர்ந்து சாப்பிட்டவர்களின் நிலையையும் ஆராய்ந்து கவனிப்பது எந்த விதமான நஞ்சை அவர் சாப்பிட்டிருக்கலாமென்ற ஓர் முடிவுக்கு நாம் வருவதற்குப் பெருமளவு உதவும்.

**(அ) திடீரென்று பயங்கரக்குறிகுணங்கள் காணல்.**—(1) இந்நிலை ஊழி நோய் போன்றவற்றிலும் காணப்படும். எனவே, பிரித்துக் கணிப்பது கடினம். தொத்து நோயாக எங்கும் பரவியிருப்பதைக் கொண்டும், வாந்தியின் தனித்தன்மையைக் கொண்டும், குறிகுணங்கள் தோன்றும் வழி முறைகளைக் கொண்டும் ஊழிநோயைக் கணிக்கலாம். தீவிர நஞ்சு நிலைமையில் திடீரென்றுதோன்றும் குறிகுணங்கள் குறிப்பிடத்தக்கதாகும். நாட்பட்ட நஞ்சு நிலையில் குறிகுணங்கள் நிதானமாகத் தோன்றும்.

**(ஆ) ஏதாவது பானம் அல்லது உணவு சாப்பிட்ட பின்பு உண்டாகும் குறிகுணங்கள்.**—இக்குறிகுணங்களில் சில, நோயின் நிலையிலும் உண்டாகும். தீவிர நஞ்சு நிலையில் இவை உறுதியாகக் காணப்படுகின்றன. போதையில் இருக்கும்போதும்,

தூக்கத்தின்போதும், இக்குறிகுணங்கள் தாமதமாகத் தோன்றுவது தென்படும். உட்கொண்ட நஞ்சு எளிதாகக் கரையக்கூடாததாக இருந்தால் குறிகுணங்கள் ஏற்படுவதில் தாமதம் உண்டாகும்.

(இ) தீவிர நிலை அதிகரித்துக்கொண்டு செல்லுவது.— நோயாளி கொடுக்கும் வரலாற்றில் இது நன்கு விளங்கும். இத் தன்மை சில தீவிர நோய்களிலும் காணப்படும். ஆனால் நோயின் காரணமாக மணிக்கணக்கில் குறிகுணங்கள் ஏற்படுவதாகக் கொண்டால் அவை நிமிடக் கணக்கில் நஞ்சின் காரணமாக ஏற்பட்டுவிடும். நோயைப் பொறுத்தவரையில் ஊழிநோயில் இந்நிலை முக்கியமாக ஏற்படும்.

(ஈ) நோயாளி கொடுக்கும் வரலாற்றிலிருந்து, குறிப்பிட்ட குறிகுணங்களின் தொகுப்பு குறிப்பிட்ட நஞ்சுகளின் குறிகுணங்களுக்கு ஒத்ததாக இருப்பது தென்படும்.

(உ) நஞ்சுத் தன்மையுள்ள உணவை இவருடன் சேர்ந்திருந்து சாப்பிட்ட மற்றவர்களும், அதே விதமான குறிகுணங்களைக் கொடுக்கக் கூடிய வரலாறு, கேள்வித் தேர்தலின் போது புலனாகும். ஒரே ஆள் மூலமாகவோ, அல்லது ஒரே இடத்தில் உட்கொண்ட உணவின் காரணமாகவோ, வேறு இடங்களுக்குச் சென்றவர்களுக்கு ஆங்காங்கு பலதரப்பட்ட நேரத்தில் குறிகுணங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆகவே நோயாளி கொடுக்கும் மேற்குறித்த வரலாறு வாயிலாகக் கிடைத்த உண்மைகள் மட்டும் நஞ்சு சாப்பிட்டதை அறியப் போதாது. இக்குறிகுணங்களில் ஒன்று அல்லது இரண்டு வேறு சில நோய்களிலும் காணப்படலாம். ஆனால் இக்குறிகுணங்களில் பற்பல சேர்ந்து காணப்பட்டால், நோயாளியின் நிலை நஞ்சுண்டதால் ஏற்பட்டது தான் என்பதைக் கணிக்க உதவும்.

2. குறிகுணங்கள்.—நஞ்சு நிலையில் உண்டாகும் எந்தக் குறிகுணங்களும் நோயின் காரணமாகவும் உண்டாகலாமென்ற பொது விதி இருக்கிறது. ஆனால் திசுக்களின் சேதத்தினால் உண்டாகும் குறிகுணங்கள் இதற்கு விதி விலக்கு என்று ஓரளவு ஒப்புக்கொள்ளலாம். உடம்பிலுள்ள கழிவுப்பொருட்களை வெளிப்படுத்தும் கருவிகளின் செயல்படுதன்மையில் ஏற்படும் கோளாறு காரணமாகவும், உடம்பில் நஞ்சுத் தன்மை சேர்ந்து பல குறிகுணங்களைக் கொடுக்கும். இவை உடம்பின் தத்துவ நிலைகளைக் கூட்டியோ குறைத்தோ விடுகின்றன. இக்குறி குணங்களின் தொகுப்பு, சில நச்சுப்பொருட்களால் ஏற்படும் குறிகுணங்களைப்

போன்றிருப்பது விளங்கும். இதற்குத் தக்க எடுத்துக்காட்டு தனுர்வாத நோயில் ஏற்படும் குறிகுணங்களும் ஒரே மாதிரி அமைந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். இந்த இரண்டு நிலைகளுக்கும் வேறுபாடு உண்டு. நோயின் காரணமாக உண்டாகும் குறிகுணங்கள் ஒன்றையடுத்து ஒன்றாகக் கூடிக்கொண்டே செல்லும். ஆனால் நஞ்சுண்டதால் உண்டாகும் குறிகுணங்கள் உடனடியாகத் தாமதமில்லாது ஏற்படும். ஆனால் தமரகத் தளர்ச்சி நோயில் உடனடியாக உண்டாகும் குறிகுணங்கள் நஞ்சுப் பொருட்களால் உண்டாகும் உடனடிக் குறி குணத்திற்கு ஒத்ததாக இருக்குமென்பதையும் கவனிக்க வேண்டும். இது ஒரு விதிவிலக்கு. இந்நிலையில் ஏற்பட்ட சாவுக்குக் காரணம், தமரக நோயின் காரணமாக ஏற்பட்டதா அல்லது நச்சுப்பொருட்களால் ஏற்பட்டதா என்பதைக் கணிப்பது மிகவும் கடினமாகிவிடும். ஆகவே கிடைக்கும் குறிகுணங்களோடு நோயாளி கொடுக்கும் வரலாறு இரசாயனப் பரிசோதனை முதலியவற்றின் உதவி கொண்டுதான் இதை நிர்ணயித்து உறுதிப்படுத்தவேண்டும்.

(3.) **இரசாயனப் பரிசோதனை.**—முன்னால் குறித்ததுபோல் உண்ட உணவையும், வாந்தியில் வெளிப்பட்ட பொருட்கள், சிறுநீர் முதலியவற்றையும் இரசாயனப் பரிசோதனை செய்த போது சந்தேகித்த நச்சுப் பொருளைக் கண்டால் என்ன நஞ்சு சாப்பிட்டிருக்கிறார் என்பதின் கணிப்பு ஐயமின்றி நிச்சயிக்கப் படவாய்ப்பிருக்கிறது.

ஆகவே வரலாறு, காணப்படும், குறிகுணங்கள், இரசாயன பரிசோதனை ஆகிய மூன்று வித ஆராய்ச்சிகளும் எந்த அளவுக்கு முக்கியம் என்பது நன்கு விளங்குகிறது.

(4.) **நஞ்சு நீக்கம்.**—நஞ்சுத் தன்மையை நீக்கச் செய்யும் முறைகள் மூன்று விதத்தில் அமையும்.

(1) நஞ்சுப் பொருளை வெளிப்படுத்தி நஞ்சுத் தன்மையை நீக்குதல். (2) நச்சுத்தன்மையை உடம்பில் சாராது பார்த்துக் கொள்ளல். (3) நச்சுத் தன்மைக்கு மாற்று அல்லது முறிவு உண்டு பண்ணல்.

(1) உடம்பிலுள்ள நச்சுத் தன்மையின் நீக்கம், நஞ்சுப்பொருள் பின்பு உண்டாகும் **குறிகுணங்கள்.**—இக்குறிகுணங்களில் சில, மாறுபடுகிறது. உதாரணமாக தோலின் மூலம் நச்சுத் தன்மை உடம்பில் சார்ந்தால், நஞ்சுப் பரப்பப்பட்ட தோலின் தளத்தில்

கிறிவிட்டு, நஞ்சை வெளிப்படுத்தி, நஞ்சு நீக்கம் ஏற்படுத்த வேண்டும். இந்த மருத்துவத்தை மிகக்குறுகிய காலத்தில் செய்ய வேண்டும். நேரம் கடத்திச் செய்தால் நஞ்சு நீக்கம் ஏற்படுவது கடினம். தோலின் அடித்தளத்தின் மூலம் நஞ்சு பரவுதல் மிக விரைவில் நடந்துவிடுவதால், நேரங்கடந்து அதற்குரிய மருத்துவம் செய்வதினால் பயன் ஏற்படாது. அதாவது குறிப்பிட்ட இடத்தில் செய்யப்படும் மருத்துவத்திற்கு, நஞ்சுநிலை அப்பாற்பட்டதாகி விடும். ஒரு சில நஞ்சுப்பொருட்களை நுகர்வதால், புப்புசத்திற்குள் சென்று மூர்ச்சை முதலிய பல நஞ்சுக் குறிகுணங்களைச் செய்வதாகத் தோன்றுமானால், தூய காற்றுள்ள வெட்ட வெளியிடத்தில் நஞ்சால் பாதிக்கப்பட்டிருப்பவரை நிறுத்தி, தூய காற்றை, உள் வாங்கி வெளியிடச் செய்ய வேண்டும். வயிற்றில் நஞ்சு சென்று நஞ்சு நிலை ஏற்பட்டிருக்குமேயானால் வயிற்றைக் கழுவி விடுவதற்கு வேண்டுவன செய்யவேண்டும். வயிற்றில் ரப்பர்க்குழாயைச் செலுத்தி வயிற்றைக் கழுவி விடுதல் உண்டு. அதிகத் தண்ணீர், அல்லது எலுமிச்சம் பழச்சாறு பிழிந்த தண்ணீரை உட்கொள்ளச் செய்து நஞ்சின் வேகத்தைக் குறைக்க வேண்டுவன செய்யலாம். அது சமயம் உணவு சாப்பிட்டிருந்தால் வயிற்றில் ரப்பர்க்குழாய் செலுத்தி வயிற்றைக் கழுவி விட முடியாது. ஏனென்றால் ரப்பர்க்குழாய் மூலம் உட்கொண்ட உணவில் உள்ள கட்டியான மாமிசம், காய்கறித் துண்டு போன்றவற்றைக் கழுவி அதில் உள்ள நஞ்சைச் சுத்தி செய்து வெளிப்படும்படி செய்ய முடியாது. வெள்ளைப்பாடாணம் போன்ற நஞ்சுப் பொருட்கள் உணவுடன் கலந்து இலகுவாகச் சுத்தி செய்ய முடியாத நிலையை உண்டு பண்ணும். ஆகவே உணவு உட்கொண்ட சமயத்தில் நஞ்சு சாப்பிட்டிருந்தால் வாந்தியை உண்டு பண்ணி நஞ்சுப் பொருட்களை வெளிப்படுத்த வேண்டும். வாந்தியின் மூலம் கட்டியான உணவு வெளிப்பட்ட பின்பு, வயிற்றைக் கழுவி விடுவதற்கு வேண்டிய ரப்பர் குழாயை உட்செலுத்தி எஞ்சியிருக்கும் நஞ்சுப் பொருட்களைக் கழுவி வெளிப்படுத்தவேண்டும். கடுங்கார நஞ்சுத் திராவகப் பொருட்களைச் சாப்பிட்டிருக்கும்போது ரப்பர்க்குழாயை வயிற்றிற்குள் மிகவும் கவனத்துடன் செலுத்தவேண்டும். வயிறும் குடலும் புண்பட்டிருப்பதால் அவற்றில் பொத்தல்கூட விழுந்து விடும். ஆகவே மிகக் கவனத்துடன் வயிற்றைக் கழுவுதற்கு இரப்பர்க் குழாயைச் செலுத்தவேண்டும். இரப்பர் குழாய் கிடைக்காத இடங்களில் வாந்தியை உண்டுபண்ணி வயிற்றில் உள்ள நஞ்சை வெளிப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்வதற்குச் சுடு தண்ணீர் அதிக அளவில் கொடுத்து வாந்தியைத் தூண்டலாம். அல்லது

தொண்டைக்குள் கையைவிட்டு வாந்தியைத் தூண்டி வாந்தி செய்விக்க வேண்டும். அல்லது ஒரு தேக்கரண்டி கடுகை சுமார் 200 மி.லி. தண்ணீரில் அரைத்துக் கலக்கிப் பெரியவர்களுக்குக் கொடுக்க வாந்தி உண்டாகும். உட்கொண்ட நஞ்சை முறிப்பதற்கு வேண்டிய மாற்று மருந்தைக் கொடுத்து நஞ்சு உடம்பில் பரவியதைச் சரிசெய்யவேண்டும்.

(2) நஞ்சுப் பொருளின் செய்கையைத் தவிர்த்தலும், நஞ்சு சாராது இருக்கச் செய்தலும், உண்ணப்பட்ட நஞ்சின் தன்மையைப் பொறுத்து நஞ்சின் செய்கையைத் தவிர்ப்பதற்கும் அந்தப் பொருட்களால் ஏற்படும் நஞ்சு நிலை உடம்பில் சாருவதைத் தடுப்பதற்கும் முயற்சியும் முறையுமாக அமைகிறது.

(அ) உட்கொள்ளப்பட்ட நஞ்சுப் பொருட்கள் புண்படுத்தக் கூடிய காரசாரச் சாக்காக இருக்குமேயானால் அச்சாக்கைக் கலவையாகாமல் செய்து அதன் நஞ்சுச் செய்கை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக முட்டை வெண் கருவைக் கொடுத்து, வெள்ளைப் பாடாணத்தின் செய்கை ஏற்படாது செய்யலாம். ஈயத்தொழில் செய்பவர்களுக்கு ஏற்படும் நஞ்சு நிலையில் கந்தக சம்பந்தமான பற்பம், செந்தூரம் கொடுத்துச் சரிப்படுத்தலாம். மற்றொருமுறை நஞ்சுப்பொருளைச் சாகவைத்து அதன் செய்கையை உடம்பில் பரவாமல் செய்யலாம். எடுத்துக்காட்டாக நஞ்சுத் தன்மை பரவச் செய்வதற்குக் காரணமாக இருக்கும் புண்பட்ட இடத்தில் சூடு போட்டு நஞ்சைக் கொன்றுவிடலாம். இது அவ்வளவு எளிதான முயற்சியாக இருப்பதில்லை. கால தாமதமொன்றுமில்லாமல் மிகவும் குறுகிய காலத்தில் செய்தால் கொஞ்சம் பலன் ஏற்படும்.

(ஆ) நஞ்சுப் பொருளின் செய்கையை உடம்பில் பரவச் செய்யாமல் தடுப்பதற்கு மற்றொருமுறை, நஞ்சால் ஏற்பட்டுள்ள புண்பட்ட இடத்திற்கு மேல் பக்கம் நன்றாக இறுக்கிக் கட்டுவது. பல சந்தர்ப்பங்களில் இது அவ்வளவு பலனைக் கொடுக்கும் முறையாகத் தோன்றவில்லை. வேறு முறையில் நஞ்சுப் பொருள் திசுக்களை வேகவைத்து, அவற்றை நாசம் செய்து விடாது பார்த்துக் கொள்ளலாம். உட்கொண்ட நஞ்சுப் பொருளுடன் இரசாயன உறவை பகை, நட்பு (சத்துருமித்துரு) முறையில் உண்டுபண்ணி, நஞ்சுச் செய்கை ஏற்படாது பார்த்துக் கொள்ளலாம். காரமான திராவகப் பொருள்களுக்கு அதற்குரிய மாற்றுப் பொருளைக் கொடுத்து செய்கையை முறிக்கலாம். அல்லது கட்டியான பொருட்களை உட்கொள்ளச் செய்து

உட்கொண்டிருக்கும் கடுமையான நஞ்சுப் பொருளின் செயல்படுந் தன்மையைத் தடுக்கலாம். எடுத்துக்காட்டாக, தூள் செய்யப் பட்ட கண்ணாடியை விழுங்கியிருந்தால், அப்போது, அதிக அளவில் கட்டியான காரமில்லாத உணவைக் கொடுத்து, கண்ணாடித் தூள்கள் திசுக்களைத் தாக்கி அவற்றை அழித்து விடாமல் தடுத்துக்கொள்ளவேண்டும்.

(இ) உட்கொண்ட நஞ்சுக்கு முறிவையும், அந்த நஞ்சுப் பொருளால் ஏற்பட்ட குறிகுணங்களுக்கு மாற்று செய்து நஞ்சுக் குறிகுணங்களை நீக்குவதற்கு வேண்டிய மருத்துவத்தையும் சில சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டியதிருக்கும். உதாரணமாக அபின் அதிக அளவில் சாப்பிட்டு அதன் காரணமாக நஞ்சு நிலை ஏற்பட்டால், நெய் அல்லது வெங்காயம் அல்லது எலுமிச்சம் பழச்சாறு அல்லது சுக்குத்தூள் அல்லது சுக்குக்குடி நீராவது கொடுக்க நஞ்சுத்தன்மை முறிந்துவிடும். குடலைப் புன்படுத்தும் நஞ்சைச் சாப்பிட்டிருக்கும்போது குளுமையான புண்ணை யாற்றும் முட்டை வெண்கருபோன்றவை சேர்ந்த பானத்தைக் கொடுத்து நஞ்சை முறிக்கவேண்டும். தமாகத்தில் வேலை செய்யும் நஞ்சை உட்கொண்டிருக்கும்போது கற்பூராதித் தைலம் போன்ற வெப்ப வீரியமுள்ள தைலத்தை உடம்பின் மேல் தடவிச் சூட்டைக் கொடுக்க வேண்டும். முக்கடுகுச் சூரணம் முக்குற்றத்யையும் போக்க உபயோகப்படும். புப்புசத்தைத் தாக்கி, மூச்சுவிடுதல்-வாங்குதலை நிறுத்தும் நஞ்சுக் குறிகுணங்களை அபினி போன்ற நஞ்சுப் பொருட்கள் செய்யும்போது முன் குறித்துள்ள மருந்துகளைக் கொடுத்து நஞ்சை முறிப்பதுடன், செயற்கை முறையில் மூச்சை உண்டுபண்ணும் உடற்பயிற்சியின் மூலம் முதல் மருத்துவ உதவி செய்து மூச்சு விடுதல்-வாங்குதல் செயலைத் தன்னிலைப்படுத்த வேண்டும். இவ்வாறுக நஞ்சு முறிவு செய்து நஞ்சால் ஏற்பட்ட குறிகுணங்களை மாற்றுவதற்கு வேண்டுவன செய்ய வேண்டும்.

# நஞ்சு முறிவு நூல்

## 1. தாது வகுப்பு

### இரசாதிப் பாடாணங்கள்.

இரசம், வீரம், பூரம், இலிங்கம், இரசச்செந்தூரம் ஆகிய இவ்வைந்து தொகைச் சரக்குகளும் பஞ்சசூதமெனப்படும் இரசாதிப் பாடாணங்களாகும். **இரச நஞ்சின் பொதுக் குறிகுணங்களும் தன்மையும் :** தூய்மை செய்யாததும் நன்றாக முடிக்கப்பெறாததும், அளவுக்கு அதிகமானதுமான இரசத்தை உண்பதால் குற்றம் உண்டாகும். வாயில் அச்சாரத்தைப்போல் (அக்கரம்) புண் உண்டாகும், பற்சந்துகளில் ஈறுகட்டும், வாயில்நீர் பெருகும், பனங்கள்ளைப் போல் வாய் குழம்பும், வாய், தொண்டை இவைகள் வெந்து வீங்கும், வாய் நாறும், பசி மந்தப்படும், குடல் வயிறு இவைகள் புண்ணுறும். காரம் படமுடியாது, பக்கத்தில் அடிக்கடி வலித்துக் கொண்டேயிருக்கும், வயிற்றின் மீது பட்டை பட்டையாகத் தேமல் படரும், காலடிகளில் வெடிப்பு கண்டு விட நீர் கசியும்; விக்கல், நீர் அடைப்பு, இரத்த பேதி போகங்கெடல், உடல் வெளுத்தல், காது செவிடுபடல், கண்பார்வை இழத்தல், சிரங்கு, புண், செம்படை போல் உடம்பில் படை உண்டாதல், நடுங்கல் ஆகிய குறிகுணங்களுண்டாகும். (தே.ப. வெ. உ.)

மேலும் பித்தன் போன்று வாய் பிதற்றும், துணிகளைக் கிழித்து அவிழ்த்தெறியச் செய்யும், கல்லாலடிக்கவும், மலையேறிக் குதிக்கவும், தண்ணீரில் விழுந்து மூங்கி மூங்கி வெளிவரவும், வியர்வை பெருக்கவும் ஆகிய குணங்களையும் காட்டும். (செய்யுள் 1-ல் காண்க.)

### இரச நஞ்சு முறிவு.

1. வெள்ளைமுட்சங்கு இலைச் சாறு அல்லது மிதிபாகலிலைச் சாறு இவைகளில் ஏதாவது ஒன்றின் சாற்றை 80 மி.லிட் வீதம் காலையிலும் மாலையிலுமாக மூன்று நாள் கொடுக்க வேண்டும்.

(வேறு)

அவுரி வேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்துச் சுண்டைக் காயளவு விதம் காலையிலும் மாலையிலுமாக மூன்று நாள் கொடுக்க வேண்டும்.

இவைகளில் ஏதாவதொன்றைச் செய்துவர இரசநஞ்சு நீங்கும். (செய்யுள் 2-ல் காண்க.)

### 2. துளசி வேர்ப்பட்டைக் குடிநீர்.

**தேவையான பொருட்கள்.**—(1) துளசி வேர்ப்பட்டை 10 கிராம், (2) தோல் சீவின சுக்கு 10 கிராம், (3) பொட்டிலுப்பு 5 கிராம்.

**செய்முறை.**—துளசி வேர்ப்பட்டையையும் தோல் சீவின சுக்கையும் மேற்சொல்லப்பட்ட அளவு விதமெடுத்து இடித்து மண் சட்டியில் இட்டு அதில் 160 மி.லி. தண்ணீர்விட்டு சுண்டக் காய்ச்ச வேண்டும். 40 மி.லியாக வற்றியவுடன் வடித்து அதில் 5 கிராம் பொட்டிலுப்பைப் பொடித்துப்போட்டுக் கலக்கி நன்றுகக் கரைந்தவுடன் குடிக்க வேண்டும். இதைக் காலையிலும் மாலையிலுமாக புதிது புதிதாகச் செய்து குடிக்க வேண்டும். இவ்விதம் 10, 20, 30, 40 நாட்கள் வரை குடிப்பது நலம். இதனால் இரச நஞ்சு நீங்கும். (தே. ய. வ உ)

### 3. கருவேற் கொப்புளி குடிநீர் (அறுகங்குடிநீர்)

**தேவையான பொருட்கள்.**—(1) களிப்பாக்கு 35 கிராம், (2) கடுக்காய்த்தோல் 35 கிராம், (3) கருவேற்பட்டை 35 கிராம், (4) நெல்லிப்பட்டை 35 கிராம், (5) நாவற்பட்டை 35 கிராம், (6) தோலும் கணுவும் நீக்கிய அறுகங்கட்டை 35 கிராம், (7) மிளகு 25, (8) பசுவெண்ணெய் பாக்களவு.

**செய்முறை.**—களிப்பாக்கு, கடுக்காய்த்தோல், கருவேற்பட்டை நெல்லிப்பட்டை, நாவற்பட்டை ஆகிய ஐந்தையும் மேற்சொல்லப் பட்ட அளவின்படி எடுத்து இடித்து 1.3. லிட் தண்ணீர் விட்டு 325 மி.லியாகச் சுண்டக் காய்ச்சி அதைக் கொண்டு காலை, பகல், மாலை ஆகிய வேளைகளில் கொப்புளிக்க வேண்டும். மேலும் தோலையும் கணுவையும் நீக்கிய அறுகங்கட்டையையும் மிளகையும் குடிநீர் செய்து வடித்து அதில் பசுவெண்ணெய்போட்டு இரச நஞ்சு தீரும் வரைக் குடித்து வரவேண்டும். (செய்யுள் 3).

### சுரைக்கருப்பு.

**தேவையான பொருட்கள்.**—(1) சுரைஓடு, (2) புளித்த பசு மோர் 80 மி.லிட்.

**செய்முறை.**—சுரை ஓட்டை சுட்டு அக்கரியை வேளை ஒன்றுக்கு 4 கிராம் விதம் 80 மி. லிட் புளித்த பசு மோரில் கலந்து காலையிலும் மாலையிலும் அவ்வாறு தணியும் வரைக் குடிக்க வேண்டும். (செய்யுள் 4 அ. வயி. 1500)

### தயிர் வெல்லம்.

**தேவையான பொருட்கள்.**—(1) 80 மி. லிட் பசுவின் தயிர், (2) நல்ல வெல்லம் 12 கிராம்.

**செய்முறை.**—80 மி.லிட். பசுவின் தயிரில் 12 கிராம் எடை வெல்லத்தைக் கலந்து ஏழுநாள் குடிக்கவேண்டும். இவ்விதம் செய்ய வயிற்றில் வலியுடன் சிதமும் குருதியுமாகப் போகும் கடுப்புடன் கூடின இரச நஞ்சு தீரும். (செய்யுள் 5 அ.வயி. கா. 1500)

### எருக்குக் கொப்புளிக் குடிநீர்

**தேவையான பொருட்கள்.**—(1) வெள்வேலம்பட்டை, (2) எருக்கின் வேர்ப்பட்டை, (3) கருவேலம்பட்டை, (4) துளசி வேர்ப்பட்டை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களையும் சரி அளவு எடுத்து அது போன்று எட்டுப் பங்கு நீர்விட்டு 1/8 அளவாகக் காய்ச்சிக் காலையிலும் மாலையிலுமாக நான்கு நாள் கொப்புளித்து உமிழ்ந்தால் வாய்ச்சூலை, சூலை இரண்டுந் தீரும். (செய்யுள் 6 அ. வ யி கா 1500).

### 2. வீரநஞ்சுக் குறிகுணம்

இது நீரில் வேகமாகக் கரையும் தன்மையுடையது. இது உட்கொண்டவுடனேயே குருதியோடு கலந்து விடத்தை மிக வேகமாக விளைவித்துவிடும். இது பிறரைக்கொல்லும் பொருட்டும், தற்கொலை புரிந்துகொள்ளவும் பயன்படுத்துவதுண்டு.

**குறிகுணம்.**—இதை உட்கொண்டால் வாயில் ஒருவகைக் களிம்புச் சுவை உண்டாகும். வாயில் நீருறும். வாய் புண்ணாகி விங்கும். தொண்டையும், ஆமாசயம் யாவும் விங்கிப் புண்ணாகும், வாந்தியும், மலபேதியும், குருதிக் கழிச்சலும் உண்டாகும், எச்சிலைக்கூட விழுங்கமுடியாதபடி தொண்டையில் வலி ஏற்படும், முகம் விங்கிவிடும், உடம்பிலுள்ள தோல் முழுவதும பட்டை பட்டையாக வெடித்துச் சிலை நீர் வடியும், பக்கம், விலா முதலிய இடங்களில் அதிக நோவும் குடைச்சலுமுண்டாகும், அதிக நீர் வேட்கை, விக்கல், மூர்ச்சை, மயக்கம், வலி முதலியன உண்டாகும். இதோடு சாவும் உண்டாகும்.

### இதற்கு முறிவு.

**தேவையான பொருட்கள்.**—(1) சிறு நெருஞ்சிச்சாறு, (2) நீலி வேர்ப்பட்டை, (3) நெய்ச்சட்டிக்கீரை, (4) தென்னங்கள்.

செய்முறை.—20 மி.லிட். சிறு நெருஞ்சிச் சாற்றைக் காலையிலும் மாலையிலும் குடித்துவர வேண்டும்.

(2) நீலி வேர்ப்பட்டையை வெந்நீர்விட்டு அரைத்து ஒரு சுண்டைக்காய் வீதம் எடுத்து 80 மி. லிட் இள வெந்நீரில் கரைத்துக் காலையிலும் மாலையிலும் குடித்துவரவேண்டும். அத்துடன் இதைக் குடிநீர்செய்து குடித்து வரலாம்.

(3) 20 மி.லிட் நெய்ச்சட்டிக்கிரைச்சாற்றை காலையிலும் மாலையிலும் குடித்துவர வேண்டும்.

(4) தென்னங்கள் அருந்தி வரலாம். இவைகளினால் விர நஞ்சு முறியும். இதில் நாள் விபரம் கூறவில்லையாதலால் நஞ்சு முறியும் வரைக் கொடுக்க வேண்டும்.

(வேறு)

தேவையான பொருட்கள்.—(1) கோழிமுட்டை வெண்கரு, (2) இளநீர்.

செய்முறை.—கோழி முட்டையின் வெண்கருவைத் தண்ணீர் அல்லது பாலுடன் கலந்து அடிக்கடி கொடுத்துவரவேண்டும்.

(வேறு)

இளநீர் அருந்தினாலும் விரத்தின் வீரம் தீரும். (செய்யுள் 7)

### 3. பூரநஞ்சுக் குறிகுணம்.

இது விரைவாக நீரில் கரையாது. இது அதிக அளவில் உடம்பிற்குள் சென்றால் நஞ்சுத் தன்மையைக் காட்டும். அவை யாவன.—பல்லீறுகளும், நாவும், வாயும், உந்நிடும், தாடையின் உட்பக்கமும் புண்ணாகும், வாய் திறக்க முடியாது, நாவில் நீர் சுரக்கும். அந்நீரில் ஒரு வகையான நாற்றத்துடன் நீர்கசியும், அதையும் விழுங்கமுடியாது. மேலும் முகத்தில் வேர்க்குருவும், பருவுமுண்டாகும். மார்பில் பருக்கட்டி உண்டாகிப் புண்ணாகும், இடுப்பில் வலி உண்டாகும், விரை வீங்கும், உண்ணாக்கு புண் படும். பேதியில் இரத்தம் வரும் ஆகிய குறிகுணங்கள் பூர நஞ்சுக் குறிகுணமாகும்.

முறிவு

(1) துளசிச்சாறு அல்லது சிற்றாமணக்கு நெய் அல்லது பாகல் இலைச்சாறு ஆகியவைகளில் ஒன்றைக் கொடுக்க வேண்டிய முறைப்படி 3 அல்லது 5 நாள் அல்லது நஞ்சு தீரும்வரைக் கொடுக்கவேண்டும்.

(2) அவுரி வேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்து ஒரு வேளைக்குச் சுண்டைக்காய் அளவு விதம் காலையிலும் மாலையிலுமாக நஞ்சு தீரும் வரைக் கொடுத்து வர வேண்டும். (செய்யுள் 8)

(வேறு)

நிலப்பனங்கிழங்குக் குடிநீர்

**தேவையான பொருட்கள்.**—(1) நிலப்பனங்கிழங்கு, (2) வல்லாரை வேர், (3) பொன்னாங்காணி வேர், (4) கண்டுபாங்கி.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட நான்கு சரக்குகளையும் வகைக்குப் 10 கிராம் எடுத்துச் சிதைத்து அதில் 650 மி.லிட் நீர் விட்டு எட்டுக்கொன்றாகக் குடிநீர் செய்து காலையிலும் மாலையிலுமாக இரண்டு அல்லது மூன்று வாரம் கொடுத்துவர பூரத்தின் வீறு தணியும்.

4. இலிங்க நஞ்சுக் குறிகுணம்.

வாய், உண்ணாக்கு முதல் குரல்வளை, மார்பு, பெருங்குடல் ஆகிய இவைகள் வெந்து புண்ணாகி வெயிலில் கசக்கிய பருத்திப்பூப் போலிருக்கும். காரம் படமுடியாது, தாகஞ் செய்யவொட்டாது. பேச முடியாது. வாயில் கெட்டவாசனை உண்டாகும், வயிற்றில் எரிச்சல் உண்டாகும். வாய்நீர் கெட்டுப்போன பனங் கள்ளைப் போன்றுவது, அல்லது காடித்தண்ணீர் போன்றுவது இருக்கும்.

இதற்கு முறிவு.

**தேவையான பொருட்கள்.**—(1) சாதிக்காய், (2) வால்மிளகு, (3) செம்பருத்தி வேர்ப்பட்டை, (4) கற்கண்டு.

**செய்முறை.**—சாதிக்காய், வால்மிளகு, செம்பருத்தி வேர்ப் பட்டை ஆகிய மூன்றையும் வகைக்கு 4 கிராம் வீதம் எடுத்து நன்றாக இடித்து 850 மி.லிட் நீர்விட்டு அதை எட்டில் ஒன்றாகக் காய்ச்சி அதில் 35 கிராம் கற்கண்டை பொடித்துப் போட்டுக் காலையிலும் மாலையிலுமாக ஒரு மண்டலம் வரை உட்கொள்ள இலிங்க நஞ்சு முறியும்.

கந்தக நஞ்சுக் குறிகுணம்

கொடிய நச்சுத் தன்மையுடையது அன்று. தூய்மை செய்யும் முறையிலும், செய்முறையும் சரிவரக் கவனம் பெறாத கந்தகத்தை மருந்தாக உட்கொண்டால் நாட்பட்ட காலத்தில் நஞ்சை உண்டாகும்.

கண்கள் மஞ்சள் நிறமாகப் பூத்திருக்கும். முகம் வெளுத்திருக்கும், உடம்பு தன் இயற்கை ஒளி குன்றி பீர்க்கம்பூப் போன்ற நிறமடைந்திருக்கும், பற்கள் கறுத்துப் பாசியடைந்து விகாரப்பட்டிருக்கும், இடைவிடாமல் வியர்வை உண்டாகும், அது மஞ்சள் நிறம் போன்ற சேற்று நீரைப் போன்றிருக்கும். சிறுநீர் வெள்ளாட்டு நீரைப்போன்றிருக்கும், மலம் சாமந்திப் பூவைப் போன்று மஞ்சள் நிறமாகயிருக்கும், வாயில் புகை நாற்றமுண்டாகும். பொய்ப்பசி, வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், வியர்க்குரு போன்ற பல குணங்களை உண்டாக்கும்.

## இதற்கு முறிவு

**தேவையான பொருட்கள்.**—(1) ஆவாரம் வேர், (2) தைவேளை வேர், (3) நீலி வேர், (4) சுக்கு, (5) பருத்தியிலை (6) சிறுநாகப்பூ.

**செய்முறை.**—(1) மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் சரியெடை எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கக் கந்தகக் குற்றம் நீங்கும்.

(2) தாமரை வித்தை இளநீரில் அரைத்துண்ணத்தீரும்.

(3) மிளகு, நீலிவேர், சீரகம் இவற்றைச்சரியெடை எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கக் கந்தக நஞ்சு முறியும்.

(4) (1) மணத்தக்காளி வேர்ப்பட்டை 10 கிராம், (2) அரிசித்திப்பிலி 10 கிராம், (3) அதிமதுரம் 10 கிராம் ஆகிய இவைகளை குடிநீரிட்டு ஒரு மண்டலம் அல்லது நோய் நீங்கும் வரை மாலையிலும் காலையிலுமாகக் கொடுக்கக் கந்தக நஞ்சு முறியும். (செய்யுள் 9)

## தாளகம்

இது கொடிய நஞ்சு உண்டாக்கும் வகையைச் சேர்ந்தது. இந்நாட்டு மருந்துகளில் தாளகத்தை அதிகமாகப் பயன்படுத்துவர். செய்முறையிலோ அல்லது தூய்மை செய்வதிலோ தவறு உண்டானல் விடத்தை உண்டாக்கும்.

## தாளக விடக் குறிகுணம்.

நகக் கண்களில் குருதி சுவரிப் பக்குகட்டிப் புண்ணாகிச் சீவடியும், வயிற்றில் எரிச்சலை உண்டாக்கும், மூக்கின் வழியாகத் திடீரென குருதி கொட்டும், வாயிலைக்கும், சுவை கெடும், உணவு உட்கொள்ளாமல் அதில் வெறுப்பை உண்டாக்கும், தலையில் நமை

யுண்டாகி மயிர் முனை சிவந்து நெருப்புக் கொழுந்தின் நிறத்தை ஒத்திருக்கும். மேற்சுவாசத்தைக் கிளப்பி மந்திக்கச் செய்யும். பிரமிக்கும், அடிவயிற்றில் வீக்கச் சாயலைக் காட்டும். இடைக்குப் பக்கத்தில் தீராத வலியைக் கொடுக்கும். இக்குறிகுணங்கள் தாளகவிடக் குறிகுணமாகும்.

### முறிவு

**தேவையான பொருட்கள்.**—(1) நீலிவேர் 10 கிராம், (2) ஆவாரம்பூ 10 கிராம், (3) வெட்டிவேர் 10 கிராம், (4) சீரகம் 10 கிராம், (5) மாதுளை வித்து 10 கிராம், (6) தென்னங்குரும்பை 10 கிராம், (7) காசினி வேர் 10 கிராம்.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஏழு பொருட்களையும் எடுத்துக் குடிநீர் செய்து அருந்த தாளகத்தினால் உண்டான நஞ்சு தீரும்.

### (வேறு)

**தேவையான பொருட்கள்.**—(1) சித்திர மூல வேர்ப்பட்டை 10 கிராம், (2) மிளகு 10 கிராம், (3) கறியுப்பு 5 கிராம்.

**செய்முறை.**—சித்திர மூல வேர்ப்பட்டையும், மிளகையும் கூட்டிக் குடிநீரிட்டு கறியுப்பைச் சேர்த்து காலையிலும் மாலையிலு மாக அரை, முக்கால் ஒரு மண்டலம் கொள்ளத் தீரும். (செய்யுள் 10. 11) (தே. ய வெ உ, க தே த 199)

### வெள்ளைப் பாடாண நஞ்சுக் குறிகுணம்

**சுவை.**—(1) கெட்ட சுவை இல்லை, (2) சிறு அளவு உட்கொண்டாலே மரணத்தை உண்டாக்கும். (3) எளிதிற் கிடைக்கக் கூடியது.

**குணம்.**—விடங்களில் அதிக நஞ்சுத்தன்மை உடையது. இது தக்க முறையில் மருத்துவத்திற்குப் பயன்படுகிறது பயன் படுத்தும் நோய்கள் சுரப்பிணி, சிறிய அளவில் கூட அதிக நாட்கள் உட்கொண்டால் சாவை விளைவிக்கும்.

### வெள்ளைப்பாடணத்தின் தீவிர நஞ்சுக் குறிகுணம்.

இரத்த முரிவை உண்டாக்கும். அதனால் உடம்பில் சிரங்கு, கொப்புளங்கள் உண்டாகும், கைகால் விரல்கள் வலித்துக் குரங்கின் விரல்களைப் போலாகும், முகத்தில் வீக்கமுண்டாகி நாளுக்கு நாள் வீங்கிக் கொண்டிருக்கும், வாய் கசக்கும், மூக்குத் தண்டு பூதத்தின்

மூக்கைப் போலத் தடித்துக் காணும், மேல்வாய், உதடு முதலியன புண்ணாகும். உட்கொண்ட சிறிது நேரத்திலேயே வாயில் ஒருவித துளிம்புச் சுவை உண்டாகும். நீர் சுரக்கும், வாய் புண்ணாகி குமட்டும், தொண்டை புண்ணாகும், எதையும் விழுங்கமுடியாது, வயிற்றில் எரிச்சலுண்டாகும், குருதியுடன் வாந்திபேதி யுண்டாகும், வாந்தி கவிச்சை வாசனையுடனிருக்கும், நீரடைப்பு உண்டாகும். அதிக நீர்வேட்கை உண்டாகும், மயக்கம், வியர்வை வெளிப்படல் குறுக்குவலி, வாய் பிதற்றல், அறிவு மங்கல், தலை நோய், போன்றவைகளும் சில வேளைகளில் உடம்பு முழுவதும் போன்ற ஊதல் என்கிற குறிகுணமும் உண்டாகும்.

குறிப்பு.—இந்நோயின் பல குறிகுணங்கள் ஊழிநோயின் குணங்களை ஒத்திருக்கும். (தெ.ய.வெ.உ.)
மேலும் நாட்பட்ட விடமாக இருந்தால் உடம்பு முழுவதும் தின வெடுக்கும், நமைச்சல் உண்டாகும், சொரிபோல் பக்கு விழும், காமாலை, செரியாமை முதலியன உண்டாகும்.

## முறிவு.

**பொது விதி.**—சிற்றாமணக்கு எண்ணெய் கொடுத்து வயிற்றைக் கழுவ வேண்டும். மயில்துத்தம் போன்றவைகளைக் கொடுக்கக் கூடாது. முட்டை வெண்கரு, நெய் முதலியவைகளைக் கொடுக்க வேண்டும். அபினி சேர்ந்த மருந்துகளையும் கொடுக்கலாம்.

**தேவையான பொருட்கள்.**—(1) 4 கிராம் ஏலம், (2) 4 கிராம் முசுமுசுக்கை வேர், (3) வெள்ளைச் சருக்கரை 4 கிராம், (4) படிகாரம் 4 கிராம்.

**செய்முறை.**—(1) முதலில் சொல்லப்பட்ட இரண்டு பொருட்களையும் குடிநீர் செய்து அதில் வெள்ளைச் சர்க்கரையையும், படிகாரத்தையும் சொல்லிய அளவின்படி சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் ஒரு மண்டலம் சாப்பிட்டுவர வெள்ளைப் பாடாண நஞ்சு முறியும்.

(2) அவுரி வேரும், மிளகும் குடிநீர் செய்து கொடுக்கலாம்.

**கௌரி பாடாணம்—எலி பாடாணங்களின் நஞ்சுக் குறிகுணம்**

**வகை.**—வெள்ளைப் பாடாணத்தின் இனத்தைச் சேர்ந்தது. இது வெள்ளைப் பாடாணத்தைப் போன்று தீவிரமில்லாவிடினும் உட்கொண்ட சில மணி நேரங்களுக்குள் நஞ்சு அதிகமாகும். அவ்வாறு நஞ்சு பரவிய காலத்தில் வெள்ளைப் பாடாணத்தின் விடக்குறிகளை

ஒத்திருக்கும். இப்பாடாணத்தை நாட்டு மருந்துகளில் வெகு பக்குவமாகக் கையாளாவிடில் உபயோகிக்கும் பிணியாளர்களுக்கு நஞ்சாகும்.

## நஞ்சுக் குறிகுணம்.

பின்னங்கால், கெண்டைச் சதையில் பருக்கள் உண்டாகும், உள்ளங்கால், மார்புப் பள்ளங்களில் வீக்கம் உண்டாகும். நடு வயிற்றில் புடைத்துக் கட்டி கண்டு வருத்தும், உள்ளங்கையில் தோலுரிந்து கொண்டேயிருக்கும், கண் சிவக்கும், பெருவியாதி, குட்டநோய் முதலியவைகளிலுண்டாவது போன்ற உடலில் தடிப்பும் திமிரும் காணும், பற்களின் சந்துகளில் குருதி கசியும், இருமல், உப்பிசம், வெள்ளோக்காளம் உடலில் வெதுப்பு முதலியன உண்டாகும்.

## கௌரிபாடாண நஞ்சுக்கு முறிவு

தேவையான பொருட்கள்.—(1) முன்னை வேர்ப்பட்டை 10 கிராம், (2) கறியுப்பு 10 கிராம், (3) பனங்கற்கண்டு 10 கிராம்.

செய்முறை.—10 கிராம் முன்னை வேர்ப்பட்டையைக் குடிநீர் செய்து அதில் 10 கிராம் கறியுப்பும், 10 கிராம் பனங்கற்கண்டும் சேர்த்துக் காலையிலும் மாலையிலுமாக ஒரு மண்டலம் உட்கொள்ள வேண்டும். இதைச் செய்வதனல் எலிப்பாடாண நஞ்சு முறியும். (தே.ய.வெ.உ.)

## மிருதார் சிங்கி

நஞ்சுக் குறிகுணம்.—வாயில் புண் உண்டாகும், தொண்டை வரட்சியாகும், உந்தியிற் புண்ணுண்டாகும், உடலின் மீது சொறிப் புண் உண்டாகும்.

## முறிவு

(1) புங்கம் வேர்ப்பட்டையை நீர்விட்டரைத்துச் சுண்டைக் காயளவு உண்ண வேண்டும்.

(2) 10 கிராம் அவுரி வேர்த்தூளை நீர்விட்டு அரைத்து உண்ண வேண்டும். இவ்விருமுறை மருந்துகளும் மிருதார் சிங்கி நஞ்சை முறித்துவிடும். (செய்யுள் 12) வி.பி.வி.

## உப்புக்கள்

அளவிற்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகும் என்பது போன்று நாம் அன்றுடம் உபயோகித்துவரும் உப்பு போன்ற

வைகளும் ஒரு வகையில் நஞ்சாகிவிடுவதுமுண்டு. சோற்றுப்பு, வெடியுப்பு, படிகாரம் முதலியவைகளை மிகுந்த அளவில் உட்கொண்டால் நஞ்சாகும்.

### உப்புக்களின் நஞ்சுக் குறிகுணங்கள்

வாந்தி, வயிற்றெரிச்சல், கழிச்சல், நீர்ப்பெருக்கு, உடம்புத் தளர்ச்சி முதலியன உண்டாகும்.

### உப்பு நஞ்சுக்கு மாற்று

(1) ஒரு வேளைக்கு 80 மி.லி விதம் குப்பைமேனியிலைச் சாற்றை காலையிலும் மாலையிலுமாக நஞ்சு நீங்கும் வரைக்கும் கொடுக்க வேண்டும்.

(2) ஒரு வேளைக்கு 80 மி.லிட் விதம் தாழை விழுதின் சாற்றைக் காலையிலும் மாலையிலுமாக நஞ்சு நீங்கும் நாள் வரைக்கும் கொடுக்க வேண்டும்.

(3) சிறிய அம்மான் பச்சரிசி இலையை அரைத்து வேளைக்குக் கொட்டைப் பாக்கு அளவு விதம் நஞ்சு நீங்கும் நாள் வரை உட்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்ய உப்பினால் ஏற்படும் நஞ்சு மாறிவிடும். (செய்யுள் 13.)

### உப்புத் திராவகங்களின் பொதுவிலக்கணம்

பொது.—உப்பு கலந்த திராவகங்கள் பல. அவைகளை பற்ப, செந்தூரம் செய்யப் பயன்படுத்துவதுண்டு. இம்மருந்துகளை நீரில் நன்றாகக் கலக்காமல் குடிப்பதாலும், அதிக அளவாக உட்கொள்வதாலும் தீத்தன்மைகள் உண்டாகும்.

### தீக்குறிகுணம்.

நாக்கிலும் தொண்டையிலும் புண் உண்டாகும். வயிறு, குடல் முதலியவைகளில் அழற்சியுண்டாகும், கருப்பாகவும் சில சமயங்களில் குருதி கலந்தும் வாந்தியாகும். பல நிறங்களிலோ அல்லது குருதியுடனோ பேதியாகும், உடல் தளர்ந்து நாடி மங்கலும் உண்டாவதோடு சாவை உண்டாக்கும்.

### முறிவு

(1) அரிசிமாக்கஞ்சி, முட்டை வெண்கரு, சிலாசத்து பற்பம் குங்கிலியபற்பம், குங்கிலிய வெண்ணெய் ஆகியவற்றைக் கொடுக்கலாம்.

(2) நாவற்பட்டை, வேலம்பட்டை, ஆவாரம்பட்டை முதலிய துவர்ப்புப் பொருட்களைக் குடிநீரிட்டுக் கொப்பளிக்கச் செய்ய வேண்டும்.

(3) சோற்றைப் பசுவின் பாலிற் பொங்கிக் களிபோன்று நன்றாகப் பிசைந்து வெள்ளைச்சீலையிற் தடவி அத்துணியை வயிற்றின்மீது வைத்துக் கட்ட வேண்டும்.

(4) இளநீர், தேங்காய்ப்பால், மாதளை ரசம் போன்றவை களையும் உபயோகிக்கவும்.

## சூடன் (கற்பூரம்)

### நஞ்சுக் குறிகுணம்.

**பொது.**—நீரில் கரையாது, ஒருவகை மணமுடையது, ஒரு வகைக் கைப்புச் சுவையும், விறுவிறுப்பும் உள்ளது.

**குறிகுணம்.**—இதை அளவுகடந்து உட்கொண்டால் வயிறெரிவ தோடு உட்கருவிகளும் வேக்காடடையும், கர்ப்பூர மணத்துடன் இரத்த பேதியும் வாந்தியுமாகும். தலைகனக்கும், நோவு உண்டாகும். உடல் தளர்ச்சி அடையும் தொண்டை முதல் எருவாய் வரை ஒருவிதமான கடுப்புடன் கூடிய எரிச்சலும் உண்டாகும். எப்பம் அதிகமாகும், அதில் கர்ப்பூர வாசனை இருக்கும். அரற்றல், புரட்டலுடன் நாடி நடை கனத்தும், துடி துடித்தும் படபடத்தும் நடத்தல், வியர்வை அதிகரிக்கும், இசி வுண்டாகி காற்றில் பறப்பது போன்றும் விமானத்தில் எறிப் பறப்பது போன்றுமிருக்கும். அறிவு தவறி நீர் போகும். மயக்கம், மூர்ச்சை முதலியன உண்டாகும்.

### முறிவு

**தேவையான பொருட்கள்.**—(1) எலுமிச்சம்பழச்சாறு, (2) 35 கிராம் காய்ச்சுக் கட்டி, (3) பசுமோர்.

**செய்முறை.**—35 கிராம் காய்ச்சுக்கட்டியை எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து பசுமோரில் கரைத்துக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்ய நஞ்சின் வேகம் தணியும். (செய்யுள் 14.)

வாந்தியை உண்டுபண்ணும் பொருட்களை உட்கொள்ளச்செய்ய வேண்டும்.

## உலோகங்கள்

### செம்புபற்பம்

**நஞ்சுக்குறிகுணம்—சிறப்புக்குணம்.**—தேரையர் கூற்றுப்படி உடலுக்கு எல்லாவிதக்கெடுதல்களும் உண்டாகும்.

**பொது.**—மனம் திகிலடையும், அதிக இருமல் உண்டாகும், விக்கல் ஏற்படும், தலை திரும்பிப்போகும், அறிவு மயங்கும், வாயில் நீர் ஊறும், தொண்டை உலரும், மார்பு எரியும், பிதற்றல் உண்டாகும், அதிக பசியாகும், உயிர் நீங்கும் குறியும் உண்டாகும் (செய்யுள் 15) (க.தே.த.)

### முறிவு

தேவையான பொருட்கள்.—(1) எலுமிச்சம்பழரசம், (2) சுக்கு.

**செய்முறை.**—(1) எலுமிச்சம்பழரசத்தையும் சுக்கையும் சேர்த்து உட்கொள்ளவேண்டும். இதனால் தாம்பிரக்களிம்பினால் உண்டாகும் நஞ்சு நீங்கும்.

**உணவு.**—தீக்குணங்களின் அதிகப் பசியைப் போக்கக்கூடிய நெய், வெண்ணெய், அப்பம், அடை, சருக்கரை, பூரி, அவல், பொரி, பயறு, பழ வகைகள் போன்றவை கலந்த உணவு வகைகளையே கொடுக்க வேண்டும்.

(2) 40 மி.லிட் நெல்லிக்காய்ச் சாற்றைக் குடிக்க வேண்டும்.

(3) எலுமிச்சம் பழச்சாறு அல்லது புளித்த மோர் இவைகளைக் குடிக்க வேண்டும். மேற்கண்டவைகளில் ஏதேனு மொன்றால் செம்பின் களிம்பு விடம் மாறும். (வி.பி.வி.)

### துருசு நஞ்சுக் குறிகுணம்.

செம்பு + கந்தக அமிலம்

**துருசு நஞ்சு**

**பொதுத் தன்மை.**—செம்பினின்றும் செய்யும் ஒருவகை உப்பே துருசு எனப்படும். இது நீரிற் கரையும் தன்மையுடையது. அதனால் இதை உட்கொண்டவுடனேயே குருதியுடன் கலந்து நஞ்சாக்கும் தன்மையுடையது. அதிவிரைவில் சாவை விளைவிக்குமாதலால் தற்கொலைக்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது.

**நஞ்சின் குறிகுணம்.**—இதை உட்கொண்டவுடன் வாயில் ஒருவிதக் களிம்புச் சுவை உண்டாகும், வாய் குமட்டும், வாயில் நீரூறும். குருதி கலந்து வாந்தியாகும், கவிச்சு நாற்ற முண்டாகும். நீல நிறத்துடன் கூடிய வாந்தி உண்டாகும் வயிற்றுக்கடுப்பும், வயிற்றில் எரிச்சலும், பொருமலும், தொண்டை உலர்தலும் அதிக நீர்வேட்கையும் நீரடைப்பு, காமாலை, பாரிச வாயு, சொருகல், பசி மந்தப்படுதல், கண்களில் நீர் வடிதல் போன்ற குறிகளும் காணப்படும். அத்துடன் சாவை விளைவிக்கும்.

முறிவு

**பொது விதி.**—வயிற்றைக் கழுவ வேண்டும். முட்டையின் வெண்கரு அல்லது பால் கொடுக்க வேண்டும். சிறுநீரை வெளியாக்க மருந்து கொடுக்க வேண்டும். (செய்யுள் 17.) (க. தே. க.)

(1) எலுமிச்சம் பழச் சாற்றை வேளைக்கு 40 மி.லிட். விதம் மூன்று வேளைக்குக் கொடுக்க வேண்டும்.

(2) இஞ்சிச் சாறு, தேன், சர்க்கரை, இம் மூன்றையும் சேர்த்து அருந்தினாலும் மயில் துத்த நஞ்சு முறியும். (வி.பி.வி.)

### இருவங்க நஞ்சுக் குறிகுணம்.

**பொது.**—வங்கம் மிக உயர்தர மருந்தாகும். மருந்து செய்பாகம் தவறின் மிக்க கேட்டினை விளைவிக்கும். அதனாலேயே நம் மூதாதையர்கள் "வங்கம் கெட்டால் பங்கம்" என வழங்கி வரலாயினர். கருவங்கம், வெள்வங்கம் என இரு வகைப்படும். முறை தவறிய பற்ப செந்தூரங்களை நோய் வந்தவர்களுக்குக் கொடுத்தால் சிறிதளவில் உடலினூறி நாட்பட நஞ்சுக் குணங்களை உண்டாக்கும்.

### நாட்பட்ட வங்கத்தின் நஞ்சுக்குணம்.

பல் ஈறு கறுக்கும் அல்லது நீல நிறமாக மாறும். வயிறு வலிக்கும். கொப்பூழ் வலி உண்டாகும். மலம் சிக்கும். வயிறு உப்பும், கை கால் தளர்ச்சி, பாரிசவாயு, காமாலை, இளைப்பு, ஈளை முதலியன உண்டாகும். உடம்பில் ஒருவித சொறி ஏற்படும். (தே. ய.வெ.உ.)

முறிவு

(1) கறுப்புப் புல்லாஞ்சி இலையை இடித்துச் சாறு எடுத்து, அச்சாற்றை வேளைக்குக் 40 மி. லிட் விதம் காலையிலும் மாலையிலும்

குடிக்க வேண்டும். இவ்விதம் நஞ்சு மாறும் வரைச் செய்ய வேண்டும்.

(2) கருங்கோழி மாமிசத்தை முறைப்படி சமைத்துண்ணலாம்.

(3) காட்டுப்புளியரணை வேரை நன்ருக அரைத்து வேளைக்குச் சுண்டைக் காயளவு விதம் நஞ்சு மாறும்வரை உட்கொள்ள வேண்டும். (செய்யுள் 18) (வி. பி. வி.)

## அப்பிரக நஞ்சுக் குறிகுணம்.

**பொது.**—பற்ப செந்தூரம் செய்யப் பயன்படுத்தப்படுகிறது. இதை பலமுறைகளாகவும் செய்வர். செய்முறை தவருது இருப்பின் மிக்க நன்மை பயக்கும். மேலும் பற்பத்தையும், செந்தூரங்களையும் வேறு சரக்குகளுடன் சேர்த்து மாத்திரை களாகச் செய்து உபயோகிப்பது வழக்கம். அவ்விதம் உபயோகிப்பதில் செய்பாகம், கைபாகம் செவ்வனே முடிந்ததாக இருக்க வேண்டும். சிறிது தப்பினும் கெடுதல் உண்டாக்கும். அக் கெடுதல்களை மருந்திட்டால் உண்டாகின்ற குற்றங்களுக்கு ஒப்பாகும் என்று கூறுவர்.

## குறிவு

நஞ்சுக் குறிகுணம்.—வயிற்றுப் பொருமலும், இரைச்சலு முண்டாகும். நெஞ்சில் கோழிக்குஞ்சின் சப்தத்தைப் போலும் கின்னர வாத்தியத்தின் சப்தத்தைப் போலும் ஒலிக்கும். இளைப்பு (கூடிய இளைப்பு) நோயாளியைப் போல் இருமல் உண்டாகும். ஈளையைத் துப்பல், சுவாசம் தடைப்பட்டு மார்பில் ஒருவித சங்கடத்தை அனுபவிக்கச் செய்யும். மேலும் உப்பிச ரோகத்தை உண்டாக்கிச் சாவை உண்டாக்கும். (செய்யுள் 19)

## குறிவு

செய்யுள் 19-ன் ஈற்றடியிற் கூறப்பட்ட "அந்த நோயகற்று மாறே தடிந்திடிற்ருேன்றி சுக்கே" என்ற முறைப்படி சுக்கை பயன்படுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது.

(வேறு)

**தேவையான பொருட்கள்.**—(1) காந்தட் கிழங்கு, (2) சுக்கு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட இரண்டு பொருட்களையும் வகைக்கு 35 கிராம் வீதமெடுத்து ஒன்று சேர்த்து இடித்து இவ்விரண்டின் எடையைப் போல் இருபது பங்கு (1.4 லிட்) தண்ணீர் விட்டு நான்கில் ஒரு பங்கு (350 மி.லி.) குடிநீராகச் செய்து காலையிலும் மாலையிலுமாக அப்பிரக நஞ்சு நீங்குமட்டும் உபயோகித்து வர வேண்டும்.

(வேறு)

**தேவையான பொருட்கள்.**—(1) வெற்றிலைச் சாறு, (2) இஞ்சிச் சாறு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட இரண்டு பொருட்களையும் சரி அளவு எடுத்து ஒன்றாகச் சேர்த்து வேளைக்கு 40 முதல் 80 மி. லிட். வரை காலையிலும் மாலையிலுமாகக் கொடுத்து வர அப்பிரக நஞ்சு நீங்கும். (செய்யுள் 22) (தே. சே.)

**சுண்ணாம்பு.**

**நஞ்சுக் குறிகுணம்.**—சுண்ணாம்பை உட்கொண்டவுடன் வாய், நாக்கு, தொண்டை முதலியன அழற்சியடையும், பிறகு அக்கரம் போல் வாய் சிவந்தும், மெல்லிய தோல் வெந்தும் புண்ணாகும். வயிற்றில் எரிச்சல் உண்டாகும். வாந்தியும் கழிச்சலும் ஏற்படும்.

முறிவு.

சுண்ணாம்பின் வேகத்தைப் போக்க தேங்காய்ப் பால், வெண்ணெய், நெய் முதலியவைகளைக் கொடுக்க வேண்டும். குருதியைக் குணப்படுத்த "வெண்ணெய் பற்பம் அல்லது குங்கிலிய வெண்ணெய், அல்லது துவர்ப்புள்ள குடிநீர்" ஆகியவைகளைக் கொடுக்கலாம்.

**வேறு.**

மஞ்சளை நாக்கில் தடவ வேண்டும். அல்லது மஞ்சளை யரைத்துத் தண்ணீரிற் கலக்கி வடிகட்டிய நீரைக் கொடுக்கலாம். அல்லது எருமை மோரைக் கொடுக்கலாம். இதனால் சுண்ணாம்பு உண்ட நஞ்சின் வேகம் நீங்கும். (செய்யுள் 23) (வி. பி. வி.)

## கண்ணாடி முதலியன.

**நஞ்சுக் குறிகுணம்.**—தற்கொலை செய்யப் பயன்படுத்துவதுண்டு உண்டபின் ஆமாசயங்களிற் புரளும்பொழுது அவைகளை அறுக்கும். அதனால் வயிறு வலிக்கும். மலத்தில் குருதி கலந்து விழும். சாவை உண்டாக்கும்

### முறிவு

இதற்கு வாழைப்பழம் முதலிய பசையும் வழுவழுப்புமுள்ள பொருட்களைக் கொடுக்க வேண்டும்.

சிற்றாமணக்கு எண்ணெயைக் கொடுத்தும் வயிற்றைக் கழிக்க வேண்டும்.

# நஞ்சு முறிவு நூல்

## தாது வகுப்பு

### செய்யுட்கள்.

#### 1. இரச நஞ்சு.

கலையைக் கிழிக்கும் அவிழ்த் தெறியுங்
கல்லைத் தேடி யெடுத் தெறியும்
மலையிற் குதிக்கும் புனல் மூழ்கும்
மருள்சேர் பித்தந் தனைக் கொடுக்கும்
உலையின் அனல்போல் உடல்வெ துப்பும்
ஓயா உழலை வியர் வாக்கும்
பலகா லமுமே வாய்பி தற்றும்
பாத ரசதோ டமுமி ஃதே.

செய்யுள் 1

#### இரசநஞ்சு முறிவு.

சேரிரதங் கொண்டோர்க்குச் செப்புவாய் வெண்சங்கின்
சாருகுங் காரவல்லிச் சாருகும்—சிர்நீலி
நல்வேரை வெந்நீரில் நற்சுண்டைக் காயளவு
முந்நா ளருந்தல் முறை.

செய்யுள் 2

#### கருவேற் கொப்புளிக் குடிநீர்.

#### அறுகங் குடிநீர்.

குணமிகு பாத ரசமதை யுள்ளிடக்
களிகடு கருவேற் கருநெலி நாவல்
வளிதீ யெரிநீர் வைத்தெடு கொட்புளி
வாய்வே மதுவிடும் வைத்திடு மறுகும்
காய்நீர் மிளகுட னிட்டிடு வெண்ணெயை
அதிலிடு குடிரச வீறஃ தடிபடும்.

செய்யுள் 3

#### அறுகங்கட்டைக் குடிநீர்.

வாமென்ற [redacted] அறுகம்வேரை
வண்மையா யொருபலந்தா னிடித்து நைய
வேமென்ற மிளகதுதா னிருபத் தைந்து
மிக்கெட்டு நீர்விட்டெட் டொன்றாய்க் காய்ச்சிப்

பாமென்றே யிறக்குகையிற் பாக்களவு வெண்ணெய்
பாலித்துப் பாங்காகக் கொண்டி டாயே.

செய்யுள் 3

சுரைக்கறுப்பு.

கூடிநின்ற சரீரத்தில் ரசசூலை புரிக்கக்
கூறுகிற சுரைக்குடுக்கைக் கரியை வாங்கி
நீடிநின்ற பழமோரிற் கரைத்துக் கொள்ள
தீங்காத ரசசூலை நீருய்ப் போகும்.

செய்யுள் 4

தயிர்வெல்லம்

"உண்ணையிலே சூதவெட்டை மீறிற் றூனல்
உதரத்தி லுளைச்சலுமாய்க் கடுப்புங் காணும்
திண்ணமுறத் தயிரிலே வெல்லம் போட்டுத்
தின்றிடவே" — யவை தீரும்.

செய்யுள் 5

எருக்குக் கொப்புளிக் குடிநீர்.

உண்ணையிலே வாயிலெல்லாஞ் சூலை கண்டால்
உறுதியங்கே கொப்புளிக்கக் கியாழுங் கேளாய்
எண்ணையிலே வெள்வேலு மெருக்கின் வேரும்
கருவேலுந் துளசியதுங் குடிநீ ரிட்டு
நண்ணியிலே நான்குநா ளுமியி லப்பா

செய்யுள் 6

தற்சூலை வாய்ச் சூலை யிரண்டுந் தீரும்.
வீரநஞ்சு முறிவு

முறையாகச் சவ்வீர மொய்குழலாய் கொண்டால்
சிறுநெருஞ்சிற் சாறுண்ணத் தீரும்—அறையக்கேள்
நீலிவே ராகுமே நெய்ச்சட்டிச் சாறுமே
பாலிதென்னங் கள்ளும் பகர்.

செய்யுள் 7

(வேறு)

அண்டத்தின் வெண்கருவை யாவின்பா லிற்கலந் (து)
உண்டுவர வீர னுரமகலுங்—கண்டறிவாய்
ஏணற் கொடியே யிளநீ ரருந்திடினும்
மாணப்பெருமை வழுத்து.

செய்யுள் 7

## பூரநஞ்சு முறிவு.

பகருவாய் பூரத்தைப் பாங்குடன்றின் றோர்கட்
கிகலரிய குல்லையினைசா றீக—துகவுடைய
ஏரண்ட நெய்யா மெழிலவுரி வேராகும்
சீர்கொண்ட பாகலிலை தேர்.

செய்யுள் 8

செய்யகந்தி தின்றோர்க்குச் செப்புவா யாவிரம்வேர்
தைவேளை வேர்நீலி தன்மூலம்—துய்யசுக்கு
நல்ல பருத்தியிலை நாகேசுரம் சமனு
மல்ல குடி நீரட்டு வார்.

வார்ப்பா யிளநீரில் வண்டா மரைவிதையை
நேர்ப்பா யரைத்துவடி நீருண்பாய்—காப்பான
நன்மிளகு நீலியின்வேர் நச்சி ரகஞ்சமனும்
மன்னீரிற் காய்ச்சியதை மாட்டு

(வி. பி. வி.) செய்யுள் 9

## தாளக நஞ்சு முறிவு.

தேருவாய் தாளகத்தைத் தின்றோர்க்கு நீலியதன்
வேருடனே யாவிரம்பூ வெட்டிவேர்—சீரகமும்
மாதளைவித் தோடுதென்னம் வன்குரும்பை காசினிவேர்
தீதகல நற்குடிநீர் செய்.

செய்யுள் 10

(வேறு)

கொடிவேலி யாவிரைவேர் கொச்சி மிளகுங்
கடலுப் பிவைகலந்து காய்ச்சி—யுடலினுக்
கூறுசெய்த தாளகத்தா லுற்றவிட நீங்கியிரு
கூறுசெய்து நன்றாய்க் குடி.

(க. தே. க) செய்யுள் 11

## மிருதார்சிங்கி நஞ்சு முறிவு.

மாட்டுமிரு தார்சிங்கி மாதேயுன் டோருக்குக்
கூட்டிக் குடிநீரும்பின் கோற்றேன்—வாட்டமற
நன்னீரி லேயரைத்து நன்றாய வடித்துணணச்
சொன்னீ யவுரியின்வேர்த் தூள்.

(வி.பி.வி.) செய்யுள் 12

### உப்பு நஞ்சுக்கு மாற்று.

கொடுப்பாய்நீ யுப்பிற்குக் குப்பைமே னிச்சா
றிடுக்கான தாழைவிழு திவளிர்—குடித்திடுவாய்
சிற்றம்மான் பச்சரிசி சிராகத் தின்னலாம்
பொற்றேடியே சொல்வாய் புரிந்து.

செய்யுள் 13

### (சூடன்) கற்பூரம் நஞ்சு முறிவு.

துனித்திடுகர்ப் பூரத்தைச் சோர்விற்கொண் டோர்க்குப்
பனித்திடுவாய் சம்பீரச் சாற்றிற்—கனித்தபலம்
நற்காய்ச்சுக் கட்டிதனை நன்று யரைத்தெடுத்தங்
கற்கவான் மோரிலுண்பா யன்று.

செய்யுள் 14
(க.தே.த.)

### செம்பு பற்பம்

#### நஞ்சுக் குறிகுணம்.

"பிசகு பற்பமுறை யெவின லத்திநெறி
பிறழ மச்சமிகு மிருமலே
பிறகு விக்கலொடு தலைதி ருப்பிவரு
பிரமை மிகுத்துவரு மறல்கள்வாய்ப்
பெருகி யக்குல்ரு முரமெ ரிச்சலுறும்
பிளிறல் மெத்தவரு மிவைகடீர்
பெலம ருத்துமுறை யுணர்ம ருத்துவர்கள்
பெலமு ரைப்பரிய தவர் செய்வார்
முசிவ கற்றுவது நெளிவு பத்யவழி
முறைகொ ளப்பிணிகள் வதிதல்போல்
முளரி எத்தகடு பசிமி குக்கவெரி
முடுகு மற்றவது தனியவே."

செய்யுள் 15

புனிதமுறுச் செம்பைப் புசித்தா லிருமல்
மனிதனெறி மாறி வருதல்—தவிப்பிரமை
வாய்நீரு றல்விக்கல் மார்பெரிவு நெஞ்சுலரல்
ஓய்விலாப் பேச்சுண்டா முன்.

செய்யுள் 15

முறிவு.

"எலுமிச்சை சுக்கிலைது போம்".

முகிலெ னக்கிருத மிழுது மப்பமடை
முதிய சர்க்கரைகள் பூரியா
முனைய வற்பொரிய பயறு கனித்திரள்
முதலு ணப்பரவு முடலெலா
மிசைய ரத்தமிகு மெழில்ளி ருத்தியுறும்.

செய்யுள் 16

**செம்பின் (தாம்பிரத்தின்) களிம்புக்கு மாற்று.**

புரிந்திடுவாய் தாம்பிரத்தின் பொல்லாக் களிம்பை
அருந்திவிடி னமலகச் சாறுண்—பொருந்தவே
சம்பீர நற்பழத்தின் சாறுகு மேதியதன்
இம்புளித்த மோரென் றிசை.

செய்யுள் 16

துருசு நஞ்சுக் குறிகுணம்.

முறிவு

தூளா மயில்துத்தஞ் சோர்வுட னுண் டோர்கட்குத்
தாளான சம்பீரச் சாறுடனே—கேளாய்நீ
இஞ்சிநீர் தேனு மிரும்பஞ்ச சாரையுடன்
கொஞ்சுமொழி யுண்ணக் கொடு.

செய்யுள் 17

(வேறு)

துத்தஞ் சுவைத்தார்க்குத் தூயமஸ்து நீராம்பு
ளித்த வவந்திய ளிக்கலாஞ்—சுத்த
வருணக் கனிச்சாறுக் கவ்வளவிக் குச்சா
றுறக்கலந் துண்பிக்க வோடும்.

(க. கே. த) செய்யுள் 17

இருவங்க நஞ்சு முறிவு.

இசைப்பா யிருவங்கங் கொண்டோர்க்கு நல்ல
இசைப்பாங் கரும்பூ விலையைத்—தசைப்படாக்
கருங்கோழி மாமிசமாங் காட்டுப் புளியானை
தருவோரா மென்றேநீ நாட்டு.

செய்யுள் 18

## அப்பிரக நஞ்சுக் குறிகுணம்.

சுத்திசெயா வப்பிரகந் துய்த்தார்க்குச் சோபையுடன்
சத்திரத்த காசந் தழைக்குமே—மெத்த
விடுமருந்துக் கேய்ந்தருணை மெல்லா மமைந்து
கெடுமருமைத் தேகமிதைக் கேள்.

(க. தே. க.)

“இந்தவப்பிரக பற்பத்தாலெவர்க்குமின்பங்களுண்டாம்
முந்துமிச் சரக்கின் சுத்தி முறையெளி வின்றேற் றுன்பம்
வந்திடுமதனுன் மெத்தமருந்திடு கெடுதி போல
அந்தநோ யகற்றுமாறே தறிந்திடிற் றேன்றி சுக்கே.”
“தப்பிதமி லைச்சிறிது தப்பிலது தப்புமிரு
தத்துவரு முப்பிச மதே.”

(தே.கரிசல்) செய்யுள் 29 (19)

சொல்லுமிவ் விரண்டின் முன்னோர் தொடியோலவ் வொன்றுக்
காக

நல்லசுண் ணீர தற்கு நாலைந்து பால்மே லாகப்
புல்லவிட் டதற்குக் காலாய்ப் பொங்கவிட் டிறக்கி மாந்தச்
சொல்லுமப் பிணிக்கொட் டாலைக் துன்புறுங் குணம தாமே.

(வேறு)

என்றாழி லேகிருமி யென்னமருந் தீடசத்தி
என்றாழி லேகிருமி யெய்க்குமுன்னே—யென்றாழி
பூரவள்ளி யப்பிரகை பொய்த்நாலி தேமுனகர்ப்
பூரவள்ளி யீயஃதும் போம்.

(தே. ய. வெ. உ)
செய்யுள் 21

(வேறு)

சுத்திசெய்யா வப்பிரகந் தனைவழங்கும் பண்டிதர்க்குத்
துணையா வாரேல்
அத்திசெய்யாக் காமவல்லி மனையிலாக் கொட்டையுடைக்
காத்தராக
வுத்திசெயா தொழிந்தோருஞ் செயம்பெறுவர் தப்பிதம்வந்
தாற்றல் வேறு
புத்திசெய்யா திவையிரண்டுங் குடிநீராய்க் குடிக்கிலது

போந்தப்பாதே. (தே. செ.) செய்யுள் 22.

சுண்ணாம்பு நஞ்சுக் குறிகுணம்.

"சொல்லுவாய் சுண்ணத்தைக் கொண்டோர்க்குத் தூயதாம்
நல்லமஞ்ச ளாமேதி நன்மோராம்"

*          *          *          *

*          *          *          *

(வி. பி. வி.)

(வேறு)

சுதையுண்டா ரண்ணுவால் தொண்டைமுதல் வெந்து
வதைவார்க்கு மஞ்சள் வழங்கு—அதையன்றித்
தெங்கின்பா லாநெய் தெவிட்டக் கொடுப்பாய்நீ
குங்கிலிய வெண்ணெயையுங் கோரு.

செய்யுள் 23

2. பயிர் (தாவர) வகுப்பு.

உழுந்து.

நஞ்சுக் குறிகுணம்.—இதை அளவறிந்து உண்ணில் உடம்பிற்கு வட்டத்தையும் அழகையும் கொடுக்கும். அளவிற்கு அதிக அளவில் உண்ணில் பசித்தீயைக் கெடுத்து அசீரணத்தை உண்டாக்கும். வயிற்றுக்கடுப்பும், வயிறு பளுவும் உண்டாகும். மலச்சிக்கலாவது, கழிச்சலாவது காணும். நெஞ்சுக் கரிப்பு ஏற்படும்.

முறிவு

தேவையான பொருட்கள்.—(1) 4 கிராம் கொள்ளுக் காய் வேளை, (2)4 கிராம் மிளகு, (3) 4 கிராம் சீரகம், (4) 4 கிராம் தேன்.

செய்முறை.—கொள்ளுக்காய் வேளை, மிளகு, சீரகம் ஆகிய மூன்று சரக்குகளையும் மேற்சொன்ன அளவின்படி எடுத்து இடித்து மண்சட்டியிலிட்டு, 165 மி.லிட். நீர்விட்டு காலாழாக்காகக் காய்ச்சி அத்துடன் 4கிராம் தேன் சேர்த்து நோய் வன்மைக்குத் தக்க நாளளவு கொடுக்க உழுந்திலை் உண்டான நஞ்சு வேகம் தணியும். (செய்யுள் 1) (வி. பி. வி.)

### கடலை, துவரை, மொச்சை.

**நஞ்சுக்குறிகுணம்.**—செரியாமையும், வயிற்றுப்பிசமும் உண்டாகும். புளியேப்பம் ஏற்படுவதோடு கழிச்சலுமாகும், எருவாயடைப்பும் உண்டாகும்.

**முறிவு.**—செம்மண்ணை நீரிற் கரைத்து அருந்த கடலை, துவரை, மொச்சை ஆகியவைகளை உண்டதனால் உண்டான நஞ்சு முறியும்.

### நெய்.

**நஞ்சுக்குறிகுணம்.**—நெய்யை அளவுக்கு மீறி உண்டவர்களுக்கு வயிற்று மந்தமும் செரியாமையும் உண்டாவதோடு, கல்லீரல் மலர்ச்சியும் உண்டாகும். (செய்யுள் 2) வி. பி. வி.

**முறிவு.**—பசுவின் பால் குடித்தால் நெய்யின் நஞ்சு வேகம் தணியும்.

### நெய், தேன்.

**நஞ்சுக்குறிகுணம்.**—நெய்யையும் தேனையும் ஒரு அளவாகச் சேர்த்துக் குடித்தால் வயிற்று வலியும் வாந்தியும் உண்டாவதோடு, உடற்கொதிப்பும், நீர் எரிச்சலும், வாயில் நீர் சுரத்தலும் உண்டாகும்.
(செய்யுள் 3).

**முறிவு.**—கரியை நீர் விட்டரைத்து உண்ண வேண்டும்.

### வேர்க்கடலை.

**நஞ்சுக் குறிகுணம்.**—வேர்க்கடலையை அதிகமாக உண்டால் வாந்தியும், தலை மயக்கமும் வாயில் நீர் சுரத்தலும் சிலருக்கு கழிச்சலுமாகும். அழல் அதிகமாக உண்டாவதால் நாவின் சுவை மாறும். நீர் வேட்கை உண்டாகும்.

**முறிவு.**—கரும்பு, வெல்லம் தின்றால் வேர்க்கடலையின் நஞ்சு வேகம் முறியும். (செய்யுள் 4).

### தேங்காய்.

**நஞ்சுக் குறிகுணம்.**—இதை அளவிற்கு அதிகமாக உண்டால் வாயில் நீர் சுரக்கும். நாவில் சுவை இருக்காது. வாந்தி, கழிச்சல், தலைமயக்கம், தண்ணீர் வேட்கை முதலியன உண்டாகும்.

முறிவு.—கரும்பு, வெல்லம் அல்லது பச்சரிசி இவைகளில் ஒன்றை அளவோடு உட்கொண்டால் தேங்காய் நஞ்சு முறியும். (செய்யுள் 4)

### கோழி முட்டை.

நஞ்சுக் குறிகுணம்.—இதை அளவு கடந்து வேக வைத்தோ அல்லது அளவிற்கு அதிகமாகவோ உட்கொள்வதால் பசி மந்தமும், புளி ஏப்பமும், செரியாமையும் உண்டாகும்.

முறிவு.—முள்ளங்கிக் கிழங்கை உட்கொண்டால் முட்டையினுல் உண்டான நஞ்சு வேகம் தணியும். (செய்யுள் 5)

### வாழைப்பழம்.

நஞ்சுக் குறிகுணம்.—வாழைப்பழத்தை அதிகமாக உண்டால் வயிறு மந்தப்பட்டு பொருமும். பலமுறை வயிற்றை வலிக்கும். மலம் மிகவும் சூடாக வெளிப்படும்.

முறிவு.—புகையிலைக் குடிநீரை உண்டால் வாழைப்பழத்தினுல் உண்டான நஞ்சு நீங்கும். (செய்யுள் 6)

### பலாப்பழம்.

நஞ்சுக் குறிகுணம் பொது.—வாயு அதிகரிக்கும் வாயுத் துன்பத்தினுல் மந்தமும் பசியின்மையும் உண்டாகும். ஏப்பம் வெளிவரும்போது பலாப்பழத்தின் மணமே வெளிவரும். ஐயமும், மயக்கமும், வாய் கரித்தலும் உண்டாவதோடு வேறு பல பிணிகள் உண்டாவதற்குக் காரணமாகவும் இருக்கும்.

முறிவு.—நஞ்சின் வன்மைக்குத் தக்க அளவு நெய் அல்லது அல்லது தேன் கொடுக்க வேண்டும். (செய்யுள் 7)

### பாலாடை நஞ்சுக் குறிகுணம்.

பொது.—உடம்பிற்கு வன்மையைக் கொடுக்கும், அளவிற்கு அதிகமானுல் பசி மந்தப்படும் வயிற்றுப் பொருமல், கழிச்சல், வாந்தி, வயிற்றுவலி ஆகியவைகள் உண்டாகும்.

முறிவு.—புளித்த மோர் குடித்தால் பாலேடு தின்பதனுல் தேன் கொடுக்க வேண்டும். (செய்யுள் 7)

### இலவம் பிசின்.
### (Bombax Malbaricum)

நஞ்சுக் குறிகுணம்.—இலவம் பிசினை அதிகமாக உட்கொண்டால் மலச்சிக்கலும், வயிற்றுப் பொருமலும், நீர்க்கட்டும், உடம்பெல்லாம் கொதித்தலும் போன்ற குறி குணங்கள் உண்டாகும்.

## முறிவு

**தேவையான பொருட்கள்.**—(1) சிவனார் வேம்பு. (2) வெந்நீர்.

செய்முறை.—10 கிராம் சிவனார் வேம்பை எடுத்து வெந்நீர் விட்டு நன்ருக அரைத்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் மூன்று அல்லது ஐந்து நாள் உட்கொண்டால் இலவம் பிசினல் உண்டான நஞ்சு நீங்கும். (செய்யுள் 8)

## குன்றிமணி.

## (Abrus Precatorius)

பொது.—குன்றிமணியின் எல்லாப்பாகங்களும் நஞ்சுத் தன்மையுடையது. இதன் பருப்பு மிக அதிகமாக நஞ்சுக் குணமுடையது. இதைக் கர்ப்பத்தையழிக்கப் பயன்படுத்துவதுண்டு. இதைக் குழந்தைகள் இதன் குணத்தை அறியாமல் உட்கொண்டு வருந்துவர்.

நஞ்சின் குறிகுணம்.—வாந்தி, வயிற்றுக் கடுப்பு, மயக்கம், உடல் அழற்சி, வயிற்றெரிச்சல், கழிச்சல், மந்தம் முதலியவைகள் உண்டாகி மரணமும் ஏற்படும்.

முறிவு.—2 கிராம் வெங்காரத்தைப் பொரித்து நீரிற் கரைத்து உட்கொள்ளலாம். அல்லது 18 கிராம் விடதாரி வேரை வெந்நீரிலரைத்து உண்டாலும் குன்றிமணியின் நஞ்சு தீரும். (செய்யுள் 9) வி.பி.வி.

## ஊனுங்கிழங்கு.

குறிகுணம்.—ஊனுங்கிழங்கைத் தின்றால் வாந்தி பேதி, வயிற்றுப்பொருமல், அறிவுத் தடுமாற்றம், சுரம் ஆகியவைகள் உண்டாகும்.

முறிவு.—வெள்ளைச் சங்கம் பழத்தின் சாற்றை நஞ்சின் அளவுக்குத் தக்கபடி கொடுக்க ஊனுங்கிழங்கின் நஞ்சு நீங்கும். (செய்யுள் 10)

## நாவற்கொட்டை.

நஞ்சுக் குறிகுணம்.—மலச்சிக்கல், மார்வலி, வயிற்றை இழுத்துப் பிடித்தல், நீரைச் சுருக்கல் ஆகியவை உண்டாகும்.

முறிவு.—கொள்ளை நீரில் அரைத்து நஞ்சினளவிற்குக் கொடுத்தால் நாவற்கொட்டை நஞ்சு முறியும். (செய்யுள் 10) வி. பி. பி.

## கோடற்கிழங்கு.

## (Glor osa Superba)

நஞ்சுக் குறிகுணம்.—கோடற்கிழங்கை உண்டால் வாந்தியும், அறிவு மயக்கமும், கண் சிவப்பும், எரிச்சலும், சுவை கெடலும் உண்டாகும்.

முறிவு.—அவுரி வேர்ப்பட்டையை வெந்நீர் விட்டு அரைத்துக் கொட்டைப் பாக்களவு நோய் வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்தால் வெண்காந்தட் கிழங்கு நஞ்சு முறியும். (செய்யுள் 11)

## மிளகாய்.

நஞ்சுக் குறிகுணம்.—மிளகாயை அதிகமாக உண்டால் கண்களிலிருந்து நீர் வடியும், கண் சிவக்கும், குடல், தீனிப்பை, மார்பு, வாய் முதலியவை புண்படும். காரம் படமுடியாது, சீதக் கழிச்சலுண்டாகும். சாதாரணமாக மலம் போனாலும் கொதிப்பாக இருக்கும், வயிற்று நோய் உண்டாகும்.

முறிவு.—கொத்தமல்லியையும் நெய்யையும் அதிக அளவாகச் சேர்த்து உட்கொண்டால் மிளகாய் வேகம் தணியும். (செய்யுள் 11)

## சிவனார் கிழங்கு.

நஞ்சுக் குறிகுணம்.—பெருங்கிழங்கையுண்டால் வாந்தியும் வயிற்றுப் பொருமலும், நீர்க்கட்டும், ஒருவேளை கழிச்சலும், மயக்கமும், போட்ட காலும் போட்ட கையுமாகக் கிடத்தலும் உடற்சோர்வும் உண்டாகும், இவைகளிற் சிலவும் ஏற்படுவதுண்டு.

முறிவு.—(1) 10 கிராம் தோல் சீவின சுக்கை 325 மி.லி. நீர் விட்டுக் காய்ச்சி 80 மி.லிட்டராகச் சுண்டச் செய்து அக்குடிநீரை 3 அல்லது 5 வேளை உட்கொள்ள வேண்டும்.

(2) 10 கிராம் வெள்ளரி விதையை எடுத்து மேற்தோலை நீக்கிவிட்டு வெந்நீர் விட்டரைத்து மூன்று அல்லது ஐந்து வேளை கொடுக்கவேண்டும்.

(3) 10 கிராம் நாவற்கொழுந்தை நீரிலரைத்து உட்கொள்ள வேண்டும். இவைகளினால் பெருங்கிழங்கு நஞ்சு முறியும். (செய்யுள் 12).

## மகிழம் நஞ்சு.

நஞ்சுக் குறிகுணம்.—மகிழம் பிஞ்சைத் தின்றால் வாந்தியும், மலச்சிக்கலும், நாவறட்சியும், நீர் வேட்கையும், உன்னு விறு விறுப்பும் போன்ற குறிகுணங்கள் தோன்றும்.

முறிவு.—உத்தாமணி வேருடன் கொஞ்ச அளவு சுண்ணாம்பைக் கூட்டி அரைத்து மிளகளவு உருண்டை செய்து மூன்று அல்லது ஐந்து நாள் உட்கொள்ள மகிழம்பிஞ்சின் நஞ்சு தீரும். (செய்யுள் 13)

## சோறு.

நஞ்சுக் குறிகுணம்.—அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பது பழமொழி.

" தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப்படும்"—என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். பசித்தீயின் அளவிற்குத் தக்கபடியே உண்ணவேண்டும். அதிகமாக உண்டால் அதனால் அளவில்லாத நோய்கள் உண்டாகும் என்ற உண்மை பெறப்படுகின்றது.

சோற்றை அதிகமாக உண்பதாலும், நொந்ததும் சில்லிட்டதுமான சோற்றை உண்பதாலும், அது நஞ்சுத் தன்மையை அடைந்து விடுகிறது. அதனால் செரியாமை, வயிற்றுப் பொருமல், பேதி, புளியேப்பம், நெஞ்சுகரித்தல், செரியா அன்னத்தை எதிரெடுத்தல், சுரம் என்பவைகள் உண்டாகும்.

முறிவு.—(1) 10 கிராம் சீரகத்தை நன்றாயாய்ந்து வெந்நீர் விட்டு அரைத்தாவது அல்லது பொரியவிட்டுப் பொரிந்தவுடன் 325 மி.லி. நீர்விட்டு 80 மி.லிட்டாராகக் குடிநீர் காய்ச்சியாவது மூன்று அல்லது ஐந்து வேளை கொடுக்க வேண்டும்.

(2) 4 கிராம் கொள்ளுக்காய்வேளை எடுத்து வெந்நீர் விட்டரைத்து மூன்று அல்லது ஐந்து வேளை கொடுக்க வேண்டும். இவைகளைச் செய்வதனால் சோற்றினால் உண்டான நஞ்சு முறியும். (செய்யுள் 13).

### மருதோன்றியும் எண்ணெயும் சேர்ந்த நஞ்சுக் குறிகுணம்.

மருதோன்றியை எண்ணெயுடன் சேர்த்து அரைத்து உண்டால் ஏற்படும் நஞ்சுக் குறிகுணம். வாந்தி, நாவறளல், தொண்டை வறட்சி, பசி மந்தப்படல் முதலியவைகள் உண்டாகும். சில சமயம் சாவையும் விளைவிக்கும்.

(முறிவு.—தான்றிக்காய்த் தோலை நசுக்கி விதிப்படி குடிநீர் செய்து குடித்தால் மருதோன்றியையும் எண்ணெயையும் சேர்த்து உண்பதனால் உண்டான நஞ்சு முறியும். (செய்யுள் 14)

### நுங்கு.

குறிகுணம்.—வயிறு அடிக்கடி போகும், வயிற்று வலி, வயிற்றுப் பிசம், பசியின்மை, மந்தப்படுதல் போன்றவைகள் உண்டாகும்.

முறிவு.—பெருங்காயத்தைப் பொரித்து நோய் வன்மைக்குத் தக்க அளவு கொடுத்தால் நுங்கு நஞ்சு நீங்கும். (செய்யுள் 14)

### புளித்த தயிர்ச் சோறு.

நஞ்சுக் குறிகுணம்.—மேற்சொன்னபடி உணவை உட்கொள்ளாது அளவிற்கு மேல் தயிர் சேர்த்து உணவுடன் உட்கொண்டால் மந்தம், கழிச்சல், சோம்பல், சோர்வு புத்தி மந்தம் தூக்கம் முதலியவைகள் உண்டாகும்.

முறிவு.—கடுகைப் பொரியவிட்டு விதிப்படி நீர்விட்டுக் குடிநீர் செய்து குடிக்கப் புளித்த தயிர்ச்சோற்றாலுண்டான நஞ்சு தீரும்.

(செய்யுள் 15)

### கொடிக்கள்ளிப்பால்.

குறிகுணம்.—கொடிக்கள்ளிப்பாலைத் தனித்தேனும் அல்லது வேறுபொருளோடு கலந்தேனும் உட்கொண்டால் வாய் குமட்டல், தொண்டை கரகரத்தல், கழிச்சல், வாந்தி, வாய்ப்புண் எருவாயக் கடுப்பு முதலியன உண்டாகும்.

முறிவு.—(1) கோவைச்சாற்றை விதிப்படிக் குடிக்கவேண்டும்.

(2) பசுவின் சாணிப்பாலை விதிப்படிக் குடிக்கலாம்.

(3) வெள்ளை மண்ணை நீரிற் கரைத்து வடித்து விதிப்படிக் குடிக்கவேண்டும்.

இவைகளில் ஒன்றைக் கொடுக்க கொடிக்கள்ளியால் உண்டான நஞ்சு நீங்கும். (செய்யுள் 15)

### நல்லெண்ணெய்ச் சோற்றின் நஞ்சுக் குறிகுணம்.

நல்லெண்ணெயையும் சோற்றையும் கலந்துண்பதால் மந்தம், மயக்கம், வாந்தி, கழிச்சல், எருவாயடைப்பு, வயிற்றுப் பொருமல் செரியாஏப்பம், நெஞ்சுகரித்தல் என்பன உண்டாகும்.

முறிவு.—காடியைச் சாப்பிட நல்லெண்ணெயும் சோற்றையும் சேர்த்து உண்ட நஞ்சு நீங்கும்.

### வெற்றிலைச்சாறு நல்லெண்ணெய் நஞ்சுக் குறிகுணம்.

வெற்றிலைச் சாற்றையும் நல்லெண்ணெய்யையும் கலந்து குடித்தால் வேக்காடு, வாந்தி, சுவையின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல் உண்டாகும்.

முறிவு.—தேங்காய்ப்பால் உண்டால் மேற்படி நஞ்சு முறியும். செய்யுள் (16)

### நெல்வேர்எண்ணெய்.

நஞ்சுக் குறிகுணம்.—நெல்வேரையும் எண்ணெயையும் கலந்து உண்பதால் மஞ்சள் நிறத்தோடு கைத்த வாந்தி ஏற்படும், தலைச் சுற்றலும், வாயில் நீர் சுரத்தலும், நீர் வேட்கையும், உண்டாவ தோடு கழிச்சலும் உண்டாகும்.

முறிவு.—(1) சுரையிலைச்சாறு அல்லது குடிநீர் குடிக்கலாம்.

(2) எலுமிச்சை வேர்க்குடிநீர் அருந்தலாம். இக்குடிநீரால் மேற்படி நஞ்சு வேகம் தணியும். (செய்யுள் 17)

### நெல்வேர் சர்க்கரை.

குறிகுணம்.—நெல்வேருடன் சருக்கரையைச் சேர்த்து உண்டால் வாந்தியும், சுவையின்மையும், வாயில் நீர் சுரத்தல், நீர் வேட்கை போன்றவைகள் உண்டாகும்.

முறிவு.—எருக்கிலைச்சாற்றை உண்ணவேண்டும். (செய்யுள் 17)

### நெல்வேர்.

குறிகுணம்.—வாந்தி, வயிற்றுப்பிசம், பசிமந்தம், கழிச்சல், சுவையின்மை முதலியன உண்டாகும்.

முறிவு.—(1) பேய்ப் பீர்க்கு வேரை நீர்விட்டு அரைத்து உண்ணவேண்டும்.

(2) விலாமிச்சம் வேர்க்குடிநீர் உட்கொள்ளலாம். (செய்யுள் 17).

## கோதுமை.

நஞ்சுக் குறிகுணம்.—உடம்பில் சூடு உண்டாகும். சிலருக்கு மலச்சிக்கலுண்டாகும். சிலருக்கு கழியும். வயிற்றுப் பொருமலும் பசிமந்தமும் உண்டாகும்.

முறிவு.—மிளகாய், பசுவின்பால், நெய் முதலியவைகளை சமயத்திற்குத் தக்கவாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டும். (செய்யுள் 18)

## எண்ணெய்.

நஞ்சுக்குறிகுணம்.—இதை அளவுக்கு அதிகமாக உட்கொள்வதால் நெஞ்சு கரிப்பு, மந்தம், வயிற்றில் எல்ணெய் சிக்கி, துன்பம் கொடுத்தல், எருவாய் அடைப்பு, புத்தி எதிலும் செல்லாமை போன்ற குறிகுணங்கள் தோன்றும்.

முறிவு.—ஊசறப்பட்டையை அரைத்துத் தின்ன வேண்டும் அல்லது அதைக் குடிநீர் செய்து குடிக்கவேண்டும். இதனால் நஞ்சு வேகம் தணியும். செய்யுள் (18)

## எருக்கு.

(Calotropis Gigantea)

பொதுக் குணம்.—எருக்கின்பால் மருந்துக்குப் பயன்படுத்தப் படுகிறது. கருப்பச் சிதைவுக்கும், கருவழிக்கவும் கூட இதைப் பயன்படுத்துவதுண்டு.

நஞ்சுக் குறிகுணம்.—தவருக உபயோகித்துவிட்டால் அந்த இடத்தில் புண்ணை உண்டுபண்ணும். உள்ளுக்குக் கொடுத்து விட்டால் வாய், வயிறு முதலியவை இரணமாவதோடு வாந்தி, பேதி முதலியவைகளையும் உண்டாக்கும்.

முறிவு.—(1) சர்க்கரையையும் 4 கிராம் எள்ளையும் சேர்த்து உண்ண வேண்டும்.

(2) பருத்தியிலையைக் காடிவிட்டு அரைத்து ஒரு பாக்களவு வீதம் உட்கொள்ளவேண்டும்.

(3) மஞ்சட்பொடியும் சிற்றாமணக்கு நெய்யையும் கலந்து உச்சிக்கரண்டியளவு வீதம் கொடுக்கவேண்டும். இவைகளால் எருக்கின் நஞ்சின் வேகம் தணியும். (செய்யுள் 19)

(வேறு)

(1) ஒரு வேளைக்கு 20 மி.லி. நல்லெண்ணெய் வீதம் மூன்று அல்லது ஐந்து வேளை உட்கொள்ளவேண்டும்.

(2) 10 கிராம் மாவிலிங்கப்பட்டையைத் தண்ணீர் விட்டரைத்துக்கொள்ளவேண்டும்.

சதுரக்கள்ளிப்பால்.

நஞ்சுக் குறிகுணம்.—இதைத் தனியாக உண்டாலும், அல்லது வேறுபொருட்களுடன் உண்டாலும் கழிச்சல் அதிகரிக்கும். விரைவில் அக்கழிச்சல் நிற்காமல் குருதியாய்ப் பேதி காணும். மேலும் வாந்தி, மயக்கம், கைகால் குரக்கு வலி வலித்தல், கண் சிவத்தல், சோறு செரியாமை, ஏப்பம், வயிற்றுப்புசம் போன்றவைகள் உண்டாகும்.

முறிவு.—10 கிராம் ஆவாரையிலையை வெந்நீர் விட்டரைத்து ஒரு நாளைக்கு இரண்டுவேளை வீதம் மூன்று அல்லது ஐந்து நாள் உண்ணக் கள்ளிப்பாலாலுண்டான நஞ்சுகள் தீரும். (செய்யுள் 20) (வி. பி. பி.)

தில்லைப்பால்.

(Execoerea Agalocha)

நஞ்சுக் குறிகுணம்.—இதன் பால் வாடைபட்டால், உடல் பூதம் போல் பாரிக்கும், உடம்பில் சூடு உண்டாகும். அதன் காரணமாகப் அழல் அதிகமாகி வாய் வரளும். நீர் வேட்கை உண்டாகும் சுவை மாறும். பசி மந்தம் ஏற்படும். அத்துடன் கழிச்சலும், வாந்தியும் காணும். இதன்பால் உட்சென்றால் எல்லா உறுப்புகளும் வெந்து புண்ணுவதுடன் வாய் நாற்றம் உணவில் அருவருப்பு சுரம் போன்ற குணங்கள் உண்டாகும்.

முறிவு.—கோவைச்சாறு அல்லது சிற்றாமணக்கு எண்ணெய் அல்லது எருமைச்சாணிப் பால் அல்லது எருமை நெய் இவைகளை விதிப்படி உண்ணவேண்டும். (செய்யுள் 21)

## நேர்வாளம்.
## (CROTON TIGLIUM)

பொதுக்குணம்.—இந்தியமுறை மருத்துவத்தில் பெரிதும் பயன் படுத்தப்படுகிறது. இதை முறைப்படி தூய்மை செய்து குறுக்கி இரண்டு மணி நேரத்திற்கொரு முறை வேளைக்குக் பயன்படுத்து வதால் மிகப்பெரியதான பயனுடையதாகும். தூயமை செய்வதில் குறைபாடு உண்டானல் கொடிய நஞ்சுத் தன்மையுடையதாகும். அதிக அளவு உட்கொண்டாலும் நஞ்சாக மாறிவிடும். (செய்யுள் 22)

நஞ்சுக் குறிகுணம்.—வாய் குமட்டல், வாந்தியும் கழிச்சலுமாதல், வயிறு புண்ணுதல், வாய் நீரூறல், சிற்சில சமயங்களில் வாய் வறளல், கண் செருகல், மயக்கம், களைப்பு, வியர்வை, கண்ணுச்சதையில் ஓர் வித வலி உண்டாதல். கண் பார்வை மங்கல், வாய் கசத்தல், பல் கறுத்தல், அடிக்கடி மூர்ச்சையுண்டாதல் போன்ற குறிகுணங்கள் காணப்படும். இதற்குத் தக்க மருத்துவம் செய்யாவிடில் சாவை விளைவிக்கும்.

முறிவு.—தேவையான பொருட்கள்.—(1) 8 கிராம் வசம்புச் சாம்பல், (2) 8 கிராம் புளியங்கோந்தின் சாம்பல்.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட இரண்டு பொருட்களையும் ஒன்ருகச் சேர்த்து 325 மி.லி. நீர் விட்டு காய்ச்சி 160 மி.லியாகக் குறுக்கி இரண்டு மணி நேரத்திற்கொரு முறை வேளைக்குக் 40 மி.லி. வீதம் கொடுக்க வாந்தியும் கழிச்சலும் நிற்கும்.

(2) 10 கிராம் சீரகத்தைத் தேனில் வதக்கி 650 மி.லி. நீர் விட்டு 325 மி.லியாக வற்ற வைத்து வேளைக்கு 80 மி.லி. வீதம் நாள் ஒன்றுக்கு 4, 5 முறை கொடுக்க மேற்படி நஞ்சு வேகம் தீரும். (கைமுறை)

(3) தேவையான பொருட்கள்.—(1) 10 கிராம் நெய்ச்சட்டிக் கீரை வேர்ப்பட்டை.

(2) 10 கிராம் முருங்கை வேர்ப்பட்டை.

(3) 10 கிராம் பன்னீர்ச் செடி வேர்ப்பட்டை.

(4) 10 கிராம் சீரகம்.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களையும் குடிநீர் செய்து இரண்டுவாரம் காலைமாலை கொடுத்துவர இதன் கொடூரத்தன்மை தணியும். (தே.ய.வெ.உ.)

## சித்திரமூலவேர்.
## (PLUMBAGO ZEYLANICA)

பொதுத் தன்மை.—மருத்துவர்களால் பயன்படுத்தப்படுவது உண்டு.

நஞ்சுக் குறிகுணம்.—சித்திர மூல வேர்ப்பட்டையைச் சிதைத்து உடம்புத் தோலின் மீது பூசினுல் தோல் சிவந்து எரிவதோடு புண்ணுமுண்டாகும். சிலர் இதைத் தவருன முறையில் பயன்படுத்துவதுமுண்டு. அதனுல் உடல்நிலே கெட்டு சாவு ஏற்படுத்துவதுமுண்டு. இதை அளவுக்கு மீறி உள்ளுக்குக் கொடுத்தால் வயிற்றில் அழர்ச்சியையும் எரிச்சலேயுமுண்டாக்கு வதோடு சாவையும் விளேவிக்கும்.

முறிவு.—(1) பசுநெய்யைக் குடிக்கவேண்டும்.

(2) நல்லெண்ணெய்யில் உழுந்துவடை சுட்டு உண்ணலாம்.

(3) பேய்ப்பீர்க்கு, கோரைக்கிழங்கு ஆகிய இரண்டையும் சேர்த்துக் கியாழமிட்டுக் கொடுத்தாலும் சித்திரமூல வேர்நஞ்சு நீங்கும். (செய்யுள் 23)

## சேங்கொட்டை.
## (SEMICARPUS ANACARDIUM)

பொதுத்தன்மை.—நம் நாட்டு மருத்துவர்களால் மிகுதியாகக் கையாளப்படுகின்றது. இதை முறைப்படி தூய்மை செய்து கொண்டால் நீடித்த வாழ்நாளை நல்க வல்லதாகும். பக்குவமுறை சிறிது குன்றினும் உடலேக் கெடுத்துவிடும் தன்மையுடையது. மேலும் இந்நாட்டுப் பெண்கள் இதைக் கருச்சிதைவுக்குப் பயன் படுத்துகின்றனர். நன்ருகத் தூய்மை செய்தபோதிலும் அளவுக்கு அதிகப்படின் நஞ்சுத் தன்மையைக் கொடுக்கும் ஆற்ற லுடையது. இது இரசத்தின் வன்மையுள்ளது.

நஞ்சுக் குறிகுணம்.—உடம்பில் பட்ட மாத்திரத்திலேயே வேக் காட்டை உண்டாக்கி (கொப்புளங்களை) புண்ணுக்கும். மருந்து செவ்வையானதாகப் பக்குவப்படாவிடில் உட்கொண்ட உடனேயே வாய், வயிறு, குடல் முதலியன புண்ணுகும். சில சமயம் மந்தம், எரிச்சல், வாந்தி, கழிச்சல் முதலியவைகள் உண்டாகும். உடம்பை ஊதச்செய்யும். தூக்கத்தைக் கெடுத்து மேலும் பல துன்பங்களை உண்டாக்கும். அத்துடன் சாவையும் உண்டாக்கும்.

முறிவு.—சோரங்கொட்டை நெய் உடல் மேற்பட்டு உடல் ஊதி விட்டால் செங்கல்லேப் பொடிசெய்து உடலில் ஒற்றடம்

போட்டு மெழுகையும் நல்லெண்ணெயையும் சேர்த்துக் காய்ச்சி மேலுக்கும் பூசினால் ஊதின உடல் வற்றிவிடும்.

சேராங்கொட்டைப்பாலால் உண்டாகும் புண்ணுக்கு முறிவு.—கோரைக்கிழங்கு, சந்தனம், எள், ஏலரிசி சரி எடை கூட்டி நீர் விட்டரைத்து தேனிற் கலந்து உடல் மேல் பூச மேற்படி புண் நீங்கும். சேங்கொட்டையை உட்கொண்டுவிட்டால் புளியிலையை நன்றாக இடித்து அதன் அளவிற்கு எட்டுப்பங்கு ஆற்றுநீர் சேர்த்து அதில் மேற்றோல் சீவின ஒரு இளநீரைப் போட்டு வேக வைத்து அத்தேங்காய் வழுக்கையைத் தின்று அந்நீரையும் உட்கொள்ளச் சேராங்கொட்டையின் வேகம் தணியும்.
(செய்யுள் 24)

## மஞ்சள் அலரி.
## (THEVATIA NERIFOLIA)

**பொது.**—நமது நாட்டுத் தோட்டங்களில் பயிர் செய்யப்படும் மலர்ச்செடி இதன் காய், பூ, இலை, பால் யாவும் நஞ்சுடையது. இவற்றின் விதைப்பருப்பும் எண்ணெயும் குடித்தால் கொடிய விடமாகும்.

**நஞ்சுக் குறிகுணம்.**—வாந்தி, கழிச்சல், வாயில் நுரை தள்ளல், வயிற்றுக்கடுப்பு, மயக்கம், பற்களைக் கட்டிக்கொள்ளல் ஆகிய குறி குணங்களை விளைவித்து நஞ்சு உட்கொண்ட சிறிது நேரத்தில் சாவை உண்டாக்கும்.

**முறிவு.**—அலரிக்கிழங்கை எண்ணெயுடன் சேர்த்து உண்ட நஞ்சு முறிய (1) 10 கிராம் கடுக்காயுடன் 160 மி.லி. நீர் சேர்த்துப் பாதியாக வற்றக் காய்ச்சிக் குடிக்கவேண்டும்.

(2) 10 கிராம் கலப்பைக் கிழங்கை 50 மி.லி. நீரில் போட்டு குடிநீர் காய்ச்சவேண்டும். அது பாதியாக வற்றியவுடன் இறக்கி ஆறியபின் கொடுக்க வேண்டும்.

(3) 130 மி. கிராம் எடையுள்ள துருசை வெந்நீரில் கலக்கிக் கொடுத்து வாந்தி செய்விக்க வேண்டும்.

மேற்சொன்ன முறைகளில் அலரிக்கிழங்கையும் எண்ணெயையும் சேர்த்துண்டதால் உண்டாகிய நஞ்சு தணியும்.

## ஊமத்தை.
## (DATURA FASPUOSA)

**பொதுக்குணம்.**—மயக்கம் உண்டுபண்ணும், குணமுடையது. அறிவை மயக்க ஒழுக்கம் கெட்டவர்கள் இதைக் கையாள்வதுண்டு,

எனக் கூறப்படுகின்றது. இது கோழையகற்றும் பொருள். அதனால் இரைப்பு நோய் உள்ளவர்கள் இதன் பூவைச் சுருட்டாகச் சுருட்டிப் புகைப்பார்கள். இதை அளவுக்கு மீறிக் கையாண்டால் பல தீமைகளை விளைவிக்கும்.

நஞ்சின் குறிகுணம்.—பிதற்றல், மயக்கம், தொண்டை வறட்சி, தலை சுற்றல், நடை தடுமாறல், கண்பார்வை மங்கல், முகம் சிறுத்தல், கண்மணி விரிதல், கண்டபடி பேசல், ஆடல் பாடல், பயித்தியக்காரனைப்போல் தோன்றல், தன் ஆடை முதலியவைகளைக் கிழித்தல், மூச்சுக் குறைதல், ஆகிய குணங்களை உண்டாக்கி, முடிவில் சாவையும் விளைவிக்கும். சிலருக்கு வயிறும் பொருமிக் காணும், இதன் நஞ்சுக்குணம் உடம்பில் உள்ளவரை கண்மணி அகன்று காணும்.

முறிவு.—தாமரைக்கிழங்கைப் புளித்த தண்ணீர் விட்டு அரைத்து நோய் வன்மைக்குத் தக்க அளவில் அருந்த வேண்டும். நீலிவேர்ப் பட்டையை புளித்த தண்ணீர்விட்டு அரைத்து வாந்திக்குக் கொடுக்கவேண்டும். வாந்தியானபின் அழிஞ்சில்வேர்பட்டையை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து நஞ்சு வன்மைக்குத் தக்க அளவில் உண்ணவேண்டும்.

---

## எட்டிக்கொட்டை.
## (STRYCHNOS NUXVOMICA)

நஞ்சுக்குறிகுணம்.—இதை உண்டு சிலர் தற்கொலை புரிந்து கொள்வதுண்டு. நமது நாட்டில் பல இதைத் தாதுவிருத்திக்காக நாளுக்குநாள் அளவை அதிகப்படுத்தி உண்டு வருவார்கள். ஆனால் இதுபோலவே அளவு கடந்த நாட்கள் உட்கொண்டு வந்தால் தாதுவிருத்தி செய்வதை ஒழித்து நரம்புத் தளர்ச்சியை உண்டாக்கும். இப்பழக்கம் பெண்கட்கு இருந்தால் மலட்டை உண்டாக்கும்.

முறிவு.—(1) புறணி நீக்கப்பட்ட நாவற்பட்டையை ஈரத்துடனரைத்து வேளை ஒன்றுக்கு கொட்டைப் பாக்களவு நாள் ஒன்றுக்கு காலை மாலை இருவேளையும் 5 நாள் கொடுக்கவேண்டும். அல்லது நஞ்சு தீரும்வரை அருந்தவேண்டும்.

(2) தாமரைக் கிழங்கை மேற்படியாகச் செய்து கொடுக்க வேண்டும்.

(3) ஊமத்தனிலைச் சாற்றை வேளைக்கு 80 மி.லி. கொடுக்க வேண்டும்.

(4) கொட்டை நீக்கிய கடுக்காய் காலே மாலே முறைப்படி காய்ச்சி வேளைக்கு 80 மி.லி. குடிக்க வேண்டும்.

(5) அவுரி வேர்ப்பட்டையை நீர் விட்டரைத்து வேளைக்குக் கொட்டைப் பாக்களவாக 3 அல்லது 5 நாள் வரைக் கொடுக்க வேண்டும்.

(6) வெற்றிலேயை அரைத்து மேற்படி போல் உண்ண வேண்டும்.

(7) வெந்தயம் .5 கிராம், மிளகு .5 கிராம் சேர்த்து வெந்நீர் விட்டரைத்து வெண்ணெய் கூட்டி 3 அல்லது 5 நாள் வரை கொடுத்தாலும் நஞ்சின் கொடுமை தணியும்.

---

## அபினி.

## PAPAVER SOMNIFERUM

### நஞ்சுக் குறிகுணம்.

**பொதுத் தன்மை**.—போஸ்தக்காயின் பால், குழந்தைகளுக்குச் சிறிதளவு கொடுத்தாலும் நஞ்சாகிவிடும் தன்மையுடையது. பெரியவர்கள் அளவுக்கு மீறி உண்பதனல் ஒருவிதமான இன்ப உணர்வை உண்டாக்கி பின் உணர்வற்றுப் போகச் செய்யும். தலே சுற்றல், சோம்பல், மந்தம், மலக்கட்டு வருத்தமாய் மூச்சுவிடல். மூச்சுத்தடை, முகம் வெளுத்தல், உடல் கறுத்தல், வியர்வை விடல், கண்மணி குறுகல், சில சமயம் விரிதல், சிலவேளே வாந்தி, இழுப்பு, முகமும் வாயும் கோணல், சித்தப்பிரமை என்பவைகள் உண்டாகும். இக்குறி குணங்களோடு இருந்து சிலவேளே சாவையும் கொடுக்கும். (செய்யுள் 27)

(வேறு)

**தேவையான பொருட்கள்**.—(1) 10 கிராம் இலேக்கள்ளிவேர், (2) 10 கிராம் கோரைக் கிழங்கு. (3) 10 கிராம் வசம்பு, (4) 10 கிராம் சுக்கு.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களேயும் விதிப்படிக் குடிநீர்செய்து இரண்டு வாரம் குடித்தால் அபினி நஞ்சும், கஞ்சா நஞ்சும் தீரும்.

## கஞ்சா.

## (CANNABIS SATIVA)

### நஞ்சுக்குறிகுணம்.

பொதுத்தன்மை.—மயக்கத்தைக் கொடுக்கும்பொருள். இதன் இலை, மொக்கு, கட்டை, பால் முதலியன மருத்துவர்களால் பயன் படுத்தப்படுகின்றன.

தற்கொலை செய்யவும், சூல் அழிக்கவும், தாது விருத்தியின் பொருட்டும் பெரும்பாடு, வயிற்றுக்கடுப்பு, பெருங்கழிச்சல் முதலியவற்றிற்குப் பயன்படுத்தப்படுகின்றது./

முறிவு.—(1) சுக்குக்குடிநீராவது, (2) எலுமிச்சம் பழச்சாறு வது, (3) வாழைப்பட்டையை இடித்துப் பிழிந்த நீரையாவது நஞ்சு வன்மைக்குத் தக்க அளவு உண்டால் நஞ்சு வேகம் தணியும்.

குறிப்பு.—அபினி முறிவில் சொல்லப்பட்ட இலைக்கள்ளி வேராதிக் குடிநீரும் கஞ்சா நஞ்சைப் போக்கும்.

## நாபி.

## (ACONITUM FEROX)

இது மருந்து செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. தூய்மை செய்யும் முறை தவறினும் அளவுக்கு அதிகப்படினும் ஒருவகை நஞ்சுத் தன்மையை விளைவிக்கும்.

நஞ்சுக் குறிகுணம்—நாக்கு, வாய், முகம் இவைகள் விறுவிறுப்பதோடுமல்லாமல் திமிர் பிடித்தது போன்றிருக்கும். நமைச்சலும் உடம்பில் வலியும் உண்டாகும். உடம்பு புகை நிறமாகும். வயிற்றுக்கடுப்பு, சுவையின்மை, வாந்தி போன்றவை களை உண்டுபண்ணும் பின்பு வாந்தியில்லாமலாகும், நாடி தளர்ந்தும் குறைந்தும் உணர்ச்சிக்குத் தோன்றாமை, ஆழ்ந்த மூர்ச்சை, பலவகையான கனவுத்தோற்றம் ஏற்பட்டு மன அமைதி யோடு தூங்காமை, அடிவயிறு கனத்தல், எருவாய்கடுத்துப் பேதி யாதல், அதில் சிறிது குருதி விழ்தல், விக்கல் என்பன போன்ற வைகள் உண்டாகும்.

முறிவு.—(1) காசினியின் வேரைப் பசுவின் பாலிலாவது, நெய்யிலாவது அரைத்து நஞ்சின் வன்மைக்குத் தக்க நாள் அளவு உண்ணவேண்டும்.

(2) பன்றி மலத்தைப் பசுவின் நெய்யாலரைத்து உண்ணலாம்.

(3) கடுக்காய்த் தோலை விதிப்படிக்குடிநீர் செய்து உண்ணலாம்.

(4) புத்திரசோகி விதையைப் பசுவின் நெய்யாலரைத்து உண்ணலாம்.

(5) வெங்காரத்தைப் பசுவின் நெய்யாலரைத்து உண்ணலாம்.

(6) மிளகைப் பசுவின் நெய்யாலரைத்து உண்ணலாம், குடிநீர் செய்து குடிக்கலாம்.

(7) பச்சை மீனின் ஊனை நன்றுயரைத்து முள்ளிக்காயளவு எடுத்து பசுவின் வெண்ணெய் சேர்த்துண்ணலாம்.

(8) மயில்துத்தத்தை முலைப்பால் விட்டரைத்து உண்டாலும் நாபியினல் எற்பட்ட நஞ்சு வேகம் தணியும். (செய்யுள் 29) (வி. பி. வி.)

வேறு.

தேவையான பொருள்.—(1) 10 கிராம் சிறுகீரை வேர், (2) 20 கிராம் ஓமம், (3) 10 கிராம் விளாம்பட்டை, (4) 10 கிராம் உப்பு.

செய்முறை—சிறுகீரைவேர், ஓமம், விளாம்பட்டை ஆகியவைகளை மேற்சொல்லப்பட்ட அளவின்படி குடிநீராக்கி அதில் 6 கிராம் உப்பைப் போட்டு ஒரு வாரம் முதல் மூன்று வாரம் வரை சாப்பிடவேண்டும்.

புகையிலை.

(NICOTINA TABACUM)

பொதுத்தன்மை.—நமது நாட்டில் புகையிலை பலவகையிற் பயன்படுத்தப்படுகிறது. அதைப் பக்குவப்படுத்திக் கடைந்து மூக்குத் தூளாகவும், புகைப்பிடிப்பதற்கும், வெற்றிலை பாக்குடன் போட்டுக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் புகையிலையின் மெல்லிய காம்பில் ஆமணக்கு நெய்யைத் தடவிக் குழந்தைகளின் மலக்கட்டுக்கு ஆசனவழியாய்த் திரியாக வைப்பதும் வழக்கம். கட்டிகட்கும், விரை விக்கக் குத்தலுக்கும் கட்டாகவும் வைத்துக் கட்டுவதுண்டு. இதை அதிகமாகக் கையாண்டால் உடலிலுள்ள குருதி கெட்டு இருதய வலிவு குறைந்து கிருமி, ஊதல், வெளுப்பு முதலிய நோய்கள் விளைந்து தாது நட்டம் உண்டாம்.

**நஞ்சுக்குறிகுணம்.**—நாடி ஆரம்பத்தில் மந்தப்பட்டுப் பிறகு தீவிரமாய் நடக்கும். சுவாசத் தடுமாற்றம், தலை சுற்றல், மயக்கம், களைப்பு, வாந்தி, வயிற்றுக்கடுப்பு, பேதி முதலியன உண்டாவதோடு, கண் புகைதல், நெஞ்சுலரல், கைகால் அசதி, ஈரல் கருகல் ஆகியவைகளும் ஏற்படும். ஒருவேளை மரணமும் நேரிடலாம்.

முறிவு.—(1) அகத்திக்கீரையைக் கறியாகப் பக்குவம் செய்து உண்ணலாம்.

தேவையான பொருட்கள் :—(1) குறிஞ்சானிலை, (2) வெள்ளறுகள்ளி, (3) நற்சீரகம்.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் வகைக்கு 4 கிராம் விதமெடுத்து இடித்து அதை 160 மி.லி. நீரிற் போட்டு 40 மி.லியாகக் காய்ச்சி காலை மாலை 2 வேளை விதம் 3 அல்லது 5 நாள் குடித்தால் புகையிலை நஞ்சு நீங்கும். (செய்யுள் 30)

---

## இரத்தபோளை நஞ்சுக்குறிகுணம்.

உடலின் மீது புண்ணுதல், வேதல், சிவத்தல் ஆகிய குறிகளும், உள் வேக்காடு, வாந்தி, சுவை மாறல் போன்றவைகளும் உண்டாகும். பேராத்தையை விதிப்படிக் குடிநீர்செய்து இரத்த போள நஞ்சு வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்து வந்தால் இரத்தபோள நஞ்சு வேகம் தணியும் (செய்யுள் 31) (வி.பி.வி.)

## பெருமருந்துநஞ்சுக்கு பொது முறிவு.

பல சரக்குகளினுற் செய்யப்பட்ட பெருமருந்தின் குற்றங்களை விலக்குவது மிளகொன்றேயாகும். ஆகையால் மிளகை நெய்விட்டு வறுத்துப் பொடிசெய்து உண்ணும் முதற்பிடி சோற்றில் மேற்படி பொடியைக் கூட்டி பசுவின் நெய்யைச் சோரவிட்டுண்டாகிலும் அல்லது மிளகைக் கியாழஞ்செய்தாகிலும் (குடிக்கலாம். (செய்யுள் 32) (வாகடசந்திரோதயம்)

## உலோக தோடத்திற்கு முறிவு.

இரும்பு நீங்கலான மற்ற உலோகங்களிற் செய்யப்பட்ட பற்ப செந்தூர மாத்திரைகளினுல் வரும் நஞ்சை, அயச்செந்தூரபற்பம் அல்லது அயங்கலந்த மாத்திரைகளைக்கொடுக்க ஐயமின்றிக் குணமாகும். (செய்யுள் 34)

### குடிநீர் தோடத்திற்கு முறிவு.

குடிநீரால் உண்டாகும் தோடத்தை நீக்குவது உத்தாமணியின் வேர் அல்லது சமூலமுஞ் சேர்த்துக் காய்ச்சிய குடிநீரேயாகும்.

### உணவுத்தோடத்திற்கு முறிவு.

உணவின் குற்றத்தால் உண்டாகும் செரியாமை, மந்தம் முதலிய வினைகளை ஒழிப்பதில் குளிர்ந்த நீரே சஞ்சீவியாகும்.

### நீர்த் தோடத்திற்கு முறிவு.

ஆற்றுநீர், ஊற்றுநீர், கிணற்றுநீர், குளத்துநீர், ஏரிநீர், மழைநீர், பனிநீர் முதலியவைகளால் ஏற்பட்ட குற்றங்களாகிய நீர்த்தோடம், பீனசம், அற்பசீதளம், சீதளம், தலைவலி தொண்டைவலி, மார்ச்சளி, ஈளை முதலான தோடங்களை, தேனிலாகிலும் அல்லது தேனும் நீரும் கலந்த பானத்திலாகிலும் போக்கி விடலாம். (செய்யுள் 37) (போகர் 2,000)

## 2. தாவர வகுப்பு.

### செய்யுட்கள்.

### உழுந்து நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

நாட்டுவாய் மாடத்தை நன்றாகத் தின்றோர்க்குக்
கூட்டுவாய் கொள்ளுக்கா வேளையின்வேர்—வாட்டமற
நன்மிளகு சீரகத்தே னுள்குங் கலந்துநன்றாய்க்
கோன்விழியாய் காய்ச்சிக் கொடு.

செய்யுள் 1

### கடலை, துவரை, மொச்சைக்கும், நெய்க்கும் முறிவு.

மொழிகடலை யாடகநன் மொச்சைமுன் நிற்கும்
வழுவறுசெம் மண்ணைநீர் வார்த்துப்—பழுதறவே
நன்றாய்க் கரைத்தருந்த நாடாது நெய்தனக்கு
நன்றாவின் பாலினையே நாட்டு.

செய்யுள் 2

### நெய் தேனுக்கு முறிவு.

ஆவின்நெய் நற்றே னளவு சரியாக
மேவியதை யுண்டால் விளம்பக்கேள்—தாவில்
இருந்தையை நீர்விட்டிளக வரைத்தே
அருந்தப்போ மென்றே யறை. (செய்யுள் 3)

### கோழிமுட்டை நஞ்சிற்கு முறிவு.

அளவுக்கு மீறியட்ட வண்டத்தை யாதல்
அளவுபட வெந்ததைமீக் கயிலின்—புளியேப்பம்
மந்தஞ் செரியாமை மாறுமன முண்டிதற்குத்
தந்திமருப் பீயப்போந் தான். (க. தே. த.)

செய்யுள் 5

### கோழிமுட்டைக்கும் வாழைப்பழத்திற்கும் முறிவு.

அறைந்திடுவாய் வாரணத்தி னண்டத்தின் வேகம்
சிறந்திடுமுள் ளங்கிமூ லத்தாற்—பறந்து விடும்
வாழைக் கனியருந்தின் மாதே புகையிலையின்
கோழைக் குடிநீரைக் கூறு.

செய்யுள் 6

### பலாப்பழத்திற்கும் பாலாடைக்கும் முறிவு.

கொடுப்பாய் வருக்கைக் கனியருந்திற் கோற்றேன்
தடிப்பார் நறுநெய்யுந் தானும்—இடுக்கான
பாலாடை தின்னின் பகற்புளித்த மோரதனை
வேலாம் விழியாய் விடு.

செய்யுள் 7

### இலவம்பிசின் நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

"உண்டக்கா னல்லிலவி னெண் பிசினை வெல்வதற்குத்
தண்டாச் சிவன் வேம்பைத் தானரைத்துண்.

செய்யுள் 8

### குன்றிமணி நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

விருப்பான குன்றிவித்தை மேவியரைத் துண்டால்
பொரிகாரத் தன்னைப் பொரித்து—விரை*குழலாய்
வெந்நீரி லிட்டுண் விடதாரி வேரதனை
வெந்நீரி லிட்டுண் விரைந்து.

செய்யுள் 9

### உளுங்கிழங்குக்கும், நாகக்கொடைக்கும் முறிவு.

ஓட்டுமூ ளுங்கிழங்கை யுண்டோர்க்கு வெள்ளையென
நாட்டுசங் கம்பழத்தின் நற்சாற்றை—மாட்டுவாய்
நாகக்கொட் டைக்குநீ நன்னீரிற் கொள்ளரைத்துத்
தோகையே கொள்ளத் துணி.

செய்யுள் 10

### கோடற்கிழங்கிற்கும் மிளகாய்க்கும் முறிவு.

ஆங்கோட லின்கிழங்கை யாற்றவுண் ணீலியின்வேர்
பாங்காய்வெந் நீரிற் பருகுவாய்—தேங்காமல்
கார மிகுந்த கடிமிளகாய் தின்றோர்க்குச்
சீர்கொத்து மல்லிநெய்யுஞ் சேர்.

செய்யுள் 11

### சிவனார்கிழங்கு நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

அன்று சிவனார்க் கிழங்கை யருந்திவிடின்
நன்றுயச்சுக் கின்குடிநீர் நாட்டுவாய்—ஒன்றுசுவை
வெள்ளரியின் வித்ததனை வெந்நீரி லேயரைத்துண்
ஒள்ளியநா வற்கொழுந்து மூன்.

செய்யுள் 12

### மகிழம்பிஞ்சு, சோற்று நஞ்சுகளுக்கு முறிவு.

விரைமகிழம் பிஞ்சுவித்தை வெய்யசுண்ணந் தீட்டி
வரையினுத் தாமணிவேர் மாதே—அரைத்துருட்டிக்
கொள்ளப்போ மேயமலே கொண்டோர்க்குச் சீரகமாம்
கொள்ளுக்காய் வேளைவேர் கொள்.

செய்யுள் 13

### மருதோன்றி எண்ணெய் சேர்ந்ததற்கும், நுங்குக்கும் முறிவு.

நேரா மருதோன்றி நீள்நிலத்தி னெண்ணெயுடன்
நேராவரைத் துண்டால் நீகேளாய்—சீராக
தான்றிக்காய் நற்குடிநீர் தானுகு நுங்கினுக்குப்
போன்றுபெருங் காயம் புகல்.

செய்யுள் 14

புளித்த தயிர்ச்சோற்றிற்கும் கொடிக்கள்ளிப் பாலுக்கும் முறிவு.

கொள்வாய் புளித்தயிருங் கூறமலைக் காங்கடுகும்
நள்ளாக் கொடிக்கள்ளி நாட்டுப்பால்—உள்ளாயின்
கோவைச்சா ருகுமே கோமளத்தின் கோமயமாம்
மாவைகு நாமமண்ணு மாம்.

செய்யுள் 15

நல்லெண்ணெய்க்சோற்றுக்கும், வெற்றிலைச் சாற்றுடன் கூடிய எண்ணெய்க்கும் முறிவு.

கூறுவா யெள்ளெண்ணெய் கூட்டியரைத் தேசோற்றை
வீறுடனுன் டாற்கடி வேகமதை—ஊறுசெய்யும்
வெற்றிலைச்சா றெள்ளெண்ணெய் மேவியுண்டோர் தங்களுக்கு
முற்றினதேங் காய்ப்பால் மொழி.

செய்யுள் 16

நெல்வேர்—எண்ணெய் நெல்வேர்—சர்க்கரை, நெல்வேர் இவற்றிற்கு முறிவு.

சாற்றுவாய் நெல்வேருஞ் ச்ர்க்கரையுங் கொன்டோர்க்கு
மாற்றெருக்க நல்லிலைச்சா றுமானே—ஆற்றவவ்
வேருடனெள் ளெண்ணெய்க்கு வீறு சுரையிலையாம்
பேரெனுமிச் சம்வேரைப் பேசு.

பேசிடுவாய் நெல்வேர்க்குப் பேய்ப்பீர்க்கின் வேரை
ஆசிலா நீர்விட்டே யட்டுண்பாய்—வீசுகின்ற
நண்ணு விலா மிச்சம்வேர் நற்குடிநீர் தன்னையே
உண்ணப்போ மென்றே யுரை.

செய்யுள் 17

கோதுமைக்கும் நல்லெண்ணெய்க்கும் முறிவு.

விட்டிடுவாய் கோதுமைக்கு வெய்ய மிளகாயும்
மட்டிலான் பானெய்யு மாகுமே—திட்டமுடன்
எள்ளெண்ணெ யுண்டா லெழிலுசற் பட்டைதனைக்
கொள்ளப்போ மென்றே கூறி.

செய்யுள் 18

### எருக்கு நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

புகலெருக்கம் பாலுக்குப் பொற்புடைய வெள்ளும்
தகவுடைய சர்க்கரையுந் தானும்—மிகுபருத்தி
வானிலையிற் காடிதனை வார்த்தரைத்துக் கொள்ளப்போம்
சீர்நிசியே ரண்டநெய்யாஞ் செப்பு.

செய்யுள் 19

### சதுரக்கள்ளிப்பால் நஞ்சுக்குறிகுணத்திற்கு முறிவு.

" * *

கொள்ளப்போங் கள்ளியின்பால் கொண்டா லாவாரையிலை
மெள்ளவரைத் துண்ண விரும்பு."

செய்யுள் 20

### தில்லைப்பால் நஞ்சுக்கு முறிவு.

உரைத்திடுவாய் தில்லைப்பா லூறுசெயின் மாதே
நரைக்கோவைச் சாற்றையுண்ண நன்றும்—விரைத்தவிளக்
கெண்ணெயுமாங் காரெருமை யின்கோ மயமாகும்
உண்ணெருமை மோரு முகந்து.

செய்யுள் 21

### நேர்வாளம்.

"சோபியெனு நேர்வாளம் புனிதமாகிற்
சுரருந்து மருந்தாகு மருந்தாகாது
பாபியதே யாகுமஃதாகா விட்டால்
* * * *

செய்யுள் 22

### முறிவு.

* * * *
* * * *
—வெல்லரிய

வாளந்தனக் காம் வசம்பி னடலையுமா
நீள்புளிக்கோ தின்னீறு நேர்.

செய்யுள் 23

### சித்திர மூல நஞ்சுக்கு முறிவு.

நாட்டாய் கொடிவேலி நல்வேர் தனக்குநீ
கூட்டாய் நறுநெய்யைக் கூசாமல்—வாட்டமிலா
மாட மரைத்ததனை மாதே திலநெய்யில்
போட்டுவடை யாக்கிப் புசி.

செய்யுள் 23

### சேங்கொட்டை நஞ்சுக்கு முறிவு.

சுகநீங்குஞ் சீடியென்ணெய் சொல்லுமுடல் விம்மின்
வகையாகச் செங்கல் வறுத்து—மிகப்பொடிசெய்
தொற்றுமெழு கெண்ணெயுடன் காய்ச்சிமேற் பூசுவையேல்
வற்றுமுட லென்றே மதி.

### சேராங்கொட்டைப்பாலால் உண்டாகும் புண்ணுக்கு முறிவு.

ஆனமாஞ் சீடி யலர்புண் ணதுவானல்
நானமுத்தக் காசுடனே நற்கந்தம்—தேனுநல்
எள்ளுடனே யேல மிவைமிதா னரைத்துமிக
விள்ளுடல் பூச விடும்.

### உட்கொண்டவர்களுக்கு.

புசிப்பாய்நீ சேங்கொட்டை போற்றியுண் டோருக்
கிசைப்பா மெகினத் திலேயை—விசைப்பாக
நன்று யிடித்தாற்றி னன்னீரி லேகலந்து
குன்றுமற் பாண்டத்திற் கூட்டு.

கூட்டி யிளநீரின் கொண்டமேற் றூல்போக்கி
வாட்டமற முன்சொன்ன மாநீரில்—போட்டட்டு
நற்பருப்பை முன்தின்று நன்னீர்ப்பின் னுண்டக்கால்
பொற்கொடியே போகும் புகல்

செய்யுள் 24.

### எட்டிக்கொட்டை நஞ்சுக்கு முறிவு.

எட்டிதின் றோர்கட் கெழினுவற் பட்டைதனைத்
தட்டியரைத் தேகொடுக்கத் தான்றீரும்—வட்ட
மரைக்கிழங்கா மூனினின் வானிலேயின் சாறும்
ஒருக்கடுக்காய் நற்குடிநீ ரோது.

ஓதவுரி வேர்த்தோ லுடனரைத்துக் கொள்ளப்போம்
தீதிலா வெற்றிலேயுந் திர்த்துவிடும்—மாதேகேள்
வெந்தயமு நன்மிளகும் வெந்நீரி லேயரைத்
தந்தவெண்ணெ யிட்டருந்தப் போம்.

செய்யுள் 26

அபினி நஞ்சுக்கு முறிவு.

செப்புவாய் நல்லபினி தின்ருேர்க்கு நெய்யாகும்
ஒப்பரிய வீருள்ளி யோட்டுமே—இப்புவியில்
சம்பீர நற்கனியின் சாறுகுஞ் சுக்குமாம்
நம்பவுரைத் தோமிதனை நாம்.

செய்யுள் 27

கஞ்சா நஞ்சுக்கு முறிவு.

குறித்திடுவாய் கோரக்கா மூலிக்குச் சுக்கை
எரித்திடுநீ ருண்டால் விலகும்—நறுங்குழலாய்
சம்பீரச் சாறுந் தனிக்கதலிப் பட்டையினீர்
உம்பரமு தொக்குமதை யுண்.

செய்யுள் 28

நாபி நஞ்சுக்கு முறிவு.

நாவிதின் ருேர்கட்கு நற்கா சினிவேரை
மேவியே யான்பானெய் விட்டரைத்துண்—ஆவினெய்யில்
பன்றிவிட்டை கொண்டரைத்துண் பன்னுகடுக் காய்க்
என்றுமதை யோட்டு மியம்பு.

குடிநீர்

இயம்புபுத்ர சோகிவித்தை யேற்றசுரை நெய்யில்
நயம்பெறநீ யுண்டிடவே நாட்டு—வயம்பெருகு
வெண்காரந் தன்னைமுன்னெய் விட்டரைத்து ணன்மிளகைப்
பண்மொழியா யுண்டிடநீ பார்.

செய்யுள் 29

புகையிலை நஞ்சுக்குறிகுணம்.

கண்புகையு நெஞ்சுலருங் கைகா லயர்ந்துவரும்
வெண்புகையாய் மேனி வெளுக்குமே--பண்பாய்க்கேள்
ஈரல் கருகிவரு மிந்திரிய நட்டமாம்
பாரும் புகையிலையின் பண்பு.

(அ.ப.சி)

செய்யுள் 30

### புகையிலை நஞ்சுக்கு முறிவு.

உண்பாய் புகையிலையை யுட்கொள்ளி னல்லகத்திப்
பண்பான கீரைதின்னப் பாறுமே—நண்பாகக்
குறிஞ்சாவின் கீரையுள்ளி கூறுநற் சீரம்
உரமபெறவட் டுக்குடிநீ ரோட்டு.

செய்யுள் 30

### இரத்தப்போளத்திற்கும் இடு மருந்திற்கும் முறிவு.

ஓரிரத்த போளத்தை யுண்டார்க்கு மாவேகேள்
பேராத்தை நற்குடிநீர்ப் பேசுவாய்—சீராய்
இடுமருந்தைக் கொண்டோர்க் கியன்றகருஞ் செம்பை
இடுவிலைச்சாற் றைமாவி லீ.

ஈவா யிடுமருந்திற் கேற்றபெரும் பூசினிக்காய்
தாவாய்க் கடலையிட்டுத் தான்கூட்டே—ஓவாமல்
ஐயவி குய்நீக்கி யருந்துவாய் நீலியின்வேர்
மொய்குழலா யுண்ண மொழி.

மொழிந்திடுவாய் செங்காஞ்சி மூதிலைச் சாறுன்னிப்
பிழிந்தெடுத்து நெல்லவலிற் பெய்தே—செழுங்குழலாய்
தின்னப்போம் பச்சைச் செனிகையைத் தின்றூற்போம்
நன்னயமாய்ச் சொல்வாய் நயந்து.

### மருந்தீடு முறிவு.

மாட்டுப் பறங்கிக்காய் மாநிலத்தி லுண்டாருக்
கூட்டு மருந்து மொழியுங்கான்—தேட்டமாய்
நாட்டிற்கு நல்ல நவைதீர் மருந்திதனைத்
தாட்டிகமா யுண்ணத் தகும்

(க தே. த.) செய்யுள் 31

### பொதுமுறிவு பெருமருந்து நஞ்சுக்கு.

பாரிசச் சரக்கி னுல்செய் பன்மருந் தவைக ளாற்செய்
வாரிசப் பிணிகட் கெல்லாம் மாரிச மருந்தே தீர்க்கும்
சாரிச மாவ தில்லை சாரிச மான தேதே
நேரிச மாகு மென்ன நீட்பிணி யினங்கட் கம்மா.

செய்யுள் 32

## துணைமருந்து (அநுபான) தோடத்திற்கு முறிவு.

அநுபானத் தோடாண்மையை
இனமாகத் தேறு மிஞ்சியே.

**செய்யுள் [illegible]**

## உலோகத் தோடத்திற்கு முறிவு.

வினவப்பா புலத்தியனே மகனே யிந்த
மேதினிப்பே ரானதொரு லோகந் தன்னிற்
கனமான லோகமென்ப திரும்பொன் றேயாம்
கருமைசெம்மை வெண்மையிவை களினுல் வந்த
வினையான தவைகளுக்குக் கரும்பொன் னலவ்
வினமான தனித்ததனை யொழிக்க வேண்டித்
தனமான விதைக்கோடி யுண்மை யென்ப
சற்குருவிற் கிணையாகச் சாற்றி னேனே.

**செய்யுள் 34**

## குடிநீர்த் தோடத்திற்கு முறிவு.

அடரு மாறு கஷாயத்தினுல் வரு
மிடரை நீக்கி யிருமை யளிப்பது
படரும் வேலிப் பருத்திய தென்னவே
தொடரு மாலைத் தொலைக்கு மருத்தமே.

**செய்யுள் 35**

## உணவுத் தோடத்திற்கு முறிவு.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூவு மழை.

**செய்யுள் 36**

## பான தோடத்திற்கு முறிவு.

தேடப்பா பானத்தி னலே வந்த
தீதையினி யொழிப்பதொரு தேனென் றெணபார்
நாடப்பா வதையறிந்து புவிக்கு ளிந்த
நாடிவழி யறிநோயை நாடிக் கொண்டு
போடப்பா வத்திரம்போ லவிழ்த சாலம்
போட்டுடனே மீட்பதையும் பொருத்திக் கோடி
யாடப்பா நீயிதனை மதுவென் றெண்ணி
யாயுள்வேதி யர்க்கேதிலக மாவாய் நீயே.

**செய்யுள் 37**

## 3. உயிர் (சீவ) வகுப்பு.

இதில் உயிருள்ள அஃறிணை உயர்திணை என்னும் இருவகை விலங்குகளின் கடியால் உண்டாகக்கூடிய நஞ்சுகளடங்கும்.

விரியன் பாம்பின் பற்கள் மிக்க முரட்டுத்தன்மையுடையதா யிருக்கும. அது சூலடைந்து முதுகு வெடிப்பதன் மூலம் குஞ்சுகள் வெளிப்படும். அவ்விதம் வெளிவரும் குஞ்சுகள் பலவகைப்படும். அவையாவன :

சர்ப்பம் 8, இதில் இராசா ஒன்று, விரியன் 16, வழலை 4, மூக்கன் 2, சுருட்டை 4, சாளரம் 5, கொம்பேறி 2, கருநாகம், பரநாகம், கன்னெஞ்சன், ஊமை, கண்ணெரியன் என்னும் நாகம் 5, பச்சைப்பாம்பு 1, சுவடு 2, மண்ணுளி 1, புடையன் 16-ம் இவை யன்றி இவற்றிற்கு வேறான நஞ்சுயிர்களில் மன்றெலி 16, இருதலை மணியன் 1, துன்பம் விளைக்கும் எலி 16, நச்செலி 1, சுண்டெலி 1, செய்யான் 6, ஆறுகால் பூச்சி 4, சிலந்திப்பூச்சி 8, புலிமுகத்துப் பூச்சி 1, பல்லி 16, பூரான் 8, வண்டு 120, ஓந்தி 10, அட்டை 6 முதலை 3, புலி 5, பூனை 5, பேய்நரி, பேய் நாய், பேய்க்கீரிப்பிள்ளை, நாய், நரி இவைகள் முந்நூற்றுமுப்பது நீர்வாழ் இனத்தில் கணக் கிலடங்காத நஞ்சுத்தன்மையுடைய உயிர்கள் இருக்கின்றன. ஆக நஞ்சுயிர்கள் பலவகையாக உள்ளன. மேலும் நல்லபாம்பு, விரியன், வழலை, கொம்பேரி மூக்கன், சாணகம், மூக்கன், புடையன், மண்டலி, சவுடி, மயக்கரா, மண்ணுளி, சாரை, மணியன், சிலந்தி, புலிமுகப்பூச்சி, தேட்புள்ளி, வண்டு, பூரான், பச்சோந்தி, செவ்வட்டை, பேய்நரி, நாய், செருச்செயலி, வாட்பல்லி, பூனை, புலி, அட்டை, முதலை, அரணை, நண்டு போன்ற இன்னும் பலவுமான நஞ்சுக்குணமுடைய விலங்குகள் இருக் கின்றன. (செய்யுள் 2.)

### நச்சுப்பாம்புத்தொகை 64 வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | படமெடுத்தாடும் அரவு | 8 |
| 2. | விடப்பற்கொண்டு சீறிப்பாய்ந்து நீண்டும் விரியன் | 6 |
| 3. | சாடிக்கடிக்கும் குணமுள்ள விரியன் | 4 |
| 4. | புடையன் பாம்பு | 6 |
| 5. | மண்ணுளிப்பாம்பு | 6 |

| | | |
|---|---|---|
| 6. | சாரைப்பாம்பு | [illegible] |
| 7. | சுருட்டைப்பாம்பு | 4 |
| 8. | கூளைப்பாம்பு | 2 |
| 9. | கொம்பேறுமூக்கன் | 3 |
| 10. | சாணை மூக்கன் | 3 |
| 11. | வழலைப்பாம்பு | 6 |
| 12. | தண்ணீர்ப்பாம்பு | 6 |
| 13. | பச்சைப்பாம்பு | 2 |
| 14. | இருதலைமணியன் | 1 |
| 15. | மலைப்பாம்பு | 5 |
| 16. | பூநாகம் | 1 |
| | ஆக | 64 |

இவ்வாருக நச்சுப் **பாம்புத்** தொகை **64** எனக் கருட பஞ்சாட்சர ஆரூடம் கூறினும் கருடாரூடமும் நாகாரூடமும் அரவின் உற்பத்திக்குத் தலையாய் ஆதிசேடனன்றி அட்டநாக முதலாக பலவுண்டென்றும் இவைகள் கீழ்க்கண்ட பிரிவினையுடையதென்றுங் கூறும்.

பாம்பு.

நல்ல பாம்பு

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| மறையோன் (ப்ரஹ்ம) | அரசன் (க்ஷத்திரிய) | வணிகன் (வைசிய) | உழவன் (சூத்திர) |
| 1. அநந்தன் | 1. வாசுகி | 1. தக்கன் | 1. கார்கோடகன |
| 2. குளிகன் | 2. சங்கபாலன் | 2. மகாபதுமன் | 2. பதுமன் |

இவைகள் சாமகாலத்தில் இனிப்புறும்

பதுநாகன்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| கருநாகம் | செந்நாகம் | மாநாகம் | பூநாகம் |

விரியன்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| **கொள்ளிவாயன்** | படுவிரியன் | **வெடிவிரியன்** | சுருட்டை | செவ்விரியன் | பெருவிரியன் |

புடையன்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| **திமிர்** | **வரி** | **ஏறு** | **ஊது** |

இவைகளன்றி—சில் விடங்கள் பலவாம்.

மேலும் வீரியமுள்ள சர்ப்பம் 8, ராசா 1, விரியன் 16 வகை, வழலை 4, கொம்பேரி மூக்கன் 2, சுருட்டை 4, சாரை 5, கருநாகம், பாநாகம், கண்ணெரிய அஞ்சாநாகம, கொம்பேரி 2, பச்சைப் பாம்பு, சவுடி 2, மண்ணுளி, புடையன் 16 (விட்சங்கார ஆரூடம்) (செய்யுள் 3.)

### முற்கூறப்பட்ட பாம்புகளின் பிறப்பு முதலியன.

பாம்புகள் ஆனித் திங்களில் புணர்ந்து ஆடி, ஆவணித் திங்களில் வயிறுளைந்து கார்த்திகை மாதத்தில் முட்டையிடும். அம்முட்டை பொரை, எருக்கம்பூ, வெண்மை ஆகிய நிறங்களில் இருக்கும். ஒரே சூலில் 248 முட்டைகளையிட்டு (ஏழு நாட்கள்) அடை காக்கும், அம்முட்டைகளில் ஆண் முட்டைகள் முகிழ் விரியாத எருக்க மொக்கைப் போலும் பெண் முட்டைகள் வாகை அரும்பைப்போலும் இருவகையாக இருக்கும். அதை ஈன்ற தாய்ப்பாம்பு முட்டை ஈன்ற ஏழு நாட்களுக்குள் 228 முட்டைகளைப் புசித்துவிடுமென்றும் 4 முட்டைகள் அழியுமென்றும் எஞ்சியுள்ள 16 முட்டைகள் பொரிந்து குட்டிகளாக உலாவு மென்றும், அக்குட்டிகட்கு விளைபோன்ற 24 கால்கள் இருக்கு மென்றும், இவைகள் பிறந்த 28-ம் நாளில் பாதையை நோக்கிப் படத்தை விரித்தாடி நஞ்சைப் பெற்றுக்கொண்டு தனித்தனியே பிரியுமென்றும், 160-ஆம் நாளில் சட்டையுரிக்குமென்றும் வேறு நாட்களில் எயிறு, நஞ்சு, வால் இவை ஒளி பொருந்தித் தோன்று மென்றும், இவைகள் ஒருவனைக் கடிக்கும்போது கடிபட்டவன் இறப்பானோ இறக்கமாட்டானோவென ஐயப்படுமென்றும், இவைகளுக்குக் கண்களே செவியாக இருக்குமென்றும், வாயின் கீழ்வரிசையில் காளி, காளாத்திரி என இரண்டு பற்களும் மேல் வரிசையில் எமன், எமதூதன் என்ற இரண்டு பற்களும் உண்டென்றும், இந்நஞ்சுகள் மணி, மந்திர, மருந்தாதிகட்கு அஞ்சு மென்றும், சித்தர் ஆரூடம் முதலிய நூல்கள் கூறி நிற்கும்.

### கடிவாய் மணத்திலிருந்து இன்னபாம்பு கடித்ததென அறிதல்.

பாம்பு கடித்துப் பல்லழுந்திய இடத்தை முகர்ந்து பார்க்க வேண்டும். அந்தக் கடிவாயிலிருந்து ஒரு வித மணம் உண்டாகும். அம்மணத்திலிருந்து இன்ன பாம்பு கடித்துள்ளது என அறியலாம்.

| **இனம்** | **மணம்** |
|---|---|
| நல்லபாம்பு | தாழைமலர் மணம் |
| வழலைப்பாம்பு | பாதிரிப்பூ மணம் |

| | |
|---|---|
| விரியன்பாம்பு | புளியம்பூ மணம் |
| சிறிய பாம்பு | மிளகு, சுக்கு மணம் |
| மண்டலிப்பாம்பு | மல்லிகைப்பூ மணம். |

மேற்கண்ட மணங்களில் எந்தவித மணமும் வராவிடில் பாம்புக்கடியல்ல வென்றும் வேறு விலங்குகளின் கடி என்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

**கட்டியால் தீக்குணமுண்டாகும் இடம், உறுப்பு, நேரம், திதி, நட்சத்திரம், திசை முதலியவை இதுவென அறிதல்.**

**இடம்.**

(1) அரசமரம், (2) ஆலமாம், (3) ஆற்றுத்திட்டு, (4) ஏரிக்கரை, (5) ஐயன்கோயில், (6) கிணறு, (7) சந்தை கூடுமிடத்து மரம், (8) சுனைக்கரை, (9) தேரடி, (10) நதிக்கரை, (11) நந்தவனம் (12) நாணற்புதர், (13) நீர்வற்றிய தாமரைத் தடாகம், (14) பாழடைந்த கோவில், வீடு, ஊர், (15) புதுமனை, (16) புற்று, (17) பிரப்பம்புதர், (18) புளியமரம், (19) புன்னைமரம், (20) இடுகாடு (21) மகத்துவாரம், (22) முச்சந்தி நாற்சந்தி கூடும் வீதி, (23) முருங்கை மரம், (24) மூங்கிற்புதர், (25) வேள்விக் கூடம், (26) பிடாரி (துர்க்கை) கோவில், இவ்விடங்களில் எந்தயின பாம்பாகிலும் அந்தி சந்திப் பொழுதில் கடிக்கில் அதனல் நேரிடும் விடக்குணம் தீராவாம்.

**உறுப்பு.**

(1) ஐம்பொறிகள், (2) தலை, (3) நெற்றி, (4) புருவநடு, (5) தாடை, (6) உதடு, (7) தாழ்வாய்க்கட்டை, (8) தோள் (9) நெஞ்சு, (10) அக்குள், (11) நகில், (12) மார்பு, (13) அடிமார்பு, (14) உள்ளங்கை, (15) வயிறு, (16) கொப்பூழ், (17) ஆண்குறி, (18) எருவாய், (19) உள்ளங்கால், (20) கீல், (21) நெறி இவ்விடங்களில் கடிக்கில் சாவுண்டாகும்.

நேரம்.

(1) அயர்ந்து துயில் செய்கின்ற காலம், (2) இடி அல்லது மின்னலுண்டாகும் நேரம், (3) பாம்பு அடைகாக்கும் நேரம். (4) விடியற் காலம், (5) நடுஇரவுப்பொழுது இச்சமயங்களில் கடிக்கில் நஞ்சு எளிதில் தீரா.

**திதி.**

பருவம், அமாவாசை, பிரதமை, பஞ்சமி, அட்டமி, நவமி, இத்திதிகளிலும்—

## நட்சத்திரம்—திசை முதலியன.

பரணி, கார்த்திகை, ஆயில்யம், விசாகம், பூரம், பூரட்டாதி, பூராடம், சதயம் இந்நட்சத்திரங்களோடு கூடிய பருவகாலத்திலும் நிருதி மூலையிலும், அசுர முகூர்த்தத்திலும் பாம்பு கடிக்கில் அசாத்தியம், மகம், திருவோணம், மூலம், சித்திரை, சோதி, இந்நட்சத்திரங்களிலும், பிறந்தநாள், அநுசனம், திரிசனம் நாள் இவை சேர்ந்த அவிட்ட நட்சத்திரத்திலும் நவமியிலும் வீட்டிறப்புகளிலிருந்து கடித்தாலும் தீராது.

## பறைப்பாம்பு.

இதற்கு வேற்றுமையுள்ள ஒருவகையான பாம்பு உண்டு. இதற்குப் பறைப்பாம்பு என்று பெயர். இது கொடிய இனத்தைச் சார்ந்தது. வேலிகளிலும், சந்துபொந்துகளிலும் வாழும் புழு முதலாகியவற்றை உண்ணும். ஆணைக்கு அடங்காது.

## எண்வகை நாகங்களின் ஆண் பெண் அறிய.

பெண் நாகத்திற்கு கடைக்கண் சிவந்து புடைத்திருக்கும். முட்டையின் மீது அடைகாக்கும். மூச்சு விடும்போது உழுந்து வாசனை வீசும். படம் ஓர்புறம் ஒதுங்கி நிற்கும். ஆண் நகத்திற்கு கண் கறுத்திருக்கும். கட்டுக்கடங்கும், கடிநஞ்சு கொடியது. படங்களின் இரண்டருகும் சரியாயிருக்கும். இரேகை ஒத்திருக்கும்.

## அரவு தீண்டுவதற்குரிய நேரம்.

நஞ்சு நிறைந்த பாம்புகள் தங்குமிடம் பாழடைந்த கோயில், மனை, புதர்கள், இருண்ட காடுகள், மலைகள், புற்றுகள், ஆகியவை போன்ற மனித நடமாட்டம் குறைவாகவுள்ள இடங்களில் பாம்புகள் தங்கியிருக்கும். இவ்விடங்களில் கவனக் குறைவாகவும், எச்சரிக்கையுமின்றிச் செல்லும்போதும், பாம்புகளுக்குப் பசி ஏற்பட்டபோதும், அவைகள் இரை தேடி வெளிச்செல்லும் போதும், இடி, மின்னல் ஆகியவைகளின் அதிர்ச்சியாலும், ஒளி போன்றவைகளினாலும் சினம் கொண்டிருக்கும் நேரங்களிலும், மனிதர் எதிர்ப்பட்டால் தீண்டும்.

### நஞ்சுப்பற்கடி அறிய.

படம் எடுத்தாடும் பாம்புகளுக்கும் நச்சுப்பற்கள் நான்குண்டு. அவைகள் மேல்வரிசையில் இரண்டும், கீழ்வரிசையில் இரண்டும் ஆக அமைந்திருக்கும். மேல்வரிசையிலுள்ள நச்சுப்பற்களுக்கு (1) காளி, (2) காளாத்திரி எனவும், கீழ்வரிசை விடப்பற்களுக்கு (1) நீலி, (2) நீலகண்டி எனவும் பெயர்கள் வழங்கப்படும். இந்நான்கு பற்களும் தூண்டி முட்கள்போல் வளைந்து பல்லின் மத்தியில் துளைகளுடன் அமைந்திருக்கும். பாம்பு தீண்டும்போது நஞ்சுப் பையில் நிரம்பியிருக்கும் விடம் பற்களில் உள்ள துளையின் வழியாக நஞ்சுக் கடிபட்டவரின் குருதி நாளத்தில் சேர்ந்து, உடல் முழுவதும் பரவி உடலை மயச்சி உயிரையடக்கும்.

**நஞ்சுப்பல் நான்கு.**—அவற்றுள் ஒவ்வொன்றிலுமுண்டாகும் தீக்குணம்.

(1) **காளி.**—கடிவாயின் புள்ளடி போற்குறியும், செந்நீர் மாறி பனிநீர் போல நச்சுநீரும் காணப்பட்டால் காளி என்கிற பற்கடி குணமாகும்.

(2) **காளாத்திரி.**—கடிவாயில் முக்கோணம் போன்ற குறியும், அடிக்கடி வாயிலிருந்து குருதியும் பாயும். இக்குணங்கள் காணப்பட்டால் இது காளாத்திரி என்கிற பற்கடி குணமாகும்.

(3) **நீலி (நகன்).**—முள் தைத்தது போன்ற கடிவாயும், அக்கடிவாயினின்றும் எண்ணெய் போன்ற நீரும் பாய்ந்தால் நீலி என்கிற பற்கடி குணமாகும்.

(4) **நீலகண்டி (எமதூதன்).**—கடிவாய் வில்போல் தோன்றி அதனின்று கருநிறக் குருதி வந்தால் நீலகண்டி என்கிற பற்கடிக் குணமெனவும் அறிக.

மேற்கூறிய நான்கு பற்களில் கடிகள் உண்டானால் 98 நாழிகைக்குள் நஞ்சு உடம்பின் நரம்புகளைப் பற்றி ஏறும். கண் விழிகள் கறுக்கும். மயக்கத்துடன் சுருண்டு கிடக்கச் செய்யும். (நா. ஆ.)

### பற்கடி நஞ்சின் தீரும் தீராக்குறி.

ஒரு பற்கடி நஞ்சு தோலைப்பற்றி நிற்கும். இதற்குக் கால்கடி என்று பெயர். இந்நஞ்சு மூலிகை மருத்துவத்தினாலேயே இறங்கி விடும்.

இருபற்கடி நஞ்சு மாமிசத்தைப் பற்றி நிற்க முயலும். இதற்கு அரைக்கடி என்றுபெயர். இது மருந்துகளால் தீரும். முப்பற்கடி நஞ்சு எலும்புவரைப் பற்றி ஏறும். இதற்கு முக்கால் கடி என்று பெயர். இது மூலிகைகளினாலும், நச்சுமைகளினாலும் நீங்கும். நான்கு பற்பட்ட நஞ்சு மூளையைப் பற்றி ஏறும். இது முழுக்கடி என்று பெயர் பெறும். இது மணிமந்திர மருந்து களால் நீங்குவது கடினம். பிழைப்பதும் அரிது. (நா. ஆ.)

## பாம்பு நஞ்சு வேகம்.

விட சங்காருடம் என்னும் நூலில் பாம்பின் கடி நஞ்சின் வேகம் பத்து எனக் கூறப்படுகிறது. அவை : (1) பல்வேகம், (2) சலவேகம், (3) வன்னிவேகம், (4) வாயுவேகம், (5) சரவேகம், (6) சரபவேகம், (7) சமர்வேகம், (8) சண்டாளவேகம், (9) காசவேகம், (10) அறுதி வேகம் என்பனவாகும்.

**1. பல்வேகத்தன்மை.**—கடியைப் விறு விறுத்தலோடு உடம்பு முழுமையும் விறுவிறுக்கும், முகம் கருகும், கண்சிவந்திருக்கும், முகம் மாறிக்காணும், ஆகிய குறிகுணங்கள் தோன்றும்.

**2. சலவேகத்தன்மை.**—கைகளும், கால்களும் விறுவிறுக்கும் உடம்பு முழுவதும் வியர்வை உண்டாகும். சிறுநீர் கடுத்து இறங்கும், உடம்பு முழுவதும் பதறும், உள்ளமும் ஈரலும் நடுங்கும், முகம் வெளுத்துக்காணும், நிறம் மாறும் ஆகிய குறி குணங்கள் உடம்பில் காணும். (செய்யுள் 4.)

**3. வன்னிவேகத்தன்மை.**—உண்ட உணவை வாந்தி பண்ணும், தலை நடுங்கும், திடீரென்று படுத்தல், கண் சொருகுதல், உடல் வியர்த்தல் என்னும் குறி குணங்கள் உண்டாகும். (செய்யுள் 5.)

**4. வாயுவேகத்தன்மை.**—நெஞ்சில் குறுகுறுவென்று ஒலித்தல், உண்ட உணவு வயிற்றிலிருந்தே வாந்தியாகாமற் குடல் புரட்டல், உடல் சோர்தல், மூக்கில் நீர் வடிதல், கழிதல், அடிக்கடி சிறுநீர் இறங்கல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும்.

**5. சரவேகத்தன்மை.**—தலைமயக்கம், குளிர்காய்ச்சல், முகங் கறுத்தல், விழிகறுத்தல், உடல் சோர்தல் என்னும் குறி குணங்களை உண்டாக்கும். (செய்யுள் 6.)

**6. சரபவேகத்தன்மை.**—அறிவழிதல், நாவளைந்து வாயுடன் ஒட்டிக்கொள்ளுதல், உடல் விறுவிறுத்தல், பல்லசைதல், மூக்கு நீர் வடிதல், வெறும் பல்லைக் கடித்தல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும்.

7. **சமர்வேகத்தன்மை.**—வாய் பேசவொண்ணாமை, அறிவு மயங்கல், மறதி, திகில், மூர்ச்சை என்னும் குறிகுணங்கள் உண்டாகும். (செய்யுள் 7.)

8. **சண்டாளவேகத்தன்மை.**—மனந்திகிலடைதல், விக்கல், மூச்ச டைத்தல், நெஞ்சடைத்தல், இரண்டு கண்களும் மேல் நோக்கல், மேல் மூச்செறிதல், இருதயத்தில் நஞ்சேறி நிற்றல், உயிரைக் கொல்லல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும். (செய்யுள் 8.)

9. **காசவேகத்தன்மை.**—நஞ்சுவேகக் கொடுமையால் இவ்வாறு தான் படுப்பதென்கிற வரன்முறையில்லாமலே படுத்தல், உடல் சோர்ந்து மூச்சடங்கல், உயிரின் செயல்—உடலில் நடைபெறாமல் அடங்கிவிடுதல், அக்காலத்தில், நஞ்சை உயிர் வெல்லும் தன்மை யில்லாக்குறிகுணங்களுண்டாகும். (செய்யுள் 9.)

10. **அறுதிவேகத்தன்மை.**—கண்பார்வை மயங்கி நீலநிறமாதல், உடலில் ஓடிக்கொண்டிருக்கிற குருதி முதல் ஏழுஉடற்கட்டு களும் நஞ்சாகவே மாறிவிடல், உயிர் ஓடிப்போக உடல் செயலற்று விழல் என்னும் குறிகுணங்கள் உண்டாகும். (செய்யுள் 10.)

இப் பத்து வகைகளன்றி மேலும் மூன்று வகை வேகம் உண்டு. அவையாவன : நஞ்சேறு வேகம் மூன்று வகைப்படும்.

(1)வாயுவேகம், (2) வருண வேகம், (3) தேயுவேகம் என்பன வாகும். இவற்றில் வாயு வேகம் எட்டு. குளிர்ந்த தன்மையுடைய வருணவேகம் பத்து, தேயு வேகம் பத்து. ஆகமொத்தம் இருபத் தெட்டு வேகங்களாகும். இவற்றில் வாயு வேகத்திற்கு ஏறுங்கால் அளவு ஐம்பது மாத்திரையும், வருண வேகத்திற்கு ஏறுங்கால் அளவு இருபத்தேழு மாத்திரையும், தேயு வேகத்திற்கு ஏறுங்கால் அளவு தொண்ணூற்றெட்டு மாத்திரையுமாகும்.

**வாயு வேகத்தின் தன்மையாவன :**

முதல் வேகம்—இவ்வேகத்தில் மூர்ச்சையும் வியர்வையு மாகும்.

இரண்டாம் வேகம்—வெதும்பலாகும்.
மூன்றாம் வேகம்—கண்மேலேறுதலாகும்.
நான்காம் வேகம்—வாந்தியாகும்.
ஐந்தாம் வேகம்—சோமையடைத்தலாகும்.
ஆறாம் வேகம்—அறிவழிதலாகும்.
ஏழாம் வேகம்—விறைக்தலாகும்.
எட்டாம் வேகம்—உயிர்போதலாகும்.

மேற்சொல்லப்பட்ட எட்டுவித வேகத் தன்மைகளுடன் நஞ்சின் வேகம் தனது செயலைச் செய்து முடிக்கும். இது மேற்சொல்லப் பட்ட 50 மாத்திரைகள் அளவிற்குள் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

வருணவேகத்தின் தன்மையாவன :

முதல் வேகம்—மயிர்க்கூச்சும், உடல் சிவத்தலுமாகும்.
இரண்டாம் வேகம்—உடல் கரிந்து, வாய் உலர்ந்து சுரமடித் தலாகும்.
மூன்றும் வேகம்—அறிவு மயங்குதலாகும்.
நான்காம் வேகம்—அறிவுகலங்கிக் கோழை மிகுதலாகும்.
ஆறும் வேகம்—கண் மேற்பார்வையாதலாகும்.
ஏழாம்வேகம்—உறுப்புக்கள் விறைத்தலாகும்.
எட்டாம் வேகம்—உயிரடங்குதலாம்.
ஒன்பதாம் வேகம்—வெண்ணீர் ஒழிதலாகும்.
பத்தாம் வேகம்—சாதலாகும்.

இம் முறைப்படி விடம் ஏறுங்கால அளவாகிய இருபத்தேழு மாத்திரை கால அளவிற்குள் நடைபெறுமென அறிக.

தேயு வேகத்தின் தன்மையாவன :

முதலாம் வேகம்—கண் சிவந்து, முகம் கருகிடலுமாகும்.
இரண்டாம் வேகம்—உடல் தடித்துச் சிறுநீர் கடுத்திறங்கி முகம் வெளுத்து, உடல் முற்றும் மயிர்க்கூச்சு உண்டாத லாகும்.
மூன்றும் வேகம்—வாய் குழறி, அறிவு கலங்கி, உடல் நொந்து வீழ்தலாகும்.
நான்காம் வேகம்—குடல் இரைந்து துன்பமாய் மூக்கில் நீர்வடிந்து அழகு மாறுதலாகும்.
ஐந்தாம் வேகம்—கண் ஆடுதலோடு உடல் முழுவதும், விட விடத்தாடுதலாகும்.
ஆறும் வேகம்—பல்லைக்கடித்தலும், உடல் விறைத்துப் பதைத்தலோடு மூக்கில் நீர் வடிதலுமாகும்.
ஏழாம் வேகம்—சொற்றடுமாறலாகும்.
எட்டாம் வேகம்—இரைப்பு, விழி மேல் நோக்கலுமாகும்.
ஒன்பதாம் வேகம்—உயிர் ஒடுங்குதலுமாகும்.
பத்தாம் வேகம்—உயிர் உடலைவிட்டுப் பிரிதலுமாகும்.

இம் முறைப்படி நஞ்சு ஏறுங்கால வேகமாகிய தொண்ணூற் றேழு மாத்திரைகள் நடைபெறுமென அறியவும். (சி.ஆ.) (செய்யுள் 11).

மேற்சொல்லப்பட்ட வேகங்கள் பத்திற்கும் தனித்தனி மருத்துவ முறையைக் கையாண்டு நஞ்சின் வேகத்தைப் போகக வேண்டும். அவையாவன :

## பத்துவேகத்திற்கு மருந்து.

(1) பல்வேகத்திற்கு மருந்து.

தேவையான பொருட்கள்.—(1) கொடிக்கள்ளிக்கொழுந்து, (2) சீந்திற்கொழுந்து, (3) மூடக்கற்றான் கொழுந்து, (4) கரிசலாங் கண்ணி, (5) திருநீற்றுப்பச்சை, (6) வசம்பு, (7) வெள்ளைப்பூண்டு, (8) பெருமரப்பட்டை, (9) எருமுட்டைப்பீநாறி.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஒன்பது வகைச் சாக்கு களையும் சரி எடை எடுத்து இடித்து நன்றாகத் தூளாக்கி ஒரு மண்பாண்டத்திலிட்டு அப்பாண்டத்தில் சிறுநீர்விட்டு ஊற வைத்து மூக்கில் பிழிந்தால் முதல்வேகம் தீரும். (செய்யுள் 12.)

### 2. சலவேகம்.

தேவையான பொருட்கள்.—(1) வசம்பு, (2) வெள்ளைப்பூண்டு, (3) காட்டாமணக்கங்கொழுந்து, (4) கழுதைலத்தி நீர், (5) சிறுநீர்.

செய்முறை.—வசம்பு, வெள்ளைப்பூண்டு, காட்டாமணக்கங் கொழுந்து ஆகிய இம்மூன்றையும் சரி எடை எடுத்துச் சிதைத்து அதில் கழுதைலத்தி நீரும், சிறுநீரும் விட்டு ஊறவைத்து மூக்கிற் பிழிந்து மேலுக்கும் பூச வேண்டும். இவ்விதம் செய்ய நஞ்சின் இரண்டாம் வேகம் தணியும். (செய்யுள் 13.)

### 3. வன்னிவேகம்.

தேவையான பொருட்கள்.—(1) மிளகு, (2) திப்பிலி, (3) இந்துப்பு, (4) சுக்கு, (5) கடுகு, (6) வசம்பு, (7) வெள்ளைப் பூண்டு, (8) சாரணைவேர், (9) வெற்றிலை.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஒன்பது பொருட்களையம் சரி எடை எடுத்துச் சிதைத்துச் சிறுநீரில் ஊறவைத்து மூக்கில் பிழிய மூன்றும் வேகம் தணியும். (செய்யுள் 13.)

### 4. வாயு வேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) மாவிலை, (2) மிளகு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட இரு பொருட்களையும் வகைக்கு 20 கிராம் எடுத்து இடித்து 325 மி.லி. காடியில் ஊற வைத்து மூக்கில் பிழிந்தும் உள்ளுக்கும் கொடுக்கவேண்டும். இதைச்செய்ய முருக்கு முதலிய எவ்வகைப்பாம்பின் நான்காம் வேகம் தணியும். (செய்யுள் 14.)

### 5. சரவேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) வசம்பு, (2) வெள்ளைப்பூண்டு, (3) மிளகு, (4) நொச்சிக்கொழுந்து.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களையும் சரி எடை எடுத்துச் சிறுநீரில் ஊறவைத்து மூக்கிற் பிழிய ஐந்தாம் வேகம் தணியும். (செய்யுள் 14.)

### 6. சரபவேகம்.

**தேவையான பொருட்கள்.**—இருப்பைக்கட்டி.

**செய்முறை.**—இருப்பைக்கட்டியைப் பொடிசெய்து சிறுநீரில் ஊறவைத்து மூக்கிற் பிழிந்தால் ஆறும் வேகம் தணியும்.

### 7. சமர்வேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) வசம்பு, (2) வெள்ளைப்பூண்டு, (3) துளசி, (4) தும்பை, (5) மிளகு, (6) கந்தி உப்பு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் சரி எடை எடுத்து இடித்து ஒரு மண் சட்டியிலிட்டு அதில் முலைப்பால் விட்டு ஊறவைத்து மூக்கிற் பிழிய ஏழாம் வேகம் தணியும். அடங்கியிருக்கும் உயிரையும் எழுப்பலாகும். (செய்யுள் 15.)

### 8. சண்டாளவேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) கந்தகம், (2) தும்பையிலை, (3) வசம்பு, (4) வெள்ளைப்பூண்டு, (5) மிளகு, (6) இந்துப்பு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் சரி எடை எடுத்து நறுக்கி ஒரு மண் சட்டியிலிட்டு முலைப்பால் விட்டு ஊறவைத்து மூக்கிற் பிழிய எட்டாம் வேகம் தணியும்.

### 9. காசவேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) வேளைச்சாறு, (2) பெருமாப் பட்டைச்சாறு.

செய்முறை.—எருக்கம்பாலில் துணித்துண்டைப்போட்டு ஊற வைத்து அத்துணியை வெயிலில் உலர்த்திக்கொண்டு அத்துணியில் ஒரு சதுர அங்குலத் துணி கிழித்து மேற்சொல்லப்பட்ட வேளைச் சாறும், பெருமரப்பட்டைச்சாறும் சரியளவாகக் கலந்து அச் சாற்றில் அத்துணியை நனைத்துக் காய வைத்துக் கொண்டு வேண்டும்போது சிறுநீரில் நனைத்துச் சிறிது உள்ளுக்குப் புகட்டியபின், கண், காது, மூக்கிற் பிழிந்தால் ஒன்பதாம் வேகம் தணியும். (செய்யுள் 16.)

### 10. அறுதி வேகம்.

**தேவையான பொருட்கள்.**—(1) மிளகு, (2) வெள்ளைப்பூண்டு, (3) பெருங்காயம், (4) தேற்றுங்காய், (5) எட்டிக்காய், (6) மருக் காரைக்காய், (7) மல்லிகைப்பட்டை.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட எழு பொருட்களையும் சரி எடை எடுத்துச் சிதைத்து ஒரு மண் சட்டியிலிட்டு அதில் வெள் ளாட்டு நீர்விட்டு எட்டுநாள் ஊறவைத்து ஒன்பதாவது நாள் அந்நீரினாலேயே அரைத்து அதில் ஒரு சீலையை நனைத்து அச்சீலையை எருமுட்டைப்புகையில் உலர்த்தி வைத்திருந்து எவ்வுயிரால் கடிக்கப்பட்ட நஞ்சேறிய மனிதனுமிருப்பினும் ஒரு விரல் நீளமும் நாலு விரல் அகலமுமாக அத்துணியைக் கிழித்து அதை நைய பஞ்சு போற்றட்டி அவுரிச்சாற்றில் ஊறவைத் தெடுத்து, மூக்கிற் பிழிந்தால் பத்தாம் வேகம் தணியும். (வி. ஆ.) (செய்யுள் 17.)

குறிப்பு.—தும்பையானது தலைக்கேறிய நோய்த்தோடங் களுக்கும், நஞ்சுத் தோடங்களுக்கும் மூக்கிற் பிழியும் மருந்து களில் உயர்வுடையதாய் அது பாம்பின் கடிவேகத்திற்குக் கூறப் பட்ட நசியங்கள் பலவற்றிற்கும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. தும்பை நசியப்பொருட்களில் உயர்ந்ததென்பதை

"நசியந்தலை வலிமற்றது நசியந்தக றுமே
நயத்தெறு மையப்பிணி நவ்விக்கிது புலியே
நமனுக்கொரு நமன் வெற்றியை நறுக்கிப் பிழி மூக்கில்
நளிருஞ்சுரங் குளிருத்தலை நடுக்கம் பிணி விடுக்கும்."

(தேரையர் கரிசல்)

## பாம்புக்கடி நஞ்சுதீர் கலிக்கம், நசியம்.

### 1. கலிக்கம்.

**தேவையான பொருட்கள்**—(1) பெருங்காயம், (2) அரிதாரம், (3) வெங்காரம், (4) கந்தகம், (5) இந்துப்பு, (6) வாலரசம், (7) கடுகு.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட ஏழு பொருட்களைச் சரியளவு எடுத்து இடித்துப் பொடி செய்து குழிக்கல்லிலிட்டுப் பேய்ப் பீர்க்கஞ்சாற்ருல் அரைத்து அதில் 130 மி.கி. எடுத்து நஞ்சுற்ருர் கண்களில் கலிக்கம் போடவேண்டும்.

### 2. மூக்குத்துளி (நசியம்).

**தேவையான பொருட்கள்**.—(1) வசம்பு, (2) வெள்ளைப்பூண்டு, (3) பெருங்காயம், (4) வெங்காரம், (5) நேர்வாளம், (6) அரிதாரம், (7) கந்தகம்.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட ஏழு பொருட்களையும் சரி எடை எடுத்து அவுரிச்சாற்ருலும், உத்தாமணிச்சாற்றினுலும், குப்பைமேனிச்சாற்றினுலும் அரைத்து மாத்திரை செய்து ஒரு மாத்திரையை ஒரு மெல்லிய துணியில் முடிந்து சிறுநீரில் ஊற வைத்து அதை மூக்கில் பிழிய வேண்டும். இப்படிச் செய்தால் மேற்படி நஞ்சுயிர்கள் கடித்ததால் உண்டாகும் நஞ்சுகள் தீரும். (செய்யுள் 18.)

### மூக்குப் பொடி (ஆக்கிராணம்).

**தேவையான பொருட்கள்**.—(1) மூஞ்சூறு, (2) பச்சைப்பாம்பு, (3) வாழைத்தண்டு, (4) இலுப்பைப்பட்டை, (5) காட்டாமணக்கிலை.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட ஐந்து பொருட்களையும் சரி எடையாக எடுத்து உலர்த்திப் பொடியாக்கி மூக்கிற் குழை வைத்து அதில் அத்தூளையிட்டு ஊதிஞல் நஞ்சுயிர்க் கடியினுலுண்டாகும் வன்மையான நஞ்சுகள் நீங்கி அடங்கிப் போனவுயிர் மீண்டும் வெளிப்படும் (வி.ஆ.) (செய்யுள் 19.)

### ஒற்றடம்.

**தேவையான பொருட்கள்**.—(1) எருக்கு, (2) எட்டி, (3) புனுகு, (4) அழிஞ்சில், (5) விளா, (6) இலுப்பை, (7) பெருமாம், (8) பேய்க் குமட்டி.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட எட்டுப்பொருட்களையும சரி எடை எடுத்துச் சிறுநீர் விட்டு இடித்து வறுத்தும் ஒற்றடம் போட வேண்டும். இவ்வாறு ஒற்றடம் போடுவதுடன் நசியமாக வும் துவாலையாகவும், கலிக்கமாகவும் கையாளலாம் அல்லது அள வுடன் வெந்நீரிற் கூட்டியும் கொடுக்கலாம்.

(செய்யுள் 20.)

ஆதனையாதி ஒற்றடம்.

(1) தேவையான பொருட்கள்.—(1) அவுரிவேர், (2) செங்கத் தாரி வேர், (3) வாகைவேர், (4) ஆதனைவேர் (காட்டாமணக்கு), (5) கற்றாழைவேர்.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஐந்து பொருட்களையும் சரியளவு எடுத்துக் காடி விட்டு இடித்து அதைச் சட்டியிலிட்டு வறுத்து அதை ஒரு துணியில் முடிந்து தலைமுதல் கால் வரை ஒற்றடம் போட பாம்பு நஞ்சுகள் தீரும். (செய்யுள் 21.)

வேளையாதி ஒற்றடம்.

(2) தேவையான பொருட்கள்.—(1) நல்வேளை வேர், (2) குப்பைமேனிவேர், (3) சுக்கு, (4) முருங்கைவேர், (5) ஊமத்தை வேர், (6) எருக்கம்வேர், (7) உத்தாமணிவேர்.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஏழு பொருட்களையும் சரி எடை எடுத்துச் சிறுநீர்விட்டு இடித்துச் சீலையில் முடிந்து தலை முதல் காலடிவரை ஒற்றடம் போட எல்லாவித நஞ்சுகளும் நீங்கும். (செய்யுள் 22.)

(3) தேவையான பொருட்கள்.—(1) உள்ளி, (2) வசம்பு, (3) வட்டத்துத்தி, (4) ஊமத்தை, (5) நறுந்தாளி, (6) பலாசுவிதை.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் சரி பாகமெடுத்து சிறுநீர்விட்டு இடித்துச் சட்டியிலிட்டு இள வறுப்பாக வறுத்து ஒரு சீலையில் முடிந்து தலை முதல் காலடிவரை ஒற்றடமிடலாம். அல்லது உள்ளி, வசம்பு, ஆண்வணங்கி ஆகிய மூன்றையும் சரி எடை எடுத்து முற்சொல்லப்பட்டது போன்று சிறுநீர்விட்டு வறுத்து ஒற்றடமிடலாம். (வி.ஆ.) (செய்யுள் 22)

புகை.

நஞ்சுடைய அரவத்தால் தீண்டப்பட்டு உடம்பில் நஞ்சு கலந்து விட்டால் சாகாமல் தடுக்க இம்முறை கையாளப்படுகிறது.

தேவையான பொருட்கள்.—(1) இரசம், (2) கந்தகம், (3) சூடன் (கர்ப்பூரம்), (4) காயம்.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களையும் சரியளவெடுத்து இடித்துக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு அரைத்து ஒரு சீலையில் தடவி உலர்த்தித் திரியாகத் திரித்துக் கொளுத்தி அதிலிருந்து வரும் புகையை மூக்கிற்குள் செல்லும் படி செய்தால் மேற்படி நஞ்சுயிர்களின் கடியால் வந்த விடம் போய்விடும். உயிர் தப்பாமல் மீண்டும் வந்துவிடும். (வி. ஆ.) (செய்யுள் 12.)

**வேறுமுறை.**—சிவன் இருநூறு என்னும் நூலில் சொல்லப் பட்டதின்படி.

**தேவையான பொருட்கள்.**—(1) மிளகு, (2) வசம்பு, (3) வெள்ளைப்பூண்டு, (4) சுக்கு, (5) சூடன், (6) நவச்சாரம், (7) மிளகாய், (8) பழம்புளி, (9) உப்பு.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஒன்பது பொருட்களையும் சரி எடை எடுத்து இடித்துக் குழிக்கல்லிட்டுக் கொடிக்கள்ளிப் பால் விட்டு ஒருநாள் எல்லாம் அரைத்து ஒரு துணியைக் கொடிக்கள்ளிப்பாலில் தோய்த்து அச்சீலையில் முன்பாக அரைத்து வைத்திருக்கும் மருந்தை நீளமாய் வைத்து உருட்டி ஒரு முனையைக் கொளுத்தி அணைத்து அதிலிருந்து வரும் புகையைப் பிடிக்க விரைவில் அடங்கிப் போன உயிர் மறுபடியும் வெளிப்படும். (வி. ஆ.) (செய்யுள் 24)

### கவனிக்கவேண்டிய பத்திய விதி.

உப்பு, புளி, கடுகு, எண்ணெய் போன்ற கரப்பான் பொருட்களை நீக்கவேண்டும். பகலிலும் இரவிலும் தூங்கலாகாது.

**உணவு உண்ணும் முறை**—பாலில் பச்சையரிசியும், பாசிப் பயறும் இட்டுக் காய்ச்சி சீனி சேர்த்துச் சாப்பிட வேண்டும். உப்பை நீக்க முடியாதவர்கள் சங்கனிலையும் உப்பும் சேர்ந்து வறுத்து எடுத்த உப்பை சிறிதளவு சேர்த்துக் கொள்ளலாம். நச்சுக் குணங்கள் முற்றும் நீங்கியபின் எண்ணெயிட்டுத் தலை முழுகி வழக்கமாய் உண்ணுகிற உணவுகளை உட்கொள்ளலாம்.

### சோதனை இலக்கணம்.

கடித்த பாம்பு போன்ற நஞ்சுயிர்கள் கண்களுக்குத் தெரியாமல் மறைந்துவிடுமானால், அது இன்ன நஞ்சுயிர் என்று அறிதற்குச் சில பொருட்களை அக்கடியுண்டவனுக்குக் கொடுத்து அவன் உண்டு சொல்லும் சுவைகளால் இன்ன வகைப்பாம்பு கடித்துள்ளது எனவும், அதற்குரிய சில மருந்துகளையும் அவற்றால் காணப்படும் குறிகளையும் பார்ப்போம்.

பாம்பினால் கடிக்கப்பட்டவனுக்கு ஆடுதின்னாப்பாளை **வேரை** உண்ணும்படி கொடுக்கவேண்டும். அதை உண்டு **தித்திக்கிற**தென்று சொன்னால் அவனைக்கடித்தது **நல்லபாம்பு** என அறியவும். மேற்படி ஆடுதின்னாப்பாளை முதலில் தித்தித்து உடனே **இனிக்கிற**தென்று சொன்னால் கடித்த பாம்பு மூக்கனென்றும், அதிகமாகப் புளிக்கிறதென்று சொன்னால் கடித்தது வழலைச்சாதி என்றும், அந்த புளிப்புடன் வழுவழுக்கிறதென்று சொன்னால் கடித்தது **மயக்கரா**வென்றும், எச்சுவையை நினைந்தாலும் அந்தச் சுவையே தோன்றுகிறதென்று சொன்னால் கடித்தது புடையன் எனவும், முட்கிரையின் சுவை காண்கிறதென்று சொன்னால் **மண்டலி** கடித்துள்ளது எனவும், புளித்துப் பின் காரமாயிருக்கிறது என்று சொன்னால் கடித்தது **பெருவிரியனென்றும்**, தலை நடுக்கிறதென்று சொன்னால் கடித்துள்ளது **விரியன் சாதி** என்றும், நா கடுக்கிறது என்று சொன்னால் **கொம்பேரி மூக்கன்** கடித்துள்ளது எனவும், நாசுருட்டுகிறது என்று சொன்னால் கடித்தது சுருட்டை எனவும், உண்ணு சர சரக்கிறது என்று சொன்னால் கடித்தது **சாரை** என்றும், கண் மறைந்து நெஞ்சம் அடைக்கிறதென்று சொன்னால் **கன்நெஞ்சனென்றும்**, தூங்கமுடியவில்லை என்றும், நெஞ்சம் படபடக்கிறதென்றும் சொன்னால் கடித்தது சவடி என்றும், சுரனை இல்லாதிருந்தால் கடித்தது **இருதலைமணியன்** என்றும், பல் கடிக்கிறதென்று சொன்னால் **செய்யான்** கடித்ததுள்ளது என்றும், சல சலவென்று மூக்கு அரித்தால் **எலிச்சாதிக்கடித்துள்ளது** என்றும் மேல்நா நோகிறதென்று சொன்னால் கடித்தது நச்செவி என்றும், வாந்தியானால் **அரணை** என்றும், **கண், காது**, இவைகளை அடைக்கிறதென்று சொன்னால் **சில்விடமென்றும்**, கசக்கிறதென்று சொன்னால் ஒரு நஞ்சும் இல்லை என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும். (வி. ஆ.) (செய்யுள் 25)

## இஃதன்றி வேறுமுறை.

புங்கம் விதை அல்லது இருப்பைப் பிண்ணாக்கு அல்லது புங்கம்பட்டை இவைகளில் ஒன்றைப் பாம்பு கடித்தவனுக்குக் கொடுத்து உண்ணச்சொல்லவேண்டும். அவன் **துவர்ப்பாயிருக்**கிறதென்று சொன்னால் அவனைக் கடித்த பாம்பு **புடையனென** அறியவும். தித்திக்கிறதென்று சொன்னால் அவனை **நல்லபாம்பு** கடித்துள்ளது எனவும், அது காரமாயிருக்கிறதென்றால் **கருவழலை** அவனைக் கடித்துள்ளதென்றும், புளிக்கிறதென்று **சொன்னால்** அவனை **விரியன்** கடித்துள்ளது எனவும், கைக்கிறது எனக் **கூறி**னால் நஞ்சு இல்லை எனவும் அறிந்து **கொள்ளவும்.**

இது வழக்கத்தில் உள்ள முறையாகும். (செய்யுள் 26)

பாம்பு நெருங்காமற் தடுக்கும் மனை மூலிகை.

(சி.ஆ.)

ஒவ்வொரு வீட்டிலும் மூலிகைகளை வைத்து வளர்த்து வருதல் நலம். அவற்றில் சிறநத இனங்கள் மிகுந்திருப்பதால் நஞ்சுடைய அரவம் அரவங்காட்டாது. கடித்துவிட்ட நச்சுத்தன்மையை அழித்துவிடலாம். மேலும் அம்மூலிகைகள் வீட்டில் வளர்க்கப் படுவதால் பாம்பு போன்ற உயிர்கள் வராது எனவும் கூறப் படுகிறது. அத்தகைய மூலிகைகள் பின்வருமாறு:—

பங்கம்பாளை என்று வழங்கப்படும் ஆடுதின்னாப்பாளை—இது மிகவும் காரமுடைய மூலிகையாகும். நஞ்சைப் போக்கவும், நச்சுயிர்கள் அணுகாமல் தடுக்கவும் செய்கின்றது, மேலும். நாகதாளிக் கிழங்கும், ஆகாச கருடனுமிருந்தால் நஞ்சுள்ள உயிர்கள் அவ்விடத்திற்கு வாராது அழியும் சிறியாநங்கையும் இவ்வினத்தைச் சார்ந்த மூலிகையாகும். (வி.ஆ.) (செய்யுள் 27.)

விரியன் வகை.—விரியன் பாம்பு 16 வகைப்படும். அவை (1) பொரிப்பல் விரியன், (2) பெருவிரியன், (3) இரத்தவிரியன், (4) கருவிரியன், (5) செவ்விரியன், (6) செந்தலைவிரியன், (7) வெளவால் விரியன், (8) செறியுங்கழுத்துக்கோல் விரியன், (9) தரைவிரியன், (10) கண்ணாடி விரியன், (11) கட்டுவிரியன், (12) கழுதைவிரியன், (13) நிழல்விரியன், (14) குறிஞ்சிவிரியன், (15) நெடுங்கழுத்துக் கோல்விரியன், (16) புல்விரியன் எனப்படும். (வி.ஆ.) (செய்யுள் 28)

இத்தொகையன்றிக் (1) கத்தரிவிரியன், (2) பெருவிரியன், (3) இரத்தவிரியன், (4) குறுவிரியன், (5) புல்விரியன், (6) சலவிரியன் என ஆறு விரியன் உள்ளது எனக் கூறுவாருமுளர். மற்றும் (1) நீர்விரியன், (2) நிலவிரியன், (3) இரத்தவிரியன், (4) பெருவிரியன், (5) சாரிவாழ்விரியன், (6) பொரிவிரியன் எனச் சிலவற்றை நீக்கிச் சிலவற்றைச் சேர்த்து விரியன் வகை ஆறு என்பாரும் உண்டு. (செய்யுள் 29.)

இவற்றை,

> "விரிய னிலாறு பேதம்—கத்தரி
> விரியன் பெருவிரியனி ரத்தவிரியன்
> பரிவுசெய் குறுவி ரியன்—புல்விரியன்
> பன்னுஞ் சலவிரிய னெனு மிவற்றுள்"

எனச் சித்தாரூடத்திலும்,

"தெரிந்து நீர் விரியன் பாம்பின் செய்கை யீதென்று செப்பே"

"தெளியுமே சொன்னதெல்லாம் செகத்தில்வாழ்விரிய னென்லே

"சாரிவாழ் விரியனென்னே"

"திட்டமாய்ப் பொரிவிரியன் தீண்டிய தினமதென்ன."

என சர்ப்பாரூடத்திலும் புகன்றிருப்பதை அறியவும்.

இவ்விதம் கூறிய சர்ப்பாரூடக்காரரே ஒவ்வாதபடி வேறு ஆறு பெயர்களைக் கூறினதோடு பதினாறு விரியன் என்னும் தொகையும் தமக்கு உடன்பாடு எனக் கூறுகிறார் என்பதனை,

"இரத்த விரியன் பெருவிரியன்
இசைநீர் விரியன் செவ்விரியன்
வாத்த விரியன் பொரிவிரியன்
நிரத்த வகைதான் பதினாறும்
வாங்குஞ் சாதி யிவை யாறும்.
நெருங்கக் கடித்து விடங்கொண்டால்
துரத்த மருந்து விடமீளும்.
சொல்வே னறிந்து செய்வீரே."

என்பதனாலுமறிக.

## 1. பொரிவிரியன் கடித்த குறிகுணம்.

பொரிவிரியன் கடித்த நஞ்சானால் கடிவாயளவுக்கிருக்கின்ற உடலின் இறைச்சி மிகவும் வீங்கிவிடும். உடல் பதைக்கும், சுரங்காயும், அடிக்கடி உறங்கும், கடிவாய் கடுக்கும், கண் மூக்கு இவைகள் நெருப்புப்பட்ட எரிச்சல் போல் எரியும். மூக்கில் மஞ்சள் நீர் கசியும். அத்துடன் கடிவாயில் மஞ்சள் நீர் கசிதல்போன்ற இக் குறிகுணங்கள் உண்டாகும். (செய்யுள் 30.)

## 2. பொரிவிரியன் கடிக்கு வேம்பின் நெய்ப்பூச்சு.

ஒரு மண் சட்டியில் ஆடு தின்னாப்பாளையின் சமூலத்தைவிட்டு அதில் போதுமான அளவு சதுரக்கள்ளிப்பால் விட்டு ஏழு நாள் ஊறவைக்கவேண்டும். பிறகு நன்றாக உலர்த்தி இடித்து அதில் 35 கிராம் தூளை எடுத்து ஒரு மண் சட்டியிலிட்டு அதில் 325 மி.லி. வேம்பு நெய்விட்டு, அடுப்பேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து ஆற விட்டு எடுத்துப் பொரிவிரியினால் கடிக்கப் பெற்றவன் தலையில் பூசவேண்டும். (செய்யுள் 31.)

### சாரணைக் கலிக்கம், சாரணை ரசம்.

சாரணை வேரைப் பசுவின்பாலில் ஏழுநாள் ஊறவைத்து அவ்வேரை எடுத்து நிழலில் உலர்த்திக்கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துக் கலிக்கம் போட வேண்டும்.

**இரசம்.**—கனத்த சாரணை வேரைக் குடைந்து அதில் 5 கிராம் பாதரசத்தைவிட்டுச் சாணியால் மூடி நாற்பதுநாள் சென்றெடுத்துப் பொடித்துக் 325 மி.லி. வேப்பெண்ணெயிற் கலந்து வேளை ஒன்றுக்கு 5 கிராம் நெய் சாப்பிட வேண்டும். (செய்யுள் 32) இப்படிச் செய்தால் பொரிவிரியன் கடி நஞ்சு தீர்ந்துவிடும். (வி.ஆ.)

### மற்றோர் கொள்கையும் உண்டு.

### 1. பொரிவிரியன் கடிக்குறிகுணம்

வாய் மேற்பக்கமாக இழுத்துப் பாபாவென்று அந்த இடம் நஞ்சு விரைவாய் ஏறிக் கண் கறுத்தல், நா குழறிப்பேசல், மிருதியும் உறங்கல், உடல் காய்தல், அயர்தல் என்னும் குறிகுணங்கள் உண்டானால் பொரிவிரியன் கடித்ததென்று சொல்லலாம். (சு.5ஆ.) (செய்யுள் 33.)

### 2. பெருவிரியன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

வயிறு வலித்தலும், அச்சைத்தட்டினால் எப்படி வெகு தூரஞ்சென்று ஒலி கேட்குமோ அவ்வாறு உடலில் வெகுதூரம் வரைக்கும் (உடல் முழுவதும்) அந்நஞ்சு பரவலுமாம்.

**இந் நஞ்சுக்கு மருந்து.**—கோவையிலை, மிளகு புத்துச்சோறு ஆகிய இம்மூன்றையும் விதிப்படிக் கலந்து எண்ணெய் காய்ச்சி அதை நோயளவுக்கு தக்கபடி மருந்தளவு நாளளவு கண்டுணர்ந்து கொடுக்கவேண்டும். அதுவல்லாமலும், சுந்தரித் தைலத்தை வேண்டிய அளவு வெற்றிலையில் தடவிக்கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுத்தால் இப்பெருவிரியன் நஞ்சு தீர்வதோடு நில்லாமல் எவ்விரியன் கடி நஞ்சுகளும் தீரும். (வி. ஆ.) (செய்யுள் 34.)

### பெருவிரியன் கடிக்குறிகுணம்.

உடம்பெல்லாம் ஊதல், தலை, கழுத்து இவை ஊதல், இருமுதல், கக்குதல், உடம்பு விரைவாய் இளைத்தல், மிகவும் துன்பமாதல்,

தொண்டையும் வாயும் அடிக்கடி விழுவிறுத்தல் ஆகிய இக்குறி குணங்கள் உண்டானல் பெருவிரியன் கடித்தது என்று சொல்லாம் (ச. ஆ.) (செய்யுள் 35.)

### 3. இரத்தவிரியன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

உடம்பில் உள்ள குருதியெல்லாம் மயிர்க்கால்கள் தோறும் வெளிப்படல், கண்தெரியாமை, காது கேளாமை, வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் குருதி வெளிப்படுதல் ஆகிய இக்குறிகுணங்கள் இருந்தால் இரத்தவிரியன் கடித்துள்ளது என அறியவும். (வி. ஆ.) செய்யுள் 36.)

மருந்து.

புத்தான் சோற்றெண்ணெய்

புத்தான் சோறும், எள்ளெண்ணெயும் சரியளவாய்ச் சேர்த்துப் பக்குவ பாகமாகக் காய்ச்சி வடித்துக் கண்ட அளவில் உள்ளுக்குக்கொடுத்து அதையே கடிவாயிற் பூசிக் கட்டவேண்டும். இதுவல்லாமலும் கோவைச் சாற்றையும் பூசவேண்டும். அப்படிப் பூசினல் மேற்படி இரத்த விரியன் கடி நஞ்சு தீரும். (வி. ஆ.) (செய்யுள் 36.)

### 7. வெளவால் விரியன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

வெளவால் விரியன் கடித்த குறிகுணங்களாவன.—அது கடித்தவுடனே பல் கிட்டிப் போதல், மயக்கத்தோடிருத்தல், உடல் முழுவதும் புண்ணுதல், கை குறைதல், கால் குறைதல், உடலில் புதிது புதிதாகச் சொறியுண்டாதல், குட்டநோய் போல் உடல் தடிப்பாய் ஊதல் என்னும் இவைகளாம்.

மருந்து.—சங்கம் வேர்ப்பட்டையை வெந்நீர் விட்டரைத்து வேளைக்கு 35 கிராம் அளவாக இருவேளையும் நாற்பதுநாள் உண்ணவேண்டும். அதன் பின்னர் ஆடுதின்னுப்பாளையை யரைத்து வேளைக்கு 5 கிராம் அளவாக இரண்டு வேளையும் கால் மண்டலம் உண்ணவேண்டும். அப்படிக்கொள்ளுவதால் வெளவால் விரியன் கடித்த நஞ்சு தீரும்.
(வி. ஆ.) செய்யுள் 37.

### 1. நீர்விரியன் கடிக்குறிகுணம்.

எரியும் நெருப்பைப்போன்று உடல் முழுவதும் சூடாக இருக்கும். கடிவாயில் குருதி கசியும், உடல் முழுவதும் வேர்வை

உண்டாகும், தலை சுழலும், காது கேளாது, உட்கொள்ளும் மருந்து வயிற்றில் தங்காமல் குமட்டும் ஆகிய இக்குறிகுணங்கள் நீர்விரியன் பாம்பு கடித்ததினாலுண்டாகும் என்பதை அறிந்து கொள். (ச. ஆ.) (செய்யுள் 38.)

### 2. நிலவிரியன் கடிக்குறிகுணம்.

கண் கறுத்தல், உடம்பு நோதல், வெதும்பல், கடிவாய் வீங்கிக் குழிவிழல், உடலின் மேற்தோல் நமைச்சல், அவ்வூறல் அதிகப்பட்டு விரிந்து புண்ணாதல், நீர் மிகுதியாய் இறங்கல், மலம் கழிதல், மலத்தில் குருதி விழுதல் என்னும் இக்குறிகுணங்கள் தரைவிரியன் கடித்ததினால் உண்டாகும் என்பதை அறியலாம் (ச. ஆ.) (செய்யுள் 39.)

### மற்ற விரியன் கடிகளின் பொதுக் குறிகுணம்.

சிறப்புடைய விரியன் பாம்பு கடிக்குறிகுணங்களை முன்பு பார்த்தோம். இது தவிர இன்னும் சில வகையான விரியன் பாம்புகளின் கடியினால் உண்டாகும் குறிகுணங்களைப் பார்ப்போம். பாம்புக்கடித்த இடத்தில் குருதி ஒழுகும். அங்குள்ள ஊன் கடியுடன் துண்டாய் விழும். கண் தெரியாது. காது கேளாது. அறிவு மயங்கும். உடல் பளுவாகும். தலை சுற்றும். களைப்பு உண்டாகும். கண் சொருகும். விக்கல் ஏற்படும். நெஞ்சு கரகரக்கும். கடிவாய் மிக வலிக்கும். அக்கடிவாய் கடுக்கும், வீங்கும், எரியும், உடம்பெல்லாம் மஞ்சள் நிறமடையும் இக்குறிகுணங்கள் காணப்பட்டால் சிறப்புக் குறைந்த விரியன் பாம்பின் கடி நஞ்சு என அறியவும். (செய்யுள் 40.)

### பதினாறு விரியன் கடிகளுக்கும் பொது மருந்து.

**தேவையான பொருட்கள்.**—(1) பெருவாகைப்பட்டைச்சாறு (2) 160 மி.லி பசுவின் நெய், (3) 35 கிராம் மிளகுத்தூள்.

**செய்முறை.**—325 மி. லிட். பெருவாகைப்பட்டைச் சாற்றையும் 160 மி.லிட். பசுவின் நெய்யையும் சேர்த்துக் கலந்து அதில் 35 கிராம் மிளகுத்தூளைச் சேர்த்து அதை உடல் வன்மைக்குத் தக்க நாளளவு மருந்தின் அளவை அறிந்துகொடுக்க பதினாறு விரியன் கடிநஞ்சுகள் தீரும்.

### (வேறு)

சிற்றுமுட்டியிலையை நறுக்கி மூக்கில் நசியமிட்டு உடல் முழுவதும் பூச நஞ்சுயிர்களால் உண்டான நஞ்சுகள் நீங்கும். (ஆ. வி.) (செய்யுள் 41.)

### விரியன் 16 (பதினாறு) சூல் செய்யான் பல நஞ்சுகளுக்கும் மருந்து.

பதினாறு வகை விரியன் பாம்புகளில் எவ்வகை விரியன் பாம்பு கடித்த நஞ்சானாலும், சூல் கொண்ட செய்யான் கடி நஞ்சானாலும், வேறு எந்த உயிர்கள் கடித்ததினாலுண்டான நஞ்சானாலும், தவசு முருங்கைச் சாற்றை உள்ளுக்கும் கொடுக்க வேண்டும். உடம்பின் மேலும் துவாலை இட வேண்டும். அன்றியும் இதையே ஒற்றடத்திற்கும் பற்றுக்கும் கையாளவேண்டும். இதைச் செய்ய மேற்படி நஞ்சு தீரும். நசியமே ஆட்சியாயிருந்தாலும் அச்சரக்கைக் கொண்டு மூக்கிற் பிழிவதுடன் அதையே உச்சியில் சிறுகக் கீறி அதில் விடலும், செவியிற் பிழிதலும், கண்ணிற் பிழிதலும் நலம் எனக் கொள்ள வேண்டும். (வி. ஆ.) (செய்யுள் 42.)

### எல்லா விரியன் கடிகளுக்கும் மருந்து.

**சாரணை வேர்த்துவாலை.**—தேவையான பொருட்கள்: (1) சாரணை வேர், (2) ஆடுதின்னாப்பாளை, (3) புங்கம் வேர், (4) பழுபாகல், (5) துளசி, (6) சுக்கு, (7) சிறுகுறிஞ்சான், (8) முல்லை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட எட்டு பொருட்களையும் சரி எடை எடுத்து இடித்து, சிறுநீர் விட்டரைத்துக் கடிவாயிலும், கடியுண்டவனது உடம்பிலும் பூசினால் எல்லா வகையான விரியன் பாம்புக் கடி நஞ்சுகளும் தீரும்.

### வேப்ப எண்ணெய்.

பதினாறு விரியன் பாம்பு வகைகளில் எது தீண்டினாலும் உடனே வேப்பெண்ணெயைக் குடித்து விடவேண்டும். அப்படிச் செய்வதனால் அவ்விடம் கீழே இறங்கிவிடும். அதுவுமன்றி குடித்த வேப்பெண்ணெயானது வயிற்றிலிருந்து உடம்பு முழுவதும் ஊறிக் கசப்பேறிவிடும். அக்கசப்பினால் நஞ்சு ஏறுவதற்கு வழியற்று விடத்தின் பலம் கெட்டு ஒழிந்துவிடும்.

### பிரண்டைக்கட்டு.

**தேவையான பொருட்கள்**—(1) பிரண்டை, (2) பாகல், (3) கோவை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் சரி யளவெடுத்து அரைத்துப் வில்லை தட்டி வெதுப்பிக் கடிவாயிற் கட்டினால் விரியன் கடிநஞ்சு இறங்கிவிடும்.

### தாளிப்பூக்கட்டு.

**தேவையான பொருட்கள்.**—(1) பழவரிசிச்சோறு, (2) தாளிப்பூ, (3) கோவையிலை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் சரி எடை எடுத்து குழிக்கல்லில் இட்டுக் காடியாலும், பசுநெய்யாலுமரைத்துக் கடிவாயிற்கட்ட விரியன் கடிவிடம் நீங்கும்.

### இரசப்புகை.

**தேவையான பொருட்கள்.**—(1) கந்தகம், (2) இரசம்.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட இரண்டு பொருட்களையும் சரி எடை எடுத்துப் பொடி செய்து பசுவின் நெய்யாலரைத்து ஒரு துணித்துண்டில் தடவித் திரியாக்கிக் கொழுத்தி அதிலிருந்து வரும் புகையை மூக்கின் வழியாக மூளையில் ஏற்றினால் விரியன் நஞ்சுகள் யாவும் தீரும்.

### தக்காளிப் பூச்சு.

**தேவையான பொருட்கள்.**—(1) தக்காளியிலை, (2) நாயுருவியிலை, (3) அவுரியிலை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் சரி எடை எடுத்து ஒன்றாகக் கூட்டி அரைத்து விரியன் நஞ்சு தீண்டிய உடனேயே கடி வாயிற்பூச மேற்படி நஞ்சு தீரும்.

### சாணிப்பூச்சு.

எருமைச்சாணியோடு எருக்கம்பாலைக் கூட்டி அரைத்துக் கடிவாயிற் பூசினால் மேற்படி கடிவாயிலுண்டான விக்கம் வாங்கும்.

### சிறு புள்ளடி மூக்குத் துளி (நசியம்.)

சிறுபுள்ளடியிலை, கோவையிலை இவற்றை நறுக்கிச் சிறுநீரில் ஊறவைத்து மூக்கிற் பிழிந்தால் மேற்சொன்ன நஞ்சு நீங்கும்.

### சிறுசின்னிப் பூச்சு.

சிறுசின்னியிலை, எருக்கிலை இவ்விரண்டையும் சரிஎடை எடுத்துச் சிறுநீரில் ஊறவைத்துக் கடிவாயிற் பூசினால் மேற்படி நஞ்சு தீரும். (வி.ஆ.) (செய்யுள் 43.)

### விரியன் நஞ்சுகளுக்குச் சுந்தரித் தைலம்.

**தேவையான பொருட்கள்.**—1.3 லிட் வேப்பெண்ணெய், (2) 35 கிராம் தூய்மை செய்த வெள்ளைப்பாடாணம், (3) 5 கிராம்

தூய்மை செய்த துருசு, (4) 5 கிராம் வெங்காரம், (5) 5 கிராம் நாட்டு நவச்சாரம், (6) 5 கிராம் வீரம், (7) 5 கிராம் பூரம், (8) 35 கிராம் வாளம்.

**செய்முறை.**—அளவுகள் மேற்சொல்லியதன் படி. வேப் பெண்ணெயை ஒரு மண் சட்டியில் ஊற்றி அதில் நான்கு மூஞ் சூறைப் போட்டு மேல்மூடிச் சீலை செய்து, பூமியில் ஒரு மண்டலம் வரைக்கும் புதைத்து எடுத்து வடித்து, அதில் 35 கிராம் தூய்மை செய்த வெள்ளைப்பாடாணத்தையும் தூய்மை செய்த துருசு, வெங்காரம், நாட்டு நவச்சாரம், வீரம், பூரம் ஆகிய ஐந்து பொருட்களையும் வகைக்கு 5 கிராம் வீதமெடுத்து அத்துடன் 35 கிராம் வாளத்தையும் சேர்த்துப் பொடிசெய்து மேற்படி தைலம் விட்டு நன்றாக அரைத்துக் கலக்கி வைத்துக்கொண்டு வெற்றிலையிற் தடவிக் கொடுக்க வேண்டும். இம்முறைப்படிச் செய்ய விரியன் பாம்பினால் கடிக்கப்பட்ட நஞ்சு நீங்கிக் குணமாகும். (வி.ஆ.) செய்யுள் 44.

### நீலகண்டக் குளிகை.

**தேவையான பொருட்கள்.**—(1) 35 கிராம் தூய்மை செய்த வாளம், (2) 35 கிராம் துருசு, (3) 10 கிராம் வெங்காரம், (4) 10 கிராம் நவச்சாரம், (5) 10 கிராம் வீரம், (6) 10 கிராம் பூரம், (7) 10 கிராம் கந்தகம், (8) 10 கிராம் இரசம்.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட எட்டுப்பொருட்களையும் சொல்லப்பட்ட அளவின்படி எடுத்துக் குழிக்கல்லிலிட்டு வெற்றிலைச் சாறுவிட்டு மெழுகு பதமாகும்படி மூன்று நாளரைத்து, மாத்திரையாகச் செய்யவேண்டும். (அம்மாத்திரை ஒவ்வொன்றும் 4 கிராம் இருக்க வேண்டும்.) அம்மாத்திரையை வெந்நீரில் நோயளவுக்குத்தக்க நாளளவும் மருந்தளவும் தெரிந்து கொடுத்தால் எல்லா நஞ்சுகளும் நீங்கிப்போகும். (வி.ஆ.) (செய்யுள் 45.)

### வழலைக்கடியின் பொதுக்குறிகுணமும் மருந்தும்.

வழலைப்பாம்பு கடித்தால் மார்பு அடைத்தல் உண்டாகும். கடி வாயில் குருதி கக்கும், தலையைச் சுழற்றும், வாய் வழவழக்கும், நாதுவளும், இரு விழிகளும் பிதுங்கும், கோழை கக்கும் ஆகிய இக்குறிகுணங்கள் இருந்தால் வழலைப்பாம்பு கடி என அறியவும்.

**மருந்து**—நீலகண்ட குளிகையைக் கொடுக்க வேண்டும்.—**வேறுமருந்து, தேவையான பொருட்கள்**.—(1) வசம்பு, (2) வெள்ளைப்பூண்டு, (3) நல்லதாளி.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் சரியளவு கூட்டிச் சிறுநீரில் அரைத்துப் புன்னைக் காயளவு வீதம் நோயளவுக்குத் தக்க நாளளவு உள்ளுக்குக் கொடுக்க எல்லா விடங்களும் ஒழிந்து விடும். (செய்யுள் 46.)

வேறுமுறை.

**இதற்கு மருந்து தேவையான பொருட்கள்**.—(1) திப்பிலி, (2) வெள்ளைக்காக்கண வேர்ப் பட்டை, (3) நிலப்பனங்கிழங்கு.

**செய்முறை**.—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் சரி எடை எடுத்துக் காடிநீர்விட்டு அரைக்கவேண்டும். அதைப் புன்னைக்காயளவாக எடுத்து வெந்நீரிற் கலந்து நோயளவுக்குத் **தக்க நாளளவு கொடுக்க வேண்டும். இம்மருந்து கொடுத்து வந்தால் காந்தலுடன் கூடின** வழலைக்கடி நஞ்சு **தீரும். (ச.ஆ.)** (செய்யுள் 47.)

உடம்பு காய்தல், உடம்பு நோதல், கடிவாய் கடுத்தல், கடிவாயில் குருதி வடிதல், வாய் எரிச்சலுடன் வழுவழுத்தல், வயிறு பொருமித் துன்பமடைதல், தலை சாய்தல், மயக்கம், கண் மூடல், உண்ணும் மருந்தைக் கூமட்டல் என்னும் ஆகிய இக்குறி குணங்கள் உண்டானாலும் வழலைப்பாம்பு கடி என அறிந்து கொள்ளவும். (செய்யுள் 49.)

**கருவழலைக் கடிக் குறிகுணமும் மருந்தும்.**

கருவழலைப்பாம்பு மிகவும் கொடிய நஞ்சுடையது. இப்பாம்பு **கடித்தால் கொடூரமாகக் காய்ச்சல் இருக்கும். தலை, கை, கால்கள் சிவப்படையும்.** பல் கூசும், பல் நோவும், கண் சிவப்படையும், நாரங்கோழைச்சுற்றிக்கொண்டு நெஞ்சையடைக்கும். இக்குறி குணங்கள் காணப்பட்டால் கருவழலைப்பாம்பு கடித்துள்ளது என்பதை அறியவும். (செய்யுள் 48.)

மருந்து.

இக்குறிகள் காணப்பட்டவுடனே நீலகண்டக் குளிகையை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். மேலுக்கு அவுரி வேர்ப்பட்டை, கடுகுரோகணி ஆகிய இவற்றைச் சரி எடை எடுத்து கோழி முட்டையின் வெண் கருவாலரைத்துத் துவாலையிடவேண்டும் **அத்துடன் சிறிதளவு ஆவின்பாலில் கலக்கி உள்ளுக்கும் கொடுத்து** வரக் கருவழலைக்கடி நஞ்சு தீரும். (வி.ஆ.)

### மயக்கரவின் கடிக்குறிகுணமும் மருந்தும்.

மயக்கரவம் கடித்தால் தலை சுழலும், நா கசக்கும், மதி மயங்கும், மெய் நடுங்கும், நட்டபடியே கண்களிலிருந்து சொருகிக்கீழே படுத்தல் என்னும் ஆகிய இக்குறிகுணங்கள் உண்டாகும்.

### மருந்து.

(1) நீலகண்ட குளிகையை வெந்நீரிற் கொடுக்கவேண்டும், (2) கறிப்பாலை வேரைத் தின்னவேண்டும், (3) ஆதண்டை வேர்ப் பட்டை, மிளகுத்தூள் ஆகிய இரண்டையும் சரி எடை எடுத்துத் தூளாக்கி, நெருப்பில் போட்டு அதிலிருந்துண்டாகும் புகையைக் கடிவாயிற் பிடிக்கவேண்டும்.

ஆகிய இம்மூன்றுவித முறைகளையும் செய்ய மயக்கரவின் கடி நஞ்சு தீர்ந்துவிடும். (வி.ஆ.) செய்யுள் 50.

**மயக்கரவு கடிக்கு மருந்து.**—(1) கறிப்பாலை வேரை வெந்நீரிலரைத்துக்கொடுக்கவேண்டும். (2) நன்றாகக் காய்ந்த ஓட்டில் மிளகுப் பொடியைப் போட்டு அதிலிருந்துவரும் புகையை முகத்திற்படும்படி பிடித்தாலும் மயக்கரவு கடிநஞ்சு தீரும். (வி.ஆ. செய்யுள் 51.)

### பரநாகம், கரிநாகம், கன்னெஞ்சன், ஊமை, சவுடி, கொம்பேறு மூக்கன், மண்ணுளி, இருதலைமணியன், கண்ணெரியன், சாரை இவைகளின் கடிக்குறிகுணமும் மருந்தும்.

பாநாகம், கரிநாகம், கன்னெஞ்சன், ஊமைச்சவடி, கொம்பேறு மூக்கன், மண்ணுளி, இருதலை மணியன் ஆகிய இப் பாம்புகள் கட்டுக்கடங்காதவை. இவைகள் கடித்தால் அறிவு மயங்கல் நெஞ்சடைத்தல் என்னும் குறிகுணங்களுண்டாகும்.

**மருந்து.**—ஊமத்தையிலையைக் கசக்கிச் சாறு பிழிந்து அச் சாற்றை தலை உச்சியிற் பூசவேண்டும். செவி, கண், மூக்கு, இவைகளிலும் அச்சாற்றை விடவேண்டும். கடிவாயிலும் உடம்பிலும் துவாலையிடவும் வேண்டும். அத்துடன் சிறுசின்னி, ஆடு தின்னாப்பாளை, ஆகாசகருடன் கிழங்கு ஆகிய மூன்றையும் சரி எடை எடுத்துச் சிறுநீர் விட்டு இடித்துப் பிழிந்து சாறு எடுத்து, அச்சாற்றை வேளைக்குக் 325 மி. லிட். வீதம் குடித்து வரவேண்டும்.

### கண்ணெரியன் நஞ்சு தீர.

கோவைச் சாற்றை உடம்பிற் பூசுவதுடன் நசியமும் செய்ய வேண்டும்.

### சாரை நஞ்சு தீர.

பிண்ணாக்குச் சமூலத்தை உள்ளுக்கும் கொடுத்து வெளியிலும் பூச வேண்டும். (வி.ஆ. செய்யுள் 52.)

### சாரைப் பாம்பின் உருவமும் செயலும்.

இது நீண்ட உடல் அமைப்புடையது. நேராக ஊடுருவிச் செல்லும் நடையுடைய தன்மை உடையதாகையால் வளைந்து வளைந்து செல்லும் இயல்புடையதல்ல. இப் பாம்பு மனிதரை வாயால் கவ்வி நீண்ட வாலால் அடிப்பதுடன் கால் முதல் மார்பு வரையில் சுற்றி இடுப்பையும் ஒடிக்கும் தன்மையுடையது.

### சாரைப் பாம்பின் பிரிவு 4.

(1) வெண்சாரை, (2) கருஞ்சாரை, (3) செஞ்சாரை, (4) மஞ்சட் சாரை, என நான்கு வகையான பிரிவுகளை உடையது. இச்சாரைப் பாம்பு வகைகளை எருமை மாடுகள் பார்த்து விட்டால் அவைகளுக்கு மாலைக் கண்நோய் உண்டாகுமெனக் கூறுவாருமுளர்.

சாரை, இருதலை மணியன், சுருட்டை, கூளை, மண்ணுளி, புல்லுருவி.—ஆகிய இப் பாம்புகள் கடித்தாலும் அல்லது நக்கினாலும் மெய்த் தடிக்கும். குட்டமுண்டாகும்.

நஞ்சு தீர மருந்து—தேவையான பொருட்கள்.—(1) நான்றி, (2) புன்னை, (3) கழற்சி, (4) இறங்கழிஞ்சில், (5) கடுக்காய், (6) மகிழ், (7) புங்கு, (8) கார்போகரிசி.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட எட்டு வகைப் பொருட்களின் வித்துக்களையும் சரி எடை எடுத்து பசுநீரில் ஒரு மாதம் ஊறவைக்க வேண்டும். பின் அதை எடுத்து உலர்த்திக் குழித்தைலமெடுத்து, அத்தைலத்தை வேளைக்கு 5 கிராம் வீதம் வெற்றிலையில் தடவி அருந்திவர மேற்சொல்லப்பட்ட பாம்புகளின் கடிநஞ்சு தீரும். (சி.ஆ.) (க.ஆ.)

### கொம்பேறு மூக்கன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

மூக்கன் என்ற வகைப் பாம்புகளில் கொம்பேறி மூக்கன் பாம்பு 7 வகைக் கொடியதாகும். இவ்வகைப் பாம்பு கடித்தவுடன் கடியுண்டவனது உடல் சில்லிட்டு நடுங்கும். அறிவு கலங்கும் தலை நட்டுக்கொள்ளும்.

### மருந்து.

35 கிராம் பிரண்டை வேர், நீலகண்டக் குளிகை இவ்விரண்டையும் எடுத்து வெந்நீர் விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குத் துவாலை போட வேண்டும். இதற்கு கொம்பேறி மூக்கன் பாம்பு நஞ்சு மட்டுமின்றி சாரைநாகம் புடையனுடைய நஞ்சும் தீரும். (வி.ஆ.) செய்யுள் 53.

### மூக்கன் கடிக்குறிகுணம்.

மூட்டு, கை கால்களில் வலி உண்டாகும். கடிவாயில் நோவு உண்டாகும். அக்கடிவாயிலிருந்து நீர் வடியும், உடல் மயக்க மடையும், பலவகையான வருத்தங்கள் உண்டாகும். நா உலர்ந்து போகும் ஆகிய இக்குறிகுணங்கள் மூக்கன் என்ற பாம்பு கடிப்பதனுல் உண்டாகும். (சி.ஆ.) (செய்யுள் 54.)

### பச்சைப் பாம்புக் (கண்குத்திப் பாம்பு) கடிக்குறிகுணம்.

இது மரங்களில் வசிக்கும். இது பசிய உருவமும் நீண்ட உடலமைப்பும் உடையது. பசிய இலைகளிலிருந்து இதைப் பிரித்து அறிவது கடினம். இது கடிப்பது அருமை. அருகில் நெருங்கியவர்களின் கண்களைக் குத்தும். ஒருக்கால் கடித்தால் வீக்கமுண்டாகும்.

### மருந்து.

(1) தழுதாழை, (2) பண்ணை, (3) பாட்டை ஆகிய மூன்றின் இலைகளைச் சிறுநீர் விட்டரைத்துக் கடிவாயில் பூசி வரலாம்.

(2) ஆத்தியிலையைப் பொடித்து வெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வீக்கத்திற்கும் தடவி, மூக்கிலும் இரண்டொரு துளி விடலாம். (சி. ஆ.)

### சிறுபாம்புக் கடிக்குறிகுணம்.

வேறு பெயர்.—மண்ணுளிப் பாம்பு.

இது குருதி, செம்பு, வெள்ளி ஆகியவைகளின் நிறத்தைப் போன்றும், பயற்றங்காயளவு உருவத்தையும் பெற்றிருக்கும்.

இது காதில் நுழைந்தால் திமை தரும். இது கடித்தால் உடல் முழுவதும் சிறிது சிறிதாகத் தடித்து சிவந்து நமச்சலை உண்டாக்கும். சில நாள் மறைந்திருப்பினும் பருவந்தோறும் தோன்றி வரும்.

மருந்து.—கேழ்வரகுக் கூழுடன் எண்ணெய் விட்டுக் குழப்பி ஏழு நாள் உண்ணத் தீரும்.

வேறு வகை மருந்து.

தேவையான பொருட்கள்.—(1) நிலப் பனங்கிழங்கு (2) காட்டுச் சிறுகீரை வேர், (3) பொன்னாங்காணி வேர். (4) அதிமதுரம்.

மேற்சொல்லப்பட்ட நான்கு பொருட்களையும் சரி எடை எடுத்து அரைத்துக் கடிவாயிற் பூச வேண்டும்.

(அல்லது)

பிராயம்பால், எருக்கம்பால், கொடிக்கள்ளிப்பால் ஆகிய இம் மூன்றையும் கலந்து கடிவாயிற் பூச வேண்டும். இம்முறைகளினால் சிறுபாம்பு நஞ்சு தீரும். (செய்யுள் 55.)

(வேறு)

சிறுகுறிஞ்சான் வேரை வெந்நீர் விட்டு அரைத்து காலை மாலை வேளையில் பாக்களவு வீதம் மூன்று நாள் கொடுக்க வேண்டும். உப்பில்லாப் பத்தியம் இருக்க வேண்டும். மேலும் மூன்று நாள் மருந்தை நிறுத்தி ஏழு நாள் தலைக்கு நீர் விட சிறுபாம்புத் தடிப்பு மாறும். (புலி. 500)

சாணகம், புடையன், கடிக்குறிகுணமும் மருந்தும்.

சாணகம், புடையன் ஆகிய இப் பாம்புகள் கடித்தால் மூட்டுகள், தலை, உடல் இவைகள் முழுவதும் குடையும்.

இதற்கு மருந்து.

இதற்கு இரண்டு நீலகண்ட குளிகையை எடுத்து அதற்குச் சரியளவாக ஆடு தின்னாப்பாளையிலையைச் சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க மேற்படி நஞ்சு நீங்கும்.

வீங்கு புடையன் கடித்தால்.

(1) பருத்தியிலையை வெந்நீர் விட்டரைத்துக் கடிவாயிற் பற்றுப்போட வேண்டும்.

(2) பழம்புளியைப் பற்றுப் போட வேண்டும். இவைகள் கடித்ததனல் உண்டான வீக்கம் நீங்கும்.

(3) நீர்முள்ளி இலையை அரைத்து ஏழு நாள் கொடுக்கலாம். இப்படிச் செய்தால் மேற்படி நஞ்சு நீங்கும். (வி.ஆ.) செய்யுள் 56.

### அருங்கட்டுப்புடையன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

கட்டுப்புடையன் கடித்தால் உடம்பெல்லாம் தென்னங் குரும்பையைப் போன்று கண்டு கண்டாய் வீங்கும்.

#### மருந்து.

(1) எருக்கம் வேர்ப்பட்டைத் தூள், (2) இலைத்தூள், (3) வசம்புத்தூள் ஆகிய மூன்றையும் சரி எடை எடுத்துக் கூட்டி நெருப்பிலிட்டு வரும் புகையை மூக்கில் ஏற்ற வேண்டும். மேலும் வாளத்தைச் சிறுநீரால் அரைத்துக் கடிவாயில் பற்றுப் போட வேண்டும். இவ்விதம் செய்ய கட்டுப்புடையன் பாம்புக் கடிநஞ்சு நீங்கும். (செய்யுள் 57.)

### இரத்த புடையன், இரத்த விரியன், இரத்த மண்டலி, கடிக்குறி குணமும் மருந்தும்.

இரத்த புடையன், இரத்த விரியன், இரத்த மண்டலி ஆகிய இம் மூன்றின் நஞ்சும் ஒரே தன்மையுடையதாகும். அந்நஞ்சுக் குறிகளாவன : கொக்கரித்து வாந்தி பண்ணும். கெண்டியிலிருந்து செந்நீர் பாய்ந்தது போன்று வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் குருதி ஒழுகும். தலை முதல் கால் வரைக்கும் குருதி வியர்வை உண்டாகும்.

#### மருந்து.

தேவையான பொருட்கள்.—(1) வெள்வேலம் பட்டை, (2) பசுவின் மோர், (3) நல்லெண்ணெய், (4) புத்தான் சோறு.

செய்முறை.—வெள்வேலம்பட்டையைப் பசுவின் மோர் விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1.3 லிட்டருடன் 325 மி. லிட் நல்லெண்ணெயைக் கலந்து அதில் புத்தான் சோற்றை அரைத்துக் கலக்கி கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்ய மேற்படி நஞ்சுகள் தீரும்.

புடையன் பாம்பு கடித்தால் மேற்சொல்லப்பட்ட மருந்து களுடன் 140 கிராம் நேர்வாளம் கூடச் சேர்த்து அரைத்து காலே மாலே இருவேளேயும் 5 கிராம் அளவு விதம் நான்கு நாள் கொடுக்க வேண்டும். இம் மருந்து முறையில் சுருட்டை நஞ்சு ஊமைநஞ்சு, பாம்பு நஞ்சு, பல்லி நஞ்சு, ஓந்தி நஞ்சு முதலியன நீங்கும். (வி.ஆ.) செய்யுள் 58.

**புடையன் கடிகளுக்கு மருந்து.**—(1) மூக்கன் நஞ்சு தீர பிரண்டையின் வேரை அரைத்துப் புன்னேக்காயளவு வெந்நீரில் உட்கொள்ள வேண்டும்.

(2) **நான்கு வகை புடையன்கடிகளுக்கு மருந்து.**—நான்கு வகை புடையன் பாம்புகளும் நான்கு பற்களும் பதிய கடித்து அதனல் நஞ்சு உட்சென்று கடி வாய் விங்கி வியர்வை துளிர் விட்டுக் கொண்டிருந்தால் காட்டுக் கருணேக்கிழங்கையும், கொட்டைக் கரந்தையையும், இருப்பையின் பழச்சோற்றையும் சேர்த்து அமுரி விட்டு அரைத்து கடிவாயிற் பூச நஞ்சு தீரும்.

(3) **கட்டுப்புடையன் கடித்த நஞ்சு தீர மருந்து.**—வசம்பு, எருக்கன்பால், புத்தின்சோறு ஆகிய மூன்றையும் சேர்த்துத் தீயிட்டு வரும் புகையை மூக்கில் ஏற்றக் கட்டுப்புடையன் கடித்த விடம் நீங்கும்.

(4) **நெடுங்கழுத்துப் புடையன் கடித்த நஞ்சு நீங்க.**—இப் பாம்பு பல் பதியும்படி கடித்து அதனலுண்டான நஞ்சு தீர படமடக்கிழங்கினே பாலில் அருந்த நஞ்சு தீரும்.

புகையூறல், நீலியிலே, வடிகண்ணயிருப்பைகட்டி ஆகிய மூன்றையும் கொடிக்கள்ளிப்பால் விட்டு அரைத்துப் பூச, வீக்கம் நீங்கும்.

விழியின் பூவை அரைத்துண்ண நான்கு வகைப் புடையன் நஞ்சு தீரும். (செய்யுள் 59) எனக் கௌசிகர் சித்தாரூடத்திற் புகன்றிருத்தலேக் காண்க.

**குறிப்பு.**—நாக முதலிய சர்ப்ப பேத நஞ்சுகட்கெல்லாம் அப்பிரகபற்பத்தை வெண்குன்றியிலேச் சாற்றில் கொடுக்கலாம்.

### மண்டலி பதினறின் பொதுக் கடிக்குறிகுணம்.

மண்டலி பதினறு வகை உண்டு. அவைகள் கடிப்பதனல் ஏற்படக்கூடிய பொதுக் குறிகுணங்களாவன.—(1) வாய்நீர் உவர்க்கும், (2) தலே சுழற்றும், (3) உடல் நடுங்கும், (4) தோள்முனே

மிக ஊளையும், (5) உடல் முழுவதும் குடையும், (6) கழியும், (7) உடம்பு முழுவதும் சில்லென்றுகும், (8) மயிர்க்கால்களில் நீராகவாவது குருதியாகவாவது வெளிப்படும், (9) காது கேளாது, (10) மூக்கு நாற்றமறியாதபடி கெட்டு விடும், (11) விழி சோறும். (செய்யுள் 60)

### மண்டலி 16.

**மண்டலிப் பாம்பு பதினறு வகைப்படும். அவற்றுள் சிலவும் குணங்களும்.**

1. உதிரமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.—உதிர மண்டலியின் நஞ்சு அதிவிரைவில் கொல்லும் தன்மையுடையது.

**குறிகுணம்.**—வாயிலும் மூக்கிலும் குருதி சிந்தும். கண் தெரியாது. காது கேளாது. உடல் வேர்க்கும் ஆனல் அவ்வேர்வைகளெல்லாம் குருதியாகவே இருக்கும். இது வெளியென்றும் பூமியென்றும் தோன்றுதபடி மயக்கித் தள்ளும். நஞ்சு திரும்புமென்று ஒருவரும் சொல்லமாட்டார்கள்.

#### மருந்து.

35 கிராம் புற்றுச் சோறும், 325 மி.லி. நல்லெண்ணெயையும் சேர்த்து நன்ருக அரைத்து ஒரு மண் சட்டியிலிட்டுக் கெடாமல் பக்குவமாகக் காய்ச்சி எடுத்துக் கடிவாயிலிற்றுவாலே போட வேண்டும். அதன் பிறகு சிறிது நேரம் பொறுத்துக் கோவைச் சாற்றை உடம்பு முழுவதும் பூசி, பின்னர் ஆனை வணங்கி என்னும் யானை நெருஞ்சி இலையைத் தண்ணீராலரைத்து நோய் வன்மைக் குத்தக்க நாளளவு மருந்தளவுகளை ஆராய்ந்தறிந்து கொடுத்து அதையே மேலுக்கும் பூச வேண்டும். அல்லாமல் ஆகாசக் கருடன் கிழங்கை அரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசலாம். இவைகளல்லாமலும் தூதுவளை வேரையாவது, விழுதி வேரையாவது அரைத்துக் கொடுக்கலாம். இப்படிக் கொடுத்தால் மேற்படி உதிரமண்டலிக்கடி நஞ்சு தீரும். (செய்யுள் 61)

#### வீங்குமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.

வீங்குமண்டலி கடித்தால் உடல் முழுவதும் உடனேயே வீக்கமுண்டாகும். கண் முழுவதும் வேர்க்கும்.

#### மருந்து.

**தேவையான பொருட்கள்.**—(1) குங்குமப்பூ, (2) மூக்கிரட்டை வேர், (3) நிலக்கடம்பின் வேர், (4) பெருமரப்பட்டை, (5) இலுப்பையிலே.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஐந்து பொருட்களையும் சரி எடை கூட்டிக் காடிவிட்டு அரைத்து காடியிற் கலந்து சிறிய அளவாக 1.3 லிட் அளவு வரைக்குங்குடித்து, அதையே உடம்பு முழுமைக்கும் துவாலை போட்டால் மேற்படி வீங்குமண்டலி நஞ்சு காற்றிற்பட்ட பஞ்சுபோலாகும். (செய்யுள் 62)

சொறி மண்டலி கடிக்குறிகுணமும் மருந்தும்

சொறி மண்டலிக் கடித்தால் உடனே கண் சொருகும், கண் கருகும், நாக்கும் வாயும் வரளும். உடல் தடிக்கும். உடல் சுரசுரவென்று வரளும், சொறி உண்டாகும் ஆகிய இக் குறிகுணங்கள் உண்டாகும்.

### மருந்து.

நன்னாரிவேரைத் தனியான பசும்பாலாலரைத்துக் குடித்து உடனே பொன் முசுட்டை வேரைப் பாலில் அரைத்து உடல் முழுவதும் துவாலை போட வேண்டும். இவைகளால் மேற்படி சொறிமண்டல நஞ்சு தீரும். (செய்யுள் 63)

### பேதி மண்டலக்கடிக்குறிகுணமும் மருந்தும், எரி மண்டலக்கடிக் குறிகுணமும் மருந்தும்.

பேதி மண்டலி கடித்தால் காய்ச்சல், குளிர், கழிச்சல இவைகள் கடுமையாய் உண்டாகும்.

### மருந்து.

**தேவையான பொருட்கள்.**—(1) பெருங்காயம், (2) வசம்பு, (3) வெள்ளைப்பூண்டு, (4) அவுரிவேர், (5) பெருமரப்பட்டை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஆறு பொருட்களையும் சரி எடை எடுத்துப் பசுவின் பால்விட்டு அரைத்துக் குடிக்க வேண்டும். இதைச் செய்தால் பேதிமண்டலிக் கடித்த நஞ்சு நீங்கும்.

எரிமண்டலிக் கடித்தால் பெருமூச்செறியும், முகம் நெருப்பாக எரியும், அடிக்கடி தலை சுற்றிக் கீழே தள்ளிவிடும், உடம்பெல்லாம் நெருப்புப்பட்டது போன்று எரியும். ஓயாமல் வேர்வைவிடும் ஆகிய இக்குறிகுணங்கள் காணும். (செய்யுள் 64)

எரிமண்டலிக்கடிக்கும் மருந்தும், வெறிமண்டலிக் கடிக்குறிகுணமும்.

எரி மண்டலி கடித்ததனால் உண்டான நஞ்சு தீர 35 கிராம் விடதாரி வேரைப் பசுவின் பால் விட்டரைத்து அதை 1.3 லிட்டர் பசுவின் பாலில் கலக்கி அக்கலவையைச் சிறிது சிறிதாக உட்கொள்ள வேண்டும். அதையே உடம்பு முழுவதற்கும் துவாலை செய்ய வேண்டும்.

**வெறிமண்டலிக்குறிகுணமாவது** ; நிலத்திலுள்ள எந்தப் பொருளும் கண்களுக்குத் தோன்றுதபடி பிரமை உண்டாதல், அன்றி கோபம் கிளம்பி எழுந்து வெளியில் ஓடிப்போதல், தான்கொண்ட வெறியால் வாய் திறந்து கடித்தல் என்பனவாகும். *(செய்யுள் 65.)*

**வெறிமண்டலிக் கடிக்கு மருந்து.**

கறுப்புப் புள்ளியை யுடைய வண்ணத்திப் பூச்சியை 35 கிராம் எடுத்து கல்வத்திலிட்டு மெழுகுபோலரைத்து 325 மி.லி. நல்லெண்ணெயிற் கரைத்து அடுப்பேற்றி மெழுகுப் பதமாகக் காய்ச்சி இறக்கி உடல் முழுமைக்கும் துவாலை யிட்டு உடலை நன்றாக முறுக்கிப்பிடித்து, அந்த எண்ணெயில் நாள் ஒன்றுக்கு 35 கிராம் விதம் ஐந்து நாள் வரைக் குடித்தால் வெறிமண்டலி நஞ்சு தீரும்.

*(செய்யுள் 66.)*

**சீதமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.**

சீத மண்டலியைச் சலமண்டலி எனவும் வழங்குவர். இது கடித்தால் உடனே உடல் சில்லிட்டு வெறியுண்டாகும். வாய் குழகுழப்பாகும். உதடு நேராயில்லாமல் தளர்ந்து தொங்கிவிடும்.

**மருந்து.**

முத்தெருக்கஞ்செவி என்னும் நிலக்கடம்புச் செடிச் சமூலத்தைக் காடி விட்டரைத்து அடுப்பேற்றிக் கொதிக்கவைத்து உடல் முழுதும் பூசவேண்டும். அன்றியும் 35 கிராம் நெய்யில் 35 கிராம் மிளகுத்தூள் சேர்த்து நஞ்சளவு கண்டு அதன் அளவுக்குத் தக்க நாளளவு உண்டால் சீத மண்டலியின் நஞ்சு தீரும். (வி.ஆ.) *(செய்யுள் 67.)*

**திமிர் மண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.**

திமிர் மண்டலி கடித்தால் உடலில் திமிர் உண்டாகும். இதற்குப் பொன்முசுட்டை வேரையரைத்துக் கொடுக்கலாம். (வி.ஆ.)

**எல்லா மண்டலிகளுக்கும் பொது மருந்து.**

(1) இலந்தையிலையில் படிந்துள்ள தம்பலப்பூச்சி, (2) நிலக்கடம்பு வேர், (3) அவுரிவேர், (4) பேய்ப்பாலை வேர், (5) பேய்த்தும்மட்டி வேர், (6) சித்திர மூலவேர், (7) கொடிக்கள்ளி வேர், (8) செருப்படி வேர், ஆகிய எட்டில் எதையாவது ஒன்றை எடுத்து அதை வேளைக்கு 5 கிராம் விதம் தேங்காய்ப்பாலில் அரைத்து உண்டால் மேற்படி நஞ்சு எல்லாம் தீரும். (வி.ஆ.) செய்யுள் 68.

## எலி 18.

எலிகள் 18 வகைப்படும். அவை :

(1) புண்டரம், (2) கபிலம், (3) சுவேதம், (4) கஷாயதந்தம், (5) உந்துரு, (6) கோகிலம், (7) கபோதம், (8) இலாருட்சம், (9) அரிதம், (10) சமவம், (11) அருணம், (12) இரசாலம், (13) அசிதம், (14) கிருட்ணம், (15) பலினி, (16) சிசுரம், (17) சபலம், (18) குனகம், எனப்படும். எனச்சிலர் கூறுவர். இது பிறர் கூற்று. (சி.ஆ.)

இனி தமிழ் நூற்கள் கூறும் எலிகளின் வகை 18. அவையாவன :

(1) சுத்திரி, (2) மணியன், (3) செம்மூக்கன், (4) வள்ளி, (5) குறட்டை, (6) கருங்காற்றலையன், (7) விடவெலி, (8) செந்தலைமூத்தி, (9) செவ்வெலி, (10) வீங்கெலி, (11) உவர்ப்பெலி, (12) தூங்கெலி, (13) புடையெலி, (14) இரைப்பெலி, (15) செங்கண்ணன், (16) புள்ளி, (17) காடன், (18) குறுங்கா லெலி, என எலிகளின் வகை 18 என்பது தமிழ் நூற்களின் கூற்றாகும்.

இரு சாரார் கூற்றும் வெவ்வேறுபட்டதாக இருந்தபோதிலும், அவ்வெலி களின் நஞ்சு ஒரு தன்மையுடையதேயாகும். (சி.ஆ.) செய்யுள் 60 & 61.

இவையன்றி சுண்டெலி, சோடெலி, சீனெலி, காட்டெலி, மோட்டெலி, வெள்ளெலி, காரெலி, பேரெலி என்னும் வேறு எட்டு வகையான எலி வகைகளும் உண்டு.

### இவ்வெலிகளின் கடிக்குறிகுணம்.

எலி கடித்தால் நடுக்கலுடன் அதிக வெம்மையாய்ச் சுரங்காயும், கிறுகிறுப்பு உண்டாகும், சுரம் விட்டு விட்டு வரும். சில சமயம் சிவந்திப் பூச்சி கடித்தால் உண்டாவதுபோன்று தடித்து கொப்புளங்கள் உண்டாகும். தலை கனக்கும், மூட்டுகளில் நோவு உண்டாகும். சில வேளைகளில் மூட்டுகளில் வீக்கமும் உண்டாகும். ஆகிய குறிகுணங்கள் கடித்த ஆரம்பத்தில் காணப்படும். இதற்குத் தக்க மருத்துவம் செய்து கவனித்து நஞ்சை போக்காவிடில் நாட் செல்லச் செல்ல இருமல், இரைப்பு, இளைப்பு போன்ற நோய்களை விளைவிப்ப துடன் தொண்டையில் எலியொலியைப் போன்று குறுகுறுவென்னும் ஓர்வித ஒலியையும் உண்டாக்கிவிடும். இந்நஞ்சானது உடலில் தங்கி நாளுக்கு நாள் நோயை அதிகப்படுத்தி நீடிக்கச் செய்வதுடன் உடம்பை இளைக்கச் செய்து உடலைக் கறுக்கச் செய்து கடைசியாக அசற்றல்புரட்டலுண்டாகி சாவேற்படும் கடிபட்ட நஞ்சு ஆறி பின் புண்ணாகிச் சீழ் பிடிக்கும்.

குறிப்பு.—எலியின் மயிர்களில் சில வேளைகளில் ஒருவிதமான கிருமிகள் உண்டாகி அவற்றால் மனிதர்களுக்கு (பிளேக் என்னும்) மகமாரி நோய் விளை வதுண்டு. இவைகள் முதலில் அவ்வெலியைக் கொன்று பின் அதினின்றும் மனி

தர்களைப் பிடிக்கும். இந்நோயினால் சிதகத்திலுள்ள நெறிகள் எல்லாம் வீங்கி அதிக சுரம் உண்டாகிச் சில வேளைகளில் நுரையீரலைப் பற்றிப் பல நோய்களை விளைத்து அதிவிரைவில் தீங்கை விளைவிக்கும். இது காரணம் பற்றி இறந்த எலிகளை மிகக்கவனமாகவும், சீக்கிரமாகவும் அப்புறப்படுத்த வேண்டும்.

## எலிகடிக்கு மருந்து.

(1) **தேவையான பொருட்கள்.**—(1) மரை என்னும் விலங்கின் தோல், (2) நல்லெண்ணெய், (3) பசுவின் நெய்.

**செய்முறை.**—மரையென்னும் விலங்கின் தோலை உலர்த்திப் பொடியாக்கி அதை நல்லெண்ணெய், பசுவின் நெய் இவைகளுடன் அளவுப்படி சேர்த்துப் பத்துநாள் நஞ்சின் அளவுக்குத் தக்கபடி உண்டால் எலிக்கடியால் உண்டான வீக்கம், வருத்தம், அழல் ஆகியவைகள் நீங்கி உடம்பு நன்னிலையடையும்.

(2) எலிகடித்ததனால் தலைப்பளுவு, உடல் எங்கும் கொப்புளித்தல் என்பவைகள் உண்டாகுமானால் சிறுபுருவின் எச்சத்துடன் பெருமரப்பட்டை அதன் இலைகள் ஆகியவைகளைக் கூட்டி உலர்த்தி இடித்துப் பொடியாக்கி நஞ்சுக்குத் தக்க அளவு நெய்யில் உட்கொள்ள மேற்படி நஞ்சு நீங்கும்.

(3) பதினெட்டுவகை எலிக்கடி நஞ்சுக்கு உருத்திராக்கத்தைப் பசுவின் பாலிலரைத்து நெய்யிற் கூட்டி கொடுக்க எலி நஞ்சு தீரும்.

## (4) எலிக்கடி வீக்கம் தீர மருந்து.

**தேவையான பொருட்கள்.**—(1) திப்பிலி, (2) மிளகு, (3) புங்கம் வேர், (4) மகிழம் வேர், (5) சீந்திலிலை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஐந்து பொருட்களையும் சரி எடையாக எடுத்துக் கற்றாழைச் சாறுவிட்டரைத்து நஞ்சு வன்மைக்குத் தக்க அளவிலுண்ண மேற்படி எலி கடித்ததாலுண்டான வீக்கம் தீரும்.

(5) தாளகத்தைத் தூளாயரைத்து ஒரு மண் சட்டியிலிட்டு நடுவில் தொளைபோட்ட சட்டி ஒன்று மேலே மூடி நெருப்பிலிட்டு வரும் புகையைப் பிடித்தால் எலிநஞ்சு நீங்கும். (செய்யுள் 72.)

## எலிநஞ்சிற்கு மருந்து.

மேலும் பல மருத்துவங்கள் எலிநஞ்சிற்குப் பயன்படுகிறது அவை பின்வருமாறு :—

(1) தலை கனத்தல், தடித்து வீங்கல் முதலியவைகள் விளை விக்கும் எலிநஞ்சிற்கு இரும்பைக் காய்ச்சித் தோய்த்த பழச் சாற்றை மூன்று நாட்கொடுக்கத் தீரும்.

(2) பாவட்டைத் தழையையும் அதன் பட்டையையும் சரி யளவாக எடுத்துத் தூளாக்கிக் கொட்டைப் பாக்களவு நெய்யிற் கொள்ள எலிக்கடியினால் உண்டான தலைக்கனப்பு, உடம்பெங்கும் வீங்கும் கொப்புளங்கள், தடிப்பு இவைகள் நீங்கும்.

(3) பலாசுயிலை, அல்லது பட்டையை அரைத்து எலுமிச்சங் காயளவு வெண்ணெயிலுண்ண எலிநஞ்சாலுண்டாகும் ஈளை யிருமல் தீரும்.

(4) அழிஞ்சிற்பட்டையை அரைத்து எலுமிச்சங் காயளவு வெந்நீரிற் கொடுக்கவேண்டும்.

(5) அவுரி அல்லது அமுக்கரா வேரை அரைத்துப் பாலில் கலந்து மூன்று நாள் குடிக்கத் தீரும்.

(6) நிலவாகை, கொன்றை, வாதமடக்கி, பாலையிலை இவை களின் சாறும் வெள்ளெருக்கம்பாலும் வகைக்கு 160 மி.லிட். கரிப்பான் சாறு, எண்ணெய் இவை வகைக்கு 650 மி.லிட்., சிவதை வேர்ச்சூரணம் 5 கிராம் கூட்டிக் காய்ச்சி, அருந்த எட்டுவகை எலி நஞ்சுகளும் தீரும்.

(7) சித்திரமூல வேர்ப்பட்டையை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக்கொடுக்கத்தீரும்.

(8) அமுக்கரா வேரை எலுமிச்சம்பழ அளவில் அரைத்துப் பாலிற் கலக்கியுண்ண எலிநஞ்சு தீரும்.

(9) நாட்பட்ட நஞ்சிற்கு—புன்கம்பட்டை, மிளகு, வெள்ளுள்ளி, வசம்பு முதலியவற்றைப் பழச்சாற்றிலரைத்துக் கொடுக்கத்தீரும்.

(10) சுக்கு, சிறுமிளகு, களிப்பாக்கு, வேலம்பட்டை ஆகிய நான்கையும் வகைக்கு 10 கிராம் கூட்டிக் கற்றாழைச் சாற்றாலரைத்துண்டு, புளியமரப் புரணியையுஞ் சுட்டு உண்ணத் தீரும். பசுவின் பால் பத்தியம்.

**தடிப்புத்திர.**—ஆதளைவித்தையரைத்துப் பாலிற் கலக்கியேனும், புங்கம்பட்டையை எருமை மோரில் தோய்த்தேனும், மாம் பட்டையை யுலர்த்தி நெய்யிற் கலந்தேனும் உண்ணத்தீரும்.

முருங்கைப்பட்டை, முருங்கையிலை, முருங்கைப்பூ ஆகிய இம்மூன்றையும் வகைக்கு 18 கிராம் கூட்டி மூன்று வைப்பு வைத்த பெரிய கோழியை யறுத்த தனிக் குருதியினால் அரைத்துச் சிறு உருண்டைகள் செய்து கொள்ளவும். பிறகு நல்லெண்ணெயைத் தலைக்குத் தேய்த்துக்கொண்டேயிருக்கும் தருவாயில் நோயாளியின் வாயில் ஒரு உருண்டையிட்டுத் தண்ணீர் விடவும். பிறகு தலைக்கு நீர் வார்க்கும்போது மற்றொரு உருண்டையை யிடவும். குளித்துமுடிந்தவுடன் காலுக்குப் புதுச் செருப்பிட்டு வைக்கவும். எட்டு நாள்வரை உப்பு, புளி, காரம் இவற்றைத் தள்ளி, ஒன்பதாம் நாள் குளித்துப் பின் புளி, உப்பு சேர்க்கச் செய்யவும்.

### எலிவெண்ணீர் படுவதாலுண்டாகும் குறிகுணங்கள்.

ஆண் எலியும் பெண் எலியும் சேர்க்கை புரியும் காலத்து அவ்வெண்ணீர் மனிதர்மீது சிதறுமாகில் அவ்விடத்தில் வீக்கம், மச்சம், கிரந்தி முதலியவைகள் உண்டாவதோடு சுவையின்மை வாந்தி, தாகம், பிரமை, குளிர்சுரம், நடுக்கல், மயிர்கூச்சு, மூர்ச்சை கீல்களில் வலி முதலியனவும் ஐயவளர்ச்சியும் உண்டாகும்.

### அரிதில் தீரும் (அசாத்திய) எலிவிட இலக்கணம்.

மேற்கூறியவைகளில் எந்த எலி கடித்தாலும் சுரம், தலைவலி, வாய் நீர்ப்பெருகல், குருதி வாந்தி, உடல் வீக்கம், வியர்வை, காது மந்தம், வேற்றுருவம் ஆகியவையுண்டாகுமாகில் நீங்குவது கடினமே.

### மூஞ்சூறு, பெருச்சாளி, முட்சுருளி, அணில் கடிக் குறிகுணமும் மருந்தும்.

இவைகள் கடித்தால் இறப்புண்டாகாதெனினும் மரண வேதனைக்கொப்ப கொப்புளங்கள், வீக்கம், தடிப்பு, இருமல், புண் விரிதல், வாய் பேசக்கூடாமை, கழிச்சல், உடலிளைத்தல் ஆகிய குணங்களுண்டாகும். இந்நஞ்சுகளைப் போக்க அவுரி வேர்க் குடிநீர் ஆகும்.

குறிப்பு.—எலிகள் கடிநஞ்சிற்கு அப்பிரக பற்பத்தை இலைக் கள்ளிச் சாற்றிலும், மூஞ்சூறு வகைகள், பெருச்சாளி வகைகள் கடிநஞ்சிற்கு மலைவேப்பிலைச்சாற்றிலும் கொடுக்கலாம்.

### செய்யான் பிரிவு 6.

இது (1) வெள்ளரைச்செய்யான், (2) பட்டைச்செய்யான், (3) பெரும்படைச்செய்யான், (4) குருகிச்செய்யான், (5) மருட்சி செய்யான், (6) வன்மீகச் செய்யான் என ஆறுவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. (வி.ஆ.) செய்யுள் 74.

### செய்யான் கடிக்கு மருந்து.

எரிச்சலைத்தரும் பெரிய செய்யான் கடித்தால் (1) வாடிவதங்காததும் ஒருவிதக் கெடுதியும் அடையாமலுமிருக்கிற கோவையிலை, வெற்றிலை, பருத்தியிலை, கொஞ்சியிலை, உத்தாமணியிலை, முடக்கற்றானிலை, ஆகிய இவ்வாறையும் இடித்துச் சாறு பிழிந்து கொதிக்கவைத்து உடம்பெல்லாம் பூசிக் கடிவாயில் தடவ வேண்டும்.

(2) வெற்றிலைபாக்கை மென்று கடிவாயில் உமிழலாம்.

(3) தூதுவளை வேர், நாவல் வேர், ஈயக்கொழுந்து வேர் ஆகிய இம்மூன்றையும் சரிஎடை எடுத்து அரைத்துக் கடிவாயிற் தடவினாலும் அக்கடியால் உண்டான கடுப்பு, எரிச்சல் முதலிய தீக்குணங்கள் நீங்கிவிடும். (செய்யுள் 75)

குறிப்பு.—பற்பல செய்யான் கடிநஞ்சிற்கு அப்பிரகபற்பத்தைக் கையாந்தகரைச் சாற்றில் கொடுக்கலாம்.

### பூரான், சிலந்தி, ஆறுகால் பூச்சி, புலிமுகப் பூச்சி கடிக்குறிகுணம்.

**பூரான் பிரிவு.**—(1) கரும்பூரான், (2) வெண்பூரான், (3) செம்பூரான், (4) மண்பூரான், (5) காட்டுப்பூரான், (6) சிறுபூரான், (7) பெரும்பூரான், (8) சாணிப்பூரான் என பூரான் எட்டு வகைப்படும்.

**கடிக் குறிகுணம்.**—பூரான் கடித்து உடம்பு முழுவதும் தடித்த பூரானின் நிறத்தைப்போல் தடிப்புக் காணுமாகில் அதற்கு மருந்து.

ஆகாசக்கருடன் கிழங்கைச் சிறு சின்னிலையின் சாறுவிட்டு அரைத்து வேளைக்குக் கழற்சிக்காயளவு காலை மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் உண்டு, உண்ட அம்மூன்று நாளும் வெளியில் வராமல் அறையினுள்ளேயே இருக்க வேண்டும். (குப்பைமேனி சாற்றைப் பூசுவதினாலும் தீரும்) இதற்கு ஏழுநாள் வரைக்கும் புளியாகாது.

சிலந்திப்பூச்சியாவது ஆறுகால் பூச்சியாவது கடித்தால் கடித்த இடத்தில் தடிப்புக் காணும். புலிமுகப்பூச்சி கடித்தால் நொடியளவில் தேள் நஞ்சு ஏறிக்கடுப்பதுபோல் கடித்த இடத்தில் தடுப்பு உண்டாகி, அந்நஞ்சின் வேகம் முன்னதாக உடம்புக்குள் வாழும். (வி.ஆ.) செய்யுள் 76.

குறிப்பு.—எப்பூரான் கடிநஞ்சிற்கும் அப்பிரகபற்கத்தை உத்தாமணிச் சாற்றில் கொடுக்கலாம். (தே.ய.வெ.உ.)

### சிலந்திப்பூச்சி.

சிலந்திப்பூச்சியின் வகைபற்றி பலவிதக் கருத்துக்கள் வழக்கிலிருக்கின்றன. அவை (1) இருபது வகைப்படுமென சித்தராரூடம் கூறும்.

(2) வளிப்பிணிக்குணம், அழற்பிணிக்குணம், ஐயப்பிணிக்குணம் ஆகிய இவைகளை உண்டாக்க ஒவ்வொருவகையிலும் ஏழு ஏழெனக்கொண்டு மொத்தம் 21-ம், கலப்புப் பிணிகளை உண்டாக்கி ஏழும் ஆக சிலந்திப்பூச்சியின் வகை இருபத்தெட்டு என்றும் கூறுவர்.

(3) இவை நீங்கலாக வேறு ஒன்பது விதச்சிலந்திகள் உண்டென்றும் கூறியுள்ளார்கள். எட்டுக்கால்பூச்சியும் இதில் ஒரு பிரிவாகும்.

### வளிச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்.

இவை வெண்மை, செம்மை ஆகிய நிறங்களையும் எருவாயில் சித்திரங்களாலான மெல்லிய நூலையும் உடையனவாக இருக்கும். இவை தீண்டுவதால் வளிநோய்க் குணங்கள் உண்டாகும்.

### அழற் சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் கருமையும், பசுமையும் கலந்த நிறத்துடன் வாயில் அனலையும், எருவாயில் தாமரை நூலைப்போல் நூலையும் உள்ளனவாகவிருக்கும். இவைகள் கடிப்பதால் அழற்பிணிக்குணங்கள் காணும்.

### ஐயச் சிலந்திப்பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் வெண்மை நிறத்தையும், குடலில் நீலநிறத்தையும், எருவாயில் சிவந்த நூலையும் உள்ளனவாக இருக்கும். இவைகள் தீண்டுவதால் ஐயநோய்க் குணங்கள் உண்டாகும்.

## கலப்பு தோடச் சிலந்திப் பூச்சிகளின் பொதுக்குணம்.

இவைகள் ஆசனத்தில் பற்பல நிறமுடைய நூலையுள்ளனவாக யிருக்கும். தீண்டினல் தீ சுடுவதைப்போல் எரிச்சலையும் முக்குற்றக் குணங்களையும் உண்டாக்கும்.

## இவைகளன்றி வேறு ஒன்பது சிலந்திப் பூச்சிகளின் நஞ்சு.

இவைகள் புணருங்காலத்தில் தெறிக்கின்ற வெண்ணீர் பட்ட இடமெல்லாம் விரைவில் கொப்புளங்கள் உண்டாகும்.

## சிலந்தியின் நஞ்சு வேறுபாடு 8.

சிலந்திப் பூச்சிகளிடமிருந்து உண்டாகும் நஞ்சு எட்டு வகைப் படும். அவை—

(1) மூச்சு, (2) பல், (3) மலம், (4) சிறுநீர், (5) வெண்ணீர், (6) வாய், (7) வாய்நீர், (8) ஊறு.

(1) **மூச்சு.**—இதிலிருந்து உண்டாகும் நஞ்சு சுரம், நீர்வேட்கை முதலியவைகளை உண்டாக்கும்.

(2) **பல்.**—நச்சுப்புண், நிற வேற்றுமையையும், கடினமும், நிலைத்ததாயிருக்கும். இதனல் உடலில் வீக்கம், எரிச்சல், துயரம், வியர்வை, நீர்வேட்கை ஆகிய குணங்களுண்டாகும்.

(3) **மலம்.**—இதன் மலம் பட்ட இடத்தில், இலுப்பைப்பழநிற மொத்த புண்ணும், அதில் கெட்ட மணமும், எரிச்சலும், தினவு முண்டாகும்.

(4) **சிறுநீர்.**—இது பட்ட இடத்தில் உண்டாகும் புண்ணின் நடுப்பாகம் கறுத்தும் உயர்ந்தும் இதைச் சுற்றிலும் வாடியும் பூப் போல் மலர்ந்துமிருக்கும். மேலும் கெட்ட நாற்றம் எரிச்சலும் இடைவிடாதிருக்கும்.

(5) **வெண்ணீர்.**—இதுபட்ட இடத்தில் கடின கொப்புளங்களும் நோவுமுண்டாகும்.

(6) **வாய்.**—இது பட்ட இடத்தில் முருக்கன் பூப்போன்ற செந் நிறமுள்ள புண்ணுண்டாகி அதில் குத்தலும் தினவுமுண்டாகும்.

(7) **வாய்நீர்.**—இதுபட்ட இடத்தில் புங்கின் நிறமுள்ள புண் பிறக்கும். புண்ணின் ஓரத்தில் பூச்சி ஊறுவதுபோன்ற உணர்ச்சியும் எரிச்சலும் குத்தலும் உண்டாகும்.

(8) ஊறு.—தோல் பட்ட மாத்திரத்தில் முற்கூறிய குணங்கள் எளிதில் உண்டாகும்.

### இப்பூச்சிகள் கடிக்கும் நேரம்.

இப்பூச்சிகள் பூர்வ பட்சத்திதிகளில் மாலைப்பொழுதிற் கடிக்கும். கடித்த வாயில் பசுமை, வெண்மை, செம்மை, கருமை முதலிய பலவித நிறமாய் இருக்கும். கடிபட்ட இடம் மெலிந்து உயர்ந்து தடிக்கும். அத்தடிப்பைச் சுற்றிலும் சிறுசிறு கொப்புளம் கிளம்பும். இக்கொப்புளங்களிலிருந்து வடியும் நீர் பட்ட இடமெல்லாம் கொப்பளிக்கும். ஊதல் ஆகிய நோய்களில் காணும் துன்பங்களும், சுரமும், வியர்வையுமுண்டாகும்.

### சிலந்திப்பூச்சிக்கடிவேகம்—ஏழு.

சிலந்திப்பூச்சி கடிநஞ்சு உடலில் பரவிய—

1-வது நாளில்—கடிவாயில் நிறம் தோற்றுமல் அற்பத் தினவுண்டாகும்.

2-வது நாளில்—கடிவாயில் இயற்கை நிறத்துடன் தடித்துத் தினவோடு கூடிய சிறுகட்டிகள் எழும்பும்.

3-வது நாளில்—கடிவாய் அனலைக் கழித்தது போல் தடித்து, சிவந்து அங்குள்ள மயிர்கள் சிலிர்ப்பதுடன், மயிர்க்கால்களில் குருதி கம்மி சுரமுண்டாகும்.

4-வது நாளில்—கடிவாயில் வீக்கம், எரிச்சல், மற்றும் இரைப்பு, பிரமை ஆகியவையுமுண்டாகும்.

5-வது நாளில்—கடிவாயில் நச்சுத்திக் குணம் யாவும் பெருகும்.

6-வது நாளில்—கடிவாயின் வர்மங்களில் பரவும்.

7-வது நாளில்—உயிர்க்குக் கெடுதி வரும்.

ஆகையால் உடனே தக்க மருத்துவம் செய்தால் 21 நாளில் நன்மை உண்டாகும். இப்பூச்சிகளின் நஞ்சு எறினல், கடிவாயில் எழும்புகின்ற புண்களில் சில கொப்புளங்களாகவும், சில வட்டமாகவும், சில வெண்மை நிறமாகவும், சில செம்மை நிறமாகவும், சில நீலநிறமாகவும், சில மென்மையாகவும், சில கடினமாக வுமிருக்கும்.

### சிலந்திக்கடிக்கு மருந்து:

சிலந்திப்பூச்சி இருபது வகைப்படும். அவ்விருபது வகைச் சிலந்திப்பூச்சிகளில் எவ்வகைப் பூச்சி கடித்தாலும் அவ்விடம்

நீங்கச் சுண்ணும்பையும், பழைய புளியையும், ஓரளவாகக் கலந்து கடிவாயிற் தேய்க்கவேண்டும்.

(2) ஆவாரையிலை, தாளியிலை, பசலைக்கீரை ஆகிய இம் மூன்றையும் காடியிலிட்டு அவித்துக் கடிவாயிற் கட்டவேண்டும்.

(3) பிராய மரத்துவேர், அவுரிவேர், ஆகிய இவ்விரண்டையும் சரி எடை எடுத்துப் பசுவின் பால்விட்டரைத்துக் காலை மாலை இருவேளை விதம் மூன்றுநாள் கொடுத்தாலும் மேற்படி சிலந்திக் கடிகளாலுண்டான கடுப்பு, எரிச்சல் நீங்கி, அந்நஞ்சால் அடங்கிய உயிர் மீண்டும் வரும். (செய்யுள் 77)

சிலந்திப்பூச்சிக் கடியின் நஞ்சு சிலநாள் வரைக்கும் உடம்பிற்குள் தங்கி பின் வெளிப்பட்டு உடம்பெல்லாம் புன்னைக் காய் போன்ற உருண்டைகளை உண்டாக்கும். இதற்கு மருந்து குப்பை மேனி, முருக்கு, எட்டி, வேளை ஆகிய இந்நான்கு வகைச் சாறுகளையும் சரியளவு கூட்டி கடித்த வாயிற் பூசுவதுடன் உடம்பு முழுவதும் பூசவேண்டும். அத்துடன் அவுரியிலை, உத்தாமணியிலை, குப்பைமேனியிலை ஆகிய இம்மூன்றையும் சரியளவாக எடுத்து ஒன்றாகச் சேர்த்து அரைத்துக் கொட்டைப் பாக்களவு விதம் இரு வேளையுமாக மூன்று நாள் கொடுக்க உடலில் தங்கியிருந்த மேற்படி நஞ்சுயிர்களின் கடிநஞ்சு உடம்பை விட்டு நீங்கும். (வி.ஆ.) செய்யுள் 78.

### பச்சோந்தி—கடிக்குறிகுணமும் மருந்தும்.

பச்சை ஓணான் கடித்தால் கடித்த இடம் வீங்கித் தடிக்கும். இதற்குத் தழுதாழையிலை, பண்ணைக்கீரை, பாட்டைக் கீரை ஆகிய இம்மூன்றையும் சரி எடை எடுத்துச் சிறு நீர் அதிகமாக விட்டு அரைத்துக் கடிவாயிற் பூசியும், ஆத்தியிலையைப் பொடியாயிடித் துத் தெள்ளிப் பசுவின் வெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி மூக்கில் துளித்தும், வீக்கத்தில் தடவியும் வர மேற்படி நஞ்சு நீங்கும். (சி.ஆ.) செய்யுள் 79.

### ஓணான் கடிக்குணமும் மருந்தும்.

ஓணான் கடித்த இடத்தில் மூன்றாம் பிறையை ஒத்த காயம் காணும். அதனால் நோவு, வீக்கம், நமைச்சல், குத்தல், களைத்தல் நேரிடும். மலம் பல நிறத்துடன் இழியும்.

### மருந்து.

40 மி.லிட். மூங்கிற் குருத்துச்சாறு எடுத்து அதில் 10 கிராம் மிளகுப்பொடியைக் கூட்டிச் சேர்த்து காலையிலும் மாலையிலுமாக ஐந்து நாள்வரை கொடுக்க ஓணான் நஞ்சு நீங்கும்.

### தவளைக்கடிக்குணமும், மருந்தும்.

இது கடித்தால் தினவு, மிகுசோம்பல், தூக்கம், மூர்ச்சை, கறுத்துப்பரவும் சொறிகள் முதலியன உண்டாகும்.

### மருந்து.

325 மி.லிட். அகத்தியிலைச்சாற்றில் 10 கிராம் கறியின் பொடி கூட்டிக் கலக்கி அருந்திவரவேண்டும். அத்துடன் புகையூறல், உப்பு இவ்விரண்டையும் பருத்தியிலைச் சாறுவிட்டரைத்து மேலுக்குப் பூசியும் வரவேண்டும். (சி.ஆ.)

### சொறித்தவளைக் கடிக்குணமும், மருந்தும்.

இத் தவளைக்கடித்தால் உடம்பில் ஊறலுண்டாகும்.

### மருந்து.

தேவையான பொருட்கள்.—(1) நீலி, (2) வேலி, (3) மலைதாங்கி, (4) வெண்காக்கணம், (5) ஆதொண்டை, (6) விழி, (7) பாலொடுவை.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஏழு பொருட்களின் வேர்களையும் சரிபாகமாக எடுத்து உலர்த்தி இடித்துத் திரி கடி வீதம் வெந்நீரிற் கலந்து உண்ண நஞ்சு நீங்கும். மேனி அழகு பெறும.

பத்தியம்.—உப்பு, புளி நீக்கவேண்டும். (சி.ஆ.)

### காட்டுத்தவளைக் கடிக்குணமும் மருந்தும்.

காட்டுத்தவளை கடித்தால் சொறி உண்டாகும்.

### மருந்து.

325 மி.லிட். அகத்தியிலைச் சாற்றில் 10 கிராம் மிளகுத்தூளைச் சேர்த்துக் கலக்கி உண்ணவேண்டும். புகையூறல், உப்பு இவைகளைப் பருத்தியிலைச் சாற்றிலரைத்துப் பூசியும் வரவேண்டும். (சி.ஆ.)

### ஈப் பிரிவும் கடிக்குணமும்.

காரீ, பேரீ, பசுமை ஈ, மாட்டீ, காட்டீ, நாயீ என பல வகையுண்டு. இவ்வினங்களில் காட்டு ஈ நீங்க மற்ற வகை ஈக்கள் கடித்தால் தடிப்பும் எரிச்சலும், தினவுமுண்டாகும்.

### காட்டு ஈக்கடிக்குணமும், மருந்தும்.

இதன் கடி அதி தூக்கத்தையும், மூர்ச்சையையுமுண்டாக்கும். பலவகை ஈக்கடி நஞ்சிற்கும் அப்பிரகபற்த்தைக் குப்பைமேனிச் சாற்றில் கொடுக்கத்தீரும். (தே.ய.வெ.உ.)

### பல்லிக்கடிக்குணமும், மருந்தும்.

வீடுகளில் வாசம் செய்யும் பல்லி கடித்தால் பலவிதத் துன்பங்களை உண்டாக்கும். அவை நோவு, வியர்வை, வீக்கம் எரிச்சல், மார்பில் ஒருவிதச் சங்கடமுண்டாகும். சில நாள் சென்றபின்பு சிரங்கு கிளம்பும். இக்கடியாலுண்டான நஞ்சு நீங்க பசுவின் பாலும், பாகலிலைச் சாறும் சரி கூட்டி, இதில பெருங்கரந்தை வேர், குதிரைச்செவியின்வேர் வகைக்கு 70 கிராம் அரைத்துக் கடிவாயில் தடவியும், உடம்பு முற்றும் பூசியும் வரவேண்டும்.

### காட்டுக் கொசுக்கடிக்குணமும், மருந்தும்.

இக்கொசுக்கள் கடித்த இடங்களில் எல்லாம் நமைச்சலும், தடிப்பும், நோயுமுண்டாகும். அவுரியிலைக் கற்கமும், அவுரி வேர்க் குடிநீரும் இந்நஞ்சைப் போக்கும். இக் கடிவிடம் அசாத்திய மெனவும் சொல்லப்படுகிறது.

### குளவிக்கடிக்குணமும், மருந்தும்.

இது கொட்டினாலும், கடித்தாலும் அவ்விடத்தில் வீக்கம், தினவு, எரிச்சலுண்டாகிப் பின்பு தடித்து நோவைத் தருவதுடன் அத்தடிப்பினின்று சிலை நீரும் மாறுது வடியும். இதற்கு வேலிப் பருத்திச்சாறும் குறிஞ்சான் சாறும் ஒன்று சேர்த்துப் பூசலாம். அப்பிரகபற்த்தை எருக்கிலைச் சாற்றில் கொடுக்கத் தீரும். (சி.ஆ.) (தே.ய.வெ.உ.)

### மலை எறும்புக்கடிக் குணமும், மருந்தும்.

இது கடித்தால் அவ்விடம் நோதல், தீயால் சுட்டது போல் எரிதல், நீர்த்துளிபோல் தடித்தல், தினவெடுத்தல், உடற்றுப மடைதலாகிய குணங்களுண்டாகும்.

### மருந்து.

குப்பைமேனியுடன் சிறிது மஞ்சள் சேர்த்துப் பூசலாம்.

### வண்டுக்கடி நஞ்சுக்குணமும் மருத்துவமும்.

வண்டு நான்கு வகைப்படும்—

(1) நீர்வண்டு, (2) மரவண்டு, (3) சிதல் வண்டு, (4) சொறி வண்டு, என்பவையாகும்.

வண்டின் தொகை நூற்றிருபது. அவற்றுள் எவ்வகை வண்டு கள் கடித்தாலும் பலவிதக் குறிகுணங்கள் உண்டாகும். அவற்றுள்

பொதுவாக விக்கம், தினவு, நோவு, உடல் தடிப்பு, நுரையுடன் கூடிய கழிச்சல் முதலியவைகள் தோன்றும். அவ்வண்டுகளின் கடி கட்கெல்லாம் பொதுவாக ஏகாந்தத்தைலம் சிறந்ததாகும்.

### ஏகாந்தத் தைலம் செய்யும் முறை.

**தேவையான பொருட்கள்.**—(1) அழிஞ்சில்விதை, (2) புன்னை விதை, (3) எட்டிவிதை, (4) சேராங்கொட்டை, (5) வாளம், (6) பேய்ப்பீர்க்கம் வித்து, (7) விழுதிவிதை, (8) வேப்பம் விதை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட எட்டுப்பொருட்களையும் சரியளவாக எடுத்து அடியில் துளையிட்ட ஒரு மண் பானையிலிட்டு மேல் மூடிச் சீலை செய்து பூமியில் குழி வெட்டிக் குழித்தைலம் வாங்கிவைத்துக்கொண்டு, அத்துடன் கழுதைலத்தியை உலர்த்திக் குழித்தைலம் வாங்கி இரண்டும் சரி எடையாகக் கலந்து மேலோடு நீக்கிய கடப்பங்கொட்டை 35 கிராம், தூய்மை செய்த கந்தகம் 35 கிராம் ஆகிய இவ்விரண்டையும் பொடித்து வடிகட்டி காலை மாலை இரண்டு வேளையும் ஒரு காசெடைத் தூளும் அவ்வளவு தைலமும் சேர்த்து ஏழு நாள் உண்டால் வண்டுக்கடியும், பத்துநாள் உண்டால் அட்டை விடமும், பதினைந்துநாள் உண்டால் இலட்சக் கணக்கான நஞ்சுகளும் பறந்தோடிப்போகும். ஒரு திங்கள் உண்டால் செவ்வட்டை நஞ்சு போகும். இவ்வளவன்றி இன்னும் எவ்வகையான நஞ்சும் தீண்டினாலும் அவைகளெல்லாம் தீர்ந்துவிடும். இத்தைலத்தை இரு மண்டலம் வரைக்கும் உண்டு வந்தால் எந்நஞ்சும் ஏறாது. ஒரு மண்டலம் தின்றால் உடல் வன்மையாகும். (வி.ஆ.) மேற்கூறப்பட்ட தைலம் மட்டுமன்றி சில மருத்துவ முறைகளுமுண்டு, அவை—

(1) வண்டுக்கொல்லி மரப்பட்டைக்கற்கம் புன்னைக்காயளவு.

(2) ஆடுதீண்டாப்பாளை வேர்க்கற்கம் காசெடை.

(3) சங்கன்வேரின் மேற்றோல், முருக்கன் பழம் இவ்விரண்டின் கற்கம் காசெடைவீதம் எட்டு நாள் உட்கொள்ள வேண்டும்.

**பத்தியம்.**—உப்பு, புளி, நீக்கி பத்தியம் இருக்கவேண்டும். இவ்விதம் செய்ய வண்டு கடிநஞ்சு தீரும். (சி.ஆ.) செய்யுள் 80.

குறிப்பு.—மேற்படி கடிநஞ்சிற்கு வெட்பாலைப்பட்டைச் சாற்றில் கொடுக்கலாம். (தே.ய.வெ.உ.)

## அறுபுள்ளி வண்டுக்கடிக்குணமும் மருந்தும்.

அறுபுள்ளி வண்டு கடித்தால் சில நாள் சென்று வட்ட வட்டமான தடிப்புகள் உண்டாகும்.

மருந்து.—ஏகாந்தத்தைலம் கொடுக்கலாம்.

## அட்டைக்கடிக்குணமும் மருந்தும்.

நஞ்சுத்தன்மையுள்ள அட்டை கடித்தால், கடித்த வாயினிடத்தில் தினவும், விக்கமும் உண்டாகும். பிறகு சுரமும், மூர்ச்சையும் காணும்.

மருந்து—தேவையான பொருட்கள்.—(1) 10 கிராம் நில வேம்பு, (2) 1 கிராம் மிளகு, (3) பூண்டுத்திரி ஒன்று.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட மூன்று பொருட்களையும் கூட்டி அரைத்து அதை மூன்று பங்கு செய்து ஒரு நாளைக்கு மூன்று தடவை கொடுக்கவேண்டும்.

பத்தியம்.—உப்பில்லாப் பத்தியம் இருக்கவேண்டும். இவ்விதம் செய்ய மீன்கடி நஞ்சு நீங்கும்.

## கம்பளிப்பூச்சிக் கடிகுணமும், மருந்தும்.

கம்பளிப்பூச்சி கடித்தால் விக்கம், கொப்புளம், குத்தல், சுரம், வாந்தி, கடித்த வாயில் வலி முதலியன உண்டாகும்.

### மருந்து.

(1) குப்பைமேனிச்சாற்றில் சிறிது உப்பும் மஞ்சட் பொடியும் கலந்து பூசவேண்டும்.

(2) பிள்ளைகளின் சிறு நீரைக்கொண்டு பூசினாலும் இக்கடி நஞ்சு நீங்கும்.

## அரணை நக்கல் குறிகுணமும் மருந்தும்.

அரணை நக்கினால் உடம்பு முழுவதும் நடுக்கல் ஏற்படும், வாயில் வெண்மையான நுரை தள்ளும், நாக்குத் தடிப்பேறும். அதனால் நன்றாகப் பேசமுடியாது.

### மருந்து.

(1) சுக்கையும் வசம்பையும் தனித்தனியாகச் சுட்டு எடுத்து இடித்து வடிகட்டி இரண்டு தூள்களையும் சரி எடை எடுத்துக் கலந்து காலை மாலை இரண்டு வேளையாக வேளைக்கு வெருகடியளவு நோய் வன்மைக்குத்தக்க நாளளவு சாப்பிட வேண்டும்.

(2) சாட்டரணை வேரை இடித்துப் பிழிந்த சாற்றை உடம்பில் பூசவேண்டும்.

(3) பனங்குருத்தையாவது குருத்துப்பனையின் வேரையாவது வாயில்வைத்து மென்று சாற்றை விழுங்கவேண்டும். இவைகளினால் அரணை நக்கல் நஞ்சு நீங்கும். செய்யு . 81. (சி. ஆ.)

### அட்டைக்கடிக் குணமும் மருந்தும்.

ஆடு தீண்டாப்பாளைச் சாற்றில் அப்பிரக பற்பத்தைக் கொடுக்கச் சம்பத்து வரியட்டை, வச்சிராங்க அட்டை, சமாக்கரி அட்டை என்னும் அட்டைகள் கடித்த நஞ்சு தீரும்.

செவ்வட்டை.—இது கடித்தால் கடிவாய் தடித்து சிவந்து திமிர் கொள்ளும்.

காட்டு அட்டை.—இது கடித்தால் உண்டாகக்கூடிய நஞ்சிற்கு புனல முருங்கை, செவ்வெருக்கன்வேர் இவைகளை வேப்பம் பட்டைத் தைலத்தில் அரைத்துக் கொடுக்க காட்டு அட்டை கடித்த நஞ்சு தீரும்.

மரவட்டை.—இது பல வகைப்படும் அவை.

இவ்வட்டைகள் கடித்தால் உடல் தடிக்கும், வியர்வை உண்டாகும், விக்கம், நோவு கறுப்பகத்திப்பூ நிறம்போல் பொடிச் சிரங்குகள் உண்டாதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

### மருந்து.

(1) சுக்கு, திப்பலி, மிளகு இவைகளின் சூரணத்தை கொடுக்கலாம். (2) காட்டுவாகை வேர், மேல்பட்டை, இலை, பூ, காய் இவைகளில் ஒன்றை வெந்நீரில் அரைத்துப் பிழிந்து வடிகட்டி நசியமிட்டு உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச மேற்சொன்ன நஞ்சுகள் தீரும்.

எல்லா மரவட்டை நஞ்சுகளும் தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றைக் கொடுக்கத் தீரும்.

### மீன்கடிக்குணமும் மருந்தும்.

நச்சு மீன்கள் கடித்தால் கடியுண்ட இடத்தில் அழற்சி, வீக்கம், வலி காணும்.

## தேள்தொகை 12.

தேள் 12 வகைப்படும். அவற்றில் (1) வெண் தேள், (2) செந்தேள், (3) கருந்தேள், (4) சித்தரத்தேள், (5) கொள்ளித்தேள், (6) சந்நித்தேள், (7) சிறுதேள், (8) பெருந்தேள், (9) சினைத்தேள், (10) நட்டுவக்காலி போன்ற இனதம்தவகள் சாதாரணமாகக் காணப்படுகின்றன.

சித்தரத்தேள்.—மிகச் சிறியதாயிருக்கும். தேள்களில் நட்டுவக்காலி, சித்தரத்தேள், சினைத்தேள் ஆகிய இனத்தேள்கள் அதிக நஞ்சுத்தன்மையுடையனவாகும். சில தேள்களுக்கு இரண்டு வால்கள் இருக்கும். அவை ஒவ்வொரு வாலிலும் ஒவ்வொரு கொடுக்கு இருக்கும்.

## தேள்கடியின் குறிகுணம்.

தேள்கடித்தால் கடித்த இடத்தில் வீக்கம், வியர்வை, சிவத்தல், எரிச்சல், கடுத்தல், விறுவிறுத்தல், வலித்தல் முதலியவைகள் உண்டாகும். (சிலருக்குக் குருதியும் வெளிப்பட்டுக்) கடிவாயிலிருந்து மேலேறுவதுபோல் ஒரு பெருந்துன்பத்தையும் உண்டு பண்ணும். இதனால் உடலில் வியர்வை, மயக்கம், குரக்கு வலி, வாந்தி, மூர்ச்சை, உடல் சில்லிடுதல், மாரடைத்தல் என்னும் பல குறிகுணங்களுண்டாகும்.

தேள் கடிக்கு மருந்து.—(1) தேள் கடித்தால் கோழியெச்சத்தை வெற்றிலையில் கொடுக்கத் தேள் கடித்த நஞ்சு நீங்கும்.

(2) கருந்தேள் கடித்த நஞ்சு தீர கொல்லன் கோவைக் கிழங்கை அரைத்துக் கொடுக்கவேண்டும்.

(3) கொடியதான 12 வகைத் தேள்கடி நஞ்சு நீங்க நல்ல வெள்ளெருக்கம்பாலில் சீலையை நனைத்து அதில் மயிலிறகைச்சுற்றி கோழியெச்சத்திற்றடவி வைத்து உலர்த்தி, பன்னிரண்டு வகைத் தேள்கள் கொட்டிய நேரத்தில் தீக்கொளுத்தி கொட்டுவாயில் மெல்லப் புகைக்கவிட கடுப்பும் நீங்கிவிடும். (சி.ஆ.) செய்யுள் 82.

## வேறு.

தேவையான பொருட்கள்.—(1) எருக்கன் வேர், (2) சிறுகச்சை, (3) கொம்மட்டி வேர், (4) பச்சைக்கற்பூரம், (5) எட்டி வித்து.

செய்முறை.—மேற்சொன்ன ஐந்து பொருட்களையும் எருக்கன் பால் விட்டு அரைத்து, உருண்டைசெய்து வைத்துக்கொண்டு இதை முலைப்பாலிலாவது எருக்கன் பாலிலாவது அரைத்துக் கடிவாயில் தடவி சூடுபடத் தேயக்க நச்சுக்கடுப்பு, நஞ்சேறல் ஒழியும்.

(2) எள்ளெண்ணெயைக் காய்ச்சி அதில் மேனியிலை, வெற்றிலை, உப்பு ஆகிய இம்மூன்றையும் கசக்கி அதிலிட்டுக் கொட்டுவாயில் ஆவிபிடிக்க நஞ்சிறங்கும்.

(3) எட்டிப்பட்டையில் ஒரு சிறு துண்டு எடுத்து ஒரு கல்லுப்பு சேர்த்துக் கொடுத்து மென்று இரசத்தை உட்கொள்ளும் படிசெய்ய நஞ்சு இறங்கி நலமுண்டாகும்.

(4) தேத்தான்கொட்டையை பலமுறை எருக்கன்பாலில் ஊற வைத்தும், உலர்த்தியும் பக்குவப்படுதினதில் ஒரு வித்தை யெடுத்து கடிவாயில் வைக்க நஞ்சை அது இழுத்துக்கொள்ளு மட்டும் கடிவாயில் தங்கி இழுத்துக்கொண்டபிறகு கீழே விழுந்து விடும்.

(5) ஆகாயத்தூளிற் புனல் விட்டரைத்துக் கொதிக்கவைத்துக் கடிவாயில் பூசினவுடன் எரிச்சல் முதலியன நீங்கி குளிர்ச்சி யுண்டாகும்.

குறிப்பு.—எந்த இனத்தேள் நஞ்சும் எருக்கிலைச் சாற்றில் அப்பிரகபற்பத்தைக் கொடுக்க நீங்கும்.

நட்டுவக்காலித் (இதுவே நண்டுவாய்க்காலி எனப்படுவது) தொகை.

இது மிகப் பெரியதாகவும் நண்டைப்போன்ற கால்களோடும் இருக்கும். இது கருநட்டுவக்காலி, (2) மாரகார்த்தி நட்டுவக்காலி, (3) மோகனார்த்தி நட்டுவக்காலி, (4) மிருகார்த்தி நட்டுவக்காலி, (5) பெருங்காற் சம்பிதை நட்டுவக்காலி என ஐந்து வகைப் படும்.

இது கொட்டினால் காந்தலும், வீக்கமும், எரிச்சலுடன் கடு கடுப்பும், குமுறலும், குடைச்சலும், நெறிகட்டுதலும், வியர்வையும், வாயில் நுரைதள்ளுதலும் காணும்.

நட்டுவக்காலி நஞ்சிற்கு மருந்து.—நட்டுவக்காலி கொட்டிக் கடித்த நஞ்சு தணிய ஒரு வழுதுணங்காயை எடுத்து வெதுப்பிக் கடிவாயில் கட்டிவிட அந்நஞ்சு தணியும்.

கத்திரிக்காய்

(2) எட்டிக்காயை கழற்சிக்காயளவு எடுத்துப் பூச நட்டுவக்காலி கடியினாலுண்டான கடுப்புடன் கூடிய எரிவும் நீங்கும்.

(3) பழப்புளியைக் காடியிற் கரைத்துக் காடியில் வைத்து அடுப்பில் கொதிக்க வைத்து அவ்வாவியைக் கொட்டுவாயிற் பிடிக்க நஞ்சு நீங்கும்.

(4) ஆகாசத் தூளை எருமைச் சாணிப்பால் விட்டு அரைத்துக் கொதிக்கவைத்து. அதைக் காசளவு எடுத்து கடிவாயிற் பூச கடுப்போடும் கூடிய எரிவும் நீங்கும். (சி.ஆ.) செய்யுள் 83.

## வேறு

(1) அவுரிவேர், காஞ்சிவேர் ஆகிய இரண்டையும் சமன் பொடித்து வெருகடியளவு, வெந்நீரிற் கொடுக்கத் தீரும்.

(2) வேலிப்பருத்தி, ஆடுதீண்டாப்பாளை இவையிரண்டையும் சமன் கூட்டிச் பொடித்து ஒரு வெருகடி, வெந்நீரிற் கொடுக்கத் தீரும்.

(3) கொல்லன்கோவை, வேலிப்பருத்தி, ஆடுதீண்டாப்பாளை ஆகிய இவைகளைப் பொடித்து வெருகடி வெந்நீரிற் கொள்ளத் தீரும்.

(4) கோழியின் பிசுபிசுப்பான மலத்தை எடுத்து வெற்றிலையில் வைத்து ஒரு கிராம்பு சேர்த்து மடித்து மென்று விழுங்கக்கொடுக்க நஞ்சிறங்கும்.

(5) எட்டி வேர்ப்பட்டையை கழற்சிக்காய் அளவு அரைத்து, 160 மி.லிட். வெந்நீரில் கரைத்து மூன்று வேளை கொடுத்தும் கொட்டுவாயிற் கத்தரிக்காயைச் சுட்டுக் கட்டியும் வர நஞ்சிறங்கும்.

(6) கொல்லன்கோவைக் கிழங்கை வெந்நீரிலரைத்து உள்ளுக்குக்கொடுக்க நஞ்சு இறங்கும்.

குறிப்பு.—நட்டுவக்காலி அதன் பிரிவுகளான மாரகார்த்தி, மோகனார்த்தி, மிருகார்த்தி, பெருங்காற்சம்மிதை நஞ்சிற்கும் அப்பிரகபற்பத்தை வெள்ளறுகுச் சாற்றில் கொடுக்கலாம். (தே.ய.வெ.உ.)

## காணுக்கடி நஞ்சும் குறிகுணங்களும், மருந்தும்.

கடித்த நஞ்சுயிர்கள் கண்ணுக்குத் தெரியாமல் செல்வதுண்டு. அதனால் இன்னது கடித்ததென்று தெரிகிறதில்லை. ஆயினும் அது காணுக்கடி என்று சொல்லப்படுகிறது.

குறிகுணங்கள்.—உடம்பில் அந்நஞ்சு ஊறினால் அவன் இரவிற் சென்றால் அக்கடியால் உண்டான தடிப்புகள் மின்னலைப் போல் காணப்படும். உடம்பின் தோல் மீது பட்டை பட்டையாக ஒரு அடையாளம் காணப்படும். கடித்தவுடன் தடிப்பு உண்டாகும். மறப்புறணியிலுள்ள பொருக்குகளைப் போல் உடம்பு முழுமைக்கும் சிவந்த நிறத்தோடு வடுவுண்டாகி அவற்றில் தினவெடுக்கும்.

மருந்து.—ஒரு 1.3 லிட்டர் காடியில் 1.4 கிலோ கர்ப்பூர வள்ளியிலையை அரைத்துக் கலக்கி அதில் பாதியை சிறுகச் சிறுக உண்டு மற்றப் பாதியை உடம்பு முழுவதும் பூசவேண்டும். இவ்வாறு ஐந்துநாள் இரண்டு வேளையும் செய்யவேண்டும்.

**பத்தியம்.**—கடும்பத்தியமிருக்கவேண்டும். காற்றில் வெளி வாராதபடி வீட்டினறைக்குள்ளேயே இருக்கவேண்டும். (வி.ஆ.) (செய்யுள் 84.)

### சீவ வெறி நஞ்சு.

செயற்கையாகவும், இயற்கையாகவும் வெறிபிடித்த நாய், நரி, மனிதர், பசு, எருமை, பன்றி இவைகளின் நச்சுக்குணம் வருமாறு:—

**நாய்.**—மாநாய், கருநாய், பேய்நாய், வெறிநாய்களைக் குறிக்கும். இது (1) செயற்கை வெறி நாய்க்கடிநஞ்சு, (2) இயற்கை வெறி நாய்க்கடி நஞ்சு என இரண்டு வகையில் அடங்கும்.

(2) **நரி**—(1) செயற்கை வெறிநரிக்கடி நஞ்சு. (2) இயற்கை வெறி நரிக்கடி நஞ்சு என இருவகைப்படும்.

(3) **மனிதரில்.**—(1) செயற்கை வெறி மனிதர்கடி நஞ்சு, (2) இயற்கை வெறி மனிதர்கடி நஞ்சு என இருவகைப்படும்.

(4) **பசுவில்.**—(1) செயற்கை வெறிப்பசுக்கடி நஞ்சு.

(5) **எருமையில்.**—செயற்கை வெறி எருமைக்கடி நஞ்சு, இயற்கை வெறி எருமைகடி நஞ்சு என இருவகைப்படும்.

(6) **பன்றியில்.**—(1) செயற்கை வெறிப் பன்றிக்கடி நஞ்சு, (2) இயற்கை வெறிப் பன்றிக்கடி நஞ்சு என இருவகைப்படும். (செ. 85.)

**செயற்கை வெறி.**—உயர்திணையாகிய மனிதர்களுக்கு மருந்தினால் வரும் வெறியும், அஃறிணையாகிய எருமை, பன்றி இவைகள் சுடுகாட்டிலுள்ள தலையோட்டில் தங்கிய நீரைக் குடிப்பதனால் உண்டாகும் வெறியுமாகும். ஆயினும் சுடுகாட்டிலுள்ள எலும்பைத் தின்னும் பசுவின் பாலும் குடித்தற்காகாது எனக் கூறியிருப்பதால் அதைத் தின்னும் பசுவையும் கண்டு கொள்ளல் வேண்டும். அதனை,

"விஞ்சு வாணை த்தாரநோய் மிகுத்துச் சுழலல் வெண்புள்ளி
துஞ்சி யலைந்து மலமருந்தல் சுடுகா டேகி யெலும்புணவிவ்
வஞ்சு வகையி னவின்பா லாகா தனுகிற் றிரிதோடம்
நெஞ்சி லடையுங் கயநோயா னிறைந்த வயதுங் குறைந்திடுமே,

என்னும் அ. ப. சி யாலுணர்க.

**இயற்கை வெறி.**—மேற்சொல்லப்பட்ட அஃறிணை உயிர்களுக்குப் பிறவியிலேயே உண்டான வெறியையும் உயர்திணை உயிராகிய மாந்தர்க்கு ஊழினால் உண்டான வெறியையும் குறிக்கும். இவ்விரு வகை வெறியில் செயற்கை வெறி நஞ்சு தீர்வதும் இயற்கை வெறி நஞ்சு தீராததும் (அசாத்தியமும்) ஆகும்.

(1) செயற்கை வெறி நாய்க்கடி நஞ்சின் குறிகுணம்.

வாயிலிருந்து தண்ணீர் மோர் போல வழியும். மாறுபட்ட குரலில் கூச்சலிடுதல், வேர்வைவிட்டுத் தெளிவாக வெளிப்படல். மயக்கம் தெளிவுடன் உண்டாகும்.

மருந்து.—பலகறைப்பற்பத்தை அளவுப்படி கல்லாவின் சாற்றில் கொடுத்துக் கொள்ளுக்கஞ்சியும் கொடுக்க வேண்டும்.

(2) இயற்கை வெறி நாய்க்கடி நஞ்சின் குறிகுணம்

வாயில் நுரை தள்ளும், விடாமற்படிக்கு வேர்வை குழம்பிக் காணும் நாய் குரைத்தது போல் குரைக்கும் ஆகிய குறிகுணங்கள் காணும்.

மருந்து.—பலகறைப் பற்பத்தை நிலப்பனைச்சாற்றில் கொடுத்து, காராமணிப் பருப்புக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

3. செயற்கை வெறி நரிக்கடி நஞ்சின் குறிகுணம்.

இருமல், இருமும்போது வாயிலும், மூக்கிலும் வேர்வை நீரைப் போல் ஒருவித தண்ணீர் உண்டாதல், விட்டுவிட்டு நடுக்கலுண்டாகும். பேசும்போது மூச்சுத் தவறி ஒருவிதமான ஊளையிடுதல் போன்றவைகள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை கீழாநெல்லிச் சாற்றில் கொடுத்து சிறு பயற்றின் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

4. இயற்கை வெறி நரிக்கடி நஞ்சின் குணம்.

வாய் வரட்சியாயுலர்ந்து நீரில்லாமற்போகும். வெப்பமாக உடம்பெல்லாம் வேர்வை இல்லாமற்போகும். நரிக் கூச்சலைப்போற் கூச்சல் இடுதல் போன்ற குறிகுணங்கள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை மூங்கிலின் சாற்றில் கொடுத்துத் துவரம் பருப்புக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

செயற்கைவெறிப் பசுக்கடி நஞ்சின் குறிகுணம்.

ஒருவேளை பசுவைப்போல் மேய்தல், நீர் அருந்தல், ஒருவேளை இனத்திற் சாருதல், கூச்சலிடுகின்ற மிகுமாறுபாடில்லாதிருத்தல், செவ்வையாகப் பார்த்தல் ஆகிய குறிகுணங்கள் காணப்படும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை வெற்றிலைச் சாற்றில்கொடுத்து சாமை யரிசிக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

7. செயற்கை வெறி எருமைக்கடி நஞ்சின் குறிகுணம்.

வெளியிற் புறப்படாமை, பதுங்கித் திரிதல், பல்லைக் கடித்தல், மாறுபாடாகக் கூவல், புசிப்பும் உறக்கமும் உண்டாகியுமில்லா மலுமிருத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை வன்னியிலைச் சாற்றில்கொடுத்து புல்லரிசிக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

8. இயற்கை வெறி எருமைக்கடி நஞ்சின் குறிகுணம்.

இருந்த இடத்திலேயே அசையாமல் இருத்தல், வாயில் நுரையாக உமிழ் நீர் வெளிப்படல் எரி, குளங்களில் போய் விழுதற்கு விரைதல். வாயை "ஆ" என்று திறத்தல், ஒலி வேற்றுமை இல்லாமற் கூவுதல், பசி, நீர்வேட்கை, உறக்கம் இல்லாமலிருத்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை கோரைச் சாற்றில்கொடுத்து தினை அரிசிக் கஞ்சியும் கொடுக்க வேண்டும்.

9. செயற்கை வெறிப் பன்றிக் கடியின் நஞ்சுக் குறிகுணம்.

கொஞ்ச நேரம் விட்டு விட்டுச் சீறல். பார்வை தெரியாமல் இருண்டு காணல், பூமியில் புரளல், வாய்நீர் வற்றிப் போதல். பசி, நீர் வேட்கை, தூக்கம் வருவதும் வாராமலுமாக இருக்கும் ஆகிய குறிகுணங்கள் காணும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை பாகலிலைச் சாற்றில்கொடுத்து மூங்கி லரிசிக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

10. இயற்கை வெறிப்பன்றிக்கடி நஞ்சின் குறிகுணம்.

வாயில் கள்ளைப்போல் ஒருவிதமான நாற்றம் நாறுதல், மண்ணைத் தின்னல், ஓரிடத்திலும் நிற்காதபடி திரிதல், கூவுகிற ஒலியானது சற்றதிகமாகவேயிருத்தல் என்பது போன்ற குறி குணங்கள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை செருப்படைச் சாற்றிற் கொடுத்து கோதுமையரிசிக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

11. செயற்கை வெறி மனிதக்கடி நஞ்சின் குறிகுணம்.

கொஞ்சநேரம் மயக்கமாகயிருத்தல், வாயில் நீர் பெருகல், விடாமற் கண்டபடி பேசிக்கொண்டிருத்தல், பசி, உறக்கம், நீர் வேட்கை இவை நன்றாய்த் தோன்றுவதாகத் தெரியாமல் கொஞ்சம் தோன்றுவதாகவே தெரிதல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை நரிப்பயற்றங்கொடிச் சாற்றில் கொடுத்து கோதுமை அரிசிக் கஞ்சியும் கொடுக்கவேண்டும்.

12. இயற்கை வெறி மனிதர்கடி நஞ்சின் குறிகுணம்.

மார்படைத்துக்கொள்ளல். வாயினின்றும் நீர் நுரைநுரையாய்ப் புறப்படுதல், ஒரு விகாரக் கூச்சலிடல், பசியின்மை, தாகமின்மை, உறக்கமின்மை என்பவைகளாம்.

மருந்து.

பலகறைப் பற்பத்தை செருப்படைச் சாற்றில் கொடுத்து உளுந்துக்கஞ்சியும் காய்ச்சிக் கொடுக்கவேண்டும்.

### நஞ்சினரை வைக்கும் முறை.

வாழைக்காய், மாங்காய் போன்றவைகளை பழுக்கச் செய்வதற்காக காற்றுப் புகாத அறையில் அல்லது பானையில் வைத்து உப்பலிடுவதைப் போன்று நஞ்சுடையவரையும் தனி அறையில் வைத்துக் காற்றில் படாதபடி பாதுகாக்கவேண்டும். அவ்விதம் பாதுகாக்கப்படாவிடில் உட்சென்ற மருந்து செம்மைப்படாமல் (திருவதும் தீராமல்) கெட்டு மருந்து துணைமருந்துகள் நற்குணங்களையும் கெடுத்து வேண்டத்தகாத குணங்களை உண்டாக்கிவிடும்.

### (வேறு)

### பேய் நரி, பேய் நாய்க்கடிக்கு.

மணித்தக்காளியிலைச் சாறு.—மணித்தக்காளியிலைச் சாறு வேளைக்கு 325 மி.லிட். வீதம் இரண்டு வேளையுமாக மூன்று நாள் கொடுக்க வேண்டும்.

பத்தியம்.—மருந்து உட்கொள்ளும் மூன்று நாளும் உப்பில்லாப் பத்தியம் கொள்ளவேண்டும். பின் மறுபத்தியமாக மூன்று நாள் உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ளவேண்டும். ஏழாவது நாள் ஓமம் தேய்த்து வெந்நீரில் தலைக்கு வார்த்துக்கொண்டு, அக்கடி வாயிலும் மற்றப் பாகங்களிலும் மேற்படி இலையையே அரைத்துப் போடவேண்டும். அப்படிச் செய்தால் பேய் நரிக்கடி, பேய்நாய்க் கடி நஞ்சு தீரும். (புலி 500) செய்யுள் 87.

குறிப்பு.—நரி நஞ்சிற்கு அப்பிரக பற்பத்தை ஓரிலைத் தாமரைச் சாற்றிலும், நாய் நஞ்சிற்கு வன்னியிலைச் சாற்றிலும் கொடுக்கலாம். (தே.ய.வெ.உ.)

### குரங்குக்கடி நஞ்சுக் குறிகுணம்.

கைகால்கள் நீட்டினபடியேயிருந்து துடித்தல். ஆகாயத்தைக் கண் சிமிட்டாமல் பார்த்தல், குரங்கைப்போல் சேட்டை செய்தல், ஆடல், பாடல், தாவல், குதித்தல், கூச்சலிடல், சுரமடித்தல் ஆகிய குறிகுணங்கள் உண்டாகும்.

### ஒற்றடக்கட்டு மருந்து.

குரங்கு கடித்தால் அதற்கு ஒற்றடம் இடுவதற்கு :—

(1) தேவையான பொருட்கள்.—(1) இலவம் வேர், (2) நன்கு முதிர்ந்த தோல் சீவின சுக்கு, (3) சிறு குறிஞ்சான்பூ, (4) நிலைப் பனையிலை, (5) கொள்ளுக்காய்வேளையிலை.

**செய்முறை.**—மேற்சொல்லப்பட்ட ஐந்து பொருட்களேயும் சரி எடை எடுத்துத் துவைத்து ஓட்டிலிட்டு வறுத்து ஒரு துணியில் முடிந்து கடித்தவிடத்தில் ஒற்றடம் போட்டு அதைச் சூடாற்றி அக்கடிவாயில் வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் செய்வதனுல் குரங்கு எவ்வளவு வன்மையாகக் கடித்திருந்தாலும் அதனுடைய நஞ்சு முறியும். (செய்யுள் 88)

(2) இஞ்சியை அரைத்து நீரில் கலக்கிக் கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்தால் குரங்குக் கடி நஞ்சு நீங்கும்.

### பூனைக்கடி நஞ்சுக் குறிகுணம்.

பூனை கடிப்பது அரிது. சினத்தைக் காட்டச் சிறுவதுதான் இயற்கை. இருந்தபோதிலும் எதிர்பாராத விதமாகக் கடித்து விடுவதுமுண்டு, அப்படிக் கடித்தால் நெஞ்சில் ஒருவகையான சத்தம், இரைப்பு, மூர்ச்சை, கோழைக்கட்டல், சுரம் அதிகரித்தல், பூனை போற் கத்தல், சீறல் முதலியவைகள் உண்டாகும். இந்த நஞ்சை உடனடியாக நீக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் சிலகாலம் கழித்து இருமல், இரைப்பு போன்ற ஈளைநோய்கள் உண்டாகும்.

இதுவன்றி பாலைப் பூனைகள் குடித்து மிச்சப்பட்ட பாலைக் குழந்தைகளுக்குக் கொடுத்தாலும் ஈளை நோயுண்டாகும்.

### பூனைக்கடித் தீரக் குப்பை மேனிக்கற்கம்.

(1) குப்பைமேனி வேர்ப் பட்டையைப் பசுவின் பால் விட்டு அரைத்துக் காலை மாலை இரண்டு வேளையாக மூன்று நாள் வரைக்கும் ஒரு கழற்சிக் காயளவு கொடுக்கவேண்டும்.

**பத்தியம்.**—மருந்து கொடுக்கும் மூன்று நாளும் உப்பில்லாப் பத்தியமிருந்து மறுபடியும் மறுபத்தியம் மூன்று நாள் வைத்து வறுத்த உப்பு சேர்க்கவும். ஏழாவது நாள் ஓமந்தேய்ந்து வெந்நீர் முழுக் காட்டவும்.

(2) அவுரிவேர்ப்பட்டையை வெந்நீரிலரைத்துக் கடிவாயிலாவது உடம்பு முழுவதுமாகவாவது 12 நாள் பூசவேண்டும். இதனால் பூனைக்கடி நஞ்சு தீரும். (புலி 500) செய்யுள் 89.

**புனுகுப் பூனை, குரங்கு, பூனை, பன்றி, நரி, முதலை, புலி, நாய்க் கடிகளின் நஞ்சுகளுக்கு அவுரிக்கற்கம்.**

அவுரி வேர்ப் பட்டையைப் பசுவின் பால்விட்டு அரைத்துக் கழற்சிக் காயளவு வீதம் காலையிலும் மாலையிலுமாக மூன்று நாள் கொடுக்கவேண்டும். பத்தியம் மருந்து கொள்ளும் மூன்று நாளும் உப்பில்லாப் பத்தியமிருக்க வேண்டும். இப்படிச்செய்வதனால் மேற்சொல்லப்பட்ட நஞ்சுகள் நீங்கும். (க.ஆ.) செய்யுள் 90.

(வேறு)

வேம்புப் பூச்சு.

வேப்பங்கொழுந்தையும், சீந்தில் வேரையும் சரிஎடை எடுத்து சிறுநீர்விட்டு அரைத்து வில்லை தட்டி உலர்த்திப்பொடி செய்து வைத்துக்கொண்டு, கோழிமுட்டையை உடைத்து வெள்ளம் பிலியைமட்டும் ஒரு பீங்கானில் ஊற்றிப் புளிக்கவைத்து அதில் அப்பொடியைப்போட்டுப் பிசைந்து கடிவாயிலும் உடம்பிலும் பூசி ஊறவைத்து வெந்நீரால் தலை முழுக்காட்டினால் மேற்கூறிய நஞ்சு தீரும். உடம்பு நன்றாகும்.

(செய்யுள் 92.)

(வேறு)

மத்தநெய், வெற்றிலைச்சாறு.

(1) ஊமத்தையிலைச்சாறு ஆறுதுளி அல்லது எட்டுத்துளி வேளை ஒன்றுக்கு ஒரு உச்சிக்கரண்டி நல்லெண்ணெயில் விட்டுக் கொடுக்கவேண்டும். இப்படி நோய் வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்தால் மேற்படி நஞ்சுகள் தீரும்.

(2) வேளைக்கு 325 மி.லிட். வெற்றிலைச்சாறாக மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க நாய், நரிக் கடிகளின் நஞ்சுவேகம் தணியும். (க.ஆ.) செய்யுள் 93.

கடிவாய்ப்புண்ணுக்குப் பச்சிலைக் கட்டு.

கடிவாய் நோவைக் கொடுக்குமானால் கீழ்க்கண்ட மருந்து முறையைக் கையாளவேண்டும்.

**தேவையான பொருட்கள்.**—(1) பருத்தியிலை, (2) தும்பையிலை, (3) ஆவாரையிலை, (4) கருஞ்செம்பிலை, (5) புளியிலை.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட ஐந்து இலைகளையும் வகைக்கு 1.3 லிட்டர் எடுத்து இடித்து வெதுப்பிப் புண்ணின் மேல் வைத்துக் கட்டினால் சீநீர், புண்ணீர் முதலியவை வடிந்து கொண்டிருக்கிற புண்ணின் வாய் உலரும். புண்களெல்லாம் ஆறும். ஆனால் இதன் மருமத்தை வெளியிற் சொல்லவேண்டாம்.

(க.ஆ.) செய்யுள் 94.

குதிரைக்கடி நஞ்சு குறிகுணம்.

குதிரை கடித்தால் உடம்பில் வலி உண்டாகி மூர்ச்சை காணும். கைகளும் கால்களும் அடித்து வைத்தது போன்று அசைவறக்கிடக்கும். குடைச்சல், குதிரை பல் இளித்ததுபோல் பல்லை இளித்தல், மீண்டும் மூடல், கழுத்திலும் சிரசிலும் மிகு வியர்வை, நெஞ்சிலும் முதுகிலும் தோளிலும் குருதியைப் பற்றிய துன்பம், குதிரை போற் கனைத்தல் என்னும் குறி குணங்கள் உண்டாகும்.

இதற்குக் கீழ்க்கண்ட விடக்குழம்பு மையைக் கையாள்க. நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுத்தை, முதலை. வேங்கைக் கடிகளுக்கு அவுரி வேர்ப்பட்டைக் கற்கம்.

அவுரி வேர்ப்பட்டையை பசுவின் பாலால் அரைத்துக் காலை மாலை இரண்டு வேளையும், வேளைக்குக் கழற்சிக்காயளவு பசுவின் பாலில் கரைத்து மூன்று நாள் கொடுக்க மேற்படி நஞ்சுகள் நீங்கும். (சி.ஆ.) செய்யுள் 95.

விடக்குழம்பு.

தேவையான பொருட்கள்.—(1) கருநாபி, (2) வெண்காரம், (3) இந்துப்பு, (4) நிர்விடம், (5) கருஞ்சீரகம், (6) கந்தகம், (7) இரசம், (8) மனோசிலை, (9) நேர்வாளம், (10) நவச்சாரம்.

செய்முறை.—கருநாபி, வெண்காரம், இந்துப்பு, நிர்விடம், கருஞ்சீரகம், கந்தகம், இரசம், மனோசிலை, நேர்வாளம் ஆகிய ஏழு பொருட்களையும் தூய்மை செய்து வகைக்கு ஒரு பங்கு எடுத்து இவைகளுடன் நவச்சாரம் அரைப்பங்கு சேர்த்து உத்தாமணிச் சாற்றாலும், தேங்காய்ப் பாலாலும் தனித்தனியே 9 மணி நேரம் அரைத்து மை போலானபின் சிரட்டைக்கரியும், கருப்புக்கட்டியும் கூட்டி அரைத்து மெழுகுப் பதத்தில் எடுத்துக்கொள்க. இதில் குன்றியளவு (130 மி.கிராம்) கொடுக்க எல்லா நஞ்சுகளும் நீங்கும். (செய்யுள் 96.)

### விடமை.

தேவையான பொருட்கள்.—(1) ஊமத்தை, (2) அழிஞ்சில், (3) குன்றி, (4) வாளம், (5) தில்லிவிதை, (6) கவுரி, (7) அரிதாரம, (8) மனேசிலே, (9) பொன், (10) மெழுகு, (11) நிர்விடம், (12) இலிங்கம், (13) பச்சை நாபி, (14) துருசு, (15) கந்தி, (16) சுக்கு, (17) மிளகு, (18) திப்பிலி, (19) சாரம், (20) இரசம், (21) சீருக்காரம்.

செய்முறை.—மேற்சொல்லப்பட்ட பொருட்களை வகைக்கு 5 கிராம் வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு விடாது ஒன்ருக அரைத்து பீங்காலில் வைத்துக்கொள்ள வேண்டும். நஞ்சு தீண்டியவர்களுக்கு பண எடை (488 மி.கி.) வீதம் எடுத்து பசுமையான வெற்றிலையில் வைத்து உண்ணக் கொடுக்கவேண்டும். விடம் தானே நீங்கிவிடும்.

இந்த மை உட்கொள்வதனல் நீங்கும் நஞ்சானது, விரியன் கடி நஞ்சு, அரணை நக்கல், துட்டநாகம் தீண்டிய நஞ்சு, மேலும் திமிர் குட்டம், கைகால் முடக்கல் முதலியன நீங்கும்.

பத்தியம்.—என்ணெய், உப்பு, புளி, கடுகு முதலியன ஒரு வாரத்திற்கு நீக்கி மறுபத்தியமாக மாத காலம் வரை பசுவின பாலும், பச்சரிசி பச்சைப் பயற்றம்பருப்பும் சேர்த்து உண்ண வேண்டும். (செய்யுள் 97) (க.ஆ.)

### இடுமருந்தின் பயன்.

இது ஈடு, கரம் எனவும் வழங்கும்.

பெண்கள் ஆடவரையும், ஆடவர் பெண்களையும், தொழிலாளர் தன் முதல்வரையும், தத்தம் எதிரியை தன் வசப்படுத்தும் பொருட்டு உணவாதிப் பொருட்களிலாவது, தாமபூலாதிகளிலாவது, பற்பல உயிரினங்களின் உறுப்புகளையும், நஞ்சுள்ள பச்சிலை, வேர் முதலியவற்றையும், தம்முறுப்பிற் பிறக்கும் சிற்சிலக் கழிவிடப் பொருட்களையும் சேர்த்துக் கொடுப்பதற்கு இடுமருந்தெனப்படும்.

### இடுமருந்தின் நீக்குணம்.

முற்கூறிய பொருட்களை அன்னபானதிகளில் ஒருவர் கலந்து கொடுக்க அவை உணராமலே உட்கொண்டவர்க்கு முகம் வெளிறல், இருமல், இரைப்பு, இளைப்பு நோய்களில் காண்

கின்ற முற்குறிகள் யாவும் காணும். இக்குறிகுணங்கள் தோன்றிய காலத்தே மருத்துவஞ் செய்துகொள்ள முயன்றால் தீரும். இன்றேல் தீராவாம்.

### நஞ்சுகலந்த உணவின் இலக்கணம்.

நஞ்சுகலந்த உணவை நோக்கின் அதன் மணமும் தோற்றமும் வேற்றுமைப்பட்டிருக்கும். அஃதாவது பிளப்புற்றதாகவும், ஒன்றோடொன்று கூடிக்கரைந்து உருண்டை உருண்டையாகவும் தள தளப்பாகவும், பழைய சோற்றின் மணம் கொண்டதாகவும் இருக்கும். மேலும் இதையுற்று நோக்குவான் சோர்தலையும் மூர்ச்சையையும் வாய் நீர் சுரத்தலையுமடைவான்.

### நஞ்சுகலந்த கறி, பண்டத்தின் இலக்கணம்.

இது வறண்டது போலவும், கறுத்த குடிநீர் நிறமாகவும், நுரையும், நீர்க்குமிழியும், அகண்ட கீற்றும் படிந்ததாகவும், இயற்கைத் தோற்றமில்லாதனவாயுமிருக்கும்.

### நஞ்சுகலந்த உணவின் ஆய்வு.

இதை நெருப்பிலிட்டால் சுடர் எழும்பும். மயில் கண்டத்தின் நிறத்தையொத்த புகை எழும். வெறுப்புற்ற மணம் வீசும். ஈ மொய்த்தால் சாகும். காக்கை கிட்டினல் தாழொலியோடு கத்தும். வலியன் கனைந்து விழும். புறா, குயில் உயிர் நீங்கும். பூனை பயந்தோடும். குரங்கு மலங்கழியும், மயில் பார்வையிழந்து மயங்கும். கிளி கூச்சலிடும்.

### நஞ்சு உணவுண்டவருக்குண்டாகும் நோயைப் போக்க.

வெண்பூசனிக் கறி—நெய்—லேகியம்—சூரணம்—விளாம்பழத் தோட்டுக் கற்கம் முதலிய தாவரப்பொருள் மருந்துகளும், அப்பிரக பற்ப—செந்தூரம், தங்கபற்ப—செந்தூரங்களாகும். பேராத்தையை விதிப்படி குடிநீர் செய்து இரத்த போள நஞ்சு வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்தால் மேற்படி நஞ்சு வேகம் தணியும்.

இடுமருந்தால் வருந்துவோர்க்கு கருஞ்செம்பையிலைச் சாற்றை அரிசி மாவில் கலந்து நஞ்சு வன்மைக்குத் தக்க நாளளவு கொடுத்தாலும் பெரும் பூசணிக்காயில் கடலை சேர்த்துக் கூட்டு செய்து கடுகு தாளிப்பு நீக்கித் தக்க நாளளவு கொடுத்தாலும், நீலியின்

வேரையரைத்துக்கழற்சியள வுண்டாலும், செங்காஞ்சியிலைச் சாற்றை நெல்லவலிற் கலந்து தின்றாலும், பச்சைக் கடலைப் பருப்பைத் தின்றாலும் மேற்படி நஞ்சு வேகம் நீங்கும். (வி.பி.வி.)

## பொது முறிவு.

பெருமருந்து நஞ்சுக்கு.

பாரிசச் சரக்கி னுல்செய் பன்மருந் தவைக ளாற்செய்
வாரிசப் பிணிகட கெல்லாம் மாரிச மருந்தே தீர்க்கும
சாரிச மாவ தில்லை சாரிச மான திதே
நேரிச மாகு மென்ன நீட்பிணி யினங்கட் கம்மா.

பலசரக்குகளினுற் செய்யப்பட்ட பெருமருந்தின் குற்றங்களை விலக்குவது மிளகொன்றேயாம். ஆகையால். மிளகை நெய் விட்டு வறுத்துப் பொடி செய்து உண்ணும் முதற் பிடி சோற்றில் மேற்படி பொடியைக் கூட்டி பசுவின் நெய்யைச் சோரவிட்டுண்டாகிலும் அல்லது மிளகைக் கியாழஞ் செய்தாகிலும் குடிக்கலாம். (வாகடசந்திரோதயம்)

## சீவ வகுப்பு.

நஞ்சுயிர்களின் தொகை வகை.

“ கூறுகிறேன் முருட்டுப்பல் பொரியின் விரியன்
கொண்டகரு முதுகினுல் வெடித்த குஞ்சு
வீறுகிற சர்ப்பமெட் டிராசா வொன்று
விரியனிலே பதினறு வகையே யாகும்
வாறுகிற வழலைநால் மூக்க னிரண்டு
வருஞ்சுருட்டை நாலாகுஞ் சாரை யஞ்சு
கருநாகம் பரநாகம் கன்னெஞ்ச னுமைக்
கண்ணெரிய னைந்நாகங் கடிய கொம்பே.
கொம்பேறி யிரண்டாகும் பச்சைப் பாம்பு
கூறுகிறேன் சவடிரண்டு மண் ணுளியு மொன்றே
அம்புசெறி புடையனிலே பதினு ருகும்.
அம்மம்ம மன்றெலியிற் பதினு ருகும்
வம்புபெறு . . .
வளமான விருதலையின் மணிய னென்று
துன்பமிட்ட எலியிலொரு பதினு ருகும்
தூட்டனும் நச்செலிசுன் டெலியு மாமே.

ஆமப்பா செய்யானி லாற தாகும்
　　ஆறுகால் பூச்சிநால் சிலந்தி யெட்டாம்
ஓமப்பா புலிமுகத்துப் பூச்சி யொன்றும்
　　உத்தமனே பல்லியிலே பதிறு ருகும்
தாமப்பா எட்டுவகைப் பூரா னுண்டு
　　தாரணியில் வண்டுநூற் றிருப தாகும்
சேமப்பா வோத்தியொரு பத்து மாகும்
　　செவ்வட்டை யெட்டுவிதஞ் செப்பினேமே.

செப்பினேம் அரணைவிடம் நால தாகும்
　　திறமான தேள்விடம் பனிரண் டாகும்
ஒப்பரிய காலிவிடம் நால தாகும்
　　ஓணத்திற் றவளைபத் தட்டை யாறு
தப்பில்லை முதலையது மூன்று மாகும்
　　தாரணியிற் புலியஞ்சு பூனை யஞ்சு
செப்பியதோர் பேய்நரியும் பேய்நா யோடு
　　பேய்க்கீரிப் பிள்ளையுநாய் நரியு மாகும்

மெய்ப்பப்பா முந்நூற்று முப்ப தாகும்
　　மேதினியி லிறைந்தவிட மின்னாய் கேளே.
கேளப்பா நீர்வாழுஞ் சாதி தன்னில்
　　கெட்டவிட மதனுக்கி லக்கோ வில்லை
ஆரப்பா தொகையறிந்து சொல்லப் புகுவார்."

செய்யுள்:

"புண்டரிகத்தி லுறைவோன்—படைப்பினில்
　　பொல்லாத விடசெந்து வெல்லாம்நனி
விண்டுரைக்க நீகேளாய்—நல்லபாம்பு
　　விரியன் வழலைகொம் பேறிமூக்கன்

சாணைகம் மூக்கன்புடையன்—மண்டலி
　　சவுடி மயக்கரா மண்ணுளிச்சாரை
வாணை வாட்டுஞ்செய்யான்—இருதலை
　　மணியன் சிலந்திபுலி முகபபூச்சி

தேட்புள்ளி வண்டுபூரான்—பச்சோந்தி
　　செவ்வட்டை பேய்நரிநாய் செருச்செயெலி
வாட்பல்லிப் பூனைபுலி—பிலவங்கம்
　　வனத்திற் றவளையட்டை வாசிமுதலை

அரணை நண்டுத்தெறுக்கால்—முதலிவை
யல்லாத செந்துவு மனேகமுண்டு."

(சி. ஆ.) செய்யுள் 2

"வீரான சர்ப்பமெட்டு ராசா ஒன்று
விரியனிலே பதினறு வகையே யாகும்
வாறுன வழலைநாலுனி மூக்க ரண்டு
வருஞ்சுருட்டை நாலாருஞ் சாரை யஞ்சு
கருநாகம் பரநாகம் கல்நெஞ்ச னூமைக்
கண்ணெரிய எஞ்சா நாகன் கடியகொம்பே

கொம்பே றிரண்டாகும் பச்சைப் பாம்பு
கூறுகிறேன் சவடிரண்டு மண்ணுளியு மாகும்

அம்புசெறி புடையனிலே பதினறாகும்." (விடசங்கார
ஆருடம்) செய்யுள் 3

1. பல்வேகம், 2. சலவேகம்.

ஊட்டியதோர் விடத்தினிட வேகம் பத்தாம்
உற்றவிவை யொளியாம லோதக் கேளாய்
காட்டுமுதற் பல்வேகம் விறுவி றுக்கும்
கருகுமுகங் கண்சிவக்கும் வேறுய் நிற்கும்
ஊட்டுவது மாத்திரைநா ஊைம்ப தாகும்
உற்றதொரு சலவேக மிரண்டின் செய்கை
வேட்டுவருங் கைகாலும் விறுவி றுத்து
வேர்த்துவிடுங் கடுகடுத்து நீரி றங்கும்.

செய்யுள் 4

3. வன்னிவேகம்.

நீராகு முடல்முழுதும் பதறி நெஞ்சும்
ஈரல்நடு நடுங்கிமுகம் வெளுத்துக் காணும்
வேறுகி நிறங்குலைந்து விம்மு மாயின்
விளம்பியதோர் குளிகைநா ராட்ட வேண்டும்
வாரான வன்னிவேக மூன்றின் செய்கை
வருந்தியே யருந்தினதைச் சத்தி பண்ணும்
சேராகி நிற்குமிகத் தலை நடுங்கும்
செணத்திலே படுக்குங்கண் சொருகும் வேர்க்கும்.

செய்யுள் 5

### 4. வாயுவேகம், 5. சரவேகம்.

வேர்க்குமிகக் குளிசைநூற் றைம்ப தாகும்
வேகமிது நாலாகும் வாயு வேகம்
குறுகுறுத்து வயிற்றிருந்த வுண்ட சோற்றைக்
குடல்புரட்டு முடல்சோரும் வடியு மூக்கும்
சரசரென்று வயிறேடு நீரு மோடும்
சாற்றியதோர் சரவேக மஞ்ச தாகும்
அறமயக்கந் திருமடா நயில முண்டால்
அருங்குளிருங் காயுமுகம் கருகிப் போமே.

செய்யுள் 6

### 6. சரபவேகம், 7. சமர்வேகம்.

கருகுமுகம் விழிகறுத்து மேனுஞ் சோரும்
கலிக்கமிடக் கடியவிடங் கசங்கிப் போகும்.
சரபவேக மாருகு மறிவ ழிக்கும்
சடுதியிலே வளைந்துநா வொட்டிப் போகும்
விறுவிறுக்கும் பல்லசையும் வடியு மூக்கு
வெறும்பல்லை மெல்லுமதா நசிய மூட்டு
பெருவேகஞ் சமர்வேக மேழாம் வேகம்
பேசாமல் மதிமயங்கி மறந்து போமே.

செய்யுள் 7

### 8. சண்டாளவேகம்.

மறதியுடன் திகிலடையு மூர்ச்சை யாகும்
மையெழுதி நசியமுடன் குடோரி யாகும்
திறமான சண்டாள வேக மேட்டில்
திகலடையும் விக்கலுடன் மூச்சு தங்கும்
உரமான நெஞ்சடைக்கு மிரண்டு கண்ணும்
உத்தமனே மேல்நோக்கு மேன்மூச் செறியும்
திருவட்டத் தாமரைப்பூக் கமலத் துள்ளே
றீங்காக நஞ்சேறி நிற்குந் தானே.

செய்யுள் 8

### 9. காசவேகம்.

திற்குநஞ் சுயிரையன்றே சிக்கிக் கொல்லும்
  நகலிக்கம் புகைநரயுங் குடோரி மூட்டு
க்கவே யொன்பதது காச வேகம்
  மிதமின்றித் தேகத்தைக் கிடத்தி நீட்டி
மூக்கவே யுடல்சோரு முயிருஞ் சோரும்
  உடலுயிரு மொன்றாகச் சேர்ந்து நஞ்சு
மூக்கியமாய் மூச்சென்ற நினைவு மோடும்
  மூடியுயி ரடங்குமடா விடத்தினாலே.

செய்யுள் 9

### 10. அறுதிவேகம்.

விடமான நஞ்சையுயிர் வெல்லா தக்கால்
  வெல்லுமடா அஞ்சனங்கு ழம்ப விழ்தம்
திடமான ஒற்றுபுகை பற்றும் போடு
  தீருமடா அறுதிவேகம் பத்தே யாகும்
உடனேதா னுயிரோடி யொடுங்கிப் போகும்
  ஒளிவான விழிமயங்கி நீல மாகும்
உடலுதிர முதலன்றே நஞ்சாய்ப் போகும்
  ஓகோவே கம்பத்திற் பட்டான் பாரே.

செய்யுள் 10

" பிடித்திடும் வேகக்குறி—தனைச்சொல்வன்
  பெலத்தெழுவேகமூ வகைப்படுமே
வாயுவின் வேகமெட்டுக்—குளிர்தரு
  வருணன்வேகந்தச வகையாகும்
தேயுவின் வேகம்பத்து—மாத்திரை
  தெரியின்மூவொன்பது வருணனுக்காம்
காற்றினுக் கைம்பதாகும்—தேயுவுக்கே
  காட்டியமாத்திரை தொண்ணூற்றெட்டாம்

சாற்றிய வாயுவின்முதல்—வேகம்வந்து
  சார்வுறில் மூர்ச்சித்து வேர்வரும்பும்
இரண்டுக்கு வெதுப்புமுண்டாம்—மூன்றிற்கண்
  ணேறிச்செருகிநானசி லெடுக்குஞ்சத்தி
திரண்டைந்திற் கோழையடைக்கும்—ஆறெனில்
  சிறக்குமழிவழியும் விறைத்திடுமேழ்

எட்டாகி லுயிர்போக்கும்—வருணனில்
இயலுமாதிவேகம் மயிர்க்குச்சாய்
நெட்டுடல் முற்றுஞ்சிவப்பாம்—இரண்டுக்கு
நேயவுடல்கரிந்து வாயுமுலர்ந்து

வெதும்பிடுமூன்றுகில்—உள்மயக்கும்
விளங்கியநான்கெனி லுளங்கலங்கித்
ததும்பிடுங் கபமிருக்கும்—ஐந்தெனில்
தலையைநடுக்கும்நெஞ்சத் தறிவழிக்கும்
ஆருகிற் கண்விழித்து—மேல்பார்க்கும்
அடுத்திடும் ஏழெனில் அங்கம்விறைக்கும்
கூறுன இருநான்கில்—அடக்கமதாம்
குதித்திடுஞ்சுக்கில மொன்பதுக்கென்பார்

பத்தாகில் மரணமதாம்—அங்கியின்
பகர்தருமுதல்வேகம் பார்வைசிவந்து
சத்தான முகங்கருகும்— இரண்டினில்
தடித்திட்டுச்சிறுநீரும் கடுத்திறங்கி
முகம்வெளுத் துடல்முழுது—முரோமம்புல்
முளைத்ததெனத்தழைத்துக் கிளைத்துநிற்கும்
சேகமதில் மூன்றுகில்—வாய்குழறிச்
சிந்தைகலங்கியுடல் நொந்துவிழும்

நாலினிற் குடலிரைந்து—சோகமதாய்
நாசியினீர்வடிந்து தேசுமாறும்
மேலெழு மைந்தில்விழி—உடல் முற்றும்
வெடுவெடுத்தா ட முற்றிடுமாறில்
பல்கடிப் புண்டாகும்—விறைத்துடல்
பதைக்கு மூக்கிரண்டினில் குதிக்கும்புனல்
சொல்லுரை கெடுமேழில்—எட்டினில்
சுவாசமெழும்விழிமேல் துன்னிநோக்கும்

ஒன்பதி லொடுங்குமுயிர்—பத்தினில்
உடல்விட்டுப்பறந்திடும் உயிர்வானில்
என்புள்ள தேகமதில்—அடக்கமாய்
இருக்குமுயிர்நிலை யியம்புகிறேன்."

செய்யுள் 21

## பத்துவேகத்திற்கு மருந்து.

### (1). பல்வேகம், (2) சலவேகம் மருந்து.

மூட்டுவது கொடிக்கள்ளிக் கொழுந்து சீந்தில்
முடக்கற்றான் கரிசாலை திருநீற்றுப் பச்சை
கூட்டுவது வசம்புள்ளி பெருமரப் பட்டை
கூடவே யெருமுட்டைப்பீ நாறி யோடு
தாட்டியே சிறுநீரில் நசிய மூட்டச்
சடுதியிலே முதல்வேகஞ் சாடிப்போச்சு
மாட்டுமிஞ்சி வேகமஃ திரண்டே கண்டால்
மக்களே மயங்காது மருந்தைக் கேளீர்.

செய்யுள் 12

### 3. வன்னிவேகம் மருந்து.

மருந்தென்ன வசம்புள்ளி யாதளைத்தளிர்
மதிப்பாகக் கழுதைலத்தி சிறுநீர் விட்டுத்
திருத்தவே நசியமுடன் துவாலை பூசச்
செணத்திலே தீருமடா விரண்டாம்வேகம்
அரிதான வேகமது மூன்றுந் தீர
அதிமிளகு திப்பிலியிந் துப்பு சுக்கு
வருங்கடுகு வசம்புள்ளி சாரணைவேர்
வெற்றிலையுஞ் சிறுநீரும் நசிய மாமே.

செய்யுள் 13

### 4. வாயுவேகம், 5. சரவேகம் மருந்து.

ஆகுநா லாம்வேக மாவினிலை மிளகும்
அரைபலமாங் காடியது படிகா லாகும்
ஒமப்பா நசியமுமா மகிழ்ந்த மாகும்
ஊட்டவா ளருக்காத வெவ்வ கைக்கும்
தாமப்பா வேகமொரு நாலும் போச்சு
சகுமான வசம்புள்ளி மிளகு நொச்சு
சேமப்பா சிறுநீரில் நசிய மூட்டச்
சிதறியே போகுமடா அஞ்சாம் வேகம்.

செய்யுள் 14

6. சரபவேகம், 7. சமர்வேகம் மருந்து.

வேகமஃ தாருனு லிலுப்பைக் கட்டி
விடுநசியஞ் சிறுநீரி லேகிப் போச்சு
பாகமாய் வசம்புள்ளி துளசி தும்பை
பழமிளகு கந்தியுப்பு மூலையின் பாலும்
ஆகமாம் நசியமிட ஏழாம் வேகம்
அகலுமே யடக்கமுத லெழுப்ப லாகும்
ஏகமாய்க் கொடுமையடா வெட்டாம் வேகம்
இதமான மருந்தையினிச் சொல்கின்றேனே.

செய்யுள் 15

8. சண்டாளவேகம், 9. காசவேகம் மருந்து.

சொல்லுகிறேன் மூலைப்பாலும் கெந்தி தும்பை
துய்யவசம் புள்ளிமிள கிந்துப் பாகும்
வெல்லுமடா நசியமிட வெட்டாம் வேகம்
வேகமினி யொன்பதுக் கவிழ்தங் கேளாய்
நல்லெருக்கம் பால்சீலை தன்னி லூட்டி
நன்றுயி ரவிதனிலே யுலர்த்திக் கொண்டு
நல்வேளைச் சாறுபெரு மரத்தின் பட்டை
நலமாகச் சேர்த்தொன்றாய்க் கலக்கிக் கொள்ளே.

செய்யுள் 16

10. அறுதிவேகம் மருந்து.

கலக்கியதில் முன்சீலை நனைத்து வைத்து
காயவைத்துப் பத்திரமா யிருக்கும் போது
உலர்த்தியதைச் சிறுநீரில் நய்யத் தட்டி
உள்ளுக்கும் விழிசெவிக்கு நசிய மாகும்
பலத்ததொரு வேகமடா பத்தாம் வேகம்
பாராண நசியமடா பகரக் கேளாய்
நலத்தநல் மிளகுடனே யுள்ளி காயம்
நற்றேற்றாங் காயொட்டிக் காய மாமே.

எட்டியுடன் மருக்காரை காட்டு மல்லி
எட்டுநாள் வெள்ளாட்டு நீரி லூறக்
கிட்டமா யரைத்திடுவாய் முன்னீர் தன்னில்
ஈரமான சீலையிலே நனைத்துக் காயின்

கெட்டியா பெருப்புகையி லுலர்த்திக் கொண்டு
இடித்ததிலே மனிதனுக்கு விரலி விளம்
நட்டியே மிருகமுத லெதுவா னாலும்
நாலுவிர லகலத்திற் றுணியை வாங்கே.
வாங்கியே சீலைதன்னை நையத் தட்டி
வளமாக அவுரிச்சா றதிற்க லக்கி
ஏங்கியே திரியாம னசிய மூட்ட
எவ்வகைக்கும் விடவேக மெல்லாம் போச்சு.

செய்யுள் 17

பாம்புக்கடி நஞ்சுதீர கலிக்கம்; நசியம்.

பூச்சடா காயமரி தாரங் காரம்
புகழ்கந்தி யிந்தூரசம் சடுகு கூட்டிச்
சூட்சமடா பேய்ப்பீர்க்கஞ் சாற்றா லாட்டி
சுகமாகக் குன்றியெடை கலிக்கம் போடு
காட்சியாம் வசம்புள்ளி காயம் காரம்
கடியநேர் வாளமரி தாரங் கந்தி
விச்சான லவுரிஉத்தா மணியும் மேனி
விராவியே சிறுநீரில் நசியஞ் செய்யே.

செய்யுள் 18

மூக்குப்பொடி (ஆக்கிராணம்).

சொல்லக்கேள் மூஞ்சூறும் பச்சைப் பாம்பும்
சுகவாழைத் தண்டிலுப்பைப் பழமற மின்னம்
நல்லகாட்டா மணக்கிலையும் சமனாய்ச் சேர்த்து
நற்பொடியாய் நாசியிலே குழை யிலுதில்
வல்லவிட மோடியுயி ருண்டாம் பாரே.

செய்யுள் 19

ஒற்றடம்.

"நசியமுமாந் தாவலையுமாம் கலிக்க மாகும்
நன்றாக வெந்நீரில் கொடுக்க லாகும்
விசையான வெருக்கெட்டி புன்க மிஞ்சில்
விளாவிலுப்பை பெருமரவேர் பேய்க்கு மட்டி
இசைவாக வேர்சமனாய்ச் சிறுநீர் விட்டங்
கிடித்தவற்றை வறுத்தன்றே யொற்றிப் போடு."

செய்யுள் 20

### ஆதனையாதி ஒற்றடம்.

சொல்லுகிறேன் ஒற்றடங்கள் விடத்துக் கெல்லாம்
சூட்சமடா அவுரிசெங்கத் தாரி யாகும்
நல்வாகை ஆதனையுங் குமரி மூலம்
நல்காடி விட்டிடித்து வறுத்துக் கொண்டு
எல்லதலை பாதவரை ஒற்றிப் போடாய்
இன்னமொரு ஒற்றடத்தைச் சொல்லக் கேளாய்

செய்யுள் 21

### வேளையாதி ஒற்றடம்.

நல்வேளை மேனிசுக்கு முருங்கை வேரும்
நாட்டுமத்தை யெருக்குத்தா மணியு மாமே
ஆமப்பா சிறுநீர்விட் டிடித்து மங்கே
அத்தனையும் பொன்னிறமாய் வறுத்துக் கொண்டே
ஓமப்பா ஒற்றவிடம் ஓடு மென்றே
ஓதினர் சூதமுனி பற்று மூற்றில்
தாமப்பா முறுக்கிடங்கள் தன்னைக் கேளாய்
தானுள்ளி வசம்புவட்டத் தூத்தி யொடு
ஊமத்தை நறுதாளி முருக்கு மாச்சு
உள்ளிவசம் புடருனை வணங்கி யாகும்.

செய்யுள் 22

### புகை.

மிளகுவசம் புள்ளிசுக்கு சூடன் சாரம்
மிளகாயும் பழம்புளியு மூப்புங் கூட்டி
நாளொன்று கொடிக்கள்ளிப் பாலி லாட்டி
நற்சீலை கொடிக்கள்ளிப் பாலில் தோய்த்து
நீளமாய் வைத்தாட்டிப் புகையு மேற்ற
திமிடத்தில் போனவுயிர் மீளு மென்று
காளத்தி நாதரிரு நூறிற் சொன்னர்
காரணமாம் பட்டசவம் எழுப்பச் சொல்வேன்.

செய்யுள் 23

### புகை.

அருமென்று காயிலாச முனிநா தர்தாம்
ஆயிரத்தைந் நூற்றிலொரு புகையுஞ் சொன்னர்
ஏகரச கந்தியுடன் சூடன் காயம்
எருக்கம்பால் விட்டரைத்துச் சீலை பூட்டி

வாகுடனே திருப்புகையை நாசி யேற்ற
வானுக்குட் போன உயிர் வருந்தப் பாது.

செய்யுள் 24

சோதனை இலக்கணம்.

உதவுகிறே னுடுதின்னுப் பாலை வேரை
உத்தமனே வாயிலிட் டுண்ணும் போது
இதமாக வெல்லம்போ லிருந்தால் நாகம்
இனித்தபின் னிலைத்ததென்றால் மூக்க னுகும்.
அதிகமாய்ப் புளித்ததென்றால் வழலைச் சாதி
அதிலேதான் வழுவழுக்கிற் கரிய வழலை
மதிமயங்கக் காரமடா மயக்க ராவும்
மனம்போல விருக்குமடா புடையன் தானே.

தானுன மண்டலியா முட்கீரை யீந்தால்
தான்புளித் துறைத்ததெனிற் பெருவிரிய னுகும்
ஆனுவாய் தலைநடுக்கம் விரியன் சாதி
அதிகமாய்க் கடுகடுக்குங் கொம்பேறி மூக்கன்
ஊனுவைச் சுருட்டுமடா சுருட்டை யானுல்
உண்ணுக்கே சரசரக்கும் சாரை யானுல்
காணுக்கண் ணெஞ்சடைக்குங் கன்னஞ் சந்தான்
கண்விழிக்க வொட்டாதங் குண்மை யாமே.

உண்ணெஞ்சம் படபடக்குஞ் சவடி யானுல்
ஒரு சுரணை யுந்தெரியா திருதலை மணியன்
சண்ணையாய்ப் பல்கடுக்குஞ் செய்யா னுகில்
சலசலென மூக்கெரியு மெலியின் சாதி
அண்ணுவை நோவுமடா நச்செ லிக்கே
அரணைதனக் கதட்டியே சத்தி பண்ணும்
கண்ணுங்கா தடைக்குஞ்சில் விடத்துக் கெல்லாம்
கசந்ததென்று லொருவிடமு மில்லை தானே.

செய்யுள் 25

" சோதனை பங்கம்பாலை—வேரினைத்
துய்க்கக் கசக்கலில்லைத் தொடர்விடமே
போதவே யினித்ததென்றால்—நல்லபாம்பு
புளிக்கில் வழலை துவர்ந்திடில் விரியன்

கார்த்திடில் மயக்கரவாம்—உவர்த்திடில்
கனத்த புடையன்மிள கெனில்மண்டலி
நேர்த்திய தாகவேதான்—நாக்கினில்
நின்று கடுக்கினெடு மூக்கனுமே."

(சி.ஆ.) செய்யுள் 26

பாம்பு நெருங்காமற் தடுக்கும் மனை மூலிகை.

கண்டுகொள்வாய் சொல்லுகிறே னுலகோர்க் கெல்லாம்
காரமா மூலியடா பங்கம் பாளை
கொண்டுவந் துன்மனையில் வைத்திருந்தால்
கொடியவிட மணுகாது குடியோ டிப்போம்
நன்றான நாகதாளிக் கிழங்கு தானும்
நன்மனையி லிருக்கவிடம் நாடா தப்பா
அன்றான ஆகாசக் கருடன் மூலி
அம்மனையி லிருக்கவிட மற்றுப் போமே.

செய்யுள் 27

விரியன் வகை 16.

பொரிப்பல் விரியன் பொரிகுஞ்சில்
புகன்ற விரியன் பதினாறும்
பொரிப்பல் விரியன் பெருவிரியன்
பொல்லா விரத்த விரியனுமாம்
கறுத்த தேக மரைவெள்ளை
கடிதாங் கொடிதாங் கருவிரியன்
நிறமே முழுதுஞ் செவ்விரியன்
நீண்ட செந்தலை விரியனுமே.

செந்தலை விரியன் வெள்வால்விரியன்
செறியுங் கழுத்துக் கோல்விரியன்
பந்தாய்ச் சுருளுந் தரைவிரியன்
பளிங்கு நிறக்கண் ணாடிவிரியன்
உந்திப் பரவுஞ் சட்டுவிரியன்
உரைத்த கழுதை விரியனுடன்

பந்தி நிழலாம் விரியனுடன்
பாரக் குறிஞ்சி விரியனுமே.

குறுகுஞ் சிறிதாய் விரல்போலக்
கொடுநெடுங் கழுத்துக் கோல்விரியன்
சிறிய விளக்குத் திரிபோலச்
சிறிய புல்லே விரியனுமாய
குறுகும் விரியினம் பதினாறும்
கோதாய் விரியன் வகையி தாம்
திறக்குங் குணமு மவிழ்தமுமே
தெரியச் சொல்வேன் திருவறிய.

செய்யுள் 28

""விரிய னிலாறு பேதம்--கத்தரி
விரியன் பெருவிரியனி ரத்தவிரியன்
பரிவுசெய் குறுவி ரியன்—புல்விரியன்
பன்னுஞ் சலவிரிய னெனு மிவற்றுள் "

எனச் சித்தாரூடத்திலும்,
" தெரிந்து நீர்விரியன் பாம்பின் செய்கை யிதென்று செப்பே.
" தெளியுமே சொன்னதெல்லாம் செகத்தில்வாழ் விரிய
னென்னே."

" நுழையு மிரத்த விரியனென நுண்மை யறிந்து நுவல்வீரே."
" ஒருமையிக் கூறுகண்டா லுறுபெரு விரியனென்னே."
" சாரிவாழ் விரியனென்னே."
" திட்டமாய் பொரிவிரியன் தீண்டிய குணமமதன்னே,"

எனச் சர்ப்பாரூடத்திலும் புகன்றிருப்பதா லறிக.

" இரத்த விரியன் பெருவிரியன்
இசைநீர் விரியன் செவ்விரியன்
வரத்த விரியன் பொரிவிரியன்
வாங்குஞ் சாதி யிவையாறும்
நிரத்த வகைதான் பதினாறும்
நெருங்கக் கடித்து விடங்கொண்டால்
தரத்த மருந்து விடமீளும்
சொல்வே னறிந்து செய்வீரே."

செய்யுள் 29

### 1. பொரிவிரியன் கடித்த குறிகுணம்.

அறியச் சொல்வேன் பொரிவிரியன்
அடரத் தாக்கும் விடமாகில்
நிறையக் கடித்த வாயிறைச்சி
நிமிர்ந்தே வீங்கி யுடல்பதைத்துச்
சுரமுங் காணுங் கண்ணுறங்கும்
சுட்டுக் கடிவாய் கடுக்குமிக
எரியுங் கண்ணு நாசிநெருப்
பிதமா மஞ்சள் சலம்பொசியும்.

செய்யுள் 30

### 2. பொரிவிரியன் கடிக்கு வேம்பினெய்பூச்சு.

மஞ்சள்நிற நீர்பொசியும் கடித்த வாயில்
மருந்தறியச் சொல்லுகிறேன் பங்கம் பாலை
அஞ்சாமற் சதுரமென்ற கள்ளிப் பாலில
அப்பனே யேழுநா ளூறப் போட்டு
துஞ்சாம லிடித்ததூள் பலமே யொன்று
துவரான வேப்பெண்ணெய் படிகா லப்பா
மிஞ்சாமல் மெழுகுபத மாகக் காய்ச்சி
மிதமாக வவன்சிரசில் பூசிப்போடே.

செய்யுள் 31

### சாரணை கலிக்கம், சாரணை ரசம்.

பூசப்பா சாரணைவே ராவின் பாலில்
புனிதமாய் நாளேழு மூற வைத்தே
ஈசமா யுலர்த்தியதை வைத்துக் கொண்டே
வெலுமிச்சம் பழச்சாற்றிற் கலிக்கம் போடாய்
ஆசையாய்ச் சாரணைவே ரதைக்கு டைந்தங்
கதிற்சூதங் கழஞ்சு விட்டுச் சாணிமூடி
நீசமாய் நாற்பதுநாள் சென்றே டுத்து
திம்பெண்ணெய் படிகாலிற் கழஞ்ச துண்ணே.

செய்யுள் 32

### 1. பொரிவிரியன் கடிக் குறிகுணம்.

பட்டவாய் மேலே வாங்கிப் பரந்துடன் குமரி யேறி
நட்டமாய் விழிக ளுத்து நாவுடன் குழறிப் பேசிக்
கட்டமா யுறக்கங் கொண்டு காய்ந்துட லயரு மாகில்
திட்டமாய்ப் பொரிவி ரியன் தீண்டிய குணம தென்னே.

செய்யுள் 33

### 2. பெருவிரியன் கடிக்குறி குணமும் மருந்தும்.

பூச்சப்பா பெருவிரியன் வயிற துளையும்
பொருவச்சுந் தட்டினது போற் பறக்கும்
பூச்சப்பா கோவையிலை மிளகுஞ் சேர்த்துப்
புத்துச்சோ றெண்ணெயது புகட்ட வேண்டும்.
நீச்சப்பா சுந்தரியின் தயிலந் தொட்டு
நீதடவி வெற்றிலையிற் கொடுத்துப் போடு
ஏச்சிவிடும் விரியனென்ற சாதி யப்பா
எந்தவிட மானாலுங் குணத்தைக் கேளாய்.

செய்யுள் 34

### பெருவிரியன் கடிக் குறிகுணம்.

பொருமியே தேக மெல்லாம் போதவே தலைக மூத்து
இருமியே கக்க லாகி யிளகிடுந் துயர மாகும்
அருமையாந் தொண்டை வாயி லடிக்கடி விருவி ருத்து
ஒருமையிக் கூறு கண்டால் உறுபெருவிரிய னென்றே.

செய்யுள் 35

### 3. இரத்தவிரியன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

தின்னப்பா இரத்தவிரியன் கடித்த தென்றால்
தேகத்துக் குருதியெல்லாம் மயிர்க்கா லோடும்
கண்ணப்பா தெரியாது காது மில்லை
கனமாக ரத்தம்வரும் வாய்மூக் காலே
தின்னப்பா புத்தின்சோ றெள்ளி னெண்ணெய்
சேரவே சமன்காய்ச்சி யுட்க ருந்தி
இன்னமதைக் கடிவாயிற் பூசிக் கட்டி
இதமாகக் கோவைநீர் துவாலை பூசே.

செய்யுள் 36

### இரத்தவிரியன் கடிக்குறிகுணமும் மருந்தும்.

உழையுங் கடிவா யுதிரமதா யொழுகி யோடு நாவுலரும்
அழையும் வயிறு கழியாதே யகமே தாக மனல்மிறக்
குழையுந் தலையு முயிர்குறையும் கொண்டால் மருந்து
குமட்டிடலும்
துழையு மிரத்த விரியனென றுண்மை யறிந்து நுவல்வீரே.

செய்யுள் 36.

### 7. வெள்வால்விரியன் கடிகுறிகுணமும் மருந்தும்.

உண்ணப்பா வெள்வாலின் விரிய குறல்
உடன்பறக லைக்கிட்டி யுடல்மு யக்கும்
புண்ணுருந் தேகங்கை கால்கு றையும்
புதுச்சொறியாம் வெங்குட்ட மூது மேனி
நன்றாகச் சங்கம்வேர் வெந்நீர் தன்னில்
நாற்பதுநா ளிருநேரம் பலமே யுண்ணே
பின்னையுங்கால் மண்டலமே பங்கம் பாலை
பிசகாம லிருநேரங் கழஞ்சு தின்னே.

செய்யுள் 37.

### 1. நீர்விரியன் கடிக்குறிகுணம்.

எரிந்திடுந் தீப்போல் மேனி யிருந்திடுங் கடிவாய் தன்னில்
சொரிந்திடு முதிரம் வேர்வை சுழல்தலை செவியுங் கேளா
தருந்திடு மருந்துந் தங்கா தவன்மனங் குமட்ட லாகும்
தெரிந்துநீர் விரியன் பாம்பின் செய்கையீ தென்று செப்பே.

செய்யுள் 38.

### 2. நிலவிரியன் கடிக்குறிகுணம்.

விழிகறுந் துடம்பு நொந்து வெதும்பியே கடிவாய் விம்மிக்
குழியுமே யூறல் கொண்டு கோபமாய் விரிந்து புண்ணும்
கழியுமே நீர்ம லங்கள் கண்டிடு மிரத்த மாகில்
தெளியுமே சொன்ன தெல்லாம் செகத்தில்வாழ் விரிய
னென்னே.

செய்யுள் 39.

### மற்ற விரியன் கடிகளின் பொதுக்குறிகுணம்.

குணமென்றால் விரியன்குலம் கடித்த தென்றால்
குருதிவரும் கடிவாயி லிறைச்சி சிந்தும்
கணினுடனே காதடைத்து மதிம யங்கிக்
கனத்துடல் தலைசுற்றிக் களையே காணும்
கணுஞ்சொருகும் விக்கல்வரும் செருக்கு நெஞ்சைக்
கடிவாயிற் கனவலியாய்க் கடுக்கும் வங்கும்
எனச்சொல்வே னெரியுமஞ்ச ணிறமா மேனி
எந்தெந்த விரியனுக்கு மருந்து கேளே.

செய்யுள் 40.

### பதினாறு விரியன் கடிகளுக்கும் பொது மருந்து.

விரியன்குலப் பதினாறின் விடத்துக் கெல்லாம்
விளம்புகிறே னவிழ்தத்தின் விவரங் கேளாய்
பெருவாகைப் பட்டைச்சா றுழக்க தாகும்
பின்னையதி லாவினெய் பாதி சேர்த்தே
ஒரு பலந்தான் மிளகுத்தூள் கூடப்போட்டே
உள்ளுக்கி தவிழ்தமாய்க் கொடுத்துப் போடு
உரியசிற்று முட்டியிலே நசியமிட்டே
உடல்முழுதும் பூசவிட மோடிப் போச்சே.

செய்யுள் 41.

### விரியன் 16, சூல் செய்யான், பல நஞ்சுகளுக்கும் மருந்து.

போச்சப்பா வின்னமொரு சுளுவைக் கேளாய்
பொரிவிரியன் பதினாறுஞ் சூலாஞ் செய்யா
நச்சிவிட மெந்தெந்த விடமா னாலும்
நலமான தவசியிட முருங்கைச் சாற்றை
உச்சிதமாய்க் கடிவாயிற் பிழிந்து பூசி
உள்ளுக்கே யுழக்கருந்தித் துவாலே போடாய்
உச்சி செவி நாசிக்கண்ணில் நசிய மூட்டாய்
ஒற்றுமது பற்றுமது வொத்த தாமே.

செய்யுள் 42.

எல்லா விரியன் கடிகளுக்கும் மருந்து.

ஆமப்பா வின்னமொரு முறையைக் கேளாய்
அழகான சாரணைவேர் பங்கம் பாலை
ஓமப்பா புன்கம்வேர் பழுபாகல் துளசி
உத்தமனே சுக்குடனே குறிஞ்சி முல்லை
சாமப்பா சிறுநீரிற் றுவாலை பூச
சகலவிட விரியன்குலம் சாடிப் போச்சு
நாமப்பா வின்னமொன்று சொல்லக் கேளாய்
நலமில்லாப் பதினறு விரியன் தீண்டில்.

தீண்டிடவு நிம்பெண்ணெ யுள்ள ருந்தத்
திகைத்தன்றே விடங்கீழே திரும்பிப் போகும்
உண்டவெண்ணெய் வயிற்றிலிருந் துடலைத் தாக்கும்
உடல்முழுதுங் கசப்பேறி யுறுதி யாகும்
வெண்டேறிச் செல்லாது விடங்க ளெல்லாம்
விரியன் முதல் பலவிடமும் விணைப் போச்சு
நன்றாக வின்னமொரு முறையைக் கேளாய்
நற்பிரண்டைப் பாகலுடன் கோவை மூன்றும்.

மூணுமிவை சமன்கூட்டி யரைத்துக் காய்ச்சி
மெழுகுபதங் கடிவாயிற் பூசிக் கட்டு
பாழில்லை விரியன்விட மிறங்கிப் போச்சு
பழவரிசிச் சோறுதாளிப் பூவுங் காடி
பாதியாக் கோவையிலை பசுவி னெய்யில்
பாய்ச்சியரை கடிவாயிற் பாங்காய்க் கட்டு
ஈனிக்கேள் கெந்திரசம் பொடியாய்ச் செய்தே
இழைச்சீலை தனில்தடவிப் பசுவி னெய்யில்
ஆணவமாய்த் திரிப்புகையை மூளை யேற்றில்
அஞ்சாத விரியன்விட மகன்று போச்சே.
அகன்றுபோம் தக்காளி நாயுருவி நீலி
அரைத்தன்றே வீக்கத்திற் பூசத்திரும்
மகிழெருமைச் சாணியுட னெருக்கம் பாலை
மதித்துப் பூசிடவே வடியும் வீக்கம்
உகந்தசிறு புள்ளடியுங் கோவை சிறுநீர்
ஓகோகோ நசியமிட வோடிப் போச்சு
அகன்றுபோஞ் சிறுசின்னி யெருக்கு சிறுநீர்
அங்கத்தில் பூசுடனே முருக்கு மாமே.

செய்யுள் 43.

### விரியன் நஞ்சுகளுக்குச் சுந்தரித் தயிலம்.

"வெல்லுமடா வேப்பெண்ணெய்ப் படிதா னென்று
விதற்குள்ளே மூன்றூறு நாலு போடு
கெல்லியொரு மண்டலந்தான் புதைத்தெடுத்துக்
கிழிதங்க வடிகட்டி யெடுத்துக் கொண்டு
வல்லவெண் பாடாணம் பலமோ வொன்று ?
வருந்துருசு காரசாரம் வீரம் பூரம்
சொல்லுமிவை வகைவகைக்கோர் கழஞ்சு போடு
சுருக்கான வாளமொரு பலமே போடு.

போட்டன்றே பொடியாக்கி யுறவாய்ச் செய்து
புனிதமாந் தயிலத்தி லிறக்கிக் கொண்டு
கெட்டவிடம் விரியன் பதினாறு மற்றுக்
கெடுமயங்கி வெற்றிலையில் தடவித் தின்னப்
பெட்டகத்தில் வைத்தபொரு ளெடுத்தாற் போலப்
பேயனைய விடப்புதைய லெடுக்க லாமே."

செய்யுள் 44.

### நீலகண்டக் குளிகை.

எடுக்கலாம் நீலகண்ட குளிகை கேளாய்
இதமாகச் சுத்திசெய்த வாளந் தானும்
அடுக்கான துருசதிலே சமனாய்ச் சேர்த்தே
அதற்குள்ளே காரசாரம் வீரம் பூரம்
முடுக்காகக் கந்திரசம் வகையே காலாம்
மூன்றுநாள் வெற்றிலைச்சா றதனா லாட்டித்
கொடுக்கவெந்நீ ருண்டையொரு வராகன் தூக்கி
கோடான கோடிவிடம் குலைந்து போச்சே.

செய்யுள் 45.

### வழலைக்கடியின் பொதுக் குறிகுணமும் மருந்தும்.

அரிதான வழலைவிட மெதுவா னாலும்
அங்கத்து நெஞ்சடைக்கும் தகையே காணும்
சொரியுமடா கடிவாயி லுதிரந் தானும்
சுழற்றிவாய் வழவழக்குந் துவளு நாவும்

இருவிழியும் பிதுங்கியன்றே வழலை கக்கும்
இதமான நீலகண்ட குளிகையூட்டிச்
சிறுநீரில் வசம்புள்ளி நல்ல தாளி
சேர்த்தியச் சகலவிடஞ் சிதறிப் போமே.

செய்யுள் 46.

### மேற்படிக்கு மருந்து.

வெறுத்தே வழலை கடித்ததென்றால்
விடத்தை யொழிக்க மருந்தைக்கேள்
மதுத்திப் பிலிகாக் கணத்தோடு
மடக்கும் வாரிக் கிழங்குடனே
அறுத்தே சமனுய்க் காடிதனில்
அரைத்தே புன்னைக் காயளவு
சிறுத்தே வெந்நீ ருடனருந்தத்
தீருங் காந்தல் விடம்போமே.

செய்யுள் 47

### கருவழலைக்கடி குறிகுணமும் மருந்தும்.

கொலைசெய்யுங்கருவழலை கடித்த தாலல்
கொடுஞ்சுரமுந் தலைகையுங் கால்சிவந்து
பல்கூசிக் கண்சிவந்து பல்லு நோகும்
பருநாவில் வழலைசுற்றி நெஞ்சடைக்கும்
நீலகண்டக் குளிகையந்தக் கணமே நீட்டு
நீலமுடன் கோழிமுட்டைக் கடுகுரோகணியும்
சாலமேலே துவாலையிட் டாவின் பாலில்
சாந்தமுட னிம்மருந்தை யுள்ளருந்தே.

செய்யுள் 48

### (வேறு)

காயு முடம்பு வலிகாணும் கடிவாய் கடுக்கும் குருதிவரும்
வாயு மெரிந்து வழுவழுத்து வயிறு பொருமித் துயருமுறும்
சாயு மயங்கிக் கண்மூடித் தானே மருந்து குமட்டிடிலோ
கோயுங் குணங்கள் கருவழலை சொல்லக் கடித்த குறிதானே.

செய்யுள் 49

### மயக்கரவின் கடிக் குறிகுணமும் மருந்தும்.

போக்கான மயக்கரவந் நீண்டிற்றானால்
பொறியச்சுத் தட்டினாற் போற்சுழன்று
தூக்கசந்து மதிமயங்கி மெய்ந்நடுங்கி
நட்டவிழி மேல்சொருகிக் கீழேவீழ்த்தும்
தாக்கப்பா நீலகண்ட குளிகைநீரில்
தந்திரமாய்க் கறிப்பாலை வேரைத்தின்னே
ஊக்கமா யாதண்டை மிளகுத்தாளும்
ஒன்றாகப் புகைத்திடவே யோடிப்போச்சே.

செய்யுள் 50.

### மயக்கரவு கடிக்கு மருந்து.

தலைப்படு மயக்கரவம்—கடித்திடில்
தங்குகறிப் பாலையின்வேர் தூங்கவிடம்போம்
பயப்படு மிளகுப்பொடி—காய்ந்தவோட்டில்
படுத்தி முகத்திற்புகை கொடுப்பதுமாம்.

செய்யுள் 51 (சி.ஆ.)

பரநாகம், கரிநாகம், கண்ணெஞ்சன், சவடி, கொம்பேறுமூக்கன், மண்ணுளி, இருதலைமணியன், கண்ணொரியன், சாரை இவைகளின்

### கடிக் குறிகுணமும், மருந்தும்.

பரநாகங் கரிநாகங் கன்னெஞ்ச னுமை
பார்த்திருக்க மதிமயங்கு நெஞ்ச டைக்கும்
ஒருநாளு மாக்கினைக்கு ளடங்கா தப்பா
ஊமத்தை யிலைகசக்கிச் சாறு வாங்கித்
திருவான சிரமுச்சி செவிகண் ணாசி
சேரவே நசியமிட்டுத் துவாலை பூசி
சிறுசின்னி பங்கம்பாளை கொல்லன் கோவை
சிறுநீரில் காந்படியு மருந்த லாமே.

அருந்திறற் சவடியும் கொம்பேறு மூக்கன்
அம்மம்ம மண்ணுளி யிருதலை மணியன்
திருந்தவே நசியமிட்டு மருந்தை யுண்டால்
செணத்திலே கண்ணொரியன் விடமுந் தீரும்

அருந்தியே நசியமிட்டுக் கோவைச் சாற்றை
அங்கத்திற் பூசக்கண் ணெரியன் போகும்
அருந்தடா பின்னுக்குச் சமூலந் தன்னல்
அக்கணமே சாரைவிட மகன்று போச்சே.

செய்யுள் 52.

**கொம்பேறுமூக்கன் கடிக் குறிகுணமும் மருந்தும்.**

ஓட்டமுள்ள கொம்பேறு மூக்கன் தானும்
ஓகோகோ மூக்கனென்ற சாதிக் கெல்லாம்
நாட்டிலே கடித்தவுட னுடல்கு ளிர்ந்து
நடுங்கியே மதிமயங்கித் தலையைதானும்
நீட்டியே பிரண்டைவேர் பலமோ வொன்று
நீலகண்ட குளிகைநால் வெந்நி ராட்டி
ஊட்டியே மேலுமதைத் துவாலை போட
ஓடுமது சாணகம் புடையன் கூட.

செய்யுள் 53.

**மூக்கன் கடிக் குறிகுணம்.**

சந்துடன் கைகா லெல்லாம் தான்வலி வாதம் போல
நொந்துடன் கடிவாய் தன்னில் நோக்கவே நீரும் பாயும்
வந்துடன் மயக்க முற்றல் வருத்தங்கள் பலவு முண்டாம்
முந்துடன் நாவு லர்ந்தால் மூக்கனென் றுரைக்க லாமே.

செய்யுள் 54.

**சிறுபாம்பின் நஞ்சு தீர மருந்து.**

வராகிக் கிழங்கு சிறுகீரை பொன்னுங் காணி யதிமதுராம்
பராவி யரைத்துக் கடிவாயில் பாவப் பூசில் விடமறுமே
பிராயம் பாலு மெருக்கினது பிழியும் பாலுங் கொடிக்கள்ளிப் பால்
அராவை முதலாஞ் சிறுபாம்பின் விட முமமூதா மப்பொழுதே.

செய்யுள் 55.

**சாணகம், புடையன் கடிக்குறிகுணமும் மருந்தும்**

சாணகம் புடையனுமே தீண்டிற் குறுல்
சந்துதலை தேகமெல்லாங் குடைச்ச லாகும்
ஆணவமாய் நீலகண்ட குளிகை தன்னை
ஆடுதின்னுப் பாலையுட னரைத்த ருந்து

பாணியே விங்குகின்ற புடைய ருகில்
பருத்தியிலே யரைத்தனைப் பற்றுப் போடு
ஏனுமதிற் பழம்புளியைப் பற்றுப் போடு
ஏழுநாள் நீர்முள்ளி யிலைய ருந்தே.

செய்யுள் 56.

அருங்கட்டுப்புடையன் கடிக் குறிகுணமும் மருந்தும்.

அருங்கட்டுப் புடையனது கடித்த தானல்
அங்கமெல்லாங் குரும்பைபோற் கட்டும் பாரே
எருக்கம் வேர்த் தூளிலும் வசம்பு மூட்டி
இதமாக நாசியிலே புகையைச் சூட்டி
மருவவரு நேர்வாளஞ் சிறுநீ ராட்டி
மக்களே கடிவாயிற் பூசிப் போடு
கருவிரத்தப் புடையனிரத்த விரியன் தானும்
கேடுகெட்ட விரத்தமண் டலியா னுனும்.

செய்யுள் 57.

இரத்தபுடையன், இரத்தவிரியன், இரத்தமண்டலிக்கடிக்
குறிகுணமும் மருந்தும்.

அண்டும்விட மூன்றுமிவை யொன்றே யாகும்
அதட்டியே சத்திபண்ணும் வாய்மூக் காலும்
கெண்டிகொண்டு சாய்த்தாற்போ லுதிரங் கக்கும்
கேசாதி பாதமுத லிரத்தம் வேர்க்கும்
தண்டான மோர்விட்டு வெள்வேல் பட்டை
தானிடித்துப் படியொன்று நல்லெண்ணெய் காலே.

காற்படியிற் புத்தாஞ்சோறு கரையை ஆட்டிக்
கைபொறுக்கக் காய்ச்சியுட லெங்கும் பூசு
மேலுமதை யுள்ளருந்த விடமே போச்சு
மேலான புடையனென்ற குலத்துக் கெல்லாம்
நாலுபல நேர்வாளங் கூடப் போட்டு
நான்குநா ளிருநேரங் கழஞ்ச துண்ணப்
பாலகனே சுருட்டைவிட மூமைப் பாம்பு
பல்லிமுத லோந்திவிடம் பறக்குந் தானே.

செய்யுள் 58.

### புடையன் கடிகளுக்கு மருந்து.

“பிரண்டையின் வேரைத்துப்—புன்னைக்காய்ப்
பிரமாணம் வெந்நீரிற் பருகிடினும்
திரும்பிடும் மூக்கன்விடம்—புடையனில்
செப்பிடு நால்வகைச் செந்துக்கடாம்
துள்ளியே பற்கள்படக்—கடித்தவாய்
தூணென வீங்கியே வியர்வரும்பில்
ஒள்ளிய காட்டுக்கருணைக்—கிழங்கும்
உயர்ந்திடு புகையூறல் கொட்டைக்கரந்தை
இருப்பையின் பழக்கோதும்—அமுரிவிட்
டிளக வரைத்துப்பூ சிடிலேகும்
வரியுறுங் கட்டுப்புடையன்—கடித்திடில்
வசம்புட னெருக்கம்பால் புத்தின்சோறும்
புகைத்திட நாசியிலே—விடமது
திகைத்திடு மென்றுரோர் கணத்தினிலே
பகைத்திடு நெடுங்கழுத்துப்—புடையன்பல்
பதிந்திடக் கடித்திடிற் படமடக்கிக்
கிழங்கினைப் பாலிலருந்த—விடம்விட்டுக்
கிட்டாம லோடிவிடுந் திட்டமுடனே
வழங்கிய புகையூறல்—நீலியிலை
வடிகண்ணை மிருப்பைக்கட்டி கொடிக்கள்ளிப்பால்
விட்டரைத்துப் பூசிடினே—வீக்கம்
விலகிடு மினியொன்றை விளம்பிடக்கேள்
ஒட்டுறும் விழியின்பூ—அரைத்துண்ண
ஒருநாளு புடையன்விட மொழிந்திடுமே.

செய்யுள் 60.

### மண்டலி பதினாறின் பொதுக் கடிக்குறிகுணம்.

கேளப்பா மண்டலியிற் பதினா றுண்டு
கெடியாக வுப்புறைக்கும் வாய்நீ ரப்பா
நாளப்பா தலைசுழற்றி மெய்ந்ந டுங்கும்
நலமாகத் தோள்முனையு முளைந்து காணும்
ஆளப்பா வுடல்குடைந்து பேதி காணும்
அங்கமெலாங் குளிர்ந்துசலங் குருதி காணும்
கேளாது செவிமூக்கி னுள்ளே நாற்றம்
கெட்டுவிழி சோம்பிவரும் நன்றாய்க் கேளே.

செய்யுள் 60.

### உதிரமண்டலிக் கடிக் குறிகுணமும் மருந்தும்.

குணமென்ன உதிரமண் டலியே தீண்டில்
கூகூகூ வொருநொடியிற் கொல்லு மப்பா
கனமாக வாய்மூக்கி லுதிரஞ் சாய்க்கும்
கண்தெரியா செவிகேளா துடமை வேர்க்கும்
அநியாயம் வேர்வையெல்லா முதிர மோடும்
ஆகாசம் புவிதெரியா தயர்த்தே தள்ளும்
இனியென்ன மீளுமென் றுருஞ் சொல்லார்
இதற்கரிய குடோரியதா மருந்தைக் கேளே.

மருந்தென்ன புத்துச்சோறு பலமே யொன்று
மக்களே நல்லெண்ணெய் படிகா லாகும்
திருந்தவே யாட்டியதைப் பதமாய்க் காய்ச்சிச்
சித்தாம லவிழ்தமாய்ச் செய்த துள்ளே
யருந்தியே கடிவாயிற் றுவாலை போட்டே
யங்கமெலாம் கோவைச்சாறு துவாலை போடு
அருந்தவே யின்னமொரு மருந்தைக் கேளாய்
ஆனதான் வணங்கியிலே யவிழ்த மாமே.

**செய்யுள் 61**

### வீங்குமண்டலிக் கடிக் குறிகுணமும் மருந்தும்.

அவிழ்தமாய்த் தண்ணீரி லரைத்த ருந்தி
யதைத்தானே துவாலையிடத் தீரும் பாராய்
அவிழ்தமாங் கொல்லனிட கோவை மூலம்
அரைத்துண்டு மதைத்தானே துவாலை பூசி
அவிழ்தமாந் தாதுவளை வீழி மூலம்
அம்மம்ம வீங்குமண் டலிக டித்தால்
திவிழ்தமாம் உடல்முழுதும் கணத்தில் வீங்கும்
நித்திரைகண் விழியாது நீரே வேர்க்கும்.

வேர்த்தவுடன் குங்குமப்பூ முக்கிரட்டை வேரும்
வெற்றியுள்ள முத்தெருக்கஞ் செவியின் மூலம்
நேர்த்தியுள்ள பெருமரத்தின் பட்டையாகும்
நினைவாக விலுப்பையிலே சமனாய்க் கூட்டி

வார்த்தரைத்துக் காடியுடன் படிகு டித்து
வளமாக வுடல்முழுதுந் துவாலை போடக்
காற்றிலிட்ட பஞ்செனவே காணு தோடும்.

செய்யுள் 62.

### சொறிமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.

கடியசொறி மண்டலிதான் கடித்த தானல்
கடித்தவுடன் தன்குணந்தான் கண்சொ ருகும்
கருகிட்டு நாக்குவாய் வரண்டு போகும்
தடித்துவிட் டுடல்வரண்டு சொறியே காணும்
தனியாவின் பாலினன் னுரி வேரைக்
குடித்திட்டுப் பொன்முசுட்டை பாலி லாட்டிக்
கூசாம லுடல்முழுதுந் துவாலைபோடு.

செய்யுள் 63.

### பேதிமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும், எரிமண்டலிக் கடிக் குறிகுணமும் மருந்தும்,

கடித்திட்டால் பேதியென்ற மண்ட லிக்குக்
காய்ச்சல் குளிர் பேதியடா கடுமை யாமே.
கடிதான பேதியென்ற மண்ட லிக்குக்
காயமும் வசம்புள்ளி யோடு கந்தி
கொடிதான நீலிபெரு மரத்தின் பட்டை
குடித்திடுவா யாவின்பால் குடியோ டிப்போம்.
முடியாத வெரிமண்டலி தான்க டித்தால்
மூச்சுவரும் நெருப்பாக முகமெரியும்
அடிக்கடிதான் தலைசுழற்றிக் கீழே தள்ளும்
அங்கமெலா நெருப்பெரியுஞ் சலமாய்ப் பாயும்.

செய்யுள் 64.

### எரிமண்டலிக் கடிக்கு மருந்தும், வெறிமண்டலி கடிக்குறிகுணமும்.

ஓயாத வெரிமண்டலியே போக
ஒருபலந்தான் விடதாரி வேரா வின்பால்
ஆகமாய்ப் படியொன் றரைத்தே யுண்பாய்
அதைத்தானே யங்கமெலாந் துவாலை பூசே

வேகமடா வெறிமண் டலிக டித்தால்
    வேறொன்றுந் தெரியாது பிரமை தோன்றும்
கோவமா யெழுந்தன்றோ வெளியி லோடும்
    கொண்டவெறி யாலெடுத்துக் கடிக்குந் தானே.

செய்யுள் 65.

### வெறிமண்டலிக்கடிக்கு மருந்து.

கடித்திட்ட வெறிமண்ட லிதான் றிரக்
    கரும்புள்ளி வண்ணாத்தி தனைப் பிடித்து
வடித்திட்ட மெழுகுபோற் பலம ரைத்து
    வாகாக நல்லெண்ணெய் படிகா லப்பா
துடித்திட்ட மெழுகுபத மாகக் காய்ச்சித்
    துவாலையிட் டுடலெல்லா முறுக்கி வாங்கிக்
குடித்திட்டா லாறாக்கில் வெறியே தீரும்.

செய்யுள் 66.

### சீதமண்டலிக் கடிக்குறிகுணமும் மருந்தும்.

சீதள மண்டலியே கடித்த தானால்
    சீணத்திலே யுடல்குளிர்ந்து வெறிக்கும் பாராய்
மூதவாய் குழகுழத் துதடுஞ் சாயும்
    முத்தெருக்கஞ் செவிகாடி தனில ரைத்து
நீதமாய்க் கொதியிட்டுத் துவாலை பூசு
    நெய்மிளகுத் தூள்பலமு நேரே யுண்பாய்
ஏதஞ்சல மண்டலிநா னெங்கோ போயிற்
    றின்னம்வெகு மண்டலியின் குணத்தைக் கேளே.

செய்யுள் 67.

### எல்லா மண்டலிக்கும் பொது மருந்து.

கேளப்பா மண்டலியின் விடத்துக் கெல்லாம்
    கெட்டியாய் மருந்தையினி சொல்லக் கேளாய்
ஏளப்பா இலந்தையின்மேற் றம்ப லந்தான்
    இதமான முத்தெருக்கஞ் செவியு மவுரி
கோளப்பா பேய்ப்பாலை பேய்க்கு மட்டி
    கொடிவேலி சொடிக்கள்ளி செருப்ப டையும்
நீளப்பா வேர்க்கழஞ்சு தேங்காய் பாலில்
    நீயருந்த விடமனைத்துந் தீருந் தானே.

செய்யுள் 68.

எலி 18.

காலுவிடப் புண்டரங்கா பிலஞ்சு போதங்
கஷாய தந்தம் உந்துருகோ கிலங்க போதம்
ஆலுமிலா லசமரிதஞ் சமளத் தோடு
மருணமிர சாலமசி தங்கி ருட்ணம்
வாலுயரும் பலினிசிகு ரஞ்ச பாலம்
வளர்குனக மெனும்பதினெட் டெலிக் கூட்டங்கள்.

செய்யுள் 69.

"எலிக்குலம் பதினெண்வகை—அவைகளை
இயம்புகிறே னெவர்க்கும் நயம்பெறவே
வலிக்குங்கத் திரிமணியன்—செம்மூக்கன்
வள்ளி குறட்டைகருங் காற்றலையன்
விடவெலி செந்த லைமுத்தி—செவ்வெலி
வீங்கெலி உலர்ப்பெலி தூங்கெலியும்
புடையெலி இரைப்பெலியும்—செங்கண்ணன்
புள்ளி கரடன்குறும் காலெலியும்
நச்செலியி ரொன்பதும்—கடித்திட்டு
நாளுளு மேவிடந் தானேறினல்."

செய்யுள் 70.

"இராவிவைதாஞ் சிந்துமதம் பட்டால் விக்கம்
இவர்கிரந்தி அரோசகமா தியவுண் டாமேல்
தராவிடந்தா னெலிதாமோ பொல்லா தாகும்
தடிப்பிருமற் புண்வீக்கங் கொப்பு ளாதி
கராளமெலா முண்டாக்கும்.

(சிவாருடம்) செய்யுள் 71.

எலிக்கடிக்கு மருந்து

வன்மை மரைத் தோலை வாட்டி வுலர்த்திப் பொடியாக்கி
எண்ணெய் நறுநெய்யுடன் கூட்டி யிறங்கிப் பத்துநாள்
புன்மை எலியின் கடிபட்ட பொருமல் மிக்க வழலைபோய்
நன்மை செய்து டம்பெல்லாம் நஞ்சு மமிர்த மாயிடுமே.

கப்பிய வெலிக டித்துத் தலைகனத் துடல மெங்கும்
கொப்புள மாகத் தோன்றித் திருறும்புரு வெச்சத் தோடே
எப்பெரும் பட்டைத் தோலிலே யுலர்த்திப் பிசைந்து செய்ய
மெய்ப்பொடி யாக்கி நெய்யில் விழுங்கிட விடமுந் தீரும்.

மூதிரைவா கனவன் சொன்ன மூடிகம் பதினெட் டாலும்
ஏதமுற் றவர்க டங்கட் கினியதோர் மருந்து சொன்னே
மாதலாற் கொன்றை சூடுஞ் சங்கர னரவன் முன்னு
ராதன மணியை யாப்பா லரைத்துநெய் யருந்த னன்றே.

திப்பிலி மிளகி னோடு செறிபுங்கு மகிழ்வேர் கூட்டித்
தப்பில்லா வமுத வல்லி யிலையிவை சரியாய்க் கொண்டே
ஒப்பிலாக் கன்னிச் சாற்றி லரைத்துண்டை விழுங்கத் தீரும்
மெய்ப்படி எலிக டித்த விக்கமுந் தானே போகும்.

ஆளி ருக்கக் குழிக்கல் லதனோடே
தாளம ரைத்துத் தானொரு பாண்டத்தில்
மூள மூடிக் சடத்தில் விறகிட்டு
நாளும் புகைக்க எலிக்கடி நாசமே.

செய்யுள் 72.

எலிவிடத்திற்கு மருந்து.

“ ஊமத்தம் விறகுகொணர்ந்---திடித்ததை
ஒருபாண்டத் தினில்வைத் தொருகிடங்கில்
நேமித் ததனையிருத்திக்---கழுத்தின்கீழ்
நீடுகுழி வாய்மறைய மூடியிட்டுப்
பக்கத்தில் நாள்வழிப்போல்---பறித்தந்தப்
பாண்டத்தின் கீழனல் மூண்டிடச்செய்து
தொக்கினிற் புகைத்திடவே---எலிவிடம்
கக்கிவியர் வுடனே கழிந்திடுமே.” (சி.ஆ.)

செய்யுள் 73.

செய்யான் பிரிவு.

“ வீச்சப்பா செய்யானே கடித்த தானால்
விறுவிறுத்து விரிந்துகடும் விக்கங் காணும்
காய்ச்சல்வரும் நிறங்கறுத்துக் கண்சி வக்கும்
கைகாலு முழற்றியே கடுக்கும் மேனி

பூச்சப்பா வெற்றிலையும் பாக்கும் தின்னே
போதவே சர்வாங்கம் துவாலே பூசே.

பூசியே பனைவெல்ல மெருக்கன் பூவும்
போதவே யரைத்ததொரு பலமே யின்னே

ஓசைபெருங் கோவையிலே தாளிப் பூவும்
உத்தமனே நெல்லரிசி சோறுஞ் சேர்த்து
மசியவே காடிவிட் டரைத்து நெய்யில்
மத்தித்து நாள்மூன்று கடியில் கட்டி
நசிவாக கோழியதி னீரற் பித்தும்
நாள்மூன்றுங் கட்டியதை அவிழ்த்த பின்பு

பின்பிலேக் கள்ளியதைத் துவைத்து வாட்டி
துடியாக வெண்சாமங் கட்டத் தீரும்
இன்பமா யின்னமொரு மருந்து கேளாய்
ஈச்சன்வே ருங்குருத்துந் தூதின் வேரும்
அன்பாக வரைத்தன்றே துவாலே பூச
அற்றுப்போ மின்னமொரு மருந்தைக் கேளாய்
அன்புடனே யாசுமயி லாடி நீலி
அரைத்துண்டு குறிஞ்சியிலே துவாலே பூசே

பூசப்பா கடிவாயில் விக்கந்நீர
பொன்னுனை வெட்டிவிதை நல்ல வெண்ணெய்
கூசாமல் நீயரைத்துக் கொதிக்க வைத்துக்
குணமாக வெதுவெதுப்பாய்க் கடியில் பூசே." (வி.ஆ.)

செய்யுள் 74.

## செய்யான் கடிக்கு மருந்து.

ஏனற்றும் பெருஞ்செய்யான கடித்ததென்றால்
நலம்பெரு கோவையிலே—வெற்றிலே
நல்ல பருத்திகொஞ்சி வல்லுத்தாமணி
களங்கமில் முடக்கொத்தான்—இவையாறும்
கசக்கிச் சாறுபிழிந்து காய்ச்சித்தடவக்

குளிர்ந்திடுங் கடுப்பெரிப்புத்—தம்பலம்
கொட்டுவாயி லுமிழ்ந்தாலும் விட்டுவிடுமே
தூதுவேளை நாவலின்டை—வேரரைத்துச்
சுற்றிக் கடிவாய்தனிற் பற்றத்தடவத்

தீதுற்ற செய்யான்விடம்--உடன்விட்டுச்
சென்றிடு மென்றுரைத்தார் கெண்டைவிழியே. (சி.ஆ.)

செய்யுள் 75.

**பூரான், சிலந்தி, ஆறுகால்பூச்சி, புலிமுகப்பூச்சிக் கடிக்குறிகுணம்.**

"மிஞ்சியதோர் பூரானுங் கடித்த தென்றால்
மேலெல்லாம் பூரானின் நிறந்த டிக்கும்
தடிப்புகண்டால் சிறுசின்னி யிலையின் சாற்றில்
தருமான கொல்லனிட கிழங்க ரைத்துக்
குடிகொண்ட நாள்மூன்றும் அறையில் வாழும்
குணமாக ஏழுநாள் புளியு மாகா
கடிகண்டால் சிலந்தியறு காலின் பூச்சி
கடுப்பெடுக்கும் புலிமுகத்தின் பூச்சி தானும்
நொடிக்குள்ளே தேளிவிடம்போல் கடுப்பு காணும்
நோய்தானும் உடலுக்குள் ஊறையு முன்னே."

செய்யுள் 76.

சிலந்திக்கடிக்கு மருந்து.

" சிலந்தியோ ரிருபதினில்—அழல்வாய்ச்
சிலந்திக்குச் சுண்ணாம்பும் பழம்புளியும்
கலந்தந்தக் கடிவாயில்—தேய்த்திடக்
கடுப்பு மெரிப்புமுடன் விடுத்திடுமே
ஆவிரை தாளிபசலை—காடிவிட்
டவித்திட்டுக் கடிவாயில் குவித்துக்கட்ட
நாவுரை செயவேண்டுமோ—எரிப்பெங்கும்
நாடிடு மோபறந் தோடிடுமே
இருபது வகைக்குமொன்று—மருந்தோன்
றேலவுரைப் பேன்பிராய்வேர் நீலியின்வேர்
சுரபியின் பாலிற்கொடுக்க—முப்பொழுதில்
துறந்திடு முயிர்வந்து சிறந்திடுமே." (சி.ஆ.)

செய்யுள் 77.

உறைந்தன்றோ உடலெல்லாம் புன்னைக் காய்போல்
உண்டைபடக் கட்டியன்றோ உழற்றும் மேனி
விரைந்தேறும் ஒடுவடக்கி புரசு மெட்டி
வேலைச்சாறு சமன்கூட்டித் துவாலை போடு

அருந்தடா நிலிஉத்தா மணியு மேனி
அந்திசந்தி நாள்மூன்று தினம ருந்த
இருந்தவிட முடலைவிட் டேங்கிப் போமே.

செய்யுள் 78.

பச்சோந்தி கடிக்குணமும், மருந்தும்.

" பச்சோந்தி கடித்திடினே—தழுதாழை
பண்ணை பரட்டையிலை நண்ணுஞ்சிறுநீர்
மிச்சமாய் விட்டரைத்துக்—கடிவாயில்
மெள்ளப் பூச்சி யாத்தியிலைத் தெள்ளுபொடியை
வெண்ணெய்தனி விட்டுக்காய்ச்சி—நாசியிவில்
விடுத்து மிக்கத்திற்றட விடக்குணமாம்." (சி.ஆ.)

செய்யுள் 79.

வண்டுகடி விடக்குணமும், மருத்துவமும்.

அதிகமில்லை வண்டுநூற் றிருப தாகும்
அநேகமாங் குணங்குறிக ளதிலே காணும்
இதமான வண்டுகடி யெதுவென்றாலும்
ஏகாந்தத் தயிலமொன்று சொல்வன் கேளாய்
மிதமில்லா அழிஞ்சிலின் வித்துப் புன்னை
மேலான எட்டிவித்து சோரம் வித்து
பதமான வாளம்பேய்ப் பீர்க்கம் வித்து
பாங்கான விழுதிவிதை வேப்பம் வித்து

வித்துவகை யிதுசமனாய்க் குழித் தயிலத்தாலும்
விதமாக விறக்கியது தனைலி ருக்க
எத்தாகக் கழுதைலத்தி தயிலம் வாங்கி
எடைக்கெ டையா யிவையிரண்டு மிறக்கிக்கொண்டு
மெத்தவில்லை மேல்மருந்து கடம்பங் கொட்டை
மேலோடு நீக்கியொரு பலத்தை வாங்கி
அந்தநிறை கந்தியிட்டுத் தாள்வ டித்தே
அந்திசந்தி காசெடைத்தாள் தயிலத் துண்ணே.

உண்டுபார் வாரமொன்றில் வண்டு போச்சு
ஒருபத்தி லட்டைவிட மோடிப் போச்சு
பண்டுமடா தவளைவிட முள்ள தெல்லாம்
பட்சமுண்ண லட்சவிடம் பறந்து போச்சு

சென்ற திங்க ளொன்றில்செவ் வட்டை போச்சு
சேனைவிட மிதனாலே யற்றுப் போகும்
மண்டலத்தி லிரண்டுமண் டலந்தான் தின்றால்
விடமேறு தொருவருட முண்டிடவுஞ் சித்தாம்.

செய்யுள் 80.

### அரணை நக்கல் குறிகுணமும், மருந்தும்.

நக்கிடு மெனிலரணை—உடல்முற்றும்
நடுங்கிவெண் ணுரைதள்ளி நாக்குத்தடிக்கில்
சுக்கொடு வசம்பெடுத்துச்—சுட்டுப்பின்
சூரணித் தருந்தினுஞ் சாரணைவேர்
துவைத்ததன் சாறுடம்பிற்—பூசினும்
தொலையுங் குருத்துபனந் தொல்வேரும்
சுவைத்தருந் திடவரணை—விடமெலாம்
துடித்தொடுங் கிடும்நாத் தடித்ததுபோம்.

செய்யுள் 81.

### தேள்கடிக்கு மருந்து.

" வீசிய தேளினுக்குக்—கோழியெச்சம்
வெற்றிலை யிற்கொடுக்க விடமகலும்
கொல்லன்கோவைக் கிழங்கரைத்துக்—கொடுத்திடக்
கொடிதான கருந்தேளின் விடமறுமே
நல்லவெள் ளெருக்கம்பால்—சீலையில்
நனைத்து மயிலிறகு தனிற்சுற்றியே
கோழியெச்ச மேற்றடவி—வைத்துலர்த்திக்
கொடியபன் னிருதேளுங் கொட்டிற்றெனிலவ்
வேளையிற் றீக்கொளுத்திக்—கொட்டுவாயில்
மெல்லப் புகைக்கவிட மில்லைகடுப்பும்." (சி.ஆ.)

செய்யுள் 82

### நட்டுவக்காலி நஞ்சிற்கு மருந்து.

நட்டுவாய்க் காலிகொட்டிக்—கடுத்திடில்
நன்றுவமுதுனைங் காயொன்று வெதுப்பிக்
கட்டிட விடந்தணியும்—எட்டிவிதை
கழற்சிக்காய்ப் பிரமாண மிழைத்துப்பூசக்
கடுப்புட னெரிப்பொடுங்கும்—பழம்புளி
காடிதனிற் கரைத்துச் சாடியிற்பெய்தே
அடுப்பினிற் கொதிக்கவைத்துக்—கொட்டுவாயில்

ஆவிபிடிக்க விடம் போய்விடுமே
ஆகாசத்தாமரை யெருமைச்—சாணிப்பால்விட்
டரைத்துக் கொதிக்கவிட் டவ்வாயிலை
நீகாசினள வெடுத்துப்—பூசிவிடில்
நின்றிடுங் கடுப்பெரிப் பகன்றிடுமே. (சி. ஆ.)

செய்யுள் 83.

காணுக்கடி நஞ்சுக் குறிகுணங்களும் மருந்தும்.

"காசினியில் காணாத கடியைக் கேளாய்
கண்ணாடி போலிருளில் முன்னமேமின்னும்
தசையெல்லாம் பட்டையிட் டட்டைபோலத்
தானிருக்கும் கடித்தவுடன் நடித்துத்தேகம்
நசிவில்லை வடுவடுவாய்ப் புறணிதோன்றும்
நற்சிவப்பாய்த் தடித்துடலிற் றினவேமிஞ்சும்."

"மிஞ்சாமல் காடியொரு படியிலப்பா
இதற்கிணையாய்க் கற்பூர வள்ளிதன்னை
அஞ்சாமல் நீயரைத்துப் பாதியுண்டு
அங்கமெல்லாம் பரவியன்றோ துவாலைபூச
அஞ்சநா ளிருநேர மருந்தவேணும்
அரிதான பந்தியமாய் அறையுள்போடு."

செய்யுள் 84.

சீவ வெறி நஞ்சு.

"நாய் நரிமா னிடர்பகா ரானிருளி வெறியிரண்டி
னடையி யற்கை
ஞாய்ச் செயற்கை வழிகுணத்தி னுலறிந்திட் டதற்கமைய
வுநுகூ லித்தே
நீயுளமா கவடிவெண்மை யநுபாகப் படியளித்து
நிலைக்கச் செய்தே
மாய்வுறுதே கத்தைமகி தலத்திருத்தி யாயுண்மறை
வன்மை யுள்ளோய்."

(மாபுராணம்) செய்யுள் 85

நஞ்சினரை வைக்குமுறை.

"பித்தி னைய்முதற் பெருங்கடிப் புண்ணோ
யத்தின் வவுடத மாறு பானமேற்
பத்தியந் தபுமெனிற் பண்டி தங்கெடும்
சத்தியங் காவன்மை சாத முண்மையே."

(மாபுராணப்பெருவாகடம்.)

"புண்ணை ஞமரியாய் மானிட ரான்பன்றி
எண்ணு மெருமை யிவையிரு பாற்கடி
தண்ணு தொழிய நரிப்பப றுஞ்சோதி
கண்ணுறு கொட்கஞ்சி காவ லதிகமே."
(திருமூலநாயனர் திருமந்திரத்திரட்டு.)

"சோகி ரண்டு வகைக்கடி
யாகல் சுணங்க னரிக்கடி
சோகியட லைப்பயறு நீர்களறு பானி
நாகவலி வேதமுறை காலது பத்தியம்

பண்ணப்படு
மெண்ணப்படி
பதறிக்கொளினுதறும்
பருப்பமுறை யநுபானம்
நெருப்பை நிகராமே."

பஞ்சாகு முதலவிடப் பிணி

பஞ்சா னனமுன்னர் கரித்திரளவிடமிது
பார்க்க வொண்ணாதது
பார்க்கு விதுநிதமே

பாரகா வியமுறைப் பண்பினை யறிமின்
பாங்கர் பாரிசம் பாலென லொன்றெனப்
பகருணர் வினரே
பார்த்தறி யிதுவே."
(அகத்தியர் கரிசல்) செய்யுள் 86.)

பேய் நரி, பேய் நாய்க்கடிக்கு மணித்தக்காளியிலைச்சாறு.
தானென்ற பேய்நரியாய் கடித்த தானால்
தழைத்தமணித் தக்காளி யிலைச்சா றப்பா
பானென்ற படிகால்தான் கொடுப்பா யப்பா
பாங்காக மூன்றுநா ளாறுவேளை
கோனென்ற பத்தியந்தா னுப்பா காது
குணமாகு மேமாநாள் நீரை வாரு
வேனென்ற பேய்நரிநாய்க் கடிதான் தீரும்
விதமாகு மிதன்றழையை மேலே பூசே,
செய்யுள் 87.

## ஒற்றடக்கட்டு மருந்து.

"குரங்கு வலியக் கடித்ததெனில்
கோளில வேர்வயி ரச்சுக்கும்
குறிஞ்சுப் பூசிர் வராகியிலை
கொழுஞ்சி யிலையும் துவைத்திட்டு
நருங்க வோட்டில் வறுத்தொற்றி
நலமா யாற்றிக் கட்டிடவே
யொருங்கு கோடி குரங்குவிடம்
ன் ஒழிந்தே யொடுங்கிப் போய்விடுமே."

செய்யுள் 88

## பூனைக்கடி தீரக் குப்பைமேனிக்கற்கம்.

பூசியே பூனைவிட கடிதான் தீரப்
புனிதமுள்ள பூனைதொழும் பட்டை வாங்கி
ஆசியே பசுவின்பால் தனில வைரத்து
அப்பனே பத்தியமாய்க் குடிக்கச் சொல்வாய்
கூசியே முன்போல பத்தியமே காவாய்
குணமுள்ள நீலிவேர் தனையரைத்து ஸ
வாசியே யீராது நாளும் பூச
வகையாகப் பூனைகடி தீருந் தானே.

செய்யுள் 89

நாவி குரங்கு பூனைபன்றி
நரிநீர் முதலை யுழுவையுடன்
மேவுஞ் சுணங்க னிவையெட்டும்
மேலே விழுந்து கடித்தக்கால்
ஆவின் பாலில் நீலியின்வே
ரரைத்துக் கொடுக்க நாள்மூன்றில்
மேவுங் கனவில் மெழுகதுபோல்
விடந்தான் கழன்று போய்விடுமே.

செய்யுள் 90

## வேறு மருத்துவங்கள்.

புலருங் கள்ளி தனைவாட்டிப்
புண்வாய் பிழிந்தால் விடந்தீரும்
சுலவுங் கருடக் கொடியரைத்துக்
துவாலை யிடினும் விடந்தொலையும்

அலரும் விழிச் சமூலத்தை
அரைத்திந் தாலும் விடந்தணியும்
பலவும் வேண்டா மியாமிங்கே
பகரௌ டதங்கள் தெரிந்திடுமே.

செய்யுள் 91.

## வேம்புப்பூச்சு.

வேப்பங் கொழுந்தி னுடன்சீந்தில்
வேருஞ் சிறுநீர் விட்டரைத்துக்
கோப்பா யுலர்த்தி வட்டாக்கிக்
கொண்டே யுடைத்துப் பொடிசெய்து
தாப்பாய் முட்டைக் காடிவைத்துத்
தடவித் தண்ணீர் தனில்முழுகக்
காப்பா யுடம்பு நன்றாகும்
கடிதே விடங்கள் தீர்ந்திடுமே.

செய்யுள் 92.

## மத்தநெய், வெற்றிலைச்சாறு.

மத்தத் துனியா றெட்டுள்ளே
வருந்தி நல்லெண் ணெயிற்கொண்டால்
சித்த ரெதிர்பே யோதெல்போல்
தீரா விடங்கள் தீர்ந்திடுமே
பத்தி யுடன்வெற் றிலைச்சாறு
படிகால் கொடுக்க நாள்மூன்றில்
சத்தி யருளால் நாய்நரிவே
தனைகள் தீரும் சத்தியமே.

செய்யுள் 93

## கடிவாய்ப்புண்ணுக்குப் பச்சிலைக்கட்டு.

கடிவா யுளைந்து புண்ணானல்
கட்டௌ டதங்கேள் பருத்தியிலை
பிடியாந் தும்பை யாவிரையும்
பிடியாஞ் செம்பை புளியிலையும்
படிவா யைந்துஞ் சமனாகப்
பறித்து வெதுப்பித் தான்கட்ட
வடிவா யுலரும் புண்களெல்லாம்
மருமம் வெளியே சொல்லாதே.

செய்யுள் 94.

நாய், குரங்கு, பூனை, குதிரை, நரி, சிறுத்தை, முதலை, வேங்கைக் கடிகளுக்கு அவுரிவேர்ப்பட்டைக் கற்கம்.

நாய்வா னரம்பூனை—நாகம்
 நரிசிறு புலிகரா பெருவேங்கை
தியலிவ் வெவ்வகையும்—கடித்திடில்
 தேடிநீலிவே ராவின்பாலி லரைத்தே
மூன்றுநா ளருந்திடவே—ஓடிடும்.

செய்யுள் 95.

விடக்குழம்பு.

தீராத விடங்க ளெல்லாந் தீர்ப்பதற்குத்
 தெளிவாகக் கருங்குழம்பு செப்பக்கேளு
நேரான கருநாபி வெண்கார மிந்து
 நிர்விடமுங் கருஞ்சி ரகமுங் கூட்டிச்
சீரான கந்திரச மனோசிலையும் வாளந்
 திறமாகச் சுத்திசெய்து சார மரையாகப்
போரான குழிக்கல்லி லாட்டித் தூளாய்ப்
 பின்னுமோர் வேலியிலைச் சாற்று லாட்டே.

செய்யுள் 96.

ஆட்டுவாய்ச் சாம மூன்று மதற்கப்பால் தேங்காய்ப்பாலுங்
கூட்டுவாய்க் கருப்புக் கட்டி கொட்டாங்கச் சியின்க ரியும்
வாட்டமாய்த் தேங்காய்ப் பாலுமகிழவிட் டரைத்து நன்றாய்
மூட்டுவாய் விடங்க ளெல்லா முசிவறக் குன்றிபோல.

விடமை.

(1) மத்த மழிஞ்சில் வெண்குன்றி வாளந் தில்லை வித்தைந்தும்
சித்தர் கெவுரி தாரமனோ சிலைபொன் மெழுகு நிர்விடமே
சுத்தி லிங்கம் நாபிபச்சை துருசு கெந்தி திரிகடுகு
கத்தன் சாரமி ரசஞ்சீனக் கார மிவை தான் பதினாறே.

வகைக்கோர் கழஞ்சி வாங்கிக் கல்வத்தி விட்டுப் பழச் சாற்றில்

திகைக்கா தரைத்துப்பிங்காளில் சிவனைப்பூசித் தடைத்து வைத்தே
பகைக்கும் விடந்தான் கொண்டவர்க்கோர் பசும்வெற் றிலையிற் பணவெடைதான்
உகைப்பாக் கொடுநீ விடமெல்லா மோடு மூண்மை யறிவாயே.

இந்த மருந்து போதுனக்கிங் கெவருஞ் சொல்வார் நான்
சொன்னேன்
விந்தை யாகக் கொடிகட்டி விருது பெறநீ கொடுத்திடலாம்
நைந்தே விரியன் கடியரணை நக்கல் துட்ட நாகவிடம்
எந்த விடங்க ளானாலும் இறங்கி யோட்டம் பிடித்திடுமே.

கடியால் வந்த திமிர்குட்டம் கைகால் முடக்க முதலாக
வெடிவாய் சீழால் புண்களெல்லாம் விட்டுப் போகும் நிச்சயமே
படிவா ரிந்த விடமையைப் பாரி லெவர்க்குஞ் சொல்லாதே
நடமார் சிவன்ரு னுமைக்கந்த நாளிற் சொன்ன மருந்திதுவே.

இசையுமருந்தின் பத்தியந்தா னெண்ணெ யுப்பு புளி கடுகு
கடுகு
மூசிய வாகா தொருவாரம் முயங்கு மறுபத் தியமாதம்
பசுவின் பால் பச்சரிசிபச்சைப் பயற்றம் பருப்புஞ் சேர்த்
தாக்கி
நசையோ டுண்ண லாமுழுக்கு நாள்தொட் டெல்லா
மூணலாமே. (க.ஆ.)
(செய்யுள் 97)

# நஞ்சு நூல்

## முதற் குறிப்பு அகர வரிசை.


அட்டைவிடக் கடிகுணமும் மருந்தும் 115
அனுபான தோடம்—முறிவு 67

அ.

அபினி நஞ்சு—
குறிகுணம் 55
முறிவு 55

அப்பிரக நஞ்சு—
குறிகுணம் 32
முறிவு 32
அரச சாதிப்பாம்பு 70

அரணை நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 115

அரவு தீண்டுவதற்குரிய வேளை 73
அருங்கட்டுப்புடையன்—
கடிக்குறிகுணமும் மருந்தும் 98

அலரி (மஞ்சள்) நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 53
அறுதிவேகம்
அறுதிவேகத்தன்மை 76
அறுதிவேகத்திற்கு மருந்து 80

அறுபுள்ளி வண்டுக்கடி—
குணமும் மருந்தும் 115

ஆ.

ஆறுகால் பூச்சிக்கடி—
குறிகுணம் 107

இ.

இடுமருந்து—
தீக்குணம் 128
பயன் 128
முறிவு

இ—தொடர்ச்சி

இரசசெந்தூர நஞ்சு—
குறிகுணம
இரச நஞ்சு—
பொதுக்குறி குணங்களும் தன்மையும் 19
முறிவு—
அறுகங்கட்டைக்குடிநீர்
அறுகங்குடிநீர் 20
எருக்குக்குடிநீர் 21
கருவேற் கொப்புளிக்குடிநீர் 20
சுரைக்கறப்பு 20
தயிர் வெல்லம் 21
தனி மூலிகைப் பிரயோகம்
துளசி வேர்ப்பட்டைக்குடிநீர் 20
இரசாதி பாடாணங்கள் 19
இரத்தப்புடையன்கடி குறிகுணமும் மருந்தும் 98

இரத்தபோள நஞ்சு—
குறிகுணம் 58
முறிவு 58
இரத்தமண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 98
இரத்தவிரியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 88
இருதலை மணியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 95
இருதலை மணியன் கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95
இலவம் பிசின் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 43–44
இலிங்க நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 23

ஈ

ஈ (காட்டு) கடி
குணமும் மருந்தும் 112
ஈப்பிரிவும் கடிக்குணமும் 112

உ


உணவுத் தோட முறிவு 59

உதிரமண்டலிக்கடி 98

குறிகுணமும் மருந்தும் 98

உப்புகள்

உப்புகளின் நஞ்சு—

குறிகுணமும் மாற்றும் 28

உப்புத்திராவகங்கள்—

தீக்குறி குணம் 28

பொது இலக்கணம் 28

முறிவு 28

உலோகங்கள்

உலோக தோட முறிவு 58

உழுந்து நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 41

உழசவாதிப்பாம்பு 70


ஊ


ஊமத்தை நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 53–54

ஊளுங்கிழங்கு நஞ்சு—

குறிகுணம் 44

முறிவு 44


எ


எட்டிக்கொட்டை நஞ்சு—

குறிகுணம் 54

முறிவு 54

எண்ணெய் நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 49

எண்ணெய் நெல்வேர் நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 48

எண்ணெய் மருதோன்றி நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 46

எ—தொடர்ச்சி.

எண்ணெய் வெற்றிலைச்சாறு—
நஞ்சுக் குறிகுணமும் முறிவும் 48
எண்வகை நாகங்களின் ஆண் பெண் அறிய 73
எரிமண்டலிக்கடி—
குறிகுணம் 101
மருந்து 101
எருக்கு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 49–50
எருமை (இயற்கை வெறி) கடி—
குறிகுணம் 122
மருந்து 123
எருமை (செயற்கை வெறி) கடி—
குறிகுணம் 122
மருந்து 122
எலித்தொகை—18
எலி (அசாத்திய) நஞ்சு இலக்கணம் 106
எலிக்கடி—
குறிகுணம் 103
மருந்து 104
எலி வெண்ணீர் படுவதாலுண்டாகும் குறிகுணம் 106
எலிப்பாடாண நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 27
எல்லாமண்டலி நஞ்சுக்கும்—
பொது மருந்து 102
எல்லா நஞ்சிற்கும்—
நீலகண்டக் குளிகை 92
விடக்குழம்பு 127
விடமை 128
எறும்பு (மலை)க்கடி குணம் 113

ஓ

ஓணான் கடிக்குணமும் மருந்தும் 111

க

கஞ்சா நஞ்சு
குறிகுணம் 56
முறிவு 56
கடலை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 42
கடிவாய் (சீவகுப்பு) புண்ணுக்கு—
பச்சிலைக்கட்டு 126
கண்ணடி முதலிய நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 34
கண்ணொரியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 95
கந்தகநஞ்சு—
குறிகுணமும் முறிவும் 21, 24
கம்பளிப்பூச்சிக்கடி—
குணமும் மருந்தும் 115
கரிநாகக்கடி—
குறிகுணமும் மருந்தும் 94
கருவழலைக்கடி—
குறிகுணமும் மருந்தும் 93
கர்ப்பூர நஞ்சு—
குறிகுணம்
முறிவு 29
கன்னெஞ்சன் கடி—
குறிகுணமும் மருந்தும் 94

கா

காசவேகம்
காசவேகத்தன்மை 76
காசவேகத்துக்கு மருந்து 80

காட்டு ஈக்கடி—

குணமும் மருந்தும் 112

காட்டுக்கொசுக்கடி—

குணமும் மருந்தும் 113

காட்டுத்தவளைக்கடி—

குணமும் மருந்தும் 112

காட்டெலிக்கடி—

குறிகுணம் 103

காணக்கடி நஞ்சு—

குறிகுணமும் மருந்தும் 120

காரெலிக்கடி—

குறிகுணம் 103

கு

குடிநீர் தோட முறிவு 59

குதிரைக்கடி—

குறிகுணமும் மருந்தும் 127

குரங்குக்கடி நஞ்சு—

குறிகுணம் 124

மருந்து—

அவுரிக்கற்கம் 126

ஒற்றடக்கட்டு 124

மத்தநெய், வெற்றிலைச்சாறு 126

வேம்புப்பூச்சு 126

வேறு மருத்துவம்

குளவிகடித்தல், கொட்டல்—

குணமும் மருந்தும் 113

குன்றிமணி நஞ்சு—

குறிகுணமும் நஞ்சு—

முறிவு 44

கூளக்கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95

### கொ

கொடிக்கள்ளிப்பால் நஞ்சு—
குறிகுணமும் மருந்தும் 47

கொம்பேறிமூக்கன் கடி—
குறிகுணமும் மருந்தும் 96

### கோ

கோடற் கிழங்கு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 45

கோதுமை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 49

கோழிமுட்டை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 43

### கௌ

கௌரிப் பாடண நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 27

### ச

சண்டாள வேகம் 79
சண்டாள வேகத்தன்மை 76
சண்டாளவேகத்துக்கு மருந்து 79

சதுரக்கள்ளிப்பால் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 50

சமர் வேகம் 79
சமர்வேகத்தன்மை 76
சமர்வேகத்துக்கு மருந்து 79
சரபவேகம் 79
சரபவேகத்தன்மை 75
சர வேகம் 79
சரவேகத்தன்மை 75
சரவேகத்துக்கு மருந்து 79
சர்க்கரை நெல்வேர் நஞ்சு 48

குறிகுணமும் முறிவும் 48

சர்ப்பங்களின் பிறப்பு 71
சலவேகம் 78
சலவேகத்தன்மை 75
சலவேகத்துக்கு மருந்து 78

சவடிகடி
குறிகுணமும் மருந்தும் 94

சா

சாணகம்கடி—
குறிகுணமும் மருந்தும் 97

சாரைக்கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95

சாரைப்பாம்பின்—
உருவமும் செயலும் 95
பிரிவு 4 95

சி

சித்திர மூலவேர் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 52

சிலந்தி—

ஊறு நஞ்சுக்குணம் 109, 110
கடிக்குறிகுணம்
கடிக்கு மருந்து
வெண்ணீர் நஞ்சுக்குணம்
பல்விடக்குணம்
மல நஞ்சுக்குணம்
மூச்சு நஞ்சுக்குணம்
மூத்திர விடக்குணம்
வாய் விடக்குணம்
வாய் நஞ்சுக்குணம்
நஞ்சுபேதம்

சிலந்திப்பூச்சுக்கடி வேகம் ஏழும் அவைகளின் குணமும் 110
சிலந்திப்பூச்சித் தொகை 20 108

சிவனார்க்கிழங்கு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 45

சிறுத்தைக்கடிக்கு—
அவிரிவேர்ப்பட்டைக்கற்கம் 126

சிறுபாம்புக்கடி—
குறிகுணமும் மருந்தும் 97

சினையெலிக்கடி—
குறிகுணம் 103

சீ

சீதமண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 102
சீவ வகுப்பு 68
சீவ வெறி நஞ்சு— 120

சு

சுண்ணாம்பு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 33

சுண்டெலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 103

சுருட்டைக்கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95

சூ

சூடன் (கர்ப்பூரம்) நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 29

சூல்செய்யான் நஞ்சுக்கு—
மருந்து 90

### செ

செய்யான் கடி—
குறிகுணமும் மருந்தும் 107
செய்யான பிரிவு 107

### சே

சேங்கொட்டை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 52
சேங்கொட்டைப்பால் 53

### சொ

சொறித்தவளைக்கடி—
குணமும் மருந்தும் 112
சொறிமண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 101
சோடெலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 103
சோறெண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 47

### சோ

சோற்று நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 46

### த

தவளைக்கடி—
குறிகுணமும் மருந்தும் 112

### தா

தாது வகுப்பு 19
தாம்பிரத்தின் களிம்புக்கு மாற்று 30, 31
தாம்பிரபற்ப நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 30, 31
தாவர வகுப்பு 41
தாளகம் 34
தாளக நஞ்சுக் குறிகுணமும் முறிவும் 24

திடு


திமிர்மண்டலிக்கடி—

குறிகுணமும் மருந்தும் 102

தில்லைப்பால் நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 50


தீ


தீராப்பாம்பு விடம்—

குறிகுணம் 75


து


துருசு நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 30–31

துவரை நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 42


தே


தேங்காய் நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 42–43

தேயுவேகம்

தேயுவேகத்தன்ம 77

தேயுவேகத்துக்கு மருந்து 78

தேள் தொகை 117

தேள்கடிக்குறிகுணமும் மருந்தும் 117

தேன் நெய் கலப்பு நஞ்சு—

குறிகுணமும் முறிவும் 118


ந


நஞ்சினரை வைக்கு முறை 124

நஞ்சுயிர்களின் தொகை 68

நட்டுவக்காலித்தொகை 118

நட்டுவக்காலி கொட்டல்—

குணமும் மருந்தும் 118

நரிக்கடி நஞ்சு—

அவுரிக்கற்கம் 126

மத்தநெய் 126

வெற்றிலைச்சாறு 126

வேம்புப்பூச்சு 126

வேறு மருத்துவம்
நரிக்கடி நஞ்சு (இயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 122

நரிக்கடி நஞ்சு (செயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 121
நல்லெண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் மருந்தும் 49
நல்லெண்ணெய் சோற்றின் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 47
நல்லெண்ணெய் நெல்வேர் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 48
நல்லெண்ணெய் வெற்றிலைச்சாறு நஞ்சு—
குறிகுணமும் முறிவும்

நா

நாகக்கொட்டை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 44
நாபி நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 56
நாய்க்கடி நஞ்சு (இயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 121
நாய்க்கடி நஞ்சு (செயற்கை வெறி)
குறிகுணமும் மருந்தும் 121
அவுரிக்கற்கம்

நி

நிலவிரியன் கடி—
குறிகுணம் 89

நீ

நீர்விரியன் கடி—
குறிகுணம் 88
நீலகண்டக் குளிகை—
எல்லா நஞ்சிற்கும்

நு

நுங்கு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 47

## நெ

நெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 42

நெய்தேன் கலப்பு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 42

நெல்வேர் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 48

நெல்வேர் எண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 48

நெல்வேர் எண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 48

நெல்வேர் சர்க்கரை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 48

## நே

நேர்வாள நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 54

## ப

பசுக்கடி நஞ்சு (இயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும்

பசுக்கடி நஞ்சு (செயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 122

பச்சைப்பாம்புக்கடி—
குறிகுணமும் மருந்தும் 96

பச்சோந்திக்கடி—
குறிகுணமும் மருந்தும் 111

பஞ்சசூதம் 19

பரநாகம் கடி—
குறிகுணமும் மருந்தும் 94

பல்லிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 113

பல்வேகம் 78

பல்வேகத்திற்கு மருந்து 78
குறிகுணமும் முறிவும்

பலாப்பழ நஞ்சு—குறிகுணமும் முறிவும் 43
பறைப்பாம்பு 75

பன்றிக்கடி நஞ்சு—

குறிகுணமும் முறிவும்
அவுரிக்கற்கம் 126
மத்தநெய், வெற்றிலைச்சாறு 126
வேம்புப்பூச்சி 126
வேறு மருத்துவம்

(இயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 123
நஞ்சு (செயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 123

பா

பாம்பு—
கடிசோதனை இலக்கணம் 83
தீராவிடக் குறிகுணம் 75
கடியால் தீக்குணமுண்டாகும்—
உறுப்பு 72
இடம் சமயம் 72
திதி 72
நட்சத்திர முதலியன 73
கடிவாய் மணத்திலிருந்து—
இன்ன பாம்பு கடித்ததென அறிதல் 71
கடிவிடத்தின்—
தீரும் தீராக்குறி 71
கடி நஞ்சு தீர—
ஆக்கிராணம் 81
ஒற்றமடம் 81
கலிக்கம் 81

நசியம் 81
புகை 83
பாம்புகளின் தொகை 70
பாம்புகளின் பிறப்பு 71

தீண்டுவதற்குரிய சமயம் 73
நெருங்காமற்படித்டுக்கும் மனேமூலிகை 85
பல்வேகத்தன்மை 75
பற்கடி நஞ்சுவேக மருந்து 78

பாலாடை நஞ்சு—
குறிகுணமும் முறிவும்

பானதோடம்—
குறிகுணமும் முறிவும் 67

பு

புகையிலை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 57–58
புடையன்கடி—
குறிகுணமும் மருந்தும் 97

புலிகடி நஞ்சு—

அவுரிவேர்க்கற்கம்
மத்தநெய் 126
வெற்றிலைச்சாறு 126
வேம்புப்பூச்சு 126
வேறு மருத்துவம்
புலிமுகப்பூச்சிக்கடிக்குறிகுணம் 107

புல்லுருவிக்கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95

புழுகுபூனைக்கடி—
குறிகுணமும் மருந்தும் 126

புளித்ததயிர் சோற்று நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 47

பூ

பூர நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 22
பூரான் பிரிவு

பூரான் கடி—
குறிகுணமும் மருந்தும் 107
பூனைக்கடி நஞ்சு—
குறிகுணமும் மருந்தும் 125

பெ

பெருச்சாளி நஞ்சு—
குணமும் மருந்தும் 106
பெருமருந்து நஞ்சு முறிவு 58

பெருவிரியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 87

பே

பேதிமண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 101
பேய்நரிக்கடி மருந்து 124
பேய்நாய்க்கடி மருந்து 124

பொ

பொரிவிரியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 86

போ

போரெலிக்கடி—
குறிகுணம் 103

ம

மகிழம்பிஞ்சு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 45–46

மஞ்சள் அலரி நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 53
மண்டலித்தொகை 16 100

மண்டலி 16-ன் கடி—
குணமும் 100

மண்ணுண்ணிக்கடி, நக்கல்—
குறிகுணமும் மருந்தும் 95

மயக்கரவுக்கடி—
குறிகுணமும் மருந்தும் 94
மருந்திட்டு நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 125
மருதோன்றி எண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 46

மலை எறும்புக்கடி—
குணம் 113

மறையோன் சாதிப்பாம்பு
மனிதன்கடி நஞ்சு (இயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 123
மனிதன்கடி நஞ்சு (செயற்கை வெறி)—
குறிகுணமும் மருந்தும் 123

மா

மாணிக்கம் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 34

மிருதார்சிங்கி நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 37

மிளகாய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 45

மீ

மீன்கடி—
குணமும் மருந்தும் 116

மு

முட்சுருளிக்கடி நஞ்சு—
குணமும் மருந்தும் 106
முதலைக்கடி நஞ்சு—

மருந்து—
அவுரிக்கற்கம் 126
மத்தநெய், வெற்றிலைச்சாறு 126
வேம்புப்பூச்சு 126
வேறு மருத்துவம்

## மூ

மூக்கன்கடி—
குறிகுணம் 96
மூஞ்சூறுக்கடி நஞ்சு—
குணமும் மருந்தும் 106

## மொ

மொச்சை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 42

## மோ

மோட்டெலிக்கடி—
குறிகுணம் 103

## வ

வங்கம் (இரு) நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 31
வணிகசாதிப்பாம்பு 70
வண்டுக்கடிவிட—
குணமும் மருத்துவமும் 113
பிரிவு
வருண (பாம்புக்கடி) வேகம் 10 77
வழலைக்கடி (பொது)—
குறிகுணமும் மருந்தும் 93
வன்னி (பாம்புக்கடி) வேகம்
தன்மை 75
மருந்து 78

## வா

வாயு (பாம்புக்கடி) வேகம் (8) 76
தன்மை 76
மருந்து 79
வாழைப்பழ நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 43

விடக்குழம்பு
(எல்லாவிடத்திற்கும்) 127

விடங்கலந்த—

அன்னத்தினிலக்கணம் 129
அன்னத்தின் சோதனை 129
அன்னமுண்டவர் நோய்போக்க 129
கறிபதார்த்தத்தின் இலக்கணம் 129
கறிபதார்த்தத்தின் இலக்கணம்

விடந்திண்டி மருந்துகொள்ளும்போது கவனிக்கவேண்டிய பத்தியவிதி 83

விடப்பல் (பாம்பு) கடி—
அறிய
நான்கின் தீக்குணம் 74
விடப்பாம்புத்தொகை 68
விடமை—சர்வவிடத்திற்கும் 128

விரியன் கடிக்கு—
இரசப்புகை 91
சாணிப்பூச்சு 91
சாரணைவேர்த்துவாலை 90
சிறுசின்னிப்பூச்சு 91
சிறுபுள்ளடிநசியம் 91
சுந்தரித்தைலம் 91
தக்காளிப்பூச்சு 91
தாளிப் பூக்கட்டு 91
நிம்ப எண்ணெய் 90
பிரண்டைக்கட்டு 90

விரியன் கடிக்கு—

வெ

பொது மருந்து
விரியன் (நீர் நில விரியன் நீங்க)
மற்றவைகளின் பொதுக்குறிகுணம் 89
விரியன் வகை (16) 90

வீ


வீங்குமண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 100

வீரநஞ்சு—
குறிகுணமும் முறிவும் 31

வெள்வால்விரியன் கடி—
குறிகுணமும் மருந்தும் 88

வெள்ளெலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 103

வெள்ளைப்பாடாணம்—
நஞ்சுக்குறிகுணம் 25
தீவிரவிடக்குறிகுணம் 25
நாட்பட்டவிடக்குறிகுணம் 26
முறிவுகளும் பொது மருத்துவங்களும் 26
வாத-பித்த-கப தேகிக்குண்டாகும் நோய் இவை எனல்

வெறி மண்டலிக்கடி—
குறிகுணமும் மருந்தும் 101–102

வெற்றிலைச்சாறு எண்ணெய் நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 46


வே


வேர்க்கடலை நஞ்சு—
குறிகுணமும் முறிவும் 42


வை


வைர நஞ்சு—
*குறிகுணமும் முறிவும் 34